டாக்டர். உ. வே. சா.

காப்பியப் பதிப்புகள்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

டாக்டர். இரா. காசிராசன்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்

உ. வே. சா. காப்பியப் பதிப்புகள்

(நிறுவனச் சார்பிலான டாக்டர் உ. வே. சாமிநாதையர்
அறக்கட்டளைச் சொற்பொழிவு)

முனைவர் இரா. காசிராசன்
துணைப் பேராசிரியர்
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்
(அஞ்சல் வழி) மதுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி.டி.டி.ஐ. தரமணி, சென்னை-600 113.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அறக்கட்டளைச்
சொற்பொழிவு வரிசை- 2 [18,19-2-'85]

Dr. U.V. SWAMINATHAIYER ENDOWMENT LECTURE NO. 2.

Endowment Lectures Publication Number-7.

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	U. Ve. Sa. Kappiya pathippukal.
Author	:	Dr. R. Kasirajan M.A; Ph.D. Dip. in Arch., Dip. in Geo., Cert. in Ling. & Cert. in Mal. Lecturer in Tamil, Madurai Kamaraj University (Correspondence course and continuing education) Palkalai Nagar, Madurai 625 021
Publisher	:	International Institute of Tamil Studies T.T.T.I (Post) Taramani, Madras 600 113.
Publication Number	:	106
Language	:	Tamil
Date of Publication	:	18-2-1985
Edition	:	First
Paper used	:	14.2 Kg D/Dy White Printing
Size of the book	:	21×14 cms.
Printing types used	:	10 point
Number of Copies	:	2200
Number of pages	:	170+8
Price	:	Rupees Ten only
Printers	:	Blaze Printers & Co., 12, First Main Road, Nehru Nagar, Madras 600 020.
Binding	:	Card Board
Artist	:	A. S. Velusamy.
Subject	:	A Criticism of U.V.S's editing of epics.

பதிப்புரை

முனைவர் ச. வே. சுப்பிரமணியன்,
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-600 113

பதிப்புப் பணி பற்றி எண்ணும் போது உடன் நினைவிற்கு வருபவர் தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர். அவர்கள் தமிழ்த் தொண்டினைப் பாராட்டும் வகையில் நிறுவனம் டாக்டர் உ.வே. சாமி நாதையர் அறக்கட்டளை' ஒன்றை நிறுவியுள்ளது. அதன் வழி அவர் தம் பதிப்புப் பணியை ஆய்ந்துரைக்கும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் படுகின்றன. இது இரண்டாவது சொற்பொழிவாக, ஐயரவர்கள் பதிப்பித்துள்ள சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங் கதை, சீவக சிந்தாமணி ஆகிய காப்பியங்கள் மீதாக அமைகிறது. இக்காப்பியங்களின் பதிப்பு வரலாறும், சிறப்பும் ஆறு தலைப்புகளில், பல்வேறு கோணங்களில் தெளிவாக இந்நூலுள் எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. பிற பதிப்பாசிரியரினின்றும் ஐயரவர்கள் தனித்து வேறுபட்டு மிக உயர்ந்து நிற்குமாற்றையும், ஆய்வாளருக்கு அவர் தம் பதிப்புப் பணி வெகுவாகப் பயன்படு மாற்றையும் மிக அழகாக, சிறப்பாக இந்நூல் எடுத்துக் காட்டுகிறது. ஆய்வுலகில் மூலபாட ஆய்வியல் (Textual Critism) பற்றிய முயற்சியை இந் நூல் மேற் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பதிப்பு தோறும் தாம் பெற்ற வளர்ச்சியைத் தமிழுலகும் பெறச் செய்த ஐயரின் பதிப்புப் பணி இந்நூலால் விளக்கம் பெறுகிறது.

இந்நூலினை நன் முறையில் முயன்று, தக்க சான்றுகளுடன் எல்லாச் செய்திகளையும் தொகுத்து, ஆய்ந்து தந்துள்ள டாக்டர் இரா. காசிராசன் அவர்களைப் பாராட்டிப் போற்றி, மகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

இவ்வறக் கட்டளைக்குப் பெருந்தொகை அளித்த திரு. மு. கோ. ராமன் அவர்களுக்கும் பொருளுதவிய ஏனையோர்க்கும் எங்கள் நன்றி உரித்து.

நன்றியுரை

டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களின் நினைவாக, அறக் கட்டளை நிறுவி, அதன் இரண்டாவது ஆண்டுச் சொற்பொழிவை, அன்னாரது பிறந்தநாள் [பிப்ரவரி-19] நினைவுப் பொழிவாக ஆற்ற என்னைப் பணித்து, உரிய காலத்தில் நூல் வெளிவரப் பல நிலை களில் என்னைத் தூண்டியவர், என் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள். மாணவர்களைச் சொந்த மகனாக-மகளாக நினைத்து அவர் காட்டிய அன்பு, செய்த உதவிகள் பல. அவ்றறைப் பெற்றோர் பலர். அவருள் அடியேனும் ஒருவன். அன்னார் செலுத்திய அன்பின் விளைவே இவ் அறக்கட்டளைச் சொற் பொழிவு நூல். என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்ற உணர்வில் தமிழ்ப்பணி ஆற்றி வரும் பேராசிரியர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

நூலாராய்ச்சியைத் தொடங்கிய பொழுது, முன்வந்து வழிகாட்டிய திரு. மு. கோ. இராமன் அவர்களின் அன்புள்ளத்தை, ஆர்வத்தை நினைக்காமல் இருக்க முடியாது. அன்னாருக்கு என் மனமார்ந்த நன்றி. பதிப்பு வேறுபாடுகளை அறிய, என்னோடு உடனிருந்து படித்து ஒப்பு நோக்க, உதவிய என் துணைவியார், திருமதி பொ. விண்மதி எம். ஏ., எம். ஃபில்., அவர்களுக்கும், சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன உயர்நிலை ஆய்வாளர் டாக்டர் இராமசாமி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

டாக்டர் சாமிநாதையர் ஏடுதேடி அலைந்தது போல, அவரது காலத்தில் வெளிவந்த பதிப்புக்களைத் தேடியலைந்த போது, தோன்றாத் துணையாக நின்று உதவிய, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம், டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகம், மறைமலையடிகள் நூலகம், மதுரைக் காமராசர் பல்கலைக் தமிழியல் துறை நூலகம் ஆகியவற்றின் பொறுப்பாளர்களுக்கும், சிலப்பதிகார முதற் பதிப்பைத் தந்துதவிய நண்பர் பேராசிரியர் திருவேங்கடம் அவர் கட்கும் எனது நன்றி. இறுதியாக நூலை உரிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டு வெளிக்கொணர்ந்த அச்சகத் தாருக்கும், என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூன் முகம்

'தமிழ்த் தாத்தா' என அன்போடு, தமிழ் நெஞ்சங்களால், அறிஞர் பெருமக்களால் அழைக்கப் பெற்ற பெருமை மிக்கவர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள். 'தமிழ்த் தொண்டே வாழ்வுப் பணி' எனக் கொண்டவர்; ஒருபெரிய நிறுவனம் சாதிக்க வேண்டிய, சாதிக்க முடியாத அருந் தமிழ்ப் பணியை ஆற்றி மறைந்தவர். அவரது பிறந்த நாள் அறக் கட்டளைச் சொற் பொழி வாக மலர்ந்ததே இந்நூல்.

டாக்டர் ஐயரவர்கள் பதிப்பித்த தமிழ் இலக்கியங்கள் 74. அவற்றில் காப்பியங்கள் நான்கு. அவையாவன: சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை. பெருங்கதை இந்நான்கு காப்பியங் களின் பதிப்பு வரலாற்றை, பதிப்பு முறையை, பதிப்பு வேறுபாடு களை அறிமுகம் செய்வதே நூலின் நோக்கம். இதற்குமுன் வெளி வந்த, டாக்டர் சொல் விளங்கும் பெருமாள் அவர்களின் 'டாக்டர் உ.வே. சா. பதிப்புப் பணி ஓர் ஆய்வு' நூலும்; டாக்டர் குளோறியா சுந்தரமதி அவர்களின் 'டாக்டர் உ.வே.சா-சங்க இலக்கியப் பதிப்பு கள்' நூலும் இதற்கு முன்னோடியாக அமைந்தன. இவற்றின் வழி நின்றே இந்நூலாய்வு அமைந்துள்ளது.

நூலமைப்பு, பதிப்புப் பணி, பதிப்பு வேறுபாடு, முகவுரை முதலியன, குறிப்புரை, அரும்பத முதலியவற்றின் அகராதி, பாடவேறுபாடு என ஆறு கூறுகளாக அமையும். முதற் பகுதி, ஐயரவர்களைப் பதிப்புப் பணியில் ஈடுபத்திய சூழ்நிலை, தூண்டு கோலாக அமைந்தோர், பதிப்புப் பணிக்கு ஐயரவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி, ஏடுதேடிச் சென்ற பயணம், பட்ட சிரமம், பொருள் நிலையில்-அறிவுநிலையில் நின்றுதவியோர் பற்றிய செய்தி களைத் தர முயன்றுள்ளது. இதற்கு ஐயரவர்களின் 'என்சரித்திரம்', பதிப்புத்தோறும் எழுதிய முகவுரை, நூல்பதிப்பில் ஆங்காங்கே சுட்டிச் சென்ற குறிப்புகள் ஆதாரமாக அமைந்தன.

அடுத்த பகுதி அவர்தம் காப்பியப் பதிப்பு வேறுபாடுகளை இரு நிலையில் நின்று ஆராயும். முதல் நிலையாக, ஒவ்வொரு காப்பிய முதற்பதிப்பு தோறும் அவர் செய்துள்ள மாற்றங்களும், அடுத்த நிலையாக ஒரு காப்பியத்தின் முதற்பதிப்பு முதல் மூன்றாம் பதிப்பு வரை செய்துள்ள மாற்றங்களும் அமையும். இதற்குச் சிலப்பதி காரம், சீவக சிந்தாமணி, மணிமேகலை. ஆகிய மூன்று காப்பியங்

எங்கள் நிறுவனப் பணிகள் அனைத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் தருகிற மாண்புமிகு கல்வியமைச்சர், செ. அரங்கநாயகம் எம். ஏ. அவர்கட்கும் எங்கள் நன்றி.

குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்த பிளேஸ் அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி.

அறக் கட்டளைச் சொற்பொழிவுகள் நூல் வடிவம் பெற முழு நிலையில் ஒத்துழைக்கின்ற டாக்டர் ச. சிவகாமிக்கு என் வாழ்த்துக்கள்.

சென்னை-113 அன்புள்ள

18—2—85 ச. வே. சுப்பிரமணியன்

களின் முதல் மூன்று பதிப்புக்களும், பெருங்கதையின் முதல் இரு பதிப்புக்களும் கருவியாயின. இங்கு முதற் பதிப்பிற்கும் பிற்பதிப்பிற்கு முள்ள மூல பாட வேறுபாடுகள் முழுநிலையில் தொகுக்கப் பெற வில்லை. அவ்வாறு தொகுக்க வேண்டும் என்ற வேட்கை எழுந்த துண்டு. காலக் குறுக்கம், பலரோடு பலநாள் இருந்து முழுவதையும் படித்து ஒப்பு நோக்கும் வாய்ப்பு இன்மை காரணமாக இம் முயற்சி தடைபட்டது. சான்று விளக்கத்திற்கு மட்டும், இவற்றின் சில பகுதிகள் ஒப்பு நோக்கப் பட்டன. இவ்வடிப் படையில் ஒவ்வொரு காப்பிய மூல பாட ஆய்வும், பாட வேறு பாடுகளும் ஆராயப் படுதல் வேண்டும்; அதனைப் பின்வரும் அறக் கட்டளைச் சொற்பொழிவு களில், அறிஞர் பலரின் உதவியுடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் செய்யும் என்ற நம்பிக்கையுடையேன்.

மூன்றாவது கட்டுரை, பதிப்பாசிரியர் தம் முகவுரை, நூலாராய்ச்சி, நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, நூலின் கதைச் சுருக்கம், நூலைப் பற்றிய சில குறிப்புகள் பற்றிய ஆய்வை மேற் கொண்டுள்ளது. இங்கு ஐயரவர்களின் ஆராய்ச்சித் திறன், அதில் அவருக்கிருந்த ஆழ்ந்த ஈடுபாடு, பன்னூற் புலமை, நூல் கருத்துக் களை அறிமுகம் செய்யும் முறை முதலான பற்றிக் கருத்துரைக்கும் முயற்சி அமையும்.

நான்காவது பகுதி, பதிப்பாசிரியர், உரையாசிரியராக மலர்ந்த வளர்ச்சியினைச் சுட்டிக் காட்டும். இங்கு, ஐயரவர்கள் குறிப்புரை விசேட உரைக்குரிய பல தன்மைகளைப் பெற்றுள்ள சிறப்பு, பல்வேறு தலைப்புக்களில் ஆராயப் பட்டுள்ளது.

ஐந்தாவது கட்டுரை அரும்பத முதலியவற்றின் அகராதிச் சிறப்புணர்த்தும்; சொல்லகராதி, பொருள் அகராதி, நூல்-நூலாசிரியர் அகராதியாக அமையும் இப்பகுதி ஒரு கலைக் களஞ்சியமாகத் திகழ் கிறது. 'அகராதி' அமைக்கும் முறைக்கு இலக்கணமாக அமைந்தவர் டாக்டர் ஐயர் என்பதை, இப்பகுதி விளக்கும். இறுதிக் கட்டுரை மூல பாட ஆய்வியல் பற்றிய சிந்தனையை எழுப்பி, பாட வேறுபாடுகளை வகைப்படுத்தும். இங்கு மூல பாட ஆய்வியல் தமிழில் வளர வேண்டும் என்ற எண்ணம் தரப்பட்டுள்ளதே தவிர, அவ்வாய்வு இங்கு மேற் கொள்ளப் படவில்லை. இதில் ஈடுபாடும், புலமையும் மிக்க அறிஞர்கள், இத்துறையில் ஈடுபட்டு, அனைத்துப் பண்டை இலக்கியங் களுக்கும் முறையான மூல பாடம் காணும் முயற்சியை மேற் கொண்டால், அது, தமிழ் இலக்கிய வரலாற்றின் காலக் கணிப்பிற்குத் துணை செய்வதோடு, வரலாற்று மொழியியல் (Historical Linguistics) ஆய்விற்கும் பெருந்துணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

உள்ளுறை

			பக்கம்
	பதிப்புரை	...	iii
	நன்றியுரை	...	v
	நூன் முகம்	...	vi
	உள்ளுறை	...	viii
1.	பதிப்புப் பணி	...	1—23
2.	பதிப்பு வேறுபாடு	...	24—62
3.	முகவுரை முதலியன	...	63—80
4.	குறிப்புரை	...	80—126
5.	அரும்பத முதலியவற்றின் அகராதி	...	127—151
6.	பாட வேறுபாடு	...	151—164
	துணை நூற் பட்டியல்	...	165—166
	சொல்லகராதி	...	167—168

1· பதிப்புப் பணி

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் காப்பியப் பதிப்புப் பணியின், தொடக்கமாக அமைவது சீவக சிந்தாமணிப் பதிப்பே. இதற்கு முன் ஐயரவர்கள், 1878-இல் 'வேணுவனலிங்க விலாசச் சிறப்பு' என்ற நூலையும், 1883-இல் 'திருக்குடந்தை'ப் புராணத்தையும், 1885-இல் 'மத்தியார்ச்சுன மான்மிய'த்தையும் பதிப்பித்துள்ளார். இருப்பினும் அவரைப் பதிப்பாசிரியர் நிலைக்கு உயர்த்தியது சிந்தாமணிப் பதிப்பே. மட்டுமின்றிப் பின்னர் பல நூல்களை அவர் பதிப்பிக்க அடிப்படையாக அமைந்ததும் இச்சிந்தாமணிப் பதிப்பே. இதனை ஐயர் வெளியிடுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சி, அடைந்த துன்பங்கள், எழுந்த சிக்கல்கள், ஏற்றுக் கொண்ட கண்டனங்கள் பலப் பல. திருவாவடுதுறை ஆதீனத் தமிழ்ப் பண்டிதராக, கும்பகோணம் கல்லூரித் தமிழாசிரியராக இருந்த ஐயரவர்களைப் பதிப்பாசிரியராக்கிய சூழ்நிலைகள் பல; துணை நின்றோர் பலர்; கண்டனங்கள் மூலம், பல குறைகளைச் சொல்லி, அதன் மூலம் அவரை ஒரு தலை சிறந்த பதிப்பாசிரியராக உருவாக்கியோர் எண்ணிலடங்கார். ஒவ்வொரு நூலையும் பதிப்பிக்கத் தூண்டுகோலாக அமைந்தோர், துணை நின்றோர், ஏடு தேடிச் சென்றவிடங்களிலெல்லாம் தோன்றாத் துணையாக நின்றுதவியோர், ஏடுகளை ஒப்பு நோக்கியறிய உற்றதுணையாக உடனிருந்தோர், அச்சுப் படி திருத்த ஐயரவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி, அதற்குத் துணை நின்றோர்-ஆக ஐயரவர்களின் பதிப்புப் பணி ஒரு வரலாறாக உருப்பெற்றுள்ளது. அவ்வரலாற்றில், காப்பியப் பதிப்புகளில், ஐயரவர்கள் எடுத்துள்ள பெருமுயற்சியைத் தொட்டுக் காட்டுவது இங்கு நோக்கமாக அமைகின்றது.

சீவக சிந்தாமணி:

சீவக சிந்தாமணி காப்பியப் பதிப்பிற்குத் தூண்டு கோலாக அமைந்தவர் சேலம் இராமசாமி முதலியாரவர்கள். தமிழ், வடமொழி, சங்கீத நூல்களில் ஈடுபாடும் புலமையும் உடைய இராமசாமி முதலியார், கும்பகோணம் 'முன்சீப்' ஆகப் பணியேற்று, அங்கு வர, அவரை முதன் முதலாக ஐயரவர்கள் 21-10-1830-இல் வியாழன் அன்று சந்தித்தார்.[1] முதலியார் ஐயரவர்களிடம் தமிழ் நூல் பற்றிக் கேட்க, அவரோ தான் படித்த நூல்களை எலலாம் பட்டியலிட்டுக் காட்டியும், நிறைவு பெறாத முதலியார், "சீவக சிந்தாமணி படித்திருக்கிறீர்களா? மணிமேகலை படித்திருக்கிறீர்களா? சிலப்பதிகாரம்

1. சாமிநாதையர், உ. வே; 'என் சரித்திரம்'—பக்: 530.

படித்திருக்கிறீர்களா??''[1] எனக் கேட்க, ஐயர் தன் அறியாமையை உணர்ந்து, 'நூல் கிடைப்பின் படித்துப் பார்ப்பேன்' எனக்கூறி, அவரிடமிருந்த சீவக சிந்தாமணிப் பிரதியை வாங்கிச் சென்றார்.

இந்நிகழ்ச்சியே ஐயரவர்களைச் சிந்தாமணி ஆராய்ச்சியில் ஈடு படுத்தியது. முதலியாருக்குப் பாடஞ் சொல்வதற்காக, அவரிட மிருந்த, ஸ்ரீ வைகுண்டம் கவிராயரிடமிருந்து கிடைத்த ஏட்டுப் பிரதி யிலிருந்து காகிதத்தில் பிரதி பண்ணிய சிந்தாமணியைப் பெற்றுப் படித்துப் பார்க்கப் பல செய்திகள் ஐயருக்கு விளங்கவில்லை. அந் நிலையில், திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் ஸ்ரீசுப் பிரமணிய தேசி கரிடம் நிகழ்ந்தவை கூற, அவர் 'மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் எழுதி வைத்த சிந்தாமணி ஏட்டுப் பிரதி ஒன்றை மடத்திலிருந்து எடுத்துக் கொடுத்தார்.[2]

இரண்டு பிரதிகளையும் ஒப்பிட்டுப் பார்த்த ஐயர், முதலியார் பிரதியில் மூலமும் பொழிப்புரையும் இருக்க, பிள்ளையவர்களின் பிரதியில், நூல் முழுவதற்கும் விசேட உரை இருப்பதை அறிந்தார். முதலில் இரண்டு உரைகளும் [பொழிப்புரை & விசேட உரை] வேறு வேறு என எண்ணியவர், பின் ஒன்றே எனத் தெளிந்தார். இருப் பினும் பிரதிகளில் இவ்வேறுபாடு இருப்பது ஏன் என விளங்காது, பின் சைன அன்பர்களால், 'நச்சினார்க்கினியர் சிந்தாமணிக்கு ஓர் உரை எழுதினார். அதில் சைன சம்பிரதாய விரோதமாகச் சில செய்திகள் இருந்ததைச் சைனர்கள் சொல்ல, அவர் தம்மைச் சைன ராகச் சொல்லிக் கொண்டு 'சிற்றாம்பூர்' சைனமடம் சென்று, சைன் நூல்களையும் சம்பிரதாயங்களையும் கற்றுப் புதிய உரை (விசேட உரையுடன் கூடியது] எழுதினார்'[3] என்பதை அறிந்தார்.

பின், சிந்தாமணியுள் பல செய்திகள் விளங்காது தவித்தார். 'கட்டியங்காரன்,' என்பதைக் 'கட்டியக்காரன்' எனப் படிக்க, இராமசாமி முதலியாரே, அது 'கட்டியங்காரன்; சச்சந்தன் மந்திரி; அவனைக் கொன்றவன்' என விளக்குவர். பின் 'கோவிந்தன்' என்ப தைக் கண்ணபிரானாக எண்ணினார்.[4] எனவே இவ்வாறு விளங்காத பல பகுதிகள் இருந்தால், அவற்றை அறிந்தவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பினார். இவ்விழைவே, சைனரான சந்திரநாத செட்டியாரையும், அவருக்குச் சிந்தாமணியைப் பாடஞ்

1. அது;—பக்: 532.
2. ,, —பக்: 536.
3. ,, —பக்: 539-40
4. ,, —பக்: 537

சொன்ன வீடூர் அப்பாசாமி நயினாரையும் சந்திக்க வைத்தது. அப்பாசாமி நயினார் மூலம், 'கோவிந்தன் விசையையின் சகோதரன்; விசையை சச்சந்தன் மனைவி' என்பதை அறிந்தார். சந்திரநாத செட்டியார் மூலம், சீவக சிந்தாமணிக் கதையையும் சில விளக்கங் களையும் தெரிந்து கொண்டார்; அதோடு, சிந்தாமணிக்கு வாய்மொழி யாக ஓர் உரை வழங்கி வருவதையும், அது மணிப்பிரவாள நடையில், மத சம்பந்தமான பரிபாசைகள் மிகுதியாகக் கலக்கப் பெற்றது' என்ப தையும் அறிந்தார். திருத்தக்கதேவர் பற்றிக் கர்ண பரம்பரையாக வழங்கி வரும் கதையையும், சைனர்கள் சிந்தாமணியைப் பாராயண நூலாகக் கருதிப் பூசித்து வருவதையும் உணர்ந்தார்.

''வீரன் தாள் நிழல்-சமவ சரணம்' என்பது பெரிய ஜினாலயம் என அறிந்த ஐயர், அவ்வாலயத்தின் படம் காணக் குணபால செட்டி யார் வீடு சென்று, அவர் மனைவியார் மூலம் பல சைன சமயச் செய்தி களை விளங்கிக் கொண்டார்.[1] இங்ஙனம், சேலம் இராமசாமி முதலியாரைச் சந்தித்தது முதல், அவரிடம் இருந்து பெற்ற சிந்தா மணி நூலைப் புரிந்து கொள்ள எடுத்துக் கொண்ட முயற்சிகள் பல. இதனை உணர்ந்த முதலியார், ''சிந்தாமணியின் பெருமையை நீங்கள் இப்போது நன்றாக உணர்ந்திருக்கிறீர்கள்; இந்த அருமையான காவியம் படிப்பாரற்று வீணாகப் போகாமல் நீங்களே பதிப்பிக்க வேண்டும்; அதைப் போன்ற உபகாரம் வேறு ஒன்றும் இல்லை''[2] என முதல் முறையாகச் சிந்தாமணியைப் பதிப்பிக்க ஐயரவர்களைத் தூண்டுவர். இத்தூண்டுதலே ஐயரவர்களைப் பதிப்புப் பணியில் ஈடு படுத்தியது.

ஏடுதேடல் :

முதலியாரின் தூண்டுதலின் பேரில் நூலைப்பதிப்பிக்கத் துணிந்த ஐயர் ஏடுகளைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டார்; அதுவரை அவரிடம் இருந்த சிந்தாமணிப் பிரதிகள் இரண்டே. பின் சீவக சிந்தாமணி நாமகள் இலம்பகத்தைப் பதிப்பித்த 'பவர்துரை'யிடமிருந்து ஒரு பிரதியையும், அவர் பதிப்பித்த 'நாமகள் இலம்பக' அச்சுப் பிரதியை யும் பெற்றார். ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர், திருநெல்வேலியிலிருந்து சில பிரதிகளை வருவித்துக் கொடுத்தார்[3]. திருவாவடுதுறை மடத்தில் தேடிப் பழைய ஏட்டுப்பிரதி ஒன்றைப் பெற்றார். இவ்வளவு பிரதிகள் பெற்றும், ஐயத்திற்கிடமான பல பகுதிகள் இருந்தமையால், நல்ல பாடமுள்ள பிரதிபெற எழுதியும் விசாரித்தும் வந்தார்.

---

1. அது, பக்: 541.
2. அது, பக்: 543.
3. அது, பக்: 547.

அப்போது, தஞ்சை விருஷபதாச முதலியார் வீட்டில் பழைய ஏட்டுச் சுவடிகள் உண்டென்று தெரியவர, முதன் முறையாக **ஏடுதேடும் பயணத்தைத்** தொடங்கினார். விருஷபதாசர், சிந்தா மணியைப் பூஜை செய்து வந்ததால், அதைப் பூஜையிலிருந்து எடுக்கக் கூடாது என்றும், அப்படியே எடுத்தாலும் அதை 'சைனர்களுக்குத் தான் கொடுப்பேனே யன்றி மற்றவர்களுக்குத் தரமாட்டேன்; அப் படித் தருவது, எங்கள் சம்பிரதாயத்துக்கு விரோதம்; எவ்வளவோ ரகசியங்கள் பொருந்திய சிந்தாமணியை வெகு சுலபமாக நீங்கள் படித்துப் பார்க்க முடியாது'[1] எனக்கூறித் தரமறுத்து விடுகிறார். ஐயர் எவ்வளவே முயன்றும் பயன் இல்லை. இறுதியாகத் தான்கும்ப கோணம் கல்லூரியில் வேலைபார்ப்பவர்; திருவாவடுதுறை மடத்திற்கு வேண்டியவர், எனக் கூறிக் கேட்டுப் பார்க்க, அந்த அறிமுகம் எதிரி டையாக முடிந்தது. சைவ மடத்தில் பழகியவருக்குச் சைனகிரந்தங் களில் அன்பு ஏற்படுதற்கு நியாயமே இல்லை; 'சைவர் சைனரைத் துச்சமாக மதிப்பவர்,'[2] எனக் கூறி மறுத்து விட்டார். பின் 'துக்காராம் ஹோல் கார்' என்பவர் மூலம் அப்பிரதியைப் பெற்றார். இவ்வளவு முயன்று பெற்ற அப்பிரதி சிறந்தது அன்று: விசேடஉரை இல்லாதது என ஐயர் குறிப்பிடுவர்[3].

இங்ஙனம் தேடிச் சேர்த்த 23-ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு பதிப்புப் பணியைத் தொடங்கிய ஐயர், நூல் அச்சாகிக் கொண்டிருந்த காலத்தும் ஏடுதேடும் பணியை மேற்கொண்டார். சென்னை கிறிஸ் தவக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் சின்னசாமிபிள்ளையிடம், 20-பிரதி களைப் பார்த்துச் சோதித்து எழுதப் பட்ட பவர்துரையின் பிரதி இருப்பதாகச் சூளை அப்பன் செட்டியார் மூலம் அறிந்து, அப் பிரதியையும் பெற்றார். அது திருத்தமாக இருக்கும் என எதிர்பார்த்த ஐயரவர்களுக்கு ஏமாற்றத்தைத் தந்தது[4].

பின் நெல்லைக்கு ஏடு தேடிச் சென்றார். அங்கிருந்து குற்றாலம் செல்லும் வழியில்' மேலகரம் திரிகூட ராசப்ப கவிராயர் வீட்டில் தேடினார். அங்குக் கிடைக்காது, கோட்டையூர்க் கவிராச பண்டாரம் வீட்டில் தேடிச் சிந்தாமணியின் சில பகுதிகளை மட்டும் பெற்றார். அடுத்து, கிருஷ்ணாபுரம், கடைய நல்லூர்க் கவிராயர்கள் வீட்டில் தேடிய போதும், சில பகுதிகளே கிடைத்தன. பின் சேற்றூர்ச் சுப்பிரமணிய கவிராயரிடமிருந்து, நெல்லை கால்டுவெல் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் குமாரசாமி பிள்ளையின் கையெழுத்துப் பிரதி

1,2. அது, பக்: 558.

3. அது, பக்: 559

4. அது, பக்: 587

ஒன்றைப் பெற்றார். அது முழுமையாகவும் திருத்தமாகவும் இருந்தது; தூத்துக்குடி வீரபாண்டிய கவிராயர் பிரதியைப் பார்த்து எழுதப்பட்டது. அப்பிரதி தனக்கு மிகுதியும் பயன்பட்டதாக ஐயரவர்கள் குறிப்பிடுவர்.[1] இங்ஙனம் நூலைப் பதிப்பிக்கும் எண்ணங் கொண்டது முதல், நூல் அச்சாகிக் கொண்டிருக்கும் காலம் வரை ஏடுதேடி அலைந்த ஐயரவர்களின் பணி, அவரது தமிழார்வத்திற்கு ஒரு முத்திரையாக அமைந்துள்ளது.

நூலாராய்ச்சி :

சிந்தாமணி நூலாராய்ச்சியில், ஐயர் ஆழ்ந்து ஈடுபடுவதற்கு அடிப்படையாக அமைந்தது நச்சினார்க்கினியர் உரையே. நச்சினார்க்கினியர் தாம் மேற்கோள் காட்டும் நூலையோ, நூலாசிரியரையோ குறிப்பிடும் வழக்கம் இல்லை. இதனைக்குறித்து ஐயர்[2] நூற் பெயரை யாவது இந்த மனிதர் சொல்லித் தொலைக்கக் கூடாதா?' என்றும், மற்ற மேற்கோள்களைப் படித்த போது, ஏதோ கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதாக இருந்ததே ஒழிய இன்ன நூலில் உள்ளது, இன்ன விஷயத்திற்காக மேற்கோள் என்ற செய்திகள் தெளிவாகவில்லை'[3] என அலுத்துக் கொண்டாலும், அவர் ஆளும் மேற்கோள்களைக் குறித்து வைத்துக் கொண்டு அவற்றை எல்லாம் தெரிந்து கொண்ட பின்னரே நூலை அச்சிடக் கருதினார். நூலைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் தொகுக்கத் தொடங்கினார்.

இந்நூலாராய்ச்சியில் எந்த அளவு அவர் ஆழ்ந்து ஈடுபட்டார் என்பதை, 'என் நினைவு முழுவதும் சிந்தாமணி மயமாக இருந்தது; காலையில் எழுந்தவுடன் சிந்தாமணி முகத்தில் தான் விழிப்பேன்:... எத்தனையோ இரவுகள் சிந்தாமணி ஆராய்ச்சியில் மனமொன்றி இருப்பேன்; எனக்குச் சிந்தாமணியும், சிந்தாமணிக்கு நானும் துணையாகப் பொழுது போவதே தெரியாமல் ஆராய்ச்சி நடைபெறும்'[4] என்று அவர் கூறுவதால் உணரலாம். இவ்வாராய்ச்சியில் பலசெய்திகளை அவர் அறிந்தார்.

நூலாய்வின் போது, ஐயரடைந்த இன்னல்கள் பல. இது கொம்பு - இது சுழி என்று வேறு பிரித்து அறிய முடியாது கலங்கல்; மெய் எழுத்துக்களுக்குப் புள்ளியே இராது மயங்கல்; ரகரத்திற்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது திணறல், சரபம் சாபமாகத் தோற்றுதல்; சாபம்

1. அது, பக்: 602-603
2. அது, பக்: 542
3. அது, பக்: 555.
4. அது, பக்: 569.

சரப மாகத் தோற்றுதல்; 'சரடு' என்பதைச் 'சாடு' என்றே பல காலம் எண்ணியிருத்தல்; தரன்' என்பதைத் 'தான்' என நினைத்தல்; 'யானை நாகத்தில் தோற்றுதலின்' என்பதையும், 'யானை நரகத்தில் தோற்றுதலின் அதற்கு வணங்குதல் இயல்பு' என்ற நச்சினார்க் கினியர் உரையையும் கண்டு மயங்கிப் பின், 'யானை நாதத்தில் தோற்றுதலின்' எனத் தெளிதல்; குருதியைக் குந்தி என மயங்கல்; 'பஞ்சாட் சரமாகிய மந்திரத்தை' என்பது கண்டு, சைவருக்குரியது எங்ஙனம் சைனருக்கு வந்தது எனமயங்கிப் பின் சைன நண்பர்களால் அது, அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என்னும் பஞ்ச பரமேட்டிகளை வணங்குதற்குரிய பஞ்ச நமஸ்காரமாகிய மந்திரம் எனத் தெளிதல்; ரகர றகர மயக்கம்; உரை இது, மூலம் இது, மேற் கோள் இது என அறிய முடியாது மயங்குதல்; நச்சினார்க்கினியரின் மேற்கோள்களைக் கண்டு பிடிக்க முடியாது கலங்கியது; பாடபேதங் களால் குழம்பிய நிலை; உரைக்கு மூலமும், மூலத்திற்கு உரையும் கிடைக்காது தடுமாறிய இடங்கள்; மேற்கோள் எதற்காகக்காட்டப் பட்டுள்ளது என்று அறியாது அவலித்து நின்ற நிலை; சைன சமய நுணுக்கம் அறியாது-விளங்காது பட்ட இடர்''[1] என்றிவ்வாறு நூலாராய்ச்சியில் தான் அடைந்த இன்னல்களை டாக்டர் ஐயரவர் விளக்கும் போது, அவரது ஆய்வு நெஞ்சம் எந்த அளவு சிந்தா மணி ஆய்வில் ஈடுபட்டுள்ளது என்பது புலப்படும்.

இத்தனை துன்பத்திற்கிடையே ஒரு புதுச்செய்திகிடைப்பின்; ஐயர் அடைந்த மகிழ்ச்சி பெரிது. நாமகள் இலம்பகம் 58ஆவது செய்யுள் அச்சாகுங்கால், 'ஏக்கழுத்தம் என்றார் பிறரும்' என்ற நச்சினார்க்கினியர் உரை மூலம் சிறுபஞ்ச மூலம், நீதிநெறிவிளக்கம் ஆகிய நூல்களில் 'எக்கழுத்தம்' என்பது 'ஏக்கழுத்தம்' எனத் திருத்தம் பெற்றது குறித்து ஐயர் பெரு மகிழ்ச்சி அடைந்தார். இது குறித்து அவர், ''சிந்தாமணியைத் தெளிவாக விளங்கும்படி பதிப்பிக்கிறோ மோ இல்லையோ, பல காலமாக விளங்காத விஷயங்கள் இம்மாதிரி சில விளங்கினாலும் போதும்; அதையே பெரிய லாபமாக எண்ணலா மே''[2] எனக் குறிப்பிடுவது, அவரது ஆய்வுச் சிந்தனையைப் புலப் படுத்தும். ஐயரவர்கள் எந்த அளவு நூலாராய்ச்சியில் ஈடு பட்டுள்ளார் என்பதும் இதனாற்புலப்படும்.

தனக்கு விளங்காத செய்திகளைப் பிறரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார். தியாகராச செட்டியாரிடம், நச்சர் காட்டும் மேற்கோள் களில் திருக்கோவையாரிலுள்ள சில மேற்கோள்களைத் தெரிந்து

1. அது, பக்: 559-61
2. அது, பக். 586.

கொண்டதாகக் குறிப்பிடுவர்.[1] சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்கட்குக் கலித்தொகை அச்சுப்படி திருத்திக் கொடுக்கும் போது, நச்சினார்க்கினியர் காட்டும் மேற்கோள் சில அதில் இருப்பக்கண்டு குறித்துக்கொண்டார்.[2] இவ்வாறாக ஐயரவர்கள் சிந்தாமணி நூலா ராய்ச்சியில் ஆழ்ந்து ஈடுபட்டதின் பயனே, அவரைச் சிறந்த பதிப் பாசிரியர் நிலைக்கு உயர்த்தியது எனலாம்.

இடையூறுகள் :

சிந்தாமணிப் பதிப்பில் ஐயரவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுகள் பல. நூலைத் தொடங்கியது முதல் அது அச்சாகி வெளிவருவது வரை இருந்தது; நூல்வெளி வந்த பின்னரும் அது பல்வேறு கண்டனங்களுக் குள்ளானது. இவற்றை எல்லாம் கடந்து நூல் வெளிவந்தது என்றால், அது ஐயரவர்களின் விடா முயற்சியும்; பல்வேறு அன்பர் களின் ஆதரவுமே என்பது மிகையாகாது.

முதன் முறையாக இத்தடங்கல் ஐயருக்கு, சி. வை. தாமோதரம் பிள்ளையிடமிருந்து வந்துள்ளது. அப்போது, பதிப்புத் துறையில் செல்வாக்குப் பெற்றிருந்தவர் பிள்ளை. அவர் வந்து, 'தங்களிடம் சிந்தாமணி விசேட உரையுள்ள பிரதி ஒன்று இருக்கிற தென்றும், அதனை ஆராய்ந்து வைத்திருக்கிறீர்கள் என்றும், அது நல்ல பிரதி என்றும் அறிந்து, சிந்தாமணியைப் பதிப்பிக்கலாம் என எண்ணியிருக் கிறேன்; தங்கள் பிரதியைக் கொடுத்தால் என்னிடமுள்ள பிரதியோடு ஒப்பிட்டுக் கொண்டு பதிப்பிப்பேன்''[3] எனக் கேட்க, ஐயர் தான் பட்ட சிரமத்தையும், எடுத்த முயற்சியையும் கூறித் தானே பதிப்பிக்க எண்ணியிருப்பதைக் கூறியும் பிள்ளையவர்கள் விடவில்லை. பின், பிரதியைப் பார்த்து விட்டுத் தருவதாக வாங்கிச் சென்றார்.

இங்குச் சாமிநாத ஐயரவர்களின் தந்தையார் 'அவசரப்பட்டுப் பிரதியைக் கொடுத்திருக்க வேண்டியதில்லை; நீயே சிந்தாமணியைப் பதிப்பிப்பதாகப் பலரிடம் சொல்லியிருக்கிறாய்; இரவும் பகலும் அதே வேலையாய் இருந்து வந்திருக்கிறாய், நீதான் பதிப்பிக்க வேண்டும்; மீனாட்சி சுந்தரேசுவரர் காப்பாற்றுவார்''[4] எனக் கூறி ஊக்குவிக்க, மறுநாள் தாமோதரம் பிள்ளையவர்களிடம் பிரதியைப் பெற்றுத்தானே பதிப்பிக்க முனைந்தார். அதோடு தாமோதரம் பிள்ளையவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது உடன் இருந்த 'அம்பிகை பாக

---

1. அது, பக்: 562
2. அது, பக்: 608
3. அது, பக்: 572
4. ,, ,, 675

உபாத்தியாயரும், ஐயரது சிந்தாமணிப் பதிப்பிற்கு ஒருவகையில் காரணியாகின்றார். அவர், ''ஐயா இந்த ஐயர் பலமுறை ஆராய்ந்து ஆழ்ந்து படித்தவர் என்றும், நீங்கள் ஒருமுறையேனும் இந்நூலைப் படித்துப் பார்க்கவில்லை என்று உங்கள் சம்பாஷணையிலிருந்து அறிந்தேன்; ஆதலால் இந்த நூற்பதிப்பு வேலையை அவரிடமே விட்டுவிடுங்கள்''[1] என்று பிள்ளையவர்களிடம் கண்டிப்பாகச் சொன்னது, ஐயருக்கு ஆறுதலை அளித்தது.*

இந்நிகழ்ச்சியும், நண்பர்கள், 'இப்படி ஆராய்ந்து கொண்டே இருந்தால் வாழ்நாள் முழுவதும் இதிலே செலவாகிவிடும்; நீங்கள் நிதானித்துப் பதிப்பிப்பதற்குள் வேறு யாராவது வெளியிட்டு விடுவார்கள்; எனவே தெரிந்த விஷயங்களை வைத்து வெளியிடுங்கள்; பின் திருத்திக் கொள்ளலாம்'[2] என்று தூண்டியதும் ஐயரின் சிந்தாமணிப் பதிப்பை விரைவு படுத்தியது.

அடுத்து, சிந்தாமணியைப் படிக்க, பதிப்பிக்க யார்மூல காரணமாக இருந்தாரோ அதே சேலம் இராமசாமி முதலியார் 'சிந்தாமணிப் பதிப்பை சி. வை. தாமோதரம் பிள்ளையிடம் விட்டு விடலாமே' எனக் கூறக் கேட்டு அதிர்ச்சியடைந்த ஐயரவர்கள் தன் உழைப்பும் முயற்சியும் ஆவலும் கூறி முதலியாரின் ஆதரவைப் பெற்றார்.[3]

சிந்தாமணி அச்சில் இருக்கும்போது, புரசபாக்கம் அஷ்டாவதானம் சபாபதி முதலியாரிடம், தான் சிந்தாமணியை உரையுடன் பதிப்பிப்பதை ஐயர் கூற, அவர் 'என்ன ஐயா, சிந்தாமணி உரையையாவது நீங்கள் பதிப்பிக்கிறதாவது? அது சுலபமான காரியமா? நீங்கள் பால்யர்; சிந்தாமணி நூலுக்கும் உரைக்கும் உள்ள பெருமை என்ன? அதை முடிப்பது மிகவும் கஷ்டமாக இருக்குமே. அந்த முயற்சியை நிறுத்திக் கொள்ளுதல் மிகவும் நல்லது. ஆழம் தெரியாமல் காலை விடக்கூடாது'' என ஐயரவர்களுக்கு மனத்தளர்வு உண்டாகும் வண்ணம் பேசியதோடன்றி, அந்நூலைத் தானும் தன் ஆசிரியர் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரும் பதிப்பிக்க முயன்று விட்டு விட்டதையும்; ட்ரூ பாதிரியார், போப் துரை, யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் முதலானோர் முயன்று விட்டதையும்; மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களும் சோடசாவதானம்

1. ,, ,, 576
2. ,, ,, 577
3. ,, ,, 578

* இங்குப் பிள்ளையவர்களுக்கும், ஐயரவர்களுக்கும் நடந்த உரையாடல் குறித்து, 'என்சரித்திரம்' —பக்: 571-76-பார்க்க.

சுப்பராயச் செட்டியாரும் சேர்ந்து பதிப்பிக்க எண்ணி விட்டு விட்டதையும் கூறி, 'இப்படி நிறைவேறாத இந்நூலை நீங்கள் பதிப்பிக்கத் துணிந்தீர்களே'[1] என்றார். இதனாலெல்லாம் மனம் தளர்வுறாத ஐயர், தன் பணியைத் தொடர்ந்தார்.

'சுதேச மித்திரன்', 'இந்து' முதலான நாளிதழ்களில் சிந்தாமணிப் பதிப்பு குறித்துச் செய்திகள் வெளி வந்ததைத் தொடர்ந்து, 1886-இல் சூலை மாதம் ஒருவர், 'சிந்தாமணிப் பதிப்பு நச்சினார்க்கினியர் உரையுடன் இருந்தால், தமிழ்நாட்டினரால் ஏற்றுக்கொள்ளப் படும்; சாமிநாத ஐயர் உரையானால் பயன்படாது' என எழுதியது கண்டு வருந்தி, அதற்கு மறுப்பு ஒன்றை 5-8-1886-இல் எழுதி இராமசாமி முதலியார் மூலம் வெளியிடச் செய்தார்.[2] இதற்கிடையில் சி. வை. தாமோதரம் பிள்ளையும் சிந்தாமணியை வெளியிடப் போவதை அறிந்து, தன் பதிப்புப்பணியில் அதிகக்கவனம் செலுத்தினார்.

ஏற்கனவே, உள்ள புரளிகள் போதாதென்று மற்றுமொரு வதந்தியும் எழுந்து ஐயருக்குத் துன்பத்தைக் கொடுத்தது. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் மருகர், பொன்னம்பலம் பிள்ளை சிந்தாமணியில் 20-பாரங்களைப் பதிப்பித்துள்ளார் என்ற செய்தி வந்துள்ளதை [நாளிதழில்] யாழ்ப்பாணம் சதாசிவ பிள்ளை காட்டி, 'ஒரே நூலை இருவர் பதிப்பிப்பதால் என்ன லாபம்' எனக்கேட்க, 'அதனாலென்ன' என்ற ஐயர், அது முதல் பதிப்பைப் பின்னும் செவ்வையாக நடத்த எண்ணி உழைத்தார்.[3]

பின் நண்பர் கே. எஸ். ஸ்ரீநிவாச பிள்ளை மூலம், தாம் அச்சிட்ட சிந்தாமணியை மிகுந்த பொருள் கொடுத்து வாங்க ஒருவர் முயற்சி செய்கிறார் என்பதை அறிந்து வருந்த, அச்சகத்தலைவர், கோவிந்தாச்சாரியார் தைரிய மூட்டினார். தொடர்ந்து, 'யாழ்ப் பாணத்தில் பொன்னையா என்பவர், சிந்தாமணியை நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பிப்பதாகவும், அதற்காக ஆதீனப் பிரதியை சி. வை. தாமோதரம் பிள்ளை கேட்டதாகவும், அதற்குக் கல்லிடைக் குறிச்சியிலிருந்த சின்னப் பண்டாரத்தின் பிரதியை வருவித்து அனுப்பியுள்ளதாகவும்' ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் செய்தி சொல்லியனுப்ப அதன் பிறகு ஐயரவர்கள் ஒருவாரம் விடுமுறை கிடைத்தாலும் சென்னை சென்று பதிப்புப் பணியைத் துரிதப் படுத்தினார்.[4]

---

1. ,, ,, 584.
2. ,, ,, 592-93.
3. ,, ,, 594
4. ,, ,, 598-99

அடுத்து, பிரதி வாங்குவதாகக் கையொப்பமிட்ட கனவான்களிடம் பணம் வாங்கச் செங்கோட்டை சென்றபோது, ஒருவர் 'இவர் பதிப்பு எனக்கு வேண்டாம்; இவர் பிழையாக அல்லவா பதிப்பிக்கிறார். நான் வேறு ஒருவர் பதிப்பிக்கும் சுத்தப் பிரதியையே வாங்கிக் கொள்ளப் போகிறேன்' எனக்கூறக் கேட்டு வருந்திய ஐயர், புரளி செங்கோட்டை வரை பரவியுள்ளதை எண்ணி, பதிப்பை மேலும் துரிதப் படுத்தக் கல்லூரியில் இரண்டுநாள் விடுமுறை கிடைத்தாலும், சென்னை சென்று பதிப்புப் பணியைத் தொடர்ந்தார். அதோடு, இனிச் சிந்தாமணிக்கு ஏடுதேடும் பயணம் வேண்டாம் என்றும் நிறுத்திக் கொண்டார்.[1]

பூண்டி அரங்க நாத முதலியார், தமிழறிவும் ஆர்வமும் மிக்க இராமநாதபுரம் பாஸ்கர சேதுபதியவர்களிடம் யாரோ ஒருவர், 'சாமிநாத ஐயருக்குச் சிந்தாமணியைப் பதிப்பிக்கும் தகுதி இல்லை' எனக் கூறிய செய்தியைக் கூறி, 'நல்ல காரியத்துக்கு இடையூறு விளைவிக்க எத்தனையோ விஷமிகள் காத்திருக்கிறார்கள்' எனச் சொல்லி வருத்தப் பட்டார்.[2] அதோடு முதலியார் ஐயருக்கு உதவும் நோக்குடன், சிந்தாமணி நாமகள் இலம்பகத்தை பி. ஏ. வகுப்புக்குப் பாடமாக வைக்க, அச்சுப்படி திருத்திக் கொண்டிருந்த சோடசாவதானம் சுப்பராயச் செட்டியர், ஐயருக்குத் தெரியாமலேயே அச்சிட்டு வெளியிட்டு விடுகிறார். இதனை அறிந்து வருந்திய ஐயர் அது முதல் செட்டியாரை அச்சுப்படி திருத்தம் செய்ய வேண்டாம் என நிறுத்தி விட்டார். அறிந்த அரங்க நாத முதலியாரும் 'தான் ஒன்று நினைக்க இது வேறு விதமாக முடிந்ததே' என வருந்தினார்.[3]

இங்ஙனம் சிந்தாமணிப் பதிப்பு தொடங்கியது முதல், எதிர்ப்பும், இடையூறுகளும் இருந்த வண்ணமே இருந்தன. இது சிந்தாமணி வெளிவந்த போதும் நிற்கவில்லை. கும்பகோணத்தில் பள்ளித் தமிழாசிரியராக இருந்த மூவர், சைவ மடத்திலுள்ள ஐயர் சைன நூலைப் பதிப்பித்தது தவறு என்றும், சைவ மடாதிபதி சகாயம் செய்தது தவறு என்றும், சிந்தாமணியில் பிழைகள் மலிந்துள்ளன என்றும், அதிலுள்ள பிழைகள் கடல் மணலினும், விண் மீனினும் பல என்றும் கண்டித்துத் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர்; கும்பகோணம், திருச்சி, தஞ்சை, மதுரை, நெல்லை, கோவை, மயூரம், திருப் பாதிரிப் புலியூர், சென்னை முதலான பல ஊர்கட்கும், சென்னையில் ஐயருக்கு உதவி செய்த அனைவருக்கும் கண்டனப்

---

1. ,, ,, 603
2,3. ,, ,, 606.

பிரசுரம் அனுப்பப்பட்டது. 'சீவக சிந்தாமணிப் பிரகடன வழுப் பிரகரணம்' வெளி வந்தது.[1] ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் மறைவின் இரங்கற் கூட்டத்தில் பேசிய ஒருவர், 'சைவ மடமாகிய இந்த இடத்தில் சைன நூலுக்குச்சிறப்புத் தருவது நியாயமன்று; சாமி நாதையர் இம்மடத்திற்கு வேண்டியவராக இருந்தும், உமாபதி சிவாச்சாரியார் 'பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணி' என்று சொல்லியிருக்கும் சைன நூலை அச்சிட்டது தவறு; அதை நாம் கண்டிப்பதோடு, அவர் நூல் பரவாமல் இருக்கும்படிச் செய்ய வேண்டும்'[2] —எனக் கண்டித்ததும் இங்கு நோக்கத்தக்கது.

இக்கண்டனங்களுக்குப் பதில் எழுதி ஐயர் சாது சேஷையிரிடம் காட்ட, அவர் அதனைக் கிழித்துக் குப்பைக் கூடையில் எறிந்துவிட்டு, 'இத்தகைய கண்டனப் போரில் இறங்கிக் காலத்தை வீணாக்க வேண்டாம்' என அறிவுரை பகர்ந்தார். இதுவே ஐயருக்குப் பின்னர் தம் தமிழ்ப் பணியைத் தொடர்ந்து செய்ய வழிவகை செய்தது.

இவ்வளவு எதிர்ப்புக்களையும் எதிர்த்துச் சமாளித்துத் தன் பதிப்புப் பணியில் தொடர்ந்து பணியாற்ற ஐயருக்குத் தோன்றாத் துணையாக நின்றார் பலர். முற்கூறிய இராமசாமி முதலியார் முதலியோர் துணையன்றி, ஐயரவர்கள் மாணவர்கள் சிலர் பிரதி ஒப்பு நோக்கில் உதவி செய்தனர். பதிப்பைத் தொடங்கப் பொருள் வேண்டிச் சென்ற போது, பல கனவான்கள் உதவி அளித்தனர். இதில் முன்னணியில் நின்று முதற்கையொப்பம் இட்டுப் பிரதிகளுக்குரிய முன்பணம் தந்தவர் ஸ்ரீ. சுப்பிரமணிய தேசிகர். சேலம் இராமசாமி முதலியார், பூண்டி அரங்கநாத முதலியார், பம்மல் விஜயரங்க முதலியார், ராஜாசர் சவலை ராமசாமி முதலியார், சூளை சிங்கார முதலியர், ஊத்து மலை ஜமீன் ஹிருதயாலய மருதப்ப தேவர் முதலானோரின் பொருளுதவி சிந்தாமணிப் பதிப்பிற்கு ஊக்கம் அளித்தது.

நூல் அச்சாகுங் காலத்துத் தாள் வாங்கப் பணம் இன்றித் தவிக்க, அப்போது சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், சண்முகம் செட்டி யாரிடம், அச்சுக்குரிய தாள் கடன் வாங்கிக் கொடுத்து உதவினார். அச்சகத்தாருக்குக் கொடுக்கப் பணம் இல்லாது, திருவல்லிக்கேணி விஸ்வநாத சாஸ்திரிகளிடம் முந்நூறு ரூபாய் கடன் பெற்றுக் கொடுத்தார். இங்ஙனம் ஐயரவர்கள் நூலை வெளியிடுங்காலத்து ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல்கள் பல.

1. அது, பக்: 654-55.
2. அது, பக்: 633.

இனி, நூலை அச்சுக்குக் கொடுத்த ஐயர், அதன் அச்சுப்படி திருத்துவதில் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 1866-இல் கோடை விடுமுறையில் சென்னை சென்று பதிப்புப் பணி மேற்கொண்ட ஐயருக்கு, நூலை எவ்வாறு அச்சிட வேண்டும் என்பதைத் தேரழுந்தூர் சக்கரவர்த்தி இராசகோபலாச்சாரியார், தெளிவுபடுத்தினார். மூலத்தைப் பெரிய எழுத்திலும், உரையைச் சிறிய எழுத்திலும், பொழிப்புரையையும் விசேட உரையையும் தனித்தனியே பத்தி பத்தியாகவும் அமைத்து விடலாம் எனக் கூற மகிழ்ந்த ஐயர், அவர் கூறியபடி 'திராவிடரத்நாகரம்' அச்சுக்கூடத்தில் ஒரு நல்ல நாளில் அச்சுக்குக் கொடுத்தார்.[1] சென்னையில், சேலம் இராமசாமி முதலியார் வீட்டில் தங்கியிருந்து, கோடை விடுமுறையில் அச்சுப்படி திருத்திய ஐயர், விடுமுறை முடிந்ததும், அச்சுப்படி திருத்த, சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரிடமும், இராஜகோபாலச்சாரியாரிடமும் ஏற்பாடு செய்து விட்டு, இறுதி அச்சுப்படியைத் தனக்கு அனுப்ப சொல்லி விட்டுக் கும்பகோணம் வந்து சேர்ந்தார். சென்னையில் கிறிஸ்தவக் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் சுப்பராயிலு நாயக்கரும் இதற்கு உதவினார்.

கும்பகோணத்தில், கே. ஆர். ஸ்ரீநிவாச ஐயங்கார், வேம்பத்தூர்ச் சுந்தரேச பாரதி, நல்ல குற்றாலம் பிள்ளை ஆகியோரும் அச்சுப்படி திருத்த உதவினர். கிறிஸ்துமஸ் விடுமுறைக்குச் சென்னை சென்று பதிப்பு வேலையைக் கவனித்த ஐயர், விடுமுறை முடிந்து திரும்பும் போது, இப்பதிப்பு வேலையைத் திருமானூர் அ. கிருஷ்ணையரிடம் ஒப்படைத்துவிட்டு வந்தார். அதன்பின் ஒருவாரம், இரண்டு நாள் என்று எப்பொழுது கல்லூரி விடுமுறை கிடைக்கிறதோ அப்பொழுதெல்லாம் சென்னை சென்று பதிப்புப் பணியைக் கவனித்தார். நூல் அச்சு வேலை முடிய, அக்காலத்தில் சிறந்த பைண்டராகக் கருதப்பட்ட முருகேச முதலியாரிடம் அச்சுப்படிகளை எடுத்துச் சென்று பைண்டிங் வேலையை நிறைவேற்றினார். இங்ஙனம் சீவக சிந்தாமணி பதிப்பைத் தொடங்கியது முதல் அது முடிவது வரை ஐயர் எடுத்துக் கொண்ட முயற்சி, பட்ட இன்னல்கள் பல. இவை அனைத்தும் நூல் வெளியான போது மறைந்தன.

சிலப்பதிகாரம்:

சிலப்பதிகாரம், அக்காலத்தில் கல்லூரிகளில் பாட நூலாக வைக்கப்பட்டதால், ஐயரவர்கள் பதிப்பு வெளிவருவதற்கு முன்னரே இருபதிப்புகள் வெளி வந்துள்ளன. இருபதிப்புக்களிலும் 'புகார்க்

---

1. அது, பக்: 580.

காண்டம் மட்டுமே பதிப்பிக்கப் பெற்றுள்ளது. சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதரான ஸ்ரீ நிவாச ராகவாச்சாரியார் 1876-இல் சேரமான் பெருமான் நாயனார் இயற்றிய 'சிலம்பதிகாரம்' எனத் தம் பதிப்பை வெளியிட்டார். 1880-இல் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரின் புகார்க் காண்டப் பதிப்பு வெளி வந்தது. இருபதிப்புக் களும் பிழை நிரம்பியவை; செட்டியார் கடின நடையை எளிய நடை யாக்கியும் சுருக்கியும் பதிப்பித்தார்'[1] எனக் குறிப்பிடும் ஐயரவர்கள், தம் சிலப்பதிகாரப் பதிப்பை 1892-இல் வெளியிட்டார்.

'சீவக சிந்தாமணி' வெளியானவுடன், சேலம் இராமசாமி முதலி யார், 'பெரிய காரியத்தை மேற்கொண்டு நிறைவேற்றி விட்டீர்கள்; இனி, சிலப்பதிகாரம் முதலியவற்றையும் இப்படியே அச்சிட்டுப் பூர்த்தி செய்ய வேண்டும்'[2] எனச் சிலப்பதிகாரப் பதிப்பிற்கும் அவரே வித்திட்டார். சிந்தாமணிப் பதிப்பை அன்பர்கள் பாராட்டியதும் ஒரு காரணமாகும். அதோடு சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களும், கொழும்பு பொ. குமாரசாமி முதலியார் அவர்களும் சிலப்பதிகாரப் பதிப்பிற்குத் தூண்டு கோலாக அமைந்தனர். மேலும், பத்துப் பாட்டு வெளிவந்த போது, பாலக்காட்டு முனிசிபல் சேர்மன் ப. ஐ. சின்னசாமி பிள்ளையும், பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையும் அளித்த பாராட்டும் மதிப்புரையும் சிலப்பதிகார ஆராய்ச் சிக்கு வித்திட்டதாகவும் டாக்டர் ஐயரவர்கள் குறிப்பிடுவார்.[3] இருப்பினும், சிந்தாமணியை அடுத்துச் சிலம்பை வெளியிடாததன் காரணம், அதன் சில பகுதிகளுக்கு உரை கிடைக்காமையும், மேலும் பல பிரதிகளைத் தேடித் தொகுக்க வேண்டியிருந்தமையாலும் உடனே அப்பதிப்பை மேற்கொள்ளவில்லை எனக் குறிப்பர் டாக்டர் ஐயர்.[4]

ஏடுதேடல்: சிலப்பதிகார ஆராய்ச்சியைத் தொடங்கிய போது, ஐயரிடம், சேலம் இராமசாமி முதலியார் கொடுத்த மூலமும் உரையும் கொண்ட கடிதப் பிரதி ஒன்றும், மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் மூலப் பிரதி ஒன்றும், உரைப் பிரதி ஒன்றும், தியாகராசச் செட்டியார் பிரதி ஒன்றும் வேறு சில பிரதிகளும் இருந்தன. இவற்றை வைத்துக் கொண்டு ஆராய்ந்ததில் ஐயரவர்களுக்கு நிறைவு ஏற்படவில்லை. காரணம் அடியார்க்கு நல்லாரின் உரை ஒரு பெரிய கடலாக அமைந்து, இயலிசை நாடகமெனும் முத்தமிழிலுள்ள பல நூல்களையும், மணி

---

1. சாமிநாத ஐயர், உ.வே., என் சரித்திரம், பக்: 705
2. அது, பக்: 615.
3. அது, பக்: 670
4. அது, பக்: 626-27.

இலக்கணம், யோகம் முதலிய கலை நூல்களையும் மேற்கோள் காட்டி விளக்கியிருப்பது ஒன்று; மற்றது, அவரின் உரை கானல் வரிக்கும் வழக்குரை காதை முதலாகப் பின்னுள்ள காதைகளுக்கும் கிடைக்காமை. ஆயின் அடியார்க்கு நல்லார் 'கானல் வரியில் விரியக் கூறுதும்'[1] 'அழற்படு காதைக் கண்ணே விரித்துக் கூறுதும்',[2] 'கட்டுரை காதையுள் விரியக் கூறுவாம்'[3] என்றமையால், அவர் உரை நூல் முழுமைக்கும் இருந்திருக்க வேண்டும் எனக் கருதினார் ஐயர். தேரழுந்தூர் சக்கரவர்த்தி ராஜாகோபாலாச்சாரியார் கொடுத்த, பழுது பட்டிருந்த அரும்பதவுரைப் பிரதியும் இதற்குப் பிறிதொரு காரணமாக அமையும். எனவே அடியார்க்கு நல்லார் உரையை முழுமையாகப் பெற வேண்டும் என்ற விழைவோடும், திருந்திய பிரதி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடும், ஏடுதேடும் பயணத்தை ஐயரவர்கள் மேற் கொண்டனர்.

முதற்கண் பிரதி கேட்டு, சேலம் இராமசாமி முதலியார், குன்றக்குடி மடத்தின் காரியஸ்தர் அப்பா பிள்ளை, லண்டனில் இருந்த பொ. குமாரசாமி முதலியார், பாரீசில் இருந்த பேராசிரியர் 'சூலியன் வின்சன்' முதலானோருக்கு எழுதினார். பின் சேலம் புறப்பட்டுச் சென்று, வழியில், திருச்சி வரகனேரி, சேலம், பாகற்கட்டி, தார மங்கலம் முதலான இடங்களில் தேடிச் சிலப்பதிகாரம் கிடைக்காமல் மீண்டார். பின் கரிவலம் வந்த நல்லூர் சென்று தேடி, அங்கு வரகுண பாண்டியன் ஏடுகள் 'ஓமம்' செய்யப்பட்டதை (எரிக்கப்பட்டதை) அறிந்து சொல்லொணாத் துயருற்று வறிதே மீண்டார். 1890-இல் நெல்லை சென்று, சாலிவாடீசுவரஓதுவார் வீட்டில் தேடி மூலப்பிரதி ஒன்றும், மூலமும் உரையும் உடைய பிரதி ஒன்றும் பெற்றார். பின், ஸ்ரீவைகுண்டம், பெருங்குளம் சென்று தேடிக் கிடைக்காது, ஆறுமுக மங்கலம் சென்று அங்குக் குமாரசாமிப் பிள்ளை வீட்டில் சிலப்பதிகார உரைப்பிரதி ஒன்றைப் பெற்றார். அடுத்து ஆழ்வார் திருநகரி சென்று தேடிப் பயனின்றி நெல்லை வந்து சேர்ந்தார். அங்கு வக்கீல் சுப்பையா பிள்ளை வீட்டிற்குச் சென்றபோது, அவர் ஆடிப் பெருக்கில் ஏடுகளை விட்டதைக் கூற வருந்தினார். அங்குச் சில சிலப்பதிகாரத் துணுக்குகள் கிடைக்க அதனையும் எடுத்துக் கொண்டார். அது தெளிவாகவும் பிழை இன்றியும் இருந்தது கண்ட டாக்டர் ஐயர் காணாமற் போன ஏடுகளை எண்ணி உள்ளம் நொந்தார். பின் அம்பா சமுத்திரம் சென்று, அபிஷிக்தர் கண்டு கேட்க, அவர் 'சிலப்பதி

---

1. சிலப்: அடி: 3: 26, பக்: 100, & 3 : 13: பக் : 88
2. ,, ,, 3: 106-7, பக்: 115
3. ,, ,, 8: 45-71, பக் 215

கார மல்ல; சிறப்பதிகாரம்' என்க் கூறி, மிகுந்த சிரமத்துடன் ஏடு களைக் காட்ட, அங்குச் சிலப்பதிகாரமே இல்லாதது கண்டு திரும்பினார். தொடர்ந்து நாங்குனேரி சென்று, வானமாமலை மடத்திலும், 'களக்காடு' மடத்திலும் தேடிக் கிடைக்காது வறிதே மீண்டார்.

1891-இல் திருப்பெருந்துறை ஆலயத்தைச் சார்ந்த புத்தக சாலையில் சிலப்பதிகார ஏடுகள் தேடிக் கிடைக்காமல், அங்கிருந்து குன்றக்குடி சென்று மடத்தில் தேடச் சிலப்பதிகாரமும் மணிமேகலை யும் மூலம் மட்டும் கிடைக்கப் பெற்றன. அது திருத்தமாக இருந்ததால் அது கிடைத்த இடம் மிதிலைப்பட்டி என அறிந்து அங்குச் சென்றார். அங்கு அழகிய சிற்றம்பலக் கவிராயர் வீட்டில் தேடிக் கிடைக்கவில்லை, பின் செவ்வூர் சென்று தேடி வறிதே மீண்டார். மீண்டும் ஏடுதேட, விக்கிரம சிங்கபுரம் சென்று கிடைக்காது, கடைய நல்லூர் ஆசிரியர் ஒருவரிடம் கேட்க, அவர் 'எல்லாவற்றையும் கும்பகோணம் சாமிநாத ஐயர் கொண்டு போய் விட்டார்', எனத் தன்னைப் பற்றி தவறாகத் தான் யார் என்பதை அறியாது கூறிய அவரிடம் உண்மையை எடுத்துக் கூறி மீண்டார். இறுதியில், ஊத்துமலை ஜமீன் ஹிருதயாலய மருதப்பத் தேவரைக் காணச் சென்று, அங்கிருந்து மீண்டு திருக் குற்றாலம், சொக்கம் பட்டி, வாசுதேவ நல்லூர், புளியங்குடி சென்று தேடிக் கிடைக்காது, தென்காசி அடைந்தார். அங்குள்ள மடத்தில் தேடி ஒன்றும் கிடைக்காது மீண்டார்.[1]

'அடியார்க்கு நல்லார் உரையிலுள்ள குறையைப் போக்கிக் கொள்வதற்கு நான் அலைந்த அலைச்சலும் பட்டசிரமமும் கொஞ்ச மல்ல; ஐம்பது ஊர்களுக்கு மேல் பிரயாணம் செய்தேன்; எதிர் பார்த்த பயன் கிடைக்கவில்லை'[2] என ஏடு தேட ஐயர் எடுத்துக் கொண்ட முயற்சி பற்றிக் குறிப்பது, அனைவர் உள்ளத்தையும் உருக்கும். நூல் அச்சாகிய காலத்தில், சென்னை குருசாமி ஐயர் வீட்டில் சிலப்பதிகார அரும்பதவுரையில் பத்து ஏடுகள் மட்டும் கிடைக்கப் பெற்றுத் தன்னிடம் உள்ள வற்றோடு ஒப்புநோக்கித் திருத்திக் கொண்டார்.[3]

நூலாராய்ச்சி :

பல்வேறு இடங்களில் ஏடுகள் தேடியதன் பயனாக 14-உரைப் பிரதிகளும், 8 மூலப்பிரதிகளும் பெற்றார். இவற்றை வைத்துக்

1. சாமிநாத ஐயர், உ.வே., 'என்சரித்திரம்' பக்: 671-86; 689-703.
2. அது. பக்: 705.
3. அது, பக்: 708.

கொண்டு, நூலாராய்ச்சியைத் தொடங்கிய ஐயரவர்கள். முதற்கண் அடியார்க்கு நல்லார் உரை, அரும்பதவுரை-இவற்றின் சிறப்புக்களை உணர்ந்து ஊன்றிப் படிக்கலானார். அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டிய சச்சப்புட வெண்பா, தாள சமுத்திரம், சுத்தாநந்தப் பிரகாசம் முதலான நூல்களையும் ஆராய்ந்தார். சிலப்பதிகாரத்தில் வரும் இசை தொடர்பான செய்திகளை மகாவைத்திய நாத ஐயரையும், அவர் தம்பியார் வையை இராமசாமி ஐயரையும் கேட்டுத் தெரிந்து கொண்டார். அபிநயம், கைவகை முதலான நாட்டியக் கலை பற்றிய செய்திகளைக் கும்பகோணம் நடேச தீட்சிதரையும், ராயர் ஒருவரையும் கேட்டறிந்தார். சில நட்டுவனார்களை அணுகிச் சிலச் செய்திகளைத் தெரிந்து கொண்டார். யோக சம்பந்தமான செய்தி களைக் கும்பகோணம் தாசில்தாராக இருந்த ஐயாசாமி சாஸ்திரிகளிடம் விளங்கிக் கொண்டார்.[1] இங்ஙனம் நூலை விளங்கிக் கொள்ள எடுத்துக் கொண்ட முயற்சிகள் பல. இருப்பினும் முற்றும் தெளிவாகச் சிலப்பதிகார உரையில் வரும் செய்திகள் விளங்கவில்லை என்பர் டாக்டர் ஐயரவர்கள்.

பிரதி ஆய்வில் மிதிலைப்பட்டி பிரதியை வைத்துக் கொண்டு பார்த்ததில், சிலப்பதிகாரம் பல இடங்களில் திருத்தம் அடைந்தது; பல இடங்களில் பாடல்களுக்குத் தலைப்புக்கள் இருந்தன என அதன் சிறப்புரைப்பார்.[2] இவ்வாறு பல பிரதிகளை வைத்துக் கொண்டு பரிசோதித்துத் தீர்மான பாடத்தைப் பிரதியில் குறித்துக் கொண்டார். தமிழ் நூல் பதிப்பில், நாளாக ஆக உண்டான ஆராய்ச்சிப் பழக்கமும் பண்டைத்தமிழ் நூலறிவும் ஐயரவர்களுக்குப் பல புதிய முறைகளைத் தோற்றுவித்தன. சிந்தாமணி, பத்துப் பாட்டுப் பதிப்பை விடப் பல புதிய செய்திகளைச் சிலப்பதிகாரப் பதிப்பில் தரவிழைந்து, மூலத் திலும் உரையிலும் பல செய்திகளைத் திரட்டினார். இவற்றை எல்லாம் தொகுத்து, அரும்பத உரை அகராதி, விசய சூசிகை, அரசர் நாடு ஊர் மலை ஆறு பொய்கை தெய்வம் புலவர் முதலான பெயர் பற்றிய அகராதி, நல்லார் உரையிற் கண்ட நூலகராதி, தொகையக ராதி, விளங்கா மேற்கோள் அகராதி, அபிதான விளக்கம் முதலான அமைத்தார். பின்னர் கதைச் சுருக்கம், இளங்கோ வரலாறு, அடியார்க்கு நல்லார் வரலாறு, மேற்கோள் நூல் பற்றிய குறிப்பு முதலான அமைத்துப் பின் முகவுரை எழுதினார்.[3] இதன் பின்னரே நூலைப் பதிப்புக்குக் கொடுத்தார்.

---

1. அது, பக் : 687-88.
2. அது, பக் : 693.
3. அது, பக் : 706.

உதவி :

நூலாராய்ச்சி முழுவதும் முடித்த பின்னரே, பொருள் உதவி வேண்டி, கொழும்பு பொ. குமாரசாமி முதலியாருக்கு எழுத, அவர் 300-ரூபாய் தர ஒப்புக் கொள்ள, 1891-ஜூன் மாதம் சென்னை வெள்ளைய நாடார் ஜுபிலி அச்சுக் கூடத்தில் கொடுத்தார். திராவிட ரத்நாகர அச்சுக் கூடத்தை மாற்றியதற்கு அச்சுக்கூலி அதிகம் என்பதே காரணம் என்பர்.[1] திருவாவடுதுறை, குன்றக்குடி, திருப்பனந்தாள் மடம், கும்பகோணம் சாது சேஷையர் முதலியோர் பொருளுதவி செய்தனர். தேவையான போது விஸ்வநாத சாஸ்திரியிடம் கடன் பெற்றும் அச்சு வேலையை முடித்தார்.

அச்சுப்படி திருத்த, திருமானூர் அ. கிருஷ்ணையர், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், தில்லை விடங்கன் வெண்பாப்புலி வேலுச்சாமி பிள்ளை, மில்லர் கல்லூரி சுப்பராயலு நாயுடு, வை. மு. சடகோப ராமானுஜாசாரியார் முதலியோர் உதவினர். இங்ஙனம் சிலப்பதிகாரப் பதிப்புப் பணி இனிது நிறைவேறியது.

மணிமேகலை :

மணிமேகலை காப்பியப் பதிப்பை 1891-இல் திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை வெளியிட்டார். இதில் பல பிழைகள் இருந்தன எனக் குறிப்பிடும் ஐயரவர்கள் 1897-இல் இதனைப் பதிப்பித்தார். மணிமேகலைக்கு என ஏடுதேடிச் சென்றதாகத் தெரியவில்லை. கிடைத்துள்ள பிரதிகள் அனைத்தும் மூலம் மட்டுமே உள்ளதால், உரைப் பிரதி கிடைக்குமா எனச் சென்னை, தஞ்சையிலுள்ள பழைய கையெழுத்துப் புத்தக சாலைகளில் தேடியும், யாழ்ப்பாணம்-பாரீஸ் போன்ற நகரங்களுக்கு எழுதிக் கேட்டும் கிடைக்காததால், கிடைத்துள்ள பத்து மூலப் பிரதிகளை வைத்துக் கொண்டுத் தம் ஆராய்ச்சியைத் தொடர்கிறார். இப் பிரதிகளில் மிதிலைப் பட்டிப் பிரதியே திருத்தமாக அமைந்து, பதிப்பிற்கு ஆதாரப் பிரதியாக அமைந்தது எனக் குறிப்பர்[2].

மணிமேகலை ஆராய்ச்சித் தொடக்கத்தில், அது இன்ன சமயத்தைச் சார்ந்தது என்றே தனக்கு விளங்க வில்லை எனக் குறிப்பிடுவர். மாளூர் ரங்கர்ச்சாரியரே, அது பௌத்த நூல் என

---

1. அது, பக் : 708.
2. மணிமேகலை, முன்னுரை, பக : கசு-கஎ

அறிவித்தவர். தெரியாத சமய நூலாகலின் அது குறித்து எங்குச் சென்று யாரிடம் அறிவது என மயங்கிய ஐயருக்கு ரங்காச்சாரியாரே கொழு கொம்பாக நின்று உதவினார். பௌத்த சமயத் தொடர்பான ஆங்கில நூல் முதலானவற்றைப் படித்து அதன் சாரத்தை ஐயருக்கு எடுத்தோதினார். டாக்டர் ஐயரவர்களும், தமிழ் நூல்களில் எங்கெங்கே பௌத்த சமயக் கருத்துக்கள் வருகின்றனவோ அவற்றை யெல்லாம் தொகுத்தார். ஆங்கிலத்தில் மானியர் வில்லியம்ஸ், மாக்ஸ் முல்லர், ஓல்டன் பர்க், ரைஸ்டேவிஸ் முதலானோர் எழுதிய புத்த சமய நூற்கருத்துக்களை ரங்காச்சாரியார் உதவியுடன் குறிப்பெடுத்துக் கொண்டார்.

புத்த சரித்திரத்திலே ஈடுபட்டு உருகியும், பௌத்த மத தத்துவங் களை அறிந்து மகிழ்ந்தும் பெற்ற உணர்ச்சியிலே மணிமேகலை ஆராய்ச்சி நடந்தது[1] என ஐயரவர்கள் குறிப்பிடுவது, நூலாராய்ச்சியில் அவரது ஈடுபாட்டைப் புலப்படுத்தும். மணிமேகலை இலங்கை சென்றதாகக் காப்பியம் தெரிவித்தலின், அங்குள்ள செய்திகளை அறிய முற்பட்டார். அங்குள்ள சமனொளி என்னும் சிலம்பு பற்றி மணிமேகலை கூற, அதுவே ஆடம்ஸ்பீக் என்றும் அதில் புத்தர் பாத பீடிகை உள்ளதென்பதையும், கொழும்பு பொ. குமாரசாமி முதலி யாருக்கு எழுதி, அவர் மூலம் 'சுமங்களர்' என்னும் பௌத்த பெரியார் எழுதியனுப்பிய குறிப்புகளால் அறிந்தார்.

ஐயரவர்கள் முதன் முதல் உரை எழுதிய நூல் மணிமேகலையே. அதில் வரும் சமயக்கணக்கர் தந்திரங் கேட்ட காதை,' தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை' களுக்கு உரையை வடமொழி, தர்க்க சாஸ் திரங்களில் வல்லவரான குறிச்சி மகாமகோபாத்தியாய ரங்காச்சாரி யாரிடம் கேட்டு எழுதினார். அதிலும் பின்னுள்ள செய்தி, அவரால் விளக்க முடியவில்லை யாகலின், அப்பகுதிக்குத் தெரியவில்லை எனத் தம் இயலாமையை நேர்மையுடன் ஒப்புக் கொண்டார்'[2] கும்பகோணம் கல்லூரி சமஸ்கிருதப் பண்டிதர் ரங்காச்சாரியிடமும், திருமலை ஈச்சம் பாடி சதாவதானம் ஸ்ரீநிவாசாசாரியரிடமும் வடமொழிச் சொற்கள் பற்றிய ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தார். இங்ஙனம் வல்லார்வாய்க் கேட்டு வேண்டிய உரை எழுதி மணிமேகலைப் பதிப்பை ஒருவாறு முடித்தார்.

பெருங்கதை

நான்கு காப்பியப் பதிப்புக்களில் இறுதியாகப் பதிப்பித்தது பெருங்

1. சாமிநாதையர், உ. வே., என் சரித்திரம், பக் : 748.
2. மணிமேகலை : 29 : 51 அடிக்குறிப்பு, பக் : 350.

கதையே. பத்துப் பாட்டிற்காக ஏடு தேடி அலைந்த டாக்டர் ஐயர வர்கள், நெல்லையில் கவிராச நெல்லையப்ப பிள்ளை வீட்டில் தேடிய போது, 'கொங்குவேள் மாக்கதை' என்ற மேற் சீட்டையுடைய ஒரு பழஞ் சுவடியைப் பார்த்தார். அது இன்ன நூல் என்று அப்போது அவருக்குத் தெரியாது. ஆயினும் அப்பெயரை இலக்கணக் கொத்து உரையால் அறிந்திருந்தார். அது கொங்குவேள் என்பவருடைய கதையாக இருக்கலாம் என்று எண்ணி அச்சுவடியை எடுத்து வைத்துக் கொண்டார்.[1] பின் திருப்பாற் கடனாதன் கவிராயர் வீட்டில் கிடைத்த 'கொங்குவேள்மாக்கதை'யையும் எடுத்துக் கொண்டார்.[2] அப்பொழுதெல்லாம் ஏதோபழஞ்சுவடி என்ற எண்ணத்தில் எடுத்து வைத்துக்கொண்டாரே ஒழிய அதனை ஆராய வேண்டும், பதிப்பிக்க வேண்டும்என்ற உணர்வு ஐயருக்கு இருந்ததாகத் தெரியவில்லை. பின்னர் சிலப்பதி கார, அடியார்க்கு நல்லார் உரையாராய்ச்சியிலேயே 'கொங்குவேங் மாக்கதை' என்பது 'உதயணன் கதை' என்றும் அதற்குப் 'பெருங் கதை' 'கதை' என்று பெயர் வழங்குவதையும் அறிந்தார்.[3] அதுவே பெருங்கதையை ஆராய வேண்டும், பதிப்பிக்க வேண்டும் என்ற உணர்வை ஐயருக்கு ஏற்படுத்தியது. மேலே குறிப்பிட்ட பிரதிகள் தவிரப் பிற பிரதிகள் ஐயரவர்களுக்குக் கிடைத்ததாகத் தெரிய வில்லை. 'பெருங்கதைப் பிரதிகள் அங்குள்ளன, இங்குள்ளன' எனக் கூறிப் பலர் தன்னை அலைந்து திரிய வைத்தனர்; 'அது பெரிய கதை' எனக் கூறுவர்.[4] ஐயரவர்கள் காகிதத்தில் பிரதி செய்து, பல குறிப்புகளை குறித்து வைத்திருந்த பிரதியை ம. வி. கனகசபை பிள்ளையவர்களுக்குக் கொடுக்க, அது அவருக்குக் கிடைக்காமலே போகிறது.[5]

இங்ஙனம் பெருங்கதை ஆராய்ச்சியில் ஐயரவர்களுக்கு ஏற்பட்ட சில அனுபவங்கள் அவர் உள்ளத்தை வருத்துவனவாக அமைந்தன. பெருங்கதை தொடர்பான வடநூற் கருத்துக்களையும், நூல்களையும், எஸ். ராமச்சந்திர சாஸ்திரி, சின்னத்தம்பி சாஸ்திரி முதலானோ ரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு நூலைப் பதிப்பித்துள்ளார்.

---

1. சாமிநாதையர், உ.வே. 'என் சரித்திரம்', பக். 638. & பெருங்: முகவுரை, பக்: xxxv.
2. அது, பக்: 641. & பெருங்கதை, முகவுரை, பக்: xxxvii
3. அது, பக்: 714. & ,, ,, xxxvii
4. பெருங்: முகவுரை: XLI.
5. அது, பக்: XL

இங்ஙனம் டாக்டர் ஐயரவர்கள் நான்கு காப்பியங்களையும் பதிப்பிக்க எத்தகைய முயற்சியை மேற்கொண்டார் என்பது ஒருவாறு விளங்கும். ஐயரவர்கள் சிந்தாமணியைப் பதிப்பிக்கத் தொடங்கியது முதல் எந்த நூலைப் பதிப்பித்தாலும் அதனை முழுமையாக அறிந்து கொள்ளாமல் பதிப்பித்தல் வழக்கம் இல்லை.

பதிப்புக் கொள்கை: மேற்கண்ட நான்கு காப்பியப் பதிப்புப் பணியை ஐயரவர்கள் மேற்கொண்ட வரலாற்றிலிருந்து அவர் மேற்கொண்ட பதிப்புக் கொள்கையை வருமாறு வகைப்படுத்தலாம்.

1. எந்த ஒரு நூலைப் பதிப்பிக்க எடுத்துக் கொண்டாலும், அந்த **நூல் பிரதிகள் எவ்வளவு கிடைக்குமோ அவ்வளவையும் தேடித் தொகுத்தலை** அவர் மரபாகக் கொண்டுள்ளார். சிந்தாமணி, சிலப்பதிகாரக் காப்பியப் பதிப்பிற்கு அவர் மேற்கொண்ட ஏடு தேடும் பயணம் இதனைத் தெளிவுபடுத்தும்.

2. **நூலைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொண்ட** பின்னரே பதிப்புப் பணியை மேற் கொள்வது. சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய காப்பியங்களில் வருகின்ற சமயச் செய்திகள், இசை நாடகச் செய்திகளை அறிவதற்கு ஐயரவர்கள் மேற் கொண்ட முயற்சிகள் இதனை வலியுறுத்தும். 'திருவிடைமருதூர் யானைப் பாகன் மூலம் சீவக சிந்தாமணியில் வரும் யானைப் பேச்சு பற்றிய குறிப்பினை அறிந்து கொள்வதும்[1] இதனையே காட்டும்.

3. பல பிரதிகளைத் தேடித் தொகுத்தாலும் அவற்றில் ஒன்றை **ஆதாரப் பிரதியாகக்** கொள்வதை வழக்கமாக்கியுள்ளார். சிலப்பதிகாரம், மணிமேலைப் பதிப்பிற்கு மிதிலைப்பட்டிப் பிரதியை ஆதார பிரதியாகக் கொண்டுள்ளது இங்குக் குறிப்பிடத் தக்கது.

4. பழைய உரையாசிரியர்கள், தம் உரையில் மேற் கோள் காட்டிய நூல், நூலின் பகுதி, பாடல், முதலான வரும் இடங்களை முடிந்தவரை குறிப்பிட்டுக் காட்டுவதை ஐயரவர்கள் நோக்கமாகக் கொண்டுள்ளார். சீவக சிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியர் காட்டியுள்ள மேற்கோள்களைத் தேடிக் கண்டு பிடிக்க ஐயரவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி இதனை வலியுறுத்தும்; எவ்வளவு முயன்றும் கிடைக்காத வற்றை, **'விளங்கா மேற்கோள் அகராதி'** அமைத்துக் குறிப்பிடுவர்.

---

1. சாமிநாதையர், உ.வே., 'நல்லுரைக் கோவை'-4, பக்; 134.

5. பிரதிகளில் இல்லாதவற்றை, ஊகித்து நிரப்புவது இல்லை. சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரை கிடைக்காத இடங்களில் அவற்றைக் குறிப்பிடுவர்; பெருங்கதையில் பல பகுதிகள் கிடைக்க வில்லை எனக் குறிப்பதோடு சில இடங்களில் சில சொற்கள் சிதைந் துள்ளதையும் அவ்வாறே தருவர்.[1] சீவக சிந்தாமணி 1689-ஆம் பாடல் உரைக் குறிப்பில் 'இச்செய்யுளுக்கு வினை முடிவாகிய உரை பிரதிகளில் கர்ணப்படவில்லை' என்றும், மணிமேகலை 27: 251-ஆவது வரியை அடுத்து, திசை முதலிய நான்கின் இலக்கணம் விடுப்பட்டுள்ளன என்றும் கருதும் ஐயரவர்கள், ஏட்டில் உள்ளவாறே மாற்றாமல் பதிப்பித்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

6. சில பிரதிகளில் மட்டும் மிகையாகக் காணப்பட்ட பாடல், வரி முதலான வற்றை அடிக்குறிப்பில் எடுத்துத் தருவர். இம்முறை யிலே, சீவக சிந்தாமணியில், 611, 625, 687, 1881,-ஆகிய பாடல் களை அடுத்துச் சில பிரதிகளில் மட்டும் காணப்படும் பாடல்களை அடிக்குறிப்பாகத் தந்துள்ளார். இது போல, மணிமேகலைக் காப் பியத்தில் பதிகத்தின் இறுதியில், இருபாடல்களைத் தந்து, 'இந்த இரண்டு செய்யுட்களும் இந்த வண்ணமாக மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயரவர்கள் வீட்டுப் பிரதியில் மட்டும் காணப்பட்டன' எனக் குறிப்பிடுவர். சிலப்பதிகாரத்தில், காதை - 3, வரி - 39-ஐ அடுத்து, 'மாத்திரையறிந்து மகிழ்தரு மரபின்' - என ஓரடியும், பெருங்கதையில், வத்தவ காண்டம், காதை-12, வரி 151-ஐ அடுத்து, 'என்ன வின்னவற்றேரழித் தன்ன' என ஓரடியும் சில பிரதிகளில் காணப்பட்டதாகக் குறிப்பிடுவர்.

7. பிழை அல்லது, பொருத்த மற்ற, அல்லது மறுத்தற் கிடமான பகுதிகள் ஏட்டில் இருப்பின், அதனை மாற்றாது ஏட்டில் உள்ளவாறேஐயரவர்கள்பதிப்பித்துள்ளார். இதனைச்சீவக சிந்தாமணி முகவுரையில், 'புராதன மான தமிழ் நூல்களும் உரைகளும் பண்டை வடிவம் குன்றாதிருத்தல் வேண்டும் என்பதே எனது நோக்க மாதலின், பிரதிகளில் இல்லாதவற்றைக் கூட்டியும், உள்ளவற்றை மாற்றியும், குறைத்தும் மனம் போனவாறே, அஞ்சாது பதிப்பித்தேனல்லன்... பிரதிகளில் இருந்த வாறே செய்தேன்[2]' எனக்குறிப்பர். ஆயின், பொருள் விளக்கத்திற்காகச் சிலவிடங்களில் ஐயரவர்கள் மாற்றிப் பதிப்பித்துள்ளார் எனக் குறிப்பிடுவர் வையாபுரிப் பிள்ளையவர்கள்.[3]

---

1. பெருங்: 1: 32:, 3:10:71,3;16: 35-அடிக்குறிப்பு காண்க.
2. சீவக. சிந். முகவுரை, பக்: 7.
3. வையா புரிப்பிள்ளை, எஸ், தமிழ்ச் சுடர்மணிகள், பக்: 284.

சிலப்பதிகாரப் பதிகவுரையில், முச்சங்க வரலாற்றைத்தரும், ''வேங்கடங் குமரி....தெரிந்தே'' என்ற நீண்ட ஓர் அகவலை எடுத்துக் காட்டும் ஐயரவர்கள், 'இச் செய்யுள் பாண்டி நாட்டிலுள்ள செவ்வூர்ச் சிற்றம்பலக் கவிராயர் வீட்டிலிருந்த பழைய ஏட்டுப் புத்தக மொன்றில் எழுதப்பட்டிருந்தது; இவ்வகவலிலுள்ள சில பகுதி மறுத்தற் குரியன வாக இருந்தும் ஒருசாராருடைய கொள்கை தெரிவதற்கு இங்கே பதிப்பிக்கப்பெற்றது'[1] எனக் குறிப்பிடுவர். இதே போன்று, நாடு காண் காதைத் தொடக்கத்தில், அடியார்க்கு நல்லாரின் 'விசேடவுரை யிலுள்ள காலவரையறை பொருந்தாதது போல் தோற்றினும், பிரதியில், உள்ளவாறே பதிப்பிக்கப் பட்டது'[2] என்பர்.

8. ஒருபதிப்பில் பிழை புகுந்து விட்டால், அதனை நேர்மையுடன் ஏற்று, மறு பதிப்பில் திருத்திக் கொண்டார்; 'சிந்தாமணிப் பதிப்பில் என் அறியாமையால் சில பிழைகள் அமைந்ததுண்டு; திருத்தக்க தேவர் மதுரைக்குச் சென்று சங்க வித்துவான்களைக் கண்டனர் என்று முதல் பதிப்பில் எழுதியிருக்கிறேன்: இது தவறு என்று பிறகு தெரிய வந்தது; சைன சங்கத்தைச் சார்ந்தவர்களை அவர் கண்டார் என்ற உண்மையைப் பிற்கால ஆராய்ச்சியால் அறிந்து கொண்டேன். இப்படியே நூற்பெயர்கள், புலவர் பெயர்கள் முதலியவற்றில் பிழை யான உருவங்களைச் சிந்தாமணி முதற்பதிப்பில் காணலாம். 'அவற்றை நாளடைவில் திருத்திக் கொண்டேன்'[3] என ஐயரவர்கள் குறிப்பிடுவது, இக் கொள்கையை நிலைநாட்டும்.

9. தனக்குத் தெரியாத வற்றை நேர்மையுடன் தெரியாது என ஒப்புக் கொள்ளும் பண்பும் பதிப்புப் பணியில் ஐயரவர்கள் கொண்டுள்ளார் என்பது வரவேற்கத் தக்கது. அதே நேரத்தில் தெரியாது என்று விட்டுவிடாமல் இயன்றவரை முயற்சி செய்து முடியாத நிலையிலேயே இதனைக் குறிப்பிடுவர். மணிமேகலை, 'தவத்திறம் பூண்டு தருமம் கேட்டகாதையில் வரும் 'பிரத்தியக்கம்', 'அனுமானம்' என்னும் அளவை இலக்கணம் பற்றி வரும்பகுதி 'தனக்குத் தெரியாத நிலையில் பலரிடம் கேட்டும் கிடைக்காத நிலையில் அதற்குக் குறைப்புரை எழுத முடியவில்லை' எனக் குறிப்பிடுவர்.[4]

---

1. சிலப்: உரைப்பா. பக்: 8
2. அது, 10:1-3 அடிக்குறிப்பு
3. சாமிநாதையர், உ.வே. என் சரித்திரம்-பக் 653.
4. மணி: 29: 51 - அடிக் குறிப்பு.

இங்ஙனம் ஐயரவர்கள் பதிப்புப் பணி, பல்வேறு சிக்கல்களுக் கிடையே, ஒரு வரையறைக்குட்பட்ட 'பதிப்புக் கொள்கை'யைப் பின் பற்றி அமைந்துள்ளது. தொடக்க நிலையில் ஒவ்வொரு பதிப்பை வெளியிடுகின்ற போது, பல சேர்க்கைகள், மாற்றங்களை அமைத்த வர், பின் அவர் வெளியிட்ட அனைத்து நூல்களுக்கும் ஒரு நிலையான வரையறை வகுத்துக் கொண்டார். பின் வரும் ஆராய்ச்சியாளர் களுக்கு 'ஒரு கலைக்களஞ்சிய'மாக ஐயரவர்கள் தம் பதிப்புக்களை ஆக்கித் தந்துள்ளார். இருப்பினும் 'ஐயரவர்கள், குறிப்பாகத் தாம் பதிப்பித்த நூல்களை அதற்குமுன் யார் யார் பதிப்பித்துள்ளனர் என்பதைக் குறிப்பிடுவதில்லை' என்ற ஒரு குறையைப்பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் குறிப்பிடுவர்[1]. இச்செய்தியை ஐயரவர் கள் 'என் சரித்திரத்தில்' குறிப்பிடுவர். ஆயின் அந்தந்த நூலின் முகவுரையில் இதுபற்றிய செய்திகளைக் கொடுத்திருந்தால் இன்னும் பயனாக இருந்திருக்கும் என்ற எண்ணம் எழுவது இயல்பே.

அதோடு, டாக்டர் ஐயரவர்கள், தான் ஒவ்வொரு நூலையும் பதிப்பிக்க எடுத்துக் கொண்ட முயற்சி பற்றி அந்தந்தப் பதிப்பின் முகவுரையில் கொடுத்திருக்கலாம் என்று தோன்றுகிறது. காரணம் ஐயரவர்கள் என்சரித்திரத்தில் பெருங்கதை பதிப்புத் தொடர்பான செய்திகள் இடம் பெறாததால், அக்காப்பியப் பதிப்பிற்கு, அவர் மேற்கொண்டப் பதிப்புப் பணி குறித்து அறிய முடியவில்லை. அன்றியும், சில முரண்பாடுகளும் ஐயரவர்களின் 'என்சரித்திரத்'தில் காணப் படுகின்றது. சிந்தாமணிப் பதிப்பிற்குச் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், தனக்கு ஒரு பெரிய முட்டுக் கட்டையாக முதற்கண் நின்றதைக் குறிப்பிடும் ஐயரவர்கள், சீவக சிந்தாமணி முகவுரையில், இந்நூலையும் பின்னும் இரண்டொரு முறை பரிசோதித்தற்கு விருப்ப முடையேனாயினும், இவற்றை விரைவில் பதிப்பித்துப் பிரகடனம் செய்யும் படி யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் பலமுறை தூண்டினமையாலும் விரைந்து அச்சிடு விக்கத் துணிந்தேன்'[2] எனக் குறிப்பது, பொருத்த மற்றதாகத் தோன்றுகிறது. சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தாம் பதிப் பிக்க வேண்டும் என்று பலவாறு முயன்றுள்ளார் என்பதையே ஐயரது என் சரித்திரத்தில் காண முடிகின்றது. இது போன்ற முரண்பாடுகள், காப்பியப் பதிப்பு முகவுரையிலேயே, பதிப்பு முயற்சியைக் குறிப் பிட்டிருப்பின் ஏற்பட்டிருக்க வாய்ப்பு இல்லை.

1. வையாபுரிப் பிள்ளை, எஸ்., தமிழ்ச் சுடர் மணிகள், பக்: 280.
2. சீவ. சிந்; மு. ப. முகவுரை, பக்: 7.

2. பதிப்பு வேறுபாடு

ஐம் பெருங் காப்பியங்களில்,[1] நான்கினைப் பதிப்பித்த பெருமை டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்களைச் சாரும். இவற்றில் சீவக சிந்தாமணி 1887-இலும், சிலப்பதிகாரம் 1892-இலும், மணிமேகலை 1898-இலும், பெருங்கதை 1924-இலும் முதற்பதிப்பாக வெளிவந்தன. முதன் முதல் வெளியான சீவக சிந்தாமணிப் பதிப்பைவிடப் பின்வந்த சிலப்பதிகாரப் பதிப்பில், 'தொகையகராதி', 'விஷய சூசிகை', 'அரும் பதவகராதி,' ஆகியவற்றைச் சேர்த்துள்ளார். அடுத்து வெளிவந்த மணிமேகலையில் பௌத்த சமயக் கருத்துக்கள் அடங்கிய 'புத்த சரித்திரம்,' 'பௌத்த தருமம்,' 'பௌத்த சங்கம்' ஆகிய பகுதி களையும், 'அரும்பதவுரையிலுள்ள உதாரணச் செய்யுள் அகராதி,' 'பிரயோக விளக்கம்,' 'அரசர் பெயர்கள் முதலியன,' 'வேறு கதைகள்' முதலான புதிய இணைப்புக்களையும் தேடித் தொகுத் துள்ளார். இறுதியில் வெளியிட்ட பெருங்கதையிலேயே ஒரு தெளி வான பதிப்பு வரையறை அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன், ஏனை மூன்று காப்பியங்களின் மறுபதிப்புக்கள் புதிய இணைப்புக் களுடன் வெளி வந்ததால், பெருங்கதைப் பதிப்பில் ஒரு முழுமை, முதற் பதிப்பிலேயே அமைந்து விடுகிறது. பெருங்கதையின் பதிப்பு முறை கூட அதன் இரண்டாம் பிதிப்பில் சிறிது மாற்றியமைக்கப் பட்டது.

இந்நான்கு காப்பியங்களின் முதற் பதிப்புக்களை ஒருங்கு வைத்து நோக்குகின்றபோது, ஒவ்வொரு பதிப்பிலும் புதிது புதிதாக எதையாவது சேர்க்க வேண்டுமென்று விழைந்த ஐயரவர்களின் ஆர்வமும், அதன் காரணமாகப் பதிப்புத்துறையில் அவரடைந்த முதிர்ச்சியும் தெற்றெனப் புலப்படும். இவ்வார்வமும் முயற்சியுமே பிற்பதிப்புக்களில் நிலையான—தரமான—வரையறைக்குட்பட்ட ஒரு பதிப்பு முறையைக் கொண்டுவரக் காரணியாகிய தெனலாம்.

ஒவ்வொரு நூலையும் மறுமுறை வெளியிட நேர்ந்தபோது, பல புதிய செய்திகளைக் குவித்தும், பிழை எனக் கண்டவற்றைத் திருத்தி யும், தேவையற்றன என உணர்ந்தவற்றை விடுத்தும் பதிப்புப் பணியில் ஒரு புதிய மரபை உருவாக்கியுள்ளார். ஒவ்வொரு காப்பிய மும் பல புதிய வேறுபாடுகளுடன் வெளிவந்தன. அவ்வேறுபாடு

1. ஐம் பெருங் காப்பியங்களவான: சீவக சிந்தாமணி, சிலப்பதி காரம், மணிமேகலை, பெருங்கதை, சூளாமணி எனபன.

களைக் காண விழைவதே இங்கு நோக்கமாக அமைகின்றது.[1]

பதிப்பு வேறுபாடு—சீவக சிந்தாமணி :

சீவக சிந்தாமணியின் முதற் பதிப்பு 1887-இலும், இரண்டாம் ப்திப்பு 1907-இலும், மூன்றாம் பதிப்பு 1922-இலும், ஐயரவர்களால் வெளியிடப் பட்டன. இம் மூன்று பதிப்புக்களிடையேயும் மூலத்திலும், நச்சினார்க்கினியர் உரையிலும், பதிப்பாசிரியர் தரும் ஆராய்ச்சிக் குறிப்புக்களிலும் மிகுந்த வேறுபாடுகள் அமைந்துள்ளன. ஏனைக் காப்பியங்கள் இரண்டாம் பதிப்பிலேயே செம்மை பெறச் சிந்தாமணி மட்டும் மூன்றாம் பதிப்பிலேதான் செப்பம் பெறுகின்றது. 'முதற்பக்க அமைப்பு' முதல், நூல் இறுதி வரை ஒவ்வொரு பகுதியிலும் இவ்வேறு பாடுகளைக் காணலாம்.

முதற் பக்க அமைப்பு : முதற் பதிப்பில் 'சேலம் இராமசாமி முதலியார் அவர்களின் விருப்பத்தின் படி, ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள், ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை இவர்கள் மாணாக்கர் உ. வே. சாமிநாதையர் பரிசோதித்து, த. கோவிந்தாச் சாரியாரது திராவிட ரத்நாகர அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பட்டது' என அமையும். இவை இரண்டாம் பதிப்பில் மாற்றப் பட்டு, 'சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய உ.வே. சாமிநாதையர்' என்றும், 'பிரஸிடென்ஸி அச்சுக்கூடம்' என்றும் குறிப்பிடப் பட்டுள் ளது. மூன்றாம் பதிப்பு 'கமர்ஷியல்' அச்சுக் கூடத்தில் பதிப்பிக் கப்பட்ட செய்தி இம்முதற் பக்கத்தில் இடம் பெறும். இம்மூன்று பதிப்புக்களின் விலையும் முறையே ரூ. 8, 6, 10-என மாற்றப் பட்டுள்ளன.

'பொருளடக்கம்' மு.ப. வில் 'இப்புத்தகத்தில் அடங்கியவை' என்பது பத்துத் தலைப்புக்களில் அமையும். இ.ப. வில் இது 18 தலைப்புக்களிலும், மூ.ப. 13-தலைப்புக்களிலும் அமையும். இ.ப.வில் 13-வது தலைப்பு மேலும் 13-உட்சிறுதலைப்புக்களாக வகை செய்யப்

---

1. இங்குப் பதிப்பு வேறுபாடுகள் தொடர்பான செய்திகள், சீவக சிந்தாமணி, மணிமேகலை, பெருங்கதை ஆகிய மூன்றின் அடிப் படையில் மட்டுமே அமையும். சிலப்பதிகாரப் பதிப்பு வேறுபாடு குறித்து டாக்டர். சொல் விளங்கும் பெருமாள் அவர்கள் தம் நூலின்—''டாக்டர் உ.வே. சா.'' விரிவாக ஆராய்ந்துள்ளதால், அது குறித்த செய்திகள் இங்கு விடப்பட்டன. அதன் பதிப்பு வேறுபாடுகளை அவர்தம் நூலின் [பக்: 111—46] காண்க.

பெற, மூ.ப. வில்* 20-உட் சிறு தலைப்புக்கள் அமையும். பிற் பதிப்புக்களிலும், பிறகாப்பியப் பதிப்புக்களிலும், முகவுரை, பொருளடக்கப் பகுதியில் ஓர் உறுப்பாக அமையச் சீவக சிந்தாமணியின் முதற்பதிப்பில் மட்டும் இம் முகவுரை பொருளடக்கத்தில் சேர்க்கப்படாமல் தனித்து நிற்கிறது.

இ.ப. பொருளடக்கத்தில், முதலிரு பதிப்புக்களின் முகவுரையோடு, நூற்பெயர்கள் முதலியவற்றின் குறிப்புக்கள், நூலைப்பற்றிய சிலகுறிப்புக்கள், ஸ்ரீ புராணத்திலுள்ள சீவகன் சரித்திரம், சீவக சிந்தாமணி ஆராய்ச்சி, விசேடக் குறிப்பு, இந்நூலை எடுத்தாண்ட உரையாசிரியர்கள், சில்பிரதிகளில் காணப்பட்ட செய்யுட்கள், 'அரும்பத வகராதி முதலியன'-ஆகிய தலைப்புக்கள் சேர்க்கப்பட்டன. மூன்றாம் பதிப்பின் இவ்வுள்ளடக்கத்தில் புதிய தலைப்புக்கள் இடம் பெற வில்லை யாகினும், உள்ள தலைப்புக்களில் சில மாற்றங்கள் அமையும். மு.ப. வில் இடம் பெற்ற அபிதான விளக்கம், மேற்கோள் விளக்கம் தலைப்பு பிற் பதிப்பில் இடம் பெறவில்லை.

முகவுரை : பிற மூன்று காப்பிய முகவுரைகள், அதன் முதற்பதிப்பின் முகவுரையின் திருந்திய வடிவாக அமையச் சீவக சிந்தாமணியில் மட்டும் மூன்று பதிப்புக்களின் முகவுரைகளும் தனித்தனியே எவ்வித மாற்றமும் இல்லாமல் இடம் பெற்றுள்ளன. இவ்வகையில் சிந்தாமணி முகவுரை தனித்து நிற்பதோடு, தனிச் சிறப்பும் பெறுகின்றது. இதனால் ஒவ்வொரு பதிப்புக்கும் துணை நின்றோர், பயன் பட்ட ஏடுகள் முதலான பற்றிய செய்திகளை ஒரே பதிப்பில் அறிந்து கொள்ள முடிகிறது. இம்முறை பிற காப்பியப் பதிப்புக்களில் ஏன் பின்பற்றப் படவில்லை என்பது தெரியவில்லை. ஒருவேளை ஐயரவர்கள் பக்க நீட்டிப்புச் செய்யவேண்டாம் எனக் கருதியிருக்கலாம். ஆயின், ஆய்வாளர்களுக்குப் பதிப்பு தோறும் இடம்பெறும் தனி முகவுரைகள், பதிப்பு வரலாற்றை அறிந்துகொள்ளப் பெருந் துணை செய்யும் என்பது திண்ணம்.

நூலாசிரியர் வரலாறு : 'திருத்தக்க தேவர் சரித்திரச் சுருக்கம்' என முதற்பதிப்பில் இடம்பெற்ற தலைப்பு பின்னர் 'நூலாசிரியர் வரலாறு' எனத் திருத்தியமைக்கப்பட்டது. இந் 'நூலாசிரியர் வரலாறு' பகுதியில், 'அங்ஙனம் (தேவர் சங்கப் பலகை) அமரும்போது' என்று

---

* மு.ப. முதற் பதிப்பு; இ. ப. இரண்டாம் பதிப்பு;
மூ.ப.. மூன்றாம் பதிப்பு - சுருக்கம் கருதி இக்குறியீடு பயன் படுத்தப் பெறும்.

தொடங்கும் பத்திக்கு முன்னுள்ள முதல் இரு பக்கங்கள் இ.ப.வில் சேர்க்கப் பெற்றவை. இ.ப.வில் 'என்றார்' என்பது மூ.ப.வில் 'என்றார்கள்' என மாற்றம் பெற்றுள்ளது[1]. இதே போன்று இ.ப.வில் 'செந்தமிழ்ப் பத்திராசிரியர் ஸ்ரீ மு. இராகவையங்கார்' என அடிக் குறிப்பில் இடம்பெறுவது, மூ.ப.வில் 'சென்னை லெக்ஸிகன் கமிட்டியில் பண்டிதராகவுள்ள ராவ்சாகிப் ஸ்ரீ மு. இராகவையங்கார்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது[2].

முதற்பதிப்பில், 'ஸ்ரீமத் சோம சுந்தரக் கடவுள் திருவருளால் (தேவர்) சங்கப் பலகை ஏற்றார்'[3] என்ற செய்தி பிற்பதிப்புக்களில் இடம்பெறவில்லை, இங்குத் தேவர் சமணராகலின் இங்ஙனம் கூறுதல் தவறெனவுணர்ந்த ஐயரவர்கள் பிற்பதிப்புக்களில் தம் தவற்றைத் திருத்திக் கொண்டுள்ளார் எனலாம். அதோடு தேவர் சங்கப் புலவர்களோடு கூடி அளவளாவினார் என்று குறித்த செய்தி முரண்பாடென்பதை உணர்ந்த ஆசிரியர், இ.ப.வின் அடிக்குறிப்பில், 'இச் சங்கம் கடைச்சங்கம் அன்று' எனச் சுட்டித் தெளிவு படுத்தியுள்ளார்.

நூலைப் பற்றிய சில குறிப்புக்கள் இரண்டாம் பதிப்பு முதல் இடம் பெறுகின்றது. இங்குச் சிந்தாமணிச் செய்திகள், பிற இலக்கண, இலக்கிய ஆசிரியர்களால் சுட்டப்படும் பகுதிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இவற்றில் மூன்று குறிப்புக்கள் மூ.ப.வில் புதிதாக இடம் பெறுகின்றன. அவைவருமாறு :[4]

1. ''காவிய நோய் செய்தருங் கயற்கண் மாதராள்''
   —என்பது சிந்தாமணி [தக்க. 380 உரை]

2. ''குணமாலை ருக்குமணி கொண்ட மயல் தீர
   மணமாலை கிள்ளைதர வாழ்ந்தார்''
   —மான் விடு தூது-56.

3. ''மறந்தரு சீவகனார் மங்கையரிற் றத்தை
   சிறந்ததுநின் பேர் படைத்த சீரே''
   —அழகர் கிள்ளை விடுதூது-10

---

1. சீவக சிந்தாமணி - இ.ப. பக்: 15, பத்தி - 2 இறுதி.
   ,, மூ.ப - பக்: 13.
2. மேற்படி, பக்-15 (இ.ப) மூ.ப. பக் 13.
3. ,, மூ.ப. பக்: 14.
4. சிந்தாமணி - மூ.ப; பக்: 17.

இவையன்றி, அடிக்குறிப்பில், 'இங்கிலீஷ் எண்களெல்லாம் சிந்தாமணிக் கவிகளைத் தெரிவிப்பவை' எனக் குறிப்பிட, மூ.ப.வில் 'ஆங்கில எண்' எனத் தமிழ்ப்படுத்தியுள்ளார்.[1]

'நச்சினார்க்கினியர் வரலாறு' என மூ.ப.வில் அமைந்த தலைப்பு பிற்பதிப்புக்களில் 'இந்நூல் உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் வரலாறு' என மாற்றியமைக்கப்பட்டுள்ளது. முதற்பதிப்பில் இரு பக்கங்களில் அமையும் இவர்தம் வரலாறு பிற்பதிப்புக்களில் எட்டுப் பக்கங்களாக விரிவடைந்துள்ளது. 'நச்சினார்க்கினியர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார்' என முதற்பதிப்பில் குறித்த ஐயர், பிற்பதிப்பில் இதனை நீக்கியுள்ளார்.

மூல நூலாசிரியர் கருத்தை நச்சினார்க்கினியர் விளக்கிக்காட்டும் நயமான பகுதிகள் 130-ஐ இ.ப.வில் தொகுத்துத் தருவர். இது, மூ.ப.வில் 140 ஆக விரிவடைந்துள்ளது. புதிய நயங்களாக ஐயர் சுட்டும் பகுதியின் பாடல் எண்களாவன: 8,21,249,319,419,591, 1258, 2426,2541,2639,3072 ஆகியன, இ.ப.வில் நயமான பகுதியாகக் குறிக்கப்பட்ட 613-ஆம் பாடற்பகுதி பிற்பதிப்பில் இடம்பெறவில்லை. இப்பகுதிக்கு எழுதிய நச்சினார்க்கினியர் உரை அவ்வளவு நயமான பகுதி அல்ல எனப் பின்னர் நீக்கியிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

தொல்காப்பிய உரை முதலியவற்றில் நச்சினார்க்கினியர் காட்டிய மேற்கோள் பாடல்கள் அமைந்த நூற்பெயர்கள் இதுவரை விளங்கியவையாக இ.ப.வில் 81-நூல் பெயர்கள் குறிக்க. மூ.ப.வில் 82 நூல் பெயர்கள் குறிப்பர். இ.ப.வில் இடம்பெற்ற 'பெருங்கதை' நூல், மூ.ப.வில் விடப்பட்டுப் புதிதாகச் 'சூளாமணி', 'அறநெறிச்சாரம்' ஆகிய இரண்டு நூல்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன. 'பதஸாரம்' என இ.ப.வில் இடம்பெற்ற சொல் 'பதசாரம்' என மூ.ப.வில் இடம் பெறுகின்றது[2].

'சீவகன் சரித்திரச் சுருக்கம்' பொருள் நிலையில் எவ்வித மாற்றமும் பெறவில்லை; ஆயின் தொடரமைப்பில் இ. ப., மூ. ப., விற்கு இடையில் சில மாற்றங்கள் காணப் படுகின்றன. அவற்றுள் சில வருமாறு:

---

1. ,, - இ.ப. பக்:17; மூ.ப. 15
2. ,, - இ.ப. பக்:22; மூ.ப. பக்.20

இ.ப.		மூ.ப.
'சுகித்திருந்தான்'—பக்: 1	...	'இன்புற்றிருந்தான்' —பக்: 27
'அப்படியே ஆகுக என்று உடன் பட்டான்'—3	...	'அங்ஙனம் செய்வதாக ஒப்புக் கொண்டான்—29.
'அஃதுணர்ந்த பலதேயத் தாரும்'—5	...	'அது தெரிந்த பல தேயத் தாரும்' 31
'ஆறு தினஞ் சென்றன'—5	...	'ஆறு தினங்கள் சென்றன'—31
'சில நாளாய பின்'—5	....	சிலநாள் சென்ற பின்—31
'அடைந்தனன்'—6	...	'அடைந்தான்'—32
'இவற்றைத் தெரிந்த'—7	..	'அவற்றைத் தெரிந்த'—33
'பிராயம் சென்றது'—16	...	'பிராயம் நடந்தது'—42

இவை போன்று இன்னும் பல மாற்றங்கள் அமைகின்றன. இப்பகுதியின் அடிக்குறிப்பில் வரும் 24 தீர்த்தங்கரர் பெயரிலும் சில மாற்றங்கள் பிற்பதிப்பில் இடம் பெறுகின்றன.

'சிரேயாம்ஸர்' [இ.ப. பக்:3]—சிரேயாம்சர் [மூ.ப பக்:29]
'முனிசுவ்ரதர்' ,, —'முனிஸுவ்ரதர்' ,,
'பார்சுவர்' —'பார்ச்வர்' ,,

ஸ்ரீ புராணத்தில் 24-ஆம் தீர்த்தங்கரராகிய ஸ்ரீவர்த்த மானர் புராணத்துள்ள சீவகன் சரித்திரம் பகுதி இரண்டாம் பதிப்பில் இடம் பெற்றுப் பிற்பதிப்புக்களில் பெரிதும் மாற்றமின்றியே அமைகின்றது. பத்தி பிரித்தலில், தொடக்கத்தில் அமையும் 'மற்றொரு நாள் .... அருளிச்செய்வார்' என்பது தனிப்பத்தியாக மூ.ப-வில் இடம் பெற, இ.ப.வில் அவ்வாறு அமையவில்லை[1]. இதே போன்று, 'ஒருநாள்' எனத் தொடங்குவது இ.ப.வில் தனிப்பத்தியாக அமைய, மூ.ப.வில் அவ்வாறு அமையவில்லை[2].

இ.ப.வின் அடிக்குறிப்பு தமிழ் எண்ணில் அமைய [க, உ.......] பிற்பதிப்பு அடிக்குறிப்பு ரோமன் எண்ணில் [1,2,3,....]அமைகின்றது. 'வியாபாரம்' என்பது 'வ்யாபாரம்'[3] என்றும், 'பவ—உன்னுடைய' என்பது 'பவத்தர்சனார்த்தமாக-உன்னைப் பார்க்க'[4] என்றும் மாற்றம் பெற்றுள்ளன.

1. *சீவக* சிந்தாமணி மூ.ப.—45, இ.ப.-19
2. ,, மூ.ப. பக்:50, இ.ப.-24
3. ,, ,, 51 ,, 25
4. ,, ,, 57 ,, 31

அபிதாந விளக்கம் முதற்பதிப்பில் இடம் பெற்றுப் பிற் பதிப்புக் களில் இடம் பெறாது போகிறது. இங்குப் பாத்திரம், நாடு, நகர், மலை, யானை, குலம் முதலியவற்றின் விளக்கம் அமையும், (இப்பகுதிகள் அனைத்தும்) இ.ப.வில் 'அரும்பதம் முதலியவற்றின் அகராதி'யில் இடம் பெற்றுள்ளன.

'அரும் பதம் முதலியவற்றின் அகராதி' முதற் பதிப்பில் இடம் பெறாது, பிற்பதிப்புக்களில் இடம் பெற்றுள்ளது: இ.ப. வில் 101-பக் கங்களாக இருந்த இப்பகுதி மு. ப. வில் 126-பக்கங்களாக விரி வடைந்துள்ளது. 'அரும் பதம் முதலான' வரும் இடம் பற்றிய பக்க எண் தர, மு. ப, முதல் பாடல் எண் தரப்பட்டுள்ளது.

'ஒப்புமைப் பகுதிகள்' என்பதில், சீவக சிந்தாமணிப் பாடல், வரி, சொல், கருத்து, உவமை முதலான பிறவிலக்கியங்களில் வருவது, 'ஒப்புமை மேற்கோள் அகராதி' யாகத் தொகுக்கப் பட்டுள்ளது. 'சீவக சிந்தாமணி ஆராய்ச்சி விளக்கம்' என்ற தலைப்பில் 42-பக்கங்களில், இவ்வொப்புமைப் பகுதி இ.ப. வில் இடம் பெற்றது. இது மூன்றாம் பதிப்பில் 113-பக்கங்களாக விரிவடைந்துள்ளது. இங்குத் தொகுத் தளிக்கப் பட்டுள்ள ஒப்புமைப் பகுதிகளில் ஒருசில மு.ப. வின் அடிக்குறிப்பில் இடம்பெற்றன. நான்காம் பதிப்பு முதல் இவ்வொப்புமைப் பகுதி இடம்பெறவில்லை.

'விசேடக்குறிப்பு'ப் பகுதியே 4-ஆம் பதிப்பு முதல் அடிக்குறிப் பில், ஐயரவர்களின் குறிப்புரையாக இடம் பெறும். இவற்றில் இடம் பெறும் செய்திகள் சில 'அரும்பதம் முதலியவற்றின் அகராதியிலும் வரும். மு.ப. வில் இடம் பெறாத இப்பகுதி, இ.ப. வில் 31-பக்கங் களிலும் மு.ப. வில் 45-பக்கங்களிலும் அமையும். 7-ஆம் பதிப்பில் இடம்பெறும் 'விசேடக் குறிப்பு' இதிலிருந்து வேறுபட்டது. இது, நான்காம் பதிப்பில் அச்சு நடந்து கொண்டிருந்த காலத்தில் கிடைத்த செய்திகளின் தொகுப்பாகலாம். மூன்றாம் பதிப்பின் 'விசேடக் குறிப்பை' விட, நான்காம் பதிப்பில் இப்பகுதி மேலும் விரிவும் விளக்கமும் பெற்றுள்ளது. இப்பதிப்பு ஐயரால் வெளியிடப் பட வில்லையாகினும், இதிலுள்ள புதிய சேர்க்கைகள், ஐயரவர்களால் எழுதிவைக்கப் பட்டிருந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்று கிறது. 1942-இல் இப்பதிப்பு வெளிவந்தது. இதே ஆண்டில்தான் ஐயரவர்கள் இறைவனடி எய்தினார் என்பது குறிப்பிடத் தக்கது. எனவே நான்காம்பதிப்பின் குறிப்புக்கள் பல ஐயரின் கைவண்ணமாக அமைந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க இடமுண்டு.

சீவக சிந்தாமணி பிரயோக விளக்கம்' இ.ப. வில், 'இந் நூலை எடுத்தாண்ட உரையாசிரியர்கள்' என்னும் தலைப்பில், அடியார்க்கு

நல்லார் முதல் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் ஈறாக 22-உரையாசிரியர்கள் சீவக சிந்தாமணிப் பாடல்களை மேற் கோளாக எடுத்தாண்டுள்ளனர் எனக் குறிக்கப் பட்டுள்ளது. ஆயின் மு.ப. வில் இப்பகுதி ஓர் அட்டவணையாக அமைந்து, எடுத்தாளப்பட்ட சிந்தாமணிச் செய்யுள் எண், அடி, உரையாசிரியர் பெயர், அவர் எடுத்தாண்டுள்ள நூலின் பெயர், எடுத்துக்காட்டு அமையும் நூலின் பகுதி, அதன் சூத்திரம்-பா-அடி எண்முதலானவற்றின் தொகுப்பாக அமையும்[1]. பின் வந்த பதிப்புக்களில் இவ்வட்டவணை நீக்கப்பட்டு, 'இந்நூலைப் பற்றிய சில குறிப்புக்கள்' பகுதியில், 22-உரையாசிரியர் களின் பெயர்கள் மட்டும் அகர வரிசையில் தரப்பட்டுள்ளன.

மேற் கோள் விளக்கம் : முதற் பதிப்பில் இடம் பெற்ற இப்பகுதி, பின் வந்த பதிப்புக்களில் இடம்பெறவில்லை. காரணம், சிந்தாமணி முதற்பதிப்பு அச்சாகுங் காலத்து, நச்சினார்க்கினியர் காட்டும் மேற் கோள்கள் சில விளங்கியமையின், அவற்றை அவ்வப் பகுதியில் சேர்க்க முடியாத நிலை ஏற்பட்ட போது, (அப்பகுதி அச்சாகி முடிந்ததால்) பின்னிணைப்பாக, இப்பகுதியைச் சேர்த்துள்ளார்;[2] எனவே பிற்பதிப்புக்களில், இப்பின்னிணைப்புச் செய்திகளை, அவ் வப்பகுதியில் தந்துள்ளதால், இப்பகுதி தேவையற்றதாகிறது.

விளங்கா மேற்கோள் அகராதி : 'பதிகம்' முதல் 'முத்தி இலம் பகம்' ஈறாகத் தனித் தனியே ஒவ்வொரு பகுதியிலும் நச்சினார்க் கினியர் எடுத்துக் காட்டிய நூல், இடம் பற்றி அறிய முடியாத பகுதிகளை மு.ப. வில் தொகுத்துத் தருவர். இவ்வகையில் 87-விளங்கா மேற்கோள்கள் தொகுக்கப் பட்டுள்ளன. இ.ப., மூ.ப. வில் இவ்வகராதி அகர வரிசைப்படி அமைந்துள்ளது. இ.ப. வில் 85 விளங்கா மேற்கோள்களும், மூ.ப. வில் 82-விளங்கா மேற்கோள்களும் இடம் பெற்றுள்ளன. இம்மேற்கோள் சிந்தாமணியில் வருமிடம் குறிக்கையில், பக்க எண் குறிப்பர். பின்னுள்ள பதிப்பில் 78-விளங்கா மேற்கோள்களே உள்ளன.

இ.ப.வில் இடம்பெற்ற, 'அரசனுழை யிருந்தோன்'[3] 'நிலக்கு'[4] 'அத்தம் என்னும் பொன்னஞ் சிலம்பு'[5] 'கழை போய் விண்முத்தம்'[6],

---

1. சிந்தாமணி, மூ.ப., பக்: 176-87.
2. ,, மு.ப. பக்:1--4
3. திருக்குறள், 638
4. ,, 374
5,6. பாண்டிக் கோவை

'கொன் வரல் வாடை'[1], ஆகியன இடம் விளங்கினமையின் பிற் பதிப்புக்களில் இடம் பெறவில்லை. இங்ஙனம் இடம் விளங்கிய பகுதியன்றி, 'உண்ட வெச்சில்[2] உண்ணா கிடந்தான்[3]. முதுகண்[4], வியத்தகு'[5] என்பன பற்றிய விளக்கம் அவ்வப் பகுதியில் இடம் பெறாத நிலையிலும், இவை மூ.ப.வில் நீக்கப்பட்டுள்ளன. எனவே இவை நான்கும் மேற்கோள் பாடல்கள் அல்ல எனப் பின்னர் ஐயரவர்கள் உணர்ந்து, அவற்றை விளங்கா மேற்கோள் அகராதி யிலிருந்து நீக்கியிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. மூ.ப.வில் புதிதாக உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர்'[6] முலை முடி சூடிற்று'[7] ஆகிய இரண்டும் புதிதாக மூ.ப.வில் விளங்கா மேற்கோள் அகராதி யில் இடம் பெற்றுள்ளன.

இப்புத்தகத்தில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி மு.ப.வில் இடம் பெறாது, இ.ப. முதல் இடம் பெறுகின்றது. இ.ப.வில் 156 முதற்குறிப்பகராதியே அமைய மூ.ப. வில் 172 முதற்குறிப்பகராதி அமைகின்றன.

இ. ப. வில் இல்லாது மூ.ப.வில் சேர்ந்தன :	**இ.ப. விலிருந்து விடுபட்டன**
அடிக்—அடிக்குறிப்பு	அகத்—அகத்திணையியல்
அடியார்—அடியார்க்கு நல்லார்	அந்தி—அந்திமாலைச்சிறப்புச் செய்காதை
அம்பிகா—அம்பிகாபதிக் கோவை	ஆதி—ஆதியுலா
அரங்கக்—திருவரங்கக் கலம்பகம்	இசை—இசை நுணுக்கம்
அரும்பத—அரும்பதவுரை; அரும்பத உரையாசிரியர்	இடை—இடைச்சொல்லியல்
அரங்கத்தந்—திருவரங்கத்தந் தாதி	இந்திர—இந்திர விழவூரெடுத்த காதை
ஆத்திரையன்—ஆத்திரையன் பேராசிரியன்	இலக்—இலக்கணையார் இலம்பகம்

1. புறம்: 379:1
2. சிந்தாமணி இ.ப. பக். 105
3. ,, ,, ,, 881
4. ,, ,, ,, 735
5. ,, ,, ,, 34
6. ,, மூ.ப. ,, 397
7. சிந்தாமணி மூ.ப. பக்: 35

இ.கொ.—இலக்கணக் கொத்து
இராசராச—இராசராச சோழனுலா
இராமா—இராமாயணம்
இ.வி.சூ—இலக்கண விளக்கச் சூறாவளி
இ-ள்—இதன் பொருள்
இளம்—இளம்பூரணம் (ர்)
ஐந்.எழு—ஐந்திணை எழுபது
ஐந்.ஐம்—ஐந்திணை ஐம்பது
கச்சி.வண்டு—கச்சியானந்த ருத்திரேசர் வண்டு விடுதூது
காசிகா—காசி காண்டம்
கார்—கார் நாற்பது
காரி—காரி ரத்ன கவிராயர்
காழிக்கோ—சீகாழிக்கோவை
குண—குணசாகரர்
குமர பிரபந்—குமர குருபர சுவாமிகள் பிரபந்தங்கள்
உதா—உதாரணம்
உயிர் ம—உயிர் மயங்கியல்
உரி—உரியியல்
உரைபெறு—உரைபெறு கட்டுரை
உவம—உவமவியல்
எச்,எச்ச—எச்சவியல்
எழுத்—எழுத்ததிகாரம்
ஏலா—ஏலாதி
கட—கடவுள் வாழ்த்து
கரந்—கரந்தைப் படலம்
களவி—களவியல்
கற்—கற்பியல்
கனக—கனக மாலையார் இலம்பகம்
காந்த—காந்தருவ தத்தையார் இலம்பகம்
கால்கோட்—கால்கோட் காதை
கானல்—கானல் வரி
கிள—கிளவியாக்கம்

[இன்னும் பல சேர்க்கையும் நீக்கமும் உண்டு]

இங்கு இ.ப.விலிருந்து நீக்கப்பட்ட குறிப்புக்களை நோக்கப் பெரும்பாலும் நூலுறுப்புக்களைச் சுட்டுவதை விட்டுவிடுகிறார் என லாம். ஒரோவழி 'ஆதியுலா', 'ஏலாதி', 'களவழி நாற்பது' முதலான நூற்பெயர்கள் விடப்பட்டுள்ளன. ஆயின் மூன்றாம் பதிப்பில் புதிதாக இடம் பெற்றன அனைத்தும் நூற்பெயர்களாகவும் பதிப்புக் குறிப்புக் களாகவும் அமையக் காணலாம். இம் மாற்றமன்றியும், இவ்வகராதி தரும் முறையிலும் சில திருத்தங்கள் அமைந்துள்ளன. சில வருமாறு:

இ.ப.		மூ.ப.
அகநா—அகநானூறு	....	— அகம்—அகநானூறு
கதை—பெருங்கதை	....	— பெருங்—பெருங்கதை

அடிக்குறிப்பு: முதற்பதிப்பின் அடிக்குறிப்பில் நச்சினார்க்கினி யர் உரையில் கண்ட மேற்கோள் விளக்கம் சில இரண்டாவது, மூன்றாவது பதிப்புக்களில் அவ்வப் பகுதியிலேயே அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன.

மூலமும் உரையும் : முதல் மூன்று பதிப்புக்களிடையே சீவக சிந்தாமணி மூலமும் உரையும்பெற்ற மாற்றங்கள் பல. இவற்றில் மூலம் திருத்தப் பட்டமையும் புதிய பாடபேதங்கள் இடம் பெற்றதும், பிரதி பேதமாகத் தரப்பட்டவை பின்னர் மூல பாடமாக ஏற்கப்பெற்றதும் உண்டு.

மூலத்தில் அடைந்த மாற்றங்களாவன:[1]

மு.ப.	இ.ப.	மூ.ப.	
'சரவெனும்'	'சரவெனும்'	சரைஎனும்-பா:	39
'புறாத்தலை வேடன்'	'புறாத்தலை வேடன்'	'புன்றலை வேடன்'	-450
'வாயொருப் பட்டு'	'வரவொருப் பட்டு'	'வாயொருப் பட்டு'	-587
'அதனிழலும்'	'அதனிழலும்'	'நிழலும்'	-730
'கழுமினார்க்கு'	'கெழுமினார்க்கு'	'கெழுமினார்க்கு'	-754
'சக்கர யூகம்'	'சக்கர யூகம்'	'சக்கரவியூகம்'	-757
'முனைத்தண்டு'	'முனைத் தண்டு'	'முளைத்தண்டு'	-1136
'கொடாதவன்'	'விடாதவன்'	'விடாதவன்'	1491
'மதிபொழி கதிர்'	'மதியின் கதிர்'	'மதியின் கதிர்'	1554
'மல பிண்ட'	'மலபிண்ட'	'மலப்பண்ட'	2791
'கடுப்புடைக் காமம்'	'நடுப்புடைய காமம்'	'நடுக்குடைக் காமம்	2871
'குன்றுடன்'	'குன்றினம்'	'குன்றினால்'	2914

2. மு: ப. இ. ப. & மூ. ப.[2]

'ஏந்தொத் திருந்த' — —'ஏந்தொத்தலர்ந்த' .... பா 8

---

1. இப்பகுதியில் தரப்படும், மு.ப. & இ.ப. பாடங்கள், மூன்றாம் பதிப்பில் பிரதிபேதமாக அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளன.

2. இங்கு இடம்பெறும் பாடவேறுபாடு, 'பிரதிபேதம்' பகுதியில் இடம்பெறவில்லை; இங்கு முதற்பதிப்பிற்கும் இரண்டாம் பதிப்பிற்கும், மூன்றாம் பதிப்பிற்கும் இடையிலுள்ள பாடவேறுபாடுகள், முதல் 200 - பாடல்களை ஒப்பு நோக்கியதில் கிடைத்தவை. சீவக சிந்தாமணி முழுவதையும் ஒப்பு நோக்கின் மிகுதியான பாடவேறுபாடுகளை (திருத்தங்களை)க் காணலாம்.

'நஞ்சற்ற'	...'நஞ்சுற்ற'	... 11
'இந்நீர்ப் படியாம்'	...'இந்நீர்ப்படியேம்'	... 12
'புனைமாண்'	...'பொறிமாண்'	... 16
'திணைநிலைப் பொருநர்'	...'கிணைநிலைப் பொருநர்'	... 61
'மாற்றரும்'	...'பாத்தரும்'	... 87
'உச்சிமேல்'	...'உச்சியில்'	... 88
'மட்டுடை'	...'மட்டிலா'	 93
'கொங்கொளிர்'	...'கொங்கலர்'	... 94
'எழுதியொப்ப'	...'எழுதியேற்ப'	 108
'தாரலங்கன்'	...'தாரணிந்த'	... 112
'மெய்யணி செம்பொற்'	...'மெய்யணி பசும்பொற்'	... 117
'குயில'	...'குயிறரக்'	... 120
'கொடுத்த'	...'அளித்த'	... 132
'நின்றிளகுமே'	....'நின்றிளஃகுமே'	... 149
'மல்லனீர்'	...'மல்குநீர்'	... 162
'பட்டிசைத்து'	...'பட்டசைத்து'	 173

இனி, முதலிரு பதிப்புக்களில் இடம்பெறாத பல புதிய பாட பேதங்கள் மூன்றாம் பதிப்பில் இடம் பெற்றுள்ளன. சில வருமாறு :

பாடபேதம்	மூலபாடம்	
'திளைப்பவர் பருகிய தேறறேத்துழி' ...	'திளைத்தவர் பருகிய தேறறேங்குழி' ...	50
'கெழுவினார்க்கு	'கெழுமினார்க்கு' ...	754
'அவை யார்க்கும் அழிப்புண்ணா' ...	'அது யார்க்கும் அழிப்பொண்ணா' ...	848
'நொய்ய புணை' ...	'நோன்புணை'	
'ஆவிசோர'	...'ஆவி நீங்க' ...	1302
'துடைக்கப்'	...'துடைக்க' ...	1302
'போகிய'	...'போகுயர்' ...	1422
'இந்நெறி யந்நெறி'	...'யெந்நெறி யிந்நெறி ...	1428
'கனல்ப'	...'கனிப' ...	1513
'விதுவிதிர்த்து	...'விதிர்விதிர்த்து' ...	1540
'ததும்பும்'	...'திளைக்குஞ்' ...	1559
'ஊழ்த்துத்'	....'ஊழ்த்து' ...	1560
'நானக் குழம்பு'	...'நாவிக் குழம்பு' ...	2692

'கொண்டோடு வாரையுள்	...'கொண்டோடு கின்றார்'	2768
'தந்தீயெனா'	...'தந்தீகெனா' ...	2794
'கால்கள் குறைத் தாங்கே'	'கால்கை களைந்தாங்கே'....	2795
'சிலம்பு மார்ப்ப	....'சிலம்புமேங்க' ...	2921

இம் மூலப் பகுதி யன்றி, நச்சினார்க்கினியர் உரையிலும், புதிய பாடங்கள் தரப்பட்டனவும், பழைய பாடம் திருத்தப்பட்டனவும் உண்டு. சில வருமாறு :

பிற பாடம்	மூல பாடம்	
'பொருந்திய'	...'பொருந்தவே' ...	675-உரை
'உயர் சந்தம் வெண்கல மும்பாங்குடைச்	...'உயர் சந்து வெண்கலமே பாங்குறு'	675
'ஞாயிறுபோல அரசன்'	...'ஞாயிறு போல்வான்' ...	882
'அருகந்தாவத்தையை'	....'அதீதாவத்தையை ...	1548

இங்ஙனம் முதல் மூன்று பதிப்புக்களிடையே மூலமும் உரையும் திருத்தம் பெற்றதன்றிச் சில புதியபாடல்களும் பிற்பதிப்புக்களில் இடம் பெற்றுள்ளன. 985-ஆம் பாடலை அடுத்து, ''ஆடவர்க்'' எனத் தொடங்கும் பாடல் ஒன்று சில பிரதிகளில் மட்டும் காணப் பட்டதாக மூன்றாம் பதிப்பில் குறிப்பிடுவர். இதுபோல, 1440, 1441-ஆகிய இரு செய்யுட்கள் சில பிரதிகளில் காணப்படவில்லை எனக் குறிப்பிடுவர். இவை, முதலிரு பதிப்புக்களிலும் இடம்பெற வில்லை.

இனி, 'சீவக சிந்தாமணியுரைப் பிழைகள்' என ஒரு வெளியீடு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியர் பொன்னம்பல தேசிகர் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதில் சிந்தா மணியிலும் அதன் உரையிலும் அமைந்த பிழைகள் 95-தொகுக்கப் பட்டுள்ளன. இங்குப் பிழையான பகுதியும், அவற்றின் திருத்தமும், பாடல் எண், சருக்கம் முதலான விவரங்களுடன் இடம்பெற்றுள்ளன. இப் பிழைகள் பல ஐயரவர்களால் பிற்பதிப்புக்களில் திருத்தப்பெற் றுள்ளன. சில பின் வருமாறு :

	பிழை:	திருத்தம்
1.	'சச்சந்தனென்ப'	'சச்சந்தன் என்பான்'—பா: 7
* 2.	'பிறிதின்'	'பிறிதொன்றின்'—24-உரை
* 3.	'கொள்கையுமாம்'	'கோளகையும்'—83,2275 (உரை)
* 4.	'பிறரும்'	'பின்னும்'—84-உரை

* 5.	'பட்டவர் தப்பலின்'	'பட்டவர்த் தப்பலின்'—98
6.	ஆய் முகிறழீஇ'	'ஆய்முகிற்றழீஇ'—100
* 7.	'வணமே'	'வண்ணமே'—146
8.	'சூழ்குலைப் பசுங் கமுகு'	'சூழ்கதிர்ப் பசுங்குலை'—147
9.	'ஆரழல்'	'ஆறழல்'—157
10.	'காத்திரிகை'	'கார்த்தரிகை'—168 ['கத்தரிகை-உ.வே.சா. திருத்தம்]
*11.	'காமமே அடிபட்டு'	'காமமே அடிப்பட்டு'—210-உரை.
12.	'இயல்பாகக் கூறினேன்'	'பரக்கக் கூறினேன்'—214. (உரை உ.வே. சா.)
*13.	'தேவரது முற்கூறிய வேட்கைத் திரளிலே'	'முற்கூறிய தேவரது வேட்கைத் திரளிலே'—215-உரை
*14.	'பாவி என்னுடைய ஆவியை'	'பாவியேனுடைய ஆவியை'—227
*15.	'மடவாட்கென'	'மடவாய்க்கென'—228
*16.	இதுவுமிறந்ததே'	'இதுவுமறிந்தே'—310-உரை
*17.	நடக்கின்றது, அதனைத் தப்பி'	'நடக்கின்றதனைத் தப்பி—320 உரை
18.	'செருக்கால்'	'நெருக்கால்'—341-உரை

இங்கு, *-என்ற குறியீடு பெற்ற பகுதி, பிற் பதிப்புக்களில் ஐயரவர்களால் ஏற்றுக் கொள்ளப் பெற்றுத் திருத்தம் பெற்றுள்ளன. எண் 1, 6, 8-10, 12, 18-ஆகியன பிழையல்ல என ஐயரவர்கள் கொண்டதால், இவற்றை மாற்றாமல் அப்படியே பிறபதிப்புக்களில் பதிப்பித்துள்ளார். இது ஐயரவர்களின் நற்பண்பை விளக்கும். கண்டனமாக வந்த பிரசுரத்தில், உண்மையில் பிழை எனக் கண்டவற்றை நேர்மையுடன் ஒப்புக்கொண்டு, பிழையைத் திருத்திக் கொண்டது பாராட்டற் குரியது.

ஐயரவர்கள் பதிப்பித்த நான்கு காப்பியங்களில் சீவக சிந்தாமணி தவிர, ஏனைய அனைத்தும் இரண்டாம் பதிப்பிலேயே பிழையற்ற ஒரு திருந்திய பதிப்பாக மலரச் சிந்தாமணி ஒன்றே மூன்றாம் பதிப்பில் சீர்மையும் செப்பமும் முழுமையாகப் பெற்றுள்ளது. இருப்பினும், இப்போது கிடைக்கும் அமைப்புடன் சிந்தாமணியின் மூன்றாம் பதிப்பு வெளிவரவில்லை. மூ. ப. வில் குறிப்புரை (விசேடவுரை) நூலின் இறுதியில் பதிப்பிக்கப் பெற, ஐயரின் புதல்வரால் வெளியிடப் பட்ட நான்காம் பதிப்பில் இது, நூலின் அடிக் குறிப்பாக இடம்

பெற்றுள்ளது. அன்றியும், நூலின் அமைப்பை நோக்க, மூன்றாம் பதிப்பை விட, நான்காம் பதிப்பில், இக்குறிப்புரை விளக்கமும், விரிவும் பெற்றிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. மூன்றாம் பதிப்பில் இடம்பெற்ற 'ஒப்புமைப் பகுதிகள்' பிற்பதிப்புக் களில் இடம் பெறவில்லை. இவை 'குறிப்புரை'யில் தரப்பட்ட தோடு சரி. மேலும், ஐயரவர்கள் காலத்திற்குப் பின்னர் வந்த பதிப்புக்களில், இடம்பெற்ற, 'சீவக சிந்தாமணி உரையில் வரும் மேற்கோள் நூல்களும் அவை வந்துள்ள இடங்களும்,' 'உரையில் வரும் மேற்கோள் பாடல்களின் அகர வரிசை'[1] ஆகியன முதல் மூன்று பதிப்புக்களிலும் இடம்பெறவில்லை. இவை முதலான, ஐயர் 1942-இல் இறைவனடி சேர்தற்கு முன், அவரால் எழுதி வைக்கப்பட்டிருந்த குறிப்புக்களைக் கொண்டு, அவரது புதல்வர் நான்காம் பதிப்பில் வெளியிட்டிருக்கவேண்டும். இங்கு நான்காம் பதிப்பு 1942-இல், அதாவது ஐயர் இறந்த அதே ஆண்டு வெளி வந்துள்ளது குறிப்பிடத் தக்கது. ஐயர் உயிரோடு இருக்கும் காலத்தே, இந் நான்காம் பதிப்பின் அமைப்பு செப்பம் பெற்றிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது.

பதிப்பு வேறுபாடு — மணிமேகலை:

மணிமேகலைக் காப்பியம் முதன் முதல் 1891-இல், திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளையவர்களால் வெளியிடப்பட்டது. இதில் பல பிழைகள் இருந்தன எனக் குறிப்பிடும் டாக்டர் ஐயர்[2], ஏழு ஆண்டுகள் கழித்து, 1898-இல் தம் முதற் பதிப்பை வெளி யிட்டுள்ளார். தொடர்ந்து, 1921-இல் இதன் இரண்டாம் பதிப் பும், 1931-இல் மூன்றாம் பதிப்பும் வெளிவந்தன. ஐயரவர்கள் வெளியிட்ட இம் மூன்று பதிப்புக்களில், முதற் பதிப்பிற்கும் இரண் டாம் பதிப்பிற்கும் இடையே மிகுந்த வேறுபாடுகள் இடம்பெற் றுள்ளன. மூன்றாம் பதிப்பு, இ.ப. வின் பிரதியாகப் பெரும் பாலும் பக்க எண் கூட மாறாமல் அமைகின்றது. சீவக சிந்தாமணி போன்றே நூலின் முதற்பக்க அச்சு முதல் பிழை திருத்தம் ஈறாக - இம் மாற்றங்கள் அமைந்துள்ளன. இவற்றில் ஐயரவர் களின் தமிழ் அறிவின் வளர்ச்சிப்படி நிலையையும், பதிப்புத் துறையில் அவர் பெற்ற அனுபவ முதிர்ச்சியும் தெற்றெனப் புலப்படும்.

முதற்பக்க அமைப்பு: மு.ப. வின் முதற்பக்கத்தில், நூல் வெளிவர உதவிய பாலவ நத்தம் சமீந்தார் பாண்டித் துரைத் தேவரவர்களைக்

1. சீவக சிந்தாமணி-ஏ.ப., பக்: 1671-75
2. உ.வே.சா. 'என் சரித்திரம்'—பக்: 750

குறிப்பிட, இ.ப. வில், அப்பதிப்பிற்கு உதவிய, பா. இராஜ ராஜேசுவர சேதுபதி மகாராஜா அவர்களைக் குறிப்பிடுவர். மூன்றாம் பதிப்பில் இவை இடம்பெறவில்லை.

மு.ப., வெ. நா. ஜுபிலி அச்சுக் கூடத்திலும், இ.ப. கமர்ஷியல் அச்சகத்திலும், மூ.ப. கேசரி அச்சகத்திலும் அச்சாகியுள்ளன. மு.ப. வின் விலை ஐந்து ரூபாயாக இருக்க, இ.ப. ரூ 6-4-0-ஆகவும், மூ.ப. ஐந்து ரூபாயாகவும் அமைந்துள்ளன.

பொருளடக்கம் முதற்பதிப்பில் 22 தலைப்புக்களில் அமைய, இரண்டாம், மூன்றாம் பதிப்புக்கள் 15-பெருந்தலைப்புக்களில் அமைந்துள்ளன. முதற்பதிப்பில், 3,4,5-ஆவது தலைப்புக்களில் இடம் பெற்ற புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்தசங்கம் என்ற மூன்றும் இரண்டாம் பதிப்பில் நீக்கப் பட்டுப்பின் மூன்றாம் பதிப்பில், ஒரே தலைப்பாகவும் இடம் பெற்றுள்ளன. மூ.ப.விற்குப் பின்வந்த பதிப்புக்களில், இப்பௌத்த சமயக் கருத்தடங்கிய பகுதியும், பிழை திருத்தமும் இடம் பெறாததால், அவற்றின் உள்ளடக்கம் 13-தலைப்புக்களில் அமைந்துள்ளன.

'இப்பதிப்பில் எடுத்துக் காட்டிய நூற்பெயர் முதலியவற்றின் முதற்குறிப் பகராதி' என்ற பகுதி மு.ப.வில் இடம்பெறாது, இரண்டாவது, மூன்றாவது பதிப்புக்களில் இடம் பெற்றுள்ளது. இங்கு இ.ப.வில் 99-முதற் குறிப்பகராதி இடம்பெற, மூ.ப.வில் 72 குறிப்புக்களே இடம்பெறும். இவற்றில் மூ.ப.வில் விடுபட்டனவும், புதிதாகச் சேர்க்கப்பட்டனவும் உண்டு. அவை வருமாறு :

மூ.ப. விடுபட்டவை [38]

1. அகத்—அகத்திணையியல்	2. அவ—அவதாரிகை
3. அளவை—அளவை இலக்கணம்	4. ஆசீவக—ஆசீவக வாதச் சருக்கம்
5. உத்தர—உத்தர காண்டம்	6. உ-ம்—உதாரணம்
7. உயிர்—உயிர் மயங்கியல்	8. உரி—உரியியல்
9. உழிஞை—உழிஞைப்படலம்	10. கடவுள்-கடவுள் வாழ்த்து
11. காஞ்சி—காஞ்சிப் படலம்	12. கிளவி—கிளவியாக்கம்
13. குமார—குமார காலச்சருக்கம்	14. குறள்—திருக்குறள்
15. கோயில்—கோயில் பாடியது	16. சதகம்—திருச்சதகம்
17. சாங்கிய—சாங்கிய வாதச் சருக்கம்	18. சுயம்—சுயம்வரக் காண்டம்

19. செய்—செய்யுளியல்
20. தரும—தரும உரைச்சருக்கம்
21. திருநா—திருநாவுக்கரச நாயனார் புராணம்
22. தொகை—தொகை மரபு
23. நகர-நகரப் படலம்
24. நாடு-நாட்டுப் படலம்
25. புத்த, புத்தவாத-புத்தவாதச் சருக்கம்
26. புறத்-புறத்திணையியல்
27. பூத-பூத வாதச் சருக்கம்
28. பொதுவியல்-பொதுவியற் படலம்
29. மரபு-மரபியல்
30. மொக்கல - மொக்கல வாதச் சருக்கம்
31. யாப்பு-யாப்புப் படலம்
32. வச்சிராயுத-வச்சிராயுதச் சருக்கம்
33. வஞ்சி-வஞ்சிப் படலம்
34. வரை-வரைக் காட்சிப் படலம்
35. வேத-வேதவாதச் சருக்கம்
36. வேற்-வேற்றுமையியல்
37. வைசயந்தன் முத்தி-வைசயந்தன்முத்திச் சருக்கம்
38. வைசேடிக-வைசேடிக வாதச் சருக்கம்

புதிய இணைப்புக்கள்

1. ஆதி-ஆதிபர்வம்
2. எ-ம்-என்றும், எனவும்
3. ஒ-ஒப்பு
4. கூர்ம-கூர்ம புராணம்
5. சிறப்-சிறப்பு பாயிரம்
6. தமிழ்நா-தமிழ் நாவலர் சரிதை
7. திரி-திரிகடுகம்
8. திருஞா-திருஞான சம்பந்தர்
9. திருவந்-திருவந்தாதி
10. தே-தேவாரம்

இங்கு நூலுறுப்புக்கள் (சீவக சிந்தாமணி போன்று) அனைத்தும் நீக்கப்பட்டுப் பதிப்புக் குறிப்புக்கள் சில சேர்க்கப்பட்டுள்ளன. நூற் பெயர்களில், திருக்குறள், திருச்சதகம்-நீக்கப்படுதற்கும், நூலுறுப் பான சிறப்புப் பாயிரம் இடம்பெறுதற்கும் காரணம் புலப்பட வில்லை.

முகவுரை : ஒவ்வொரு பதிப்பிற்கும் முகவுரை எழுதும் வழக்கம் உடைய டாக்டர் ஐயர், மணிமேகலை இரண்டாம் பதிப்பில், 'முதற் பதிப்பின் முகவுரை,' 'இரண்டாம் பதிப்பின் முகவுரை' எனத் தனித் தனியே தந்தவர், மூன்றாம் பதிப்பில், இவ்விரண்டு முகவுரைகளையும் இணைத்து, 'மூன்றாம் பதிப்பின் முகவுரை' என ஒரே பகுதியாகச் சில மாற்றங்களுடன் தந்துள்ளார். இம் மாற்றம் பக்க வரையறை கருதி அமைந்திருக்க வேண்டும் என்று தோன்று கிறது. இதனால், பதிப்பு வரலாற்றில் பல செய்திகள் பின் வரும் ஆய்வாளர்களுக்குத் தெரியாமல் போகிறது. குறிப்பாக முதலிரு பதிப்புக்களுக்கு உதவியவர்களின் பட்டியல் விடப்பட்டுள்ளது.

முதற்பதிப்பிற்குப் பொருளுதவி செய்த பாண்டித்துரைத் தேவர்; சென்னை சென்று பதிப்பு வேலை செய்யத் தங்கும் வசதி அளித்த உ.வே.கே. இராஜகோபாலாச்சாரியார்; திருமானூர் ஆ. கிருஷ்ணை யரை உதவிக்கு அனுப்பியும், அவருக்கு ஊதியம் தந்தும் உதவிய சிவகங்கை ஜமீன் முத்துராமலிங்கத் தேவர்; படி எடுத்து—ஏடுகளை ஒப்பு நோக்கி உதவிய கும்பகோணம் தியாகராஜ பண்டாரம், திருப்பெருந்துறை பொன்னுசாமி பிள்ளை, மணலூர் இராமானுஜா சாரியர், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், மணலூர் சந்தானம் ஐயங்கார், திருவல்லிக்கேணி உ.வே.வை.மு. சடகோபராமனுஜா சாரியர்,—ஆகியோரின் பணி; புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம் முதலான சமயச் செய்திகளடங்கிய அரிய ஆராய்ச்சிப் பகுதி உருப்பெற வழிகோலிய, V. P. சுப்பிரமணிய முதலியார், S. கிருஷ்ணசாமி ஐயர், K. P. சோமசுந்தர ஐயர், V. சுப்பிரமணிய ஐயர், M. S. நடேச ஐயர், கோபாலசாமி ஐயர், முதலியோரது பேருதவி [புத்த சமயக் கருத்துக்களை ஆங்கில நூலிலிருந்து தமிழில் பெயர்த்துத் தந்த]; ஆகிய செய்திகளை மூன்றாம் பதிப்பின் முக வுரையால் அறிய முடிவதில்லை.

இது போன்றே, இரண்டாம் பதிப்புப் பணிக்கு உதவியோர் பற்றிய செய்திகளும், இம்'முகவுரை' மாற்றத்தால் பின் வரும் ஆராய்ச்சி அறிஞர்களுக்குத் தெரியமுடியாமல் போய்விடுகின்றன. டாக்டர் ஐயரவர்களின் அரிய பதிப்புப் பணி, எத்தனையோ கன வான்களின் ஒத்துழைப்பாலும், தமிழ் நெஞ்சங்களின் பேருதவி யாலும் உருப்பெற்றதே என்ற வரலாற்றுச் சிந்தனை - இம்முகவுரை மாற்றத்தால் வருங்காலச் சந்ததியினரின் பார்வைக்கு எட்டாமல் போய்விடுமன்றோ? இதனை ஐயர் மாற்றியிருக்காமல் இருந்திருந் தால் நன்றாக இருந்திருக்கும் என்ற எண்ணம் ஆய்வு நெஞ்சில் முகிழ்ப்பது இயல்பே.

மூன்றாம் பதிப்பின் முகவுரையில், அப்பதிப்பிற்கு உதவிய வி.மு. சுப்பிரமணிய ஐயர், கி.வா. ஜகந்நாத ஐயர் ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பது புதிய சேர்க்கையாக இங்கு அமையும். இதோடு வேறு பல அரிய கருத்துக்களையும் டாக்டர் ஐயரவர்கள் மூன்றாம் பதிப்பின் முகவுரையில் இணைத்துள்ளார். அப்படியே முற்பதிப்புக் களின் முகவுரைகளைப் பிரதி செய்வது, அவரது வழக்கம் இல்லை.

ஐயரவர்களால் மூன்றாம் பதிப்பின் முகவுரையில் புதிதாகச் சேர்க்கப்பட்ட செய்திகளாவன:

முதற் பதிப்பின் முகவுரையைத் தொடங்குமுன் அமைத்துள்ள இரு கடவுள் வாழ்த்துப் பாக்களுக்கு இடையே ''காலையும் மாலை

யும்...... சிற்றம்பலத்து'' என்ற கடவுள் வாழ்த்து வெண்பாவை இணைத்துள்ளார்.[1]

மணிமேகலை காவியச் சிறப்புக் கூறும், ''சிந்தாமணியாஞ் சிலப்பதிகாரம் படைத்தான்'' எனவரும் திருத்தணிகையுலாப் பாடற் பகுதியும், ''மாதவி பெற்ற மணிமேகலை நம்மை வாழ்விப்பதே'' என்ற அம்பிகாபதிக் கோவைப் பகுதியும் மு.ப. வின் முகவுரையின் இடையே இணைக்கப்பட்டுள்ளன.[2]

முதல் இரு பதிப்பின் முகவுரைகளின் தொடரமைப்பில் ஆங் காங்கே சில மாற்றங்களைச் செய்கிறார். மூன்றாம் பதிப்பில் 'நன்கு புலப்படுத்தும்' என்ற தொடரை நீக்கி விட்டு, 'வலியுறுத்தும்' என்ற சொல்லையும்[3], 'காண்க' என்ற சொல்லை விடுத்து 'அறிதற்குரியது' என்ற சொல்லைப் பெய்தும்,[4] 'சில வருடங்களுக்கு முன்' என்பதைப் 'பல வருடங்களுக்கு முன்' என மாற்றியும்[5] அமைத்துள்ளார். மு.ப. வில் இடம் பெற்ற ஆங்கிலச் சொற்கள் பின்னிரு பதிப்புக்களில் நீக்கப் பட்டுள்ளன.[6]

மு. ப., இ. ப. முகவுரையில் ''திருஞான......மேற்கொண்டிருந் தேன்'' என்ற பத்தியை அடுத்து ''ஆராய்ச்சி செய்யத் தொடங்கிப் பல வருடங்களாகியும் இந்நூலை முன்னமே வெளிப் படுத்தாமைக்கு இதுவே காரணம்'' என இடம் பெற்ற தொடர் மூன்றாம் பதிப்பில் நீக்கப் பட்டுள்ளது.[7]

முதற் பதிப்பின் உள்ளடக்கத்தை மாற்றியது குறித்து, இரண்டாவது, மூன்றாவது பதிப்புக்களின் முகவுரையில் குறிப்பர். 'அபிதான விளக்கம்', 'அரும்பத வகராதி', 'அருந்தொடரகராதி', 'மூல விஷய சூசிகை', 'அரும்பதவுரையில் அடங்கியவை', 'அரும்பத வுரையிலுள்ள தமிழ் நூல் பெயர்கள் முதலியவற்றின் அகராதி'

---

1. மணிமேகலை—மு. ப; பக்: ix
2. ஷை மு. ப. பக்: x ''பின்னும்......புலப்படுத்தும்'' ஷை என்ற பகுதி.
3. ஷை மு.ப. பக். xiii, பத்தி 1, வரி—இறுதி
4. ஷை ஷை பத்தி 2—தொடக்கம்
5. ஷை பக். xiv, ஷை
6. ஷை ஷை Julien vinson, Professor of Oriental Languages—என்பது நீக்கப்பட்டுள்ளது.
7. ஷை பக். xv

ஆகியன இரண்டாம் பதிப்பில் 'அரும்பதம் முதலியவற்றின் அகராதி' என்ற ஒரே தலைப்பில் தொகுத்துரைக்கப் பட்டதைச் சுட்டுவர். அதோடு, இப்பகுதியில் புதிய அரும்பதம், தொடர், உவமை, பழைய செய்தி, வழக்கம் முதலான சேர்க்கப் பட்டதையும் குறித்துச் செல்வர்.[1] மூன்றாம் பதிப்பில் 'அரும்பதவுரையிலுள்ள உதாரணச் செய்யுள் அகராதி' இடம்பெறவில்லை.

இங்கு ஏன் இவற்றை எல்லாம் ஓர் அகராதியாக்கினார் எனக் கூர்ந்து நோக்கின் சில செய்திகள் விளங்குகின்றன. மேலே குறித்த அகராதிகளில் இடம்பெறும் செய்திகள் சில, ஓர் அகராதியில் இடம் பெறும் செய்திகள் சில, ஓர் அகராதியில் இடம் பெற்றது, பிறிதோர் அகராதியிலும் இடம் பெற்றுள்ளன. சான்றாகச் சில வருமாறு :

'கற்பம்'—கால விசேடம், 260 வேதங்களுள் ஒன்று[2] 'காராளர்'—காராளச் சாதியார்;[3] 'அருளறம்',[4] 'ஆடரங்கு',[5] 'இந்திர விகாரம் ஏழு',[6] இந்திரன்[7]. முதலான. எனவே கூறியது கூறிலைத் தவிர்க்க இங்ஙனம் அமைத்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. அதோடு, இங்ஙனம் தொகை—வகையாக அமையும் அகராதி, எல்லாச் செய்தி களையும் பகுத்துக் கூறியதாக அமையாது. சிலவற்றைப் பகுத்துக் கூறிச் சிலவற்றைத் தொகுத்துக் கூறவேண்டிய சூழல் இங்கே அமை கின்றது. எல்லாச் செய்திகளையும் வகை தொகையாக அமைத்தாலும் சில அகராதி பல பக்கங்களிலும், சில ஒன்றிரண்டு வரிகளிலும் அமைய வேண்டி சூழ்நிலை அமைந்து விடும்; இதனால் நூலில் வீணான பக்க நீட்சியும் அமைதல் கூடும்; எனவே எல்லாச் செய்தி களையும் ஒட்டு மொத்தமாகத் தொகுத்து, ஒரு 'தொகையகராதி'யாக இவ் வரும் பதம் முதலியவற்றின் அகராதியை ஆக்கியுள்ளார் டாக்டர் ஐயரவர்கள்.

முதற்பதிப்பு 1898-இலும், இரண்டாம் பதிப்பு 1921-இலும் வெளிவந்த செய்தியை மூன்றாம் பதிப்பு முகவுரையில் ஆசிரியர் சுட்டிச் செல்வர். அன்றியும் முதற் பதிப்பின் மூலம் பின்னர் மாற்றப் பட்டுள்ள செய்தியையும் தருவர். குறிப்பாக, மு.ப.வின் ஒவ்வொரு காதையின்

1. மணிமேகலை, இ.ப. பக். viii
2. ஷை மு.ப.,—அ.ப. அ.பக். 325, மூ.வி.சூ. பக். 352.
3. ஷை மு.ப; அ.ப.அ; பக் 325, மூ.வி.சூ. பக். 352
4. ஷை அ.தொ.அ. பக். 333, ஷை பக். 348
5. ஷை ஷை ஷை
6,7. ஷை மூ.வி.சூ—பக். 348, அ.ப.உ.அ. பக். 370

இறுதியும் ''என'' எனப் பதிப்பிக்கப்பட்டதையும் பின்னர் இ.ப. வில் அது ''என்'' என மாற்றப் பட்டதையும் சுட்டுவர்.

இரண்டாம் பதிப்பின் முகவுரையில்,அப் பதிப்பிற்குத் துணையாகக் கிடைத்த பிரதிகள் பற்றிய பட்டியல் புதிதாக இடம்பெறும்.

மூ.ப.வில் சமஸ்கிருதப் பேராசிரியர் மாஊர் ரங்காச்சாரியார் அவர்களுடன் உரையாடியதால், துடித லோகம், பாரமிலக, அரூபப் பிரமர், உரூபப் பிரமர் முதலான சொற்களுக்குப் பொருள் விளங்கியதாகவும் குறிப்பர்.[1] அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கக் குறிப்புரை எழுதியதாக மூ. ப. வின் முகவுரையில் குறிப்பிடும் ஐயரவர்கள், அதனைத் தான் அமைத்துக் கொண்ட முறை பற்றியும் விளக்கியுள்ளார். அருஞ் சொற் பொருள் தரல், ஒப்புமைத் தொடரை எடுத்துரைத்தல், விளங்கா இடஞ் சுட்டல், பாடபேதம் காட்டல், அவற்றிற் சிலவற்றிற்கு உரையும் கூறுதல், பொருள் விளக்கத்திற்காகச் சில வட சொற்களைப் பயன் படுத்தியமை முதலான செய்திகளை இம் முகவுரைப் பகுதியில் விளக்கிச் சொல்வர்.[2]

இறுதியாக நூலில் பல ஐயங்களைத் தீர்க்க உதவிய பொ. குமாரசாமி முதலியார் அவர்களுக்கும், இலங்கை பௌத்த வித்தியோதய பாடசாலைத் தலைவர் 'சுமங்களர்' அவர்களுக்கும் தமது மூன்றாம் பதிப்பில் நன்றி தெரிவிப்பர். மூன்றாம் பதிப்பில் மூலநூற்பகுதியில் மாற்றமேதும் செய்யவில்லை என்றும், ஒரு சில விளங்காத பகுதிகள் மட்டும் விளக்கப் பட்டுள்ளன என்பர். இங்ஙனம் 'முகவுரை'யில் பல வேறுபாடுகள் அமைந்துள்ளன.

நூலாசிரியர் வரலாறு முதல் இரு பதிப்புக்களில் ஒரே ஒரு பக்கத்தில் அமைய, மூன்றாவது பதிப்பில் ஆறு பக்கங்களாக விரிவடைந்துள்ளது. முதற் பதிப்பு 'நூலாசிரியர் வரலாறு' பகுதியின் இறுதியில், நான்கு வரிகளை இரண்டாம் பதிப்பில் சேர்த்துள்ளார். இங்குச்சிலம்பு-மேகலை பதிகச் செய்திகளால் இருபுலவர்களும் சமகாலத்தவர் என்றும், மலை நாட்டின் 'சீத்தலை' ஊரிலுள்ள 'ஐயனார்' என்பது நூலாசிரியரது இயற்பெயராக இருந்திருக்கலாம் என்ற ஊகத்தையும் இங்குச் சேர்த்துள்ளார்.[3]

---

1. ஷை மூ.ப. பக். xv—xix
2. ஷை ஷை
3. இந்நூலாசிரியர் வரலாறு பற்றிய செய்திகளை இந்நூலில் இடம்பெறும், 'முகவுரை முதலியன' பற்றிய கட்டுரையில் காண்க.

கதைச் சுருக்கம்: முதற்பதிப்பின் கதைச் சுருக்கத்தில், தொடக்கக் கடவுள் வாழ்த்துப்பா இடம்பெற வில்லை. இரண்டாம் பதிப்பில், ''படிக நிறமும்....கவி'' என்ற வெண்பாவும், மூன்றாம் பதிப்பில், இவ் வெண்பாவை நீக்கிவிட்டு, ''இமையவர் கண்......... நாவலோர் கண்'' என்ற கடவுள் வாழ்த்து வெண்பாவையும் புகுத்தி யுள்ளார்.

தொடரமைப்பில் சில சொற்களைச் சேர்த்தலும் நீக்கலும் அமை கின்றன. 2-ஆவது காதைச் சுருக்கத் தொடக்கத்தில் 'பின்பு' என்ற சொல் இ.ப.சூமு.ப.வில் சேர்க்கப் பட்டுள்ளது. மூன்றாவது காதைத் தொடக்கத்திலுள்ள 'இங்கே' என்ற சொல் நீக்கப் பட்டு, இ.ப.சூ மு.ப.வில் 'இங்ஙனம்' என்ற சொல் புகுத்தப்பட்டுள்ளது. இங்ஙனம் சில மாற்றங்கள் அமையும்.

'கதைச் சுருக்கம்' பகுதியில் வரும் சில சொற்கள், பாத்திரங்கள், சமயச் சார்ப்பான தொடர் முதலியவற்றிற்கு முதற்பதிப்பின் அடிக் குறிப்பில் விளக்கம் அமையும். பிற்பதிப்புக்களில் இவற்றை முற்றிலும் நீக்கியுள்ளார். இவ்விளக்கம், 'குறிப்புரைப் பகுதியுள்ளும், 'அரும் பதம்முதலியவற்றின் அகராதி'யுள்ளும் இடம் பெற்றதால், இங்குத் தனியே தேவை இல்லை என்று எண்ணிப் பிற்பதிப்புக்களில் இவற்றை நீக்கியுள்ளார் போலும். மு.ப. வில் அமையும் சில அடிக்குறிப்பு விளக்கம் வருமாறு:

''வச்சிரக் கோட்டம்—வச்சிராயுதம் நிற்கும் கோயில்''[1]
''மாதவி—மணிமேகலை தாய்''[2]
''பஞ்ச சீலங்களாவன: கொல்லாமை, கள்ளுண்ணாமை,
பொய்யாமை, காமமின்மை, கள்ளாமை''[3]
''எல்லா உலகங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்ட
கோளத்தைச் சக்கரவாளம் என்றல் பௌத்த நூல் வழக்கு''[4]

'அரும்பதம் முதலியவற்றின் அகராதி' இ.ப.வில் 118 - பக்கங் களில் அமைய, மு.ப.வில் 120 - பக்கங்களில் அமையும். இங்கு, இ.ப.விலிருந்து நீக்கப்பட்ட 'அரும்பதவுரையிலுள்ள உதாரணச்

---

1. மணிமேகலை, மு.ப. 'கதைச்சுருக்கம்' பக்:1
2. ,, ,, ,, ,, 2
3. ,, ,, ,, ,, 2
4. ,, ,, ,, ,, 12

செய்யுள் அகராதி'யின் சில பகுதிகள் இடம்பெற்றுள்ளன. முதற் பதிப்பில் இவ்வகராதி, அபிதான விளக்கம், அரும்பதவகராதி, அருந்தொடரகராதி, மூல விஷய சூசிகை, அரும்பதவுரையில் அடங்கிய வை' ஆகிய தலைப்புக்களில் இடம்பெற்றது.

குறிப்புரை : முதற் பதிப்பின் குறிப்புரையை மூலத்தின் அடியில் அடிக் குறிப்பாக-ஒவ்வொரு பக்கத்தையும் இருபகுதியாகப் பிரித்துக் கொண்டு அச்சிட்டார்; இம்முறையில் அடிக்குறிப்பைத் தருவதை இரண்டாம் பதிப்பில் மாற்றியுள்ளார். இக்குறிப்புரையில் 'பிரதிபேதம்' தரும் போது, ஒவ்வொரு வரியின் குறிப்புரையின் இறுதியில் 'என்பதும் பாடம்', 'என்றும் பாடம்' எனக் குறித்தார். இதனால் மேற்குறித்த சொற்கள் திரும்பத்திரும்ப வருவதால், பக்க நீட்சி அமைவதோடு 'கூறியது கூறல்' நிலையில் பலமுறை இச்சொற்கள் வருதலைத் தவிர்க்கப் பிறபதிப்பில் 'பி-ம்' என்ற குறிப்புடன், வரி எண்களைச் சுட்டி அவ்வப்பக்கத்தில் வரும் பாட பேதங்களைத் தொகுத்தளித் துள்ளார். இதனால், முதற்பதிப்பில் பாடபேதங்களைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டிய நிலை இருந்ததோடு - ஒவ்வொரு வரியின் குறிப் புரையைக் கவனமாக உற்று நோக்கினால்தான் அங்கே குறிக்கப் பெற்றிருக்கும் பாடபேதங்களைக் கண்டுபிடிக்கும் நிலை இருந்தது மாறி மிக எளிதில் பாடபேதங்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

குறிப்புரை முதற் பதிப்பிலிருந்து மிகுதியான வேறுபாடுகளைப் பெறவில்லை எனலாம். ஆங்காங்கே சில விளக்கங்கள், ஒப்புமைப் பகுதிகள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன. இவையும் மிகக் குறைந்த அளவினவே. சீவக சிந்தாமணி 'விசேடக் குறிப்பு' போன்று அவ் வளவு வேறுபாடு இல்லை. சில வருமாறு:

'மாமணி—நீலமணியுமாம்'[1]

'கஞ்சம்—நீருமாம்; 'கஞ்சங் கலங்குவன்' [நள;சுய:15][2]

இவை போன்று முப்பது புதிய மேற்கோள்கள், இ.ப.வின் குறிப் புரையில் புதிதாக இடம் பெற்றுள்ளன. ஒரோவிடத்து, முதற்பதிப் பின் குறிப்புரையில் எடுத்துக்காட்டப்பட்ட 'பிரதிபேதம்' இ.ப.வில் நீக்கப் பட்டுள்ளது (''அழுதுயர் பொறாஅன்'')[3].

---

1. மணிமேகலை, இ.ப. 2:72-உரை
2. ,, ,, 2:73-74 உரை
3. ,, மு.ப. 1:77 உரை

மணிமேகலை பிரயோக விளக்கம் என்ற தலைப்பில், உரையாசிரியர்கள் யார் யார், மணிமேகலையின் எவ்வெப் பகுதிகளைத் தம் உரையில் மேற்கோள் காட்டுகின்றனர் என்பதைத் தொகுத்துத் தந்துள்ளார். மு.ப.வில் 33 - மேற்கோள்கள் தொகுத்துத் தரப்பட, இ.ப.வில் மேலும் 13 - மேற்கோள்கள் இடம்பெற்றுள்ளன. அவை வருமாறு.

1. 'நாடக காப்பியம்'—மணி:19:80—[அடியார்க். சிலப்:பக்:9]
2. 'தேவரு மக்களும்...நாளினும்'-1:66:67—[,, ,,250-கனா]
3. 'முத்தை முதல்வி'—19:13 ... . [,, 17:பக்:454]
4. 'பெண்டி ராயின் பிறர் நெஞ்சு புகார்—22:46 [,, ,, 1:27]
5. 'பசியும் பிணியும் பகையும்'—1:70 [,, ,, 15:9-10]
6. 'கலைப்புற அல்குல் கழுகு'—6:112 [தொல்.சொல். நூற். 46 உரை]
7. 'குருகு...மணிக்காஞ்சி'—18:55-56 [,, ,, 49 உரை]
8. 'வேணவா'—பதி:18 [மயிலைநாதர்-நன்:238]
9. 'இத்திறம்...தோன்றுவர்'24:132-34 [சமயதிவாகரமுனிவர், நீல. மொக்கல-160]
10. சீலந்தாங்க...பிரமருமாகி—24:137:39 [,,]
11. 30:235—49 ... [தொல்.சொல். கிளவி:12உரை]
12, 13 'பயற்றது கும்மாயம்'—27:185 [தொல் : சொல்:15 & நன் : 299 உரை]

மூன்றாம் பதிப்பில் மேலும் மூன்று பிரயோக விளக்கம் இடம் பெறும். அவையாவன :

'மன்ன குமரன்'-மணி : 4:63,24:1 [இலக். கொத் : உரை, சூ 96]

'பாசடைப்... காணாய்'-4:8-13 [இளம். தொல். பொருள் : உவம ; 9]

'பேதைமை....தெளிதல்'-30:51-54.... [,, ,, ,, செய் ; 7]

மணிமேகலைத் தொடரை உரை நடையில் எழுதிய வேறு தொல்காப்பிய உரையாசிரியர்கள் என மு.ப.வில் குறித்த உரையாசிரியர் தெய்வச் சிலையார் என மூ.ப.வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புத்த தேவனுடைய பெயர்கள் மு.ப. வில் 116-இடம்பெற இ.ப. வில் 121-இடம் பெறும். இ.பா.வில், புதிதாக அறத்தகை முதல்வன், கந்தன், தயாவீரன், பார், பௌத்தன் ஆகிய ஐந்து பெயர்கள் புதிய சேர்க்கைகளாகும்.

இப்புத்தகத்தில் எடுத்தாளப்பட்ட பலவகை நூற்பெயர்கள் பகுதி, முதலிரு பதிப்புக்களில் இடம் பெறாது மூ.ப.வில் மட்டும் 'அகநானூறு' முதல், 'ஸுத்திர பிடகம்' ஈறாக 230-நூற்பெயர்கள் இடம் பெறும்[1]. மு.ப.வில், 'அரும்பதவுரையிலுள்ள தமிழ் நூல் பெயர்கள் முதலியவற்றின் அகராதியில்' தொகுக்கப்பட்ட தமிழ் நூல், தமிழ் நூலாசிரியர், உரையாசிரியர், வடமொழி நூற்பெயர், நூலாசிரியர், உரையாசிரியர், மணிப்பிரவாள நூல்[2] ஆகியவற்றின் தொகுப்பாக இப்பகுதி அமைகின்றது. மு.ப.விலுள்ள இவ்வகராதியில் இடம் பெறாத பல புதிய நூற் பெயர்களும், இம் மூன்றாம் பதிப்பு அகராதியில் சேர்க்கப் பெறும்.

சூசீபத்திரம் மு.ப.வில் தனிப் பகுதியாக அமையப் பிற்பதிப்புக் களில் 'மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும் என்பதன் உட் தலைப்பாக அமைந்துள்ளது.

'மணிமேகலையால் தெரிந்த அரசர் பெயர்கள் முதலியன' என்பதில், அரசர்-36; ஆறு-5; உலகம்-2; ஊர்-20; குலம்.3; கோயில்-10; தருமசாலை-1; தீவகங்கள்-6; தெய்வம்-26; நகரத் தெய்வம்-2; நாடு-9; நூல்-5; நோய்-1; பாம்பு-1; புத்ததலம் உள்ள இடம்-6; புலவர்-3; பொய்கை-2, மலை-9; முனிவர்-21; வனம்-3; வாதம்-11; விழாக்கள்-4-என 22-செய்திகளின் தொகுப்பு மு.ப.வில் அமையும். இவற்றில் மு.ப.வுக்கும் இ.ப.வுக்கும் இடையே சில வேறுபாடுகள் அமைந்துள்ளன. இ.ப., மூ.ப. இடையே வேறுபாடு எதுவும் இல்லை.

மு.ப.வில் அரசப் பெயர்கள் 36 தந்த ஐயர். இ.ப.வில் 35-தருவர். மு.ப.வில், 'கரிகால் வளவன்', 'கரிகால் பெருவளத்தான்' என இரு அரசராக எண்ணிக் கொடுக்கப்பட்டவை பிற்பதிப்புக்களில் இரண்டும் ஒருவனைக் குறிப்பதாகத் தரப்பட்டுள்ளன. ஊர்ப் பெயர்கள் மு.ப.வில் 20-இடம் பெற, இ.ப.வில் 19-இடம் பெறும்; மு.ப.வில் இடம் பெற்ற 'வசந்தி' என்பது விடப்பட்டுள்ளது. இது ஊர்ப் பெயரைக் குறிப்ப தல்ல எனப் பின்னர் ஐயர் உணர்ந்திருக்க வேண்டும்.

---

1. மணிமேகலை, மு. ப. பக் : vii-viii
2. ,, மு. ப. பக் : 436-37

மு.ப.வில் 26 தெய்வங்களைக் குறிக்க, இ.ப.வில் 23-குறிப்பர். மு.ப.வில் பூதம், சதுக்க பூதம் - இரண்டையும் இரு தெய்வங்களாக உணர்ந்துஎழுதிய ஐயரவர்கள், பிற்புதிப்புகளில் இரண்டும் ஒன்றே எனத் தெரிந்து ஒன்றாக்குவர். இதே போன்று, கந்திற் பாவை, துவதிகள்-இரண்டையும் ஒன்றாகக் காண்பர். மு.ப.வில் இடம் பெற்ற 'மதுராபதி' பிற்பதிப்பில் இடம் பெற வில்லை. 'மதுராபதி' அடுத்து நகரத் தெய்வப் பட்டியலில் இடம் பெற்றதால், இங்கு நீக்கியுள்ளார் என எண்ணினாலும், அதற்குத் தடையாக, 'சம்பாதி' தெய்வப்பட்டியலிலும், நகரத் தெய்வப் பட்டியலிலும் இடம் பெறுவது அமையும். இங்கு மதுராபதித் தெய்வம் விடப்பட்ட தன் காரணம் விளங்கவில்லை.

மு.ப.வில் புத்த தலமுள்ள இடம் ஆறு அமைய ,இ.ப.வில் ஐந்தே இடம் பெறும்; மு.ப.வில் 'பாதபங்கய மலை' 'சமந்தம்' இரண்டையும் வேறு வேறாக உணர்ந்த ஐயர், இரண்டும் ஒன்றே என உணர்ந்து திருத்திக் கொள்கிறார்.

புலவர்கள் பெயர்ப் பட்டியலில், முதலிரு பதிப்பில் இடம் பெற்ற சீத்தலைச் சாத்தனார்' பெயர் மூன்றாம் பதிப்பில் இடம் பெற வில்லை. மு.ப.வில் 9-மலைகள் இடம் பெற, இ.ப.வில் 8 மலைகளே இடம் பெற்றுள. காரணம் 'பாதபயங்கயம்'; 'சம்பந்தம்' இரண்டும் ஒரே மலை எனத் தெளிவு பெற்றமையே. மு.ப.வில் இடம் பெற்ற நான்கு விழாக்களில் 'தீவ திலகை விழா', மணிமேகலா தெய்வ விழா இரண்டும் இ.ப.வில் விடுபட்டுள்ளன.

'அரும்பதவுரையிலுள்ள உதாரணச் செய்யுள் அகராதி' முதலிரு பதிப்புக்களில் இடம் பெற்று, மூன்றாம் பதிப்பில் நீக்கப் பெற்றுள்ளது. மு.ப.வில் இடம் பெற்ற **'அ'.....'ஆ'**-என்ற தலைப்பு இ.ப.வில் இல்லை; மு.ப.வில் 708 - பாடல்களின் முதற்குறிப்பகராதி இடம் பெற இ.ப.வில் 738- பாடல்களின் முதல் குறிப்பகராதி அமையும். இது முதற் பதிப்பின் பின் குறிப்புரையில் ஆசிரியர் புதிதாகச் சேர்த்துள்ள மேற்கோள் பாடல்களின் எண்ணிக்கை அறிய ஓரளவு உதவும். இவை மூ.ப.வில் நீக்கப் பட்டதால், இவற்றில் சில, அரும்பதம் முதலியவற்றின் அகராதியில் இடம் பெறும். சில வருமாறு :

''அகத் தாரே வாழ்'' - அ. ப. அ, பக் : 401

''அஞ்சிலோதி யசை'' - அ. ப. அ, பக் : 402

மூலபாடம் : முதற்பதிப்பிற்கும் இரண்டாம் பதிப்பிற்கும் இடையே மூலத்தில் பல வேறுபாடுகள் அமைந்துள்ளன. பெரும்பாலும் மூலத்தில் செய்யும் அனைத்துத் திருத்தங்களையும் இ.ப. விலேயே செய்து

விடுகிறுர் ஐயர். மு.ப., இ.ப., வின் மறுபிரதியாகவே - எவ்வித மாற்றமும் இன்றி அமையும்; குறிப்பாகப் பக்க எண்கூட மாறவில்லை. முதலிரு பதிப்புக்களிடையே அமையும் சில பாடவேறுபாடுகள் வருமாறு[1] ;

மு.ப.		இ.ப.
'தகைமையார்'—பதி :	21.........	'தன்மையுள்'
'கோனிலை திரிந்து'-	,,24.........	'கோணிலை திரிந்து'
'தீவ திலகை' -	,,52.........	'தீப திலகை'
'ஆங்கப் பாத்திரம்'	- ,,.........	'அங்கைப் பாத்திரம்'

இவற்றில், 'தீவ திலகை' என்பதைத் 'தீப திலகை என ஏன் மாற்றினார் என்பது புலப்படவில்லை. காரணம் பிறவிடங்களில் 'தீவ திலகை'[2] என்றே வந்துள்ளது. இதனை ஐயரவர்களே சுட்டிக் காட்டுவர்.

இனி, மூல பாடம் திருத்தம் பெற்றதோடு, அதன்' பிரதி பேதம்' முதற்பதிப்பிலிருந்து இரண்டாம் பதிப்பில் எண்ணிக்கை அதிகமாகி யுள்ளது.

மூல பாடம்		பிரதிபேதம்
'தொன் மூதாட்டி'- பதி :	26	'தொன் மூதாட்டியைக்'
'பெயர்ப் படுத்தேன்'	[,,]	'பெயர் படுத்தேன்'
'பாவையைக் கண்டவன்	[,,]	'பாவை கண்டவன்'

பதிப்பு வேறுபாடு - பெருங்கதை

பெருங்கதையின் முதற் பதிப்பு 1924-இலும், இரண்டாம் பதிப்பு, 1935-இலும் வெளிவந்தன. மு.ப. கமர்ஷியல் அச்சகத்திலும், இ.ப. கேசரி அச்சகத்திலும் பதிப்பிக்கப் பெற்றன. மு.ப. விலை ரூ. 7-8-0; இ.ப. விலை ரூ. 7-0-0 : காலத்தால் மிகப் பிற்பட்டுப் பதிப்பிக்கப்பட்ட காப்பியம் பெருங்கதை. எனவே பொருளடக்கம் முதலான பெருத்த வேறுபாடுகள் பெறவில்லை.

---

1. இங்குப் பிரதிபேதம் மணிமேகலை நூல்முழுவதற்கும் பார்க்கப் படவில்லை : சான்று விளக்கத்திற்காக அதன் பதிகம் மட்டும், முதல் இரு பதிப்புக்கள் ஒப்பு நோக்கப்பட்டன.

2. மணிமேகலை, இ.ப. 11:20.

பொருளடக்கம் மு.ப. வில் 'காண்டங்களின் சிற்றுறுப்பகராதி' தொடங்கி, 'பிழையும் திருத்தமும் ஈறாகப் பன்னிரு தலைப்புக்களில் அமையும் ['இப் புத்தகத்தில் அடங்கியவை]. இரண்டாம் பதிப்பில், இவை, 'இப்புத்தகத்தில் எடுத்துக் காட்டிய நூற்பெயர்கள் முதலிய வற்றின் முதற்குறிப்பகராதி' தொடங்கி, 'அரும் பதம் முதலியவற் றின் அகராதி' ஈறாக ஒன்பது தலைப்புக்களாகச் சுருக்கப்பெறும்.

'காண்டங்களின் சிற்றுறுப் பகராதி' மு.ப. வில் 99-காதைத் தலைப்புக்களை முறைப்படுத்துவதாக அமையும். அவ்வக் காதைக் குரிய மூலம் இடம் பெறும் பக்க எண் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இது, இ.ப. வில் 'பெருங்கதை மூலமும் குறிப்புரையும்' என்ற தலைப் புக்கள் கொண்டு வரப்பட்டு, இவற்றின் உள்ளடக்கம், 'இப் பொருளடக்கம்' பகுதியிலேயே-காதையின் கதைச் சுருக்கம் தருவது போன்று அமைந்துள்ளது. 33-ஆவது காதைத் தலைப்பும் விளக்கமும் பின்வருமாறு அமைகின்றன.

[33] மாலைப் புலம்பல் ....பக் . 10-26

[மாளிகையைக் கண்டு உதயணன் ஐய முற்றுத் தெளிதல் உதயணன் காணும் காட்சி-மாலைக்கால வருணனை-பிறைமதியின் தோற்றம்-உதயணன் வருதல்-வாசவதத்தை வருதல்-நீங்கிய தோழி மார் வாசவதத்தையைக் காண்டல்]

என்றிவ்வாறு, 'பொருளடக்கம்' பகுதியில் அமையும் ஒவ்வொரு கதைக்கும் விளக்கம் தரப்பட்டுள்ளன. இம்முறை பிறகாப்பியப் பொருளடக்கத்தில் இடம்பெறவில்லை.

மு.ப. வில் இடம்பெற்ற 'அபிதான விளக்கம்'' இ.ப. வில் 'அரும்பதம் முதலியவற்றின் அகராதியில் இடம் பெற்றதாலும், 'குறிப்புரை' மு.ப. வில் தனியே தரப்பட்டது. பிற்பதிப்பில் மூலத்தின் அடிக்குறிப்பில் தரப்பட்டதாலும், இத்தலைப்புக்கள் மூன்றும் நீக்கப் படப் பொருளடக்கம் பிற்பதிப்பில் ஒன்பது தலைப்புக்களில் இடம் பெற்றுள்ளது.

'இப்புத்தகத்தில் எடுத்துக் காட்டிய நூற்பெயர்கள் முதலிய வற்றின் முதற்குறிப்பகராதி'யில் மு.ப. வில் 95 அமைய, இ.ப. வில் 117-அமைந்துள்ளன. இவற்றில், இ.ப. வில் புதிதாகச் சேர்க்கப் பட்டவை 22; மு.ப. வில் இருந்து, நீக்கப்பட்டவை இரண்டு. அவை வருமாறு :

இ.ப. வில் சேர்ந்தவை :

1. அடிக்-அடிக்குறிப்பு	2. அவை-அவையடக்கம்
3. ஆத்திரையான் பொதுப்-ஆத்திரையான் பொதுப் பாயிரம்	4. ஆதி-ஆதியுலா
5. ஒ-ஒப்பு	6. கடவுள்-கடவுள்வாழ்த்து
7. கந்தர்கலி-கந்தர்கலிவெண்பா	8. கலிங்க-கலிங்கத்துப் பரணி
9. கூர்ம-கூர்ம புராணம்	10. சுலோ-சுலோகம்
11. தண்டி-தண்டியலங்காரம்	12. தமிழ்நா—தமிழ்நாவலர் சரிதை
13. தனிப்-தனிப்பாடல் திரட்டு	14. திருஞா-திருஞான சம்பந்தர்
15. நேமி-நேமி நாதம்	16. பரிமேல்-பரிமேலழகர் உரை
17. பதிற்-பதிற்றுப்பத்து	18. பழ-பழமலைக் கோவை
19. பெரியதிரு-பெரிய திருமொழி	20. வலிவலமும்-வலிவல மும்மணிக் கோவை.
21. விக்கிர. உலா-விக்கிரம சோழன் உலா	22. விசேடக்-விசேடக்குறிப்பு

மு.ப.வில் இடம்பெற்ற, 'இரும்பல்-இரும்பல் காஞ்சி'; 'குறள்—திருக்குறள்'—என்ற இரு குறிப்புக்கள் விடுபட்டுள்ளன. இங்கும் புதிய இணைப்புக்கள் நூற்பெயராகவும், பதிப்புக் குறிப்பாகவும் அமைதல் நோக்கத்தக்கது.

இனி, இம்முதற்குறிப்பகராதி தரும் முறையிலும் இ.ப. வில் சில மாற்றங்கள் காணப் படும். சில வருமாறு:

மு.ப.	இ.ப.
பிரபு—பிரபுலிங்க,	பிரபு—பிரபுலிங்கலீலை
நாற்கவி—நம்பி—	நாற்கவிராச நம்பியகப் பொருள்

முகவுரை: மணிமேகலை முகவுரை போன்றே, இங்கும் முதற் பதிப்பின் முகவுரையில் சில திருத்தங்களைச் செய்து இரண்டாம் பதிப்பின் முகவுரையாகத் தந்துள்ளார். முதற்பதிப்பின் பல செய்தி களை நீக்கியும், இ.ப. வில் புதிதாகச் சிலவற்றை இணைத்தும், மு.ப. விலுள்ள சில தொடர்களை மாற்றி அமைத்தும், இம் முகவுரை யை அமைத்துள்ளார்.

மு.ப. முகவுரையில், ''எங்கள் பெருமானை .... றறுப் பாரே'', என்றும், ''கொங்கிற்....குற்றாலா'' என்றும் இடம்பெற்ற தேவாரப் பாடல்களும், ''சிறைவான்....எய்தியதே'' என்ற திருக்கோவையார்ப் பாடலும், இ.ப. வில் நீக்கப் பட்டன.

'கௌசாம்பி நகரத்தில்' எனத் தொடங்கி, 'காணப்படும்'[1] என முடியும் கதைச் சுருக்கப் பகுதி முதற் பதிப்பில் இடம்பெற்று, இரண்டாம் பதிப்பில் நீக்கப்பட்டுள்ளது. 'உதயணன் சரித்திரச் சுருக்கம்' என்பதில் இக்காப்பியக் கதை பின்னர் மிகவிரிவாக இடம் பெற்றதால், இங்குத் தேவையில்லை என ஐயரவர்கள் விடுத்திருக்க வேண்டும்.

முதற்பதிப்பில், கிடைத்துள்ள மூலப்பகுதியில் 'முதல்' இல் லாதன, முற்றும் இல்லாதன, இறுதி இல்லாதன, இடையிற் சில வரிகள் இல்லாதன இவை யிவை எனக் குறிப்பிட்டு அவற்றின் காதை எண்ணையும் தந்துள்ளார்.[2] இப்பகுதி இரண்டாம் பதிப் பில் இடம்பெறவில்லை.

ஸ்ரீ சாமிநாததேசிகர் வெறுத்துக் கூறிய நூல்களில் பெருங் கதை இருப்பது நினைவுக்கு வந்ததே, இந்நூலாராய்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தது எனக் குறிப்பிடும் ஐயரவர்கள், ''அவமதிப்பும் ஆன்ற மதிப்பும், இரண்டும் மிகை மக்களால் மதிக்கற் பால' - என்றாரன்றோ'[3] - என்ற தொடரை முதற்பதிப்பில் தந்து, பிற்பதிப்புக்களில் இதனை நீக்கியுள்ளார். 'திரிசிரபுரத்து...என்றும் தெரியவந்தது'[4] என்ற ஒரு பத்தியும் இ.ப.வில் இடம்பெறவில்லை.

'பெருங்கதை ஆராய்ச்சி விளக்கம் வெளியிடக் கருதி, அதனைக் காலம் நீட்டிக்கும் என்ற காரணத்தால் இப்போது வெளியிட வில்லை'[5] என முதற் பதிப்பில் குறித்த செய்தி, இ.ப.வில் விடு பட்டுள்ளது. பெருங்கதை ஆராய்ச்சி விளக்கமும் இ.ப.வில் இடம் பெறவில்லை. டாக்டர் ஐயரவர்கள், பெருங்கதை பற்றி எழுதி வைத்திருந்த குறிப்புக்களை ம.வி.கனக சபை பிள்ளையவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்க நான்காம் ஆண்டு நிறைவு விழாவில் பேச வாங்கிச் செல்ல, பின் அது கிடைக்கவே இல்லை எனக்குறிப்

---

1. பெருங்கதை, மு.ப., பக்: iii—v
2. பெருங்கதை, மு.ப., பக்: xi
3. ,, ,, ,, xv
4. ,, ,, ,, xviii - xix
5. ,, ,, ,, xxiv - xxv

பிடுவர்.[1] இக்குறிப்பை வெளியிடக் கருதியே முதற்பதிப்பின் முக வுரையில் குறிப்பிட்ட ஐயர், பின்பு அப்பகுதி தனக்குக் கிடைக்க வில்லையாகலின், அதுபற்றிய செய்தியையே முகவுரையிலிருந்து நீக்கி விட்டார் எனலாம்.

மு.ப. முகவுரையில், 'நூலைப் பதிப்பிக்கத் தொடங்கி ஐந்து வருடங்களுக்குமேல் ஆயின; இடையிடையே பல இடையூறுகள் ஏற்பட்டன''[2] எனக் குறிப்பிடும் செய்தி இ.ப.வில் இடம்பெற வில்லை. அதோடு இம் முதற்பதிப்பின் முகவுரையில் தன் நினை வாற்றல் மங்கியுள்ளதைக் குறிக்கும் ஐயரவர்கள், 'என்செய்க'[3] என்ற தொடரைச் சேர்த்துள்ளார். இதனைப் பிற்பதிப்பில் விடுத் துள்ளார்.

இங்ஙனம் சில செய்திகளும் தொடர்களும் நீக்கப் பட்டதன்றி யும், ஆங்காங்கே சில சொற்களும் தொடர்களும் மாற்றியமைக்கப் பட்டன. சில சொற்கள் நீக்கப்பட்டுப் பதிலாகப் புதிய சொற்கள் சேர்க்கப்பட்டன.

'தக்க கருவியாகும் இந்நூல்' — 'இந்நூல் தக்க கருவியாகும்'.[4]

'இது, தமிழில் முதல் நூலாக' — 'தமிழில் முதல் நூலாக இது'[5] என்றிவ்வாறு இ.ப.வில் சில தொடர்கள் மாறி அமைந்துள்ளன.

முதற் பதிப்பில் இடம்பெற்ற சில தொடர்கள் இடமாற்றம் பெற்றுள்ளன. மு.ப.வில் 'வச்சத் தொள்ளாயிரம்' நூல்பற்றிய அறிமுகப் பகுதியின் இறுதியில், 'உதயணனுக்கு வத்தன், வத்தவன், வச்சன் என்றும் பெயர்கள் வழங்குவதுண்டு' என்ற தொடர், இ.ப.வில் இப்பகுதி முகவுரையின் தொடக்கத்தில் அமைந்துள்ளது.[6]

பெருங்கதைக் காதைகள் கிடைத்துள்ளவை பற்றிக் குறிப்பிடு கையில், 'அதனால் உதயணன் நளகிரியை அடக்கிய பின் பிரச் சோதனனுக்கு முன் நின்றதற்கு முந்திய வரலாறுகளும், மானச லோகன் மதன மஞ்சிகையைக் கொண்டு சென்றபின் நிகழ்ந்த வரலாறுகளும் இந்நூலால் அறியக் கூடவில்லை'[7] என இ.ப.வில்

1. ,, இ.ப. ,, xxxix
2. ,, மு.ப. ,, xxvii
3. ,, இ.ப. ,, xxxiii
4. ,, மு.ப. பக்: vii, இ.ப., பக்: xxvi
5. ,, ,, ,, xv, ,, ,, xxx
6. ,, ,, ,, ix, ,, ,, xxviii
7. ,, ,, ,, iii & v, ,, ,, xxxi

இடம்பெறும் செய்தி, மு.ப.வில் இவ்விடத்து அமையாது காப்பியக் கதைச் சுருக்கம் சொல்லும் பகுதியின் அடிக்குறிப்பில் இடம் பெற்றுள்ளது.

'இந்நூற் (பெருங்கதை) கதை வடமொழியில்....காளிதாசமகா கவியாலும், தென்மொழியில் திருமங்கை யாழ்வாராலும், கூல வாணிகன் சீத்தலைச்சாத்தனாராலும் எடுத்தாளப்பட்டுள்ளது' என முதற்பதிப்பில் இடம்பெற்ற தொடரில், 'சீத்தலைச்சாத்தனார்' முன்னாகவும் 'திருமங்கையாழ்வார்' பின்னாகவும் இ.ப.வில் மாற்றி யமைக்கப் பட்டுள்ளது.[1] 'சாத்தனார் காலத்தால் முந்தியவர்; ஆழ்வார் பிந்தியவர்' என்ற கால உணர்வு அடிப்படையில் இம் மாற்றம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

முதற் பதிப்பில் இல்லாத பல **புதிய இணைப்புக்கள்** இரண்டாம் பதிப்பில் தரப்பட்டன. ''இதன் பாலுள்ள சிற்றுறுப்புக்கள்... காதை என வழங்கப்பட்டன எனத் தெரிகிறது......இங்கே கருதத் தக்கது[2]'' என வரும் பகுதி இ.ப. வில் புதிதாக இடம்பெற்றுள்ளது. அதோடு பெருங் கதை கிடைத்த பகுதியில் இல்லாதன, பிற உரை யாசிரியர்கள் மேற்கோள்களால் அறிய வந்தன பத்தினை மு. ப. வில் தொகுத்துத் தருவர். இ.ப. வில் இது பத்தொன்பதாக விரிவடைந் துள்ளது. 9, 11, 12, 14—19-ஆகிய எண்ணில் அமையும் பகுதிகள் இ.ப. வில் சேர்க்கப்பட்டவை.[3] தன்னிடம் பெருங்கதை, புறநானூற் றுப் பிரதிகளைக் கேட்ட நண்பர்களைப் பற்றிக் குறிப்பிடும் பகுதியின் இறுதியில், 'அவர் வேறொருவரால் தூண்டப்பட்டு வந்தவரென்பது பின்பு தெரிய வந்தது; அவ்விருவரும் இப்போது காலஞ் சென்று விட்டனர்[4] என்ற தொடரை இ.ப. வில் புதிதாக இணைத்துள்ளார்.

இவையன்றிப் **பதிப்புக் குறிப்புக்கள்** பற்றிய சில செய்திகள் இ.ப. வில் சேர்க்கவும் நீக்கவும் மாற்றவும் பட்டுள்ளன. முதற் பதிப்பின் இறுதியில் பதிப்பிக்கப்பட்ட 'குறிப்புரை' அடிக்குறிப்பில் தரப்பட்டதாலும், 'அபிதான விளக்கம்' அரும்பதவுரையில் அமைக் கப்பட்டதாலும், இது பற்றி மு.ப.வில் எழுதிய முகவுரை இ.ப. வில் நீக்கப்பட்டன; இவை மாற்றியமைக்கப்பட்ட செய்தி இ. ப. வின் முகவுரையில் புதிதாக இடம்பெற்றது.[5]

---

1. ,, ,, ,, xiii ,, ,, xxxiii
2. ,, இ.ப. பக: xxx
3. ,, இ.ப; பக்: xxxii--iii
4. ,, ,, பக்: XL
5. ,, இ.ப. பக்: XLiii & மு.ப. பக்: xxii & xxiv

முதற் பதிப்பு வெளிவர மூலப்பிரதி தந்தும், வேறு சில நூல்கள் கொடுத்தும் உதவிய கவிராஜ நெல்லையப்ப பிள்ளை, அவர் இளவல் கவிராஜ ஈசுவரமூர்த்திப் பிள்ளை; பதிப்பு வெளிவர ஆர்வம் காட்டிய பாலக்காடு பா.ஐ. சின்னசாமி பிள்ளை ஆகியோருக்கு நன்றி கூறும் பகுதியும்; பதிப்பு வேளையில் உடனிருந்து உதவிய அனந்தராமையர், ம. வே. துரைசாமி ஐயர்; கே. அருணாசல ஐயர், கோதண்டராம ஐயர், திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் ஸ்ரீவைத்தியலிங்க தேசிகர், திருப்பனந்தாள் ஆதீனத் தலைவர் ஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான், அவரையடுத்து ஆதீனத் தலைவ ராகிய ஸ்ரீ சாமிநாதத் தம்பிரான், மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர் பா. ராஜராஜேசுவர சேதுபதி மகாராஜா, கொழும்பிலிருந்த டாக்டர் கு. ஸ்ரீகாந்த முதலியார், பெரும்பன்றியூர் எம். எம். பெரியசாமி முத்தைய உடையார் முதலானோருக்கு நன்றி கூறும் பகுதி, முதலான[1] இ.ப. வில் நீக்கப்பட்டன. பதிலாக இரண்டாம் பதிப்புப் பணிக்கு உதவிய வி. மு. சுப்பிரமணிய ஐயர், கி.வா. ஜகந்நாத ஐயர் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கும் பகுதி இடம்பெறும்.[2] பெருங்கதையின் மு.ப. 1924-இல் வெளிவந்த செய்தியும் இ.ப. வில் குறிக்கப்படும்.

மு.ப.வில் 'உதயனன்' என ஏட்டில் இருந்தவாறே பதிப்பிக்கப் பட்டது. இ.ப.வில் 'உதயணன்' எனமாற்றப்பட்டதையும், மூலமும் குறிப்புரையும் பல திருத்தங்கள் அடைந்தன என்றும், மூலம் பொருள் அடிப்படையில் தலைப்புகள் தந்து பதிப்பிக்கப் பட்ட மாற்றமும், புதிய மூல பாடங்களும் பாட பேதங்களும் தரப்பட்டன என்றும், குறிப்புரை யில் பல புதிய விளக்கங்கள் இடம் பெற்றன என்றும், இ.ப.வின் முகவுரையில் பதிப்பு மாற்றம் குறித்த செய்திகளைச் சேர்த்துள்ளார்.[3]

இனி, முதற்பதிப்பில், பெருங்கதையின் மூலம் மொத்தம் 100-காதைகள் கிடைத்துள்ளன என முதற்பதிப்பில் பிழைபடக் கூறிய கருத்தை, இ.ப. வில் 99-எனத் திருத்தியுள்ளார். அன்றியும் முகவுரையில் வரும் மேற்கோள் பாடல், வரி முதலான வற்றை அடைப்புக் குறிக்குள் தரும்போது; அவற்றின் எண் 'க,உ'—என் அமைய, இ.ப. வில் '1,2—'என அமைந்துள்ளன. இங்ஙனம் இ.ப. முகவுரை பல மாற்றங்களைப் பெற்றுள்ளது.

---

1. ,, மு.ப. பக்: xxv—vii
2. ,, இ.ப. பக்: xLiv
3. பெருங்கதை, இ. ப., பக்: xlii & liv

நூலாசிரியர் வரலாறு: முதற்பதிப்பிற்கும் இரண்டாம் பதிப்பிற்கும் மிகுந்த வேறுபாடுகள் இல்லை. மு.ப.வில் 'மேற்காட்டிய செய்யுளில்' என இருந்தது, இ.ப.வில் 'மேற்காட்டிய கொங்கு மண்டலச் சதகச் செய்யுளில்'' என விளக்கம் பெற்றுள்ளது[1] அதோடு, ''இந்த நூலை முதலில் பைசாச பாஷையில் இயற்றிய குணாட்டியரும், வடமொழியில் இயற்றிய துர்விநீதன் என்னும் அரசனும் தமிழில் இயற்றிய கொங்கு வேளிரும் ஒருவரே என்னும் உபசார வழக்குப் பற்றி இங்ஙனம் கூறப்பட்ட தென்பாரும் உளர்''[2] என்ற செய்தி இ.ப.வில் புதிதாகச் சேர்க்கப் பட்டுள்ளது.

'நூலைப் பற்றிய சில குறிப்புக்கள்' என்பது இ.ப.வில் 'நூலைப் பற்றிய குறிப்புக்கள்' என மாற்றப் பெற்றுள்ளது. முதற் பதிப்பில், 'கங்க நாடும் சைன மதமும்'[3] பகுதியில், கி. மு. 50, 60-இல் உச்சைனி முனிவர் பத்திரபாகு என்பார், நாடு வறகடம் பூண, சைன முனிவர்களை வேறிடம் செல்லக் கட்டளையிட்டார்; அவர்கள் பல தேயம் சென்று பின் 'தவளஸரோவரம்' அல்லது 'சிரவண பெள்குளம்' என்ற இடம் சென்று தென்னாட்டில் சமணம் பரப்பினர்; அவர்களில் 'ஸிஹ்ம' நந்தி ஆசாரியர் கங்க ராச்சியம் ஸ்தாபித்தார் எனும் கோபிநாதராவ் கருத்தை எடுத்துரைத்து, அதற்கு நன்னூல், நேமிநாதம் ஆசிரியர் முதலானோர் கங்க நாடு, கொங்கு மண்டலம் முதலான சுட்டியுள்ளதைச் சான்று காட்டி, இதனால் 'துர்விநீதன் கங்கநாட்டினன்' எனக் கூறும் பகுதி இ. ப. வில் இடம்பெறவில்லை. அன்றியும், 'துர்வி நீதன் அவி நீதன்' என்று கொங்கு மண்டல சதகத்தில் குறிப்பிடப் பட்டுள்ளான் எனக் கூறிச் சதகச் செய்யுளையும் (பா:150) சான்றுகாட்டுவர் மு. ப. வில்[4]. இதனையும் இரண்டாம் பதிப்பில் நீக்கியுள்ளார். இதனால், மேற்படி முதற் பதிப்பில் கூறிய கருத்து, ஐயருக்கு உடன்பாடன்மையின் பிற்பதிப்புக்களில் நீக்கி விட்டார் எனக் கருத இடமுண்டு.

உதயணன் சரித்திரச் சுருக்கம்: முதல் இரு பதிப்புக்களில் இடம்பெற்ற உதயணன் சரித்திரச் சுருக்கம் பிறபதிப்புக்களில் இடம் பெறவில்லை. இப் பகுதி மட்டுமே 160-பக்கங்களில் அமைந்துள்ளது. முதலிரு பதிப்புக்களில் இடம்பெற்ற இப்பகுதியில் பெரிதும் வேறுபாடு இல்லை. ஆங்காங்கே சில சொற்களை மாற்றியும் நீக்கியும் சேர்த்தும் இ.ப.வில் அமைத்துள்ளார் ஐயர். இவையும் பத்தியின் தொடக்க, இறுதி வரிகளிலேயே அமைந்துள்ளன. சில மாற்றங்கள் வருமாறு:

1,2. ஷை ஷை ஷை xlvii & மு.ப. பக் : xxx
3. ஷை மு.ப. ஷை xxxvii-viii
4. ஷை ஷை பக் : xl

மு.ப.		இ.ப.
'அப்பால் உதயணன்'	... —	'உதயணன்'[1]
'பின்பு ஒருநாள்'	... —	'ஒருநாள்'[2]
'அந்தச்சக்கரவர்த்தி ஒருநாள்'	.... —	'ஒருநாள் அந்தச் சக்கரவர்த்தி'[3]
'கௌசாம்பிக்கு அனுப்பினான்'	.... —	'கௌசாம்பிக்கு விடுத்தனன்'[4]
'அப்பால்'	... ... —	'அப்போது'[5]
'அப்பால் யூகி'	.... —	'யூகியோ'[6]

முதற்பதிப்பில் இடையிடை அமையும் மேற்கோள் பாடல்களுக்கும், அதன்பின் அமையும் தொடருக்கும், தொடர்பு சுட்டப்படுவதில்லை. இ.ப.வில் இதற்குத் தொடர்பு சுட்டப்பட்டுள்ளது. மு.ப.வின் பாடல் வரி, 'முன்கை' என முடிய, அடுத்த தொடர் 'அவள்' என்ற சுட்டுப் பெயருடன் அமைந்துள்ளது; இத் தொடர் இ.ப.வில், ''முன்கை''யையும் உடைய அவள், என்று தொடர்பு படுத்தப்பட்டு உள்ளது.[7]

அபிதான விளக்கம் 46 - பக்கங்களில் முதற்பதிப்பில் இடம்பெற்றது, இ.ப.வில் இடம்பெறவில்லை. இங்குப் பாத்திரம், ஆறு, உலகம், ஊர், குலம், கோயில், தெய்வம், நகரம், நாடு, நாணயம், மலை, பொன் முதலான பெருங்கதையில் இடம் பெறுவதன் தொகையகராதியாக அமைந்து, அவற்றின் அறிமுக விளக்கமாகவும் அமைந்து சிறப்புற்றுள்ளது. இப்பகுதி பிற்பதிப்பில்' அரும்பதம் முதலியவற்றின் அகராதி'யில் அகர வரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

'அரும்பதம் முதலியவற்றின் அகராதி' முதற்பதிப்பில் 147-பக்கங்களில் அமைய, இ.ப.வில் 240-பக்கங்களாக விரிவடைந்துள்ளது.

1.	ஷை	மு.ப. பக்:	52	இ.ப. பக்:	6
2.	ஷை	ஷை	53	ஷை	7
3.	ஷை	ஷை	55	ஷை	9
4.	ஷை	ஷை	55	ஷை	9
5.	ஷை	ஷை	57	ஷை	11
6.	ஷை	ஷை	59	ஷை	13
7.	ஷை	ஷை	54	ஷை	8

குறிப்புரை முதற் பதிப்பின் மூலத்தின் இறுதியில் தனியே தொகுத்துத் தரப்பட,[1] இ. ப. வில் மூலத்தின் அடியில், 'அடிக் குறிப்பில்' தரப்பட்டுள்ளது. மு.ப. வில் இடம்பெறாத பல புதிய 'பதவுரை' (சொற்பொருள்), சொல் திரிபு, புதிய ஒப்புமைப் பகுதிகள் சில இ. ப. வில் இடம்பெற்றுள்ளன. சில:

'அலகை—அளவு; உரையாணி'[2]
'பாசண்டியர்கள்—பாஷண்டியர் (வடசொல்)[3]
''மதகளி றிரண்டுடன் மண்டியாங்கு''—'களிறு என்றது இங்கு இருபாற்கும் பொதுப் பெயர்;' ''தெய்வக் களிற்றை மணஞ் செய்தோன் ''[கந்தர் கலி: 105]''[4]

முதற் பதிப்பில் அமைந்த சில தொடர்களைத் தேவையற்றது என எண்ணி, இ.ப. வில் நீக்கியுள்ளார். முதற் பதிப்பின் உரையில், பாடற் கருத்துக்கு ஏற்ப, (இது) 'பிரச்சோதனனை நோக்கி உதயணன் கூறியது,'[5] 'உதயணன் உட்கோள்'[6]—என அமைத்துக் கொள்ளப்பட்ட பகுப்பு முறை இ.ப. உரையில் இல்லை. இப்பகுப்பு முறை இ. ப. மூலத்தில் இடம்பெற்றதால், உரையில் நீக்கப் பெற்றுள்ளது.

விளக்கத்திற்காகக் காட்டப்பெறும் ஒப்புமைப் பகுதி மேற்கோள் வரிகளை அடுத்து இடம்பெறும் தொடர்புரை, இரண்டாம் பதிப்பில் இடம்பெறவில்லை. மு.ப. 1:32:17-18—வரிகளின் குறிப்புரையில், இறையனார் அகப்பொருள் உரை (சூ:2), சீவக சிந்தாமணி (2749), திருச்சிற்றம்பலக் கோவை (6), 'மெய்ம்மொழி' முதலானவற்றி லுள்ள பாடல்வரிகளை எடுத்துரைக்கும் டாக்டர் ஐயர், இவற்றின் இறுதியில், 'என்பவற்றின் கருத்தை ஒருவகையாக இவற்றின் பொருள் ஒத்துள்ளது' என எழுதுவர். இது போன்ற தொடர்புரை பிற் பதிப்புக்களில் இல்லை.

'பிழையும் திருத்தமும்' கூட முதற்பதிப்பில் நான்கு பக்கங் களில் அமைய, இரண்டாம் பதிப்பில், ஒரே ஒரு பக்கத்தில் மட்டும் அமைந்துள்ளன.

---

1. பெருங்கதை, மு.ப. பக்: 505—776.
2. ,, இ.ப. 1:32: 2 —உரை
3. ,, ,, 1:32:3 ,,
4. ,, ,, 1:32:38. ,,
5. ,, மு.ப. 1:32:1-8
6. ,, ,, 1:32:9-11.

மூலபாடம்: முதற்பதிப்பிற்கும் இரண்டாம் பதிப்பிற்கும் இடையே மூலபாடத்தில் பல வேறுபாடுகள் இடம்பெற்றுள்ளன.[1]

மு.ப.		**இ.ப.**
'கிளவியும்'	...	'கிளவியற்' — 1:32:71
'புலம்புகொள்'	....	'புலம்பு கொல்' — 1:34:1
'பூண்டு மருந்து துறைபோகிய'	...	'பூண் டருந்துறைபோகிய' 1:34:11-12
'மருகின்'	....	'மருங்கின்' — 1:34:68
'பெயர்ந்தனன்'	...	'பேர்ந்தனன்' — 1:34:110
'அகவற்'	...	'அவ்வகற்' — 1:34:186
'புகழ் சொன்'	...	'புகர்ச் சொன்' —1:35:3
'கழிந்த'	...	'கழித்த' -- 1:35:44
'திணையோர்'	...	'திளையோர்' — 1:35:121
'தெரிந்து'	...	'திரிந்து' — 1:35;201
'ஒருமணம்'	...	'ஒருமனம்' — 1:35:243
'ஒருவற்குத்'	...	'ஒருவர்க்குத்' — 1:36:1
'கடிமணை'	...	'கடைமணை' — 1:36:33
'திரிதரு'	...	'தெரிதரு' — 1:37:54
'திரிவுபல'	....	'தெரிவுபல' — 1:37:81
'கொண்டுதன்'	...	'கொண்டதன்' — 1:37:147
'அசைத்த'	...	'அசைத்து' — 1:37:165
'பகல்விடு'	...	'பகல்படு' — 1:37:180
'தரும யாத்திரை'	...	'தரும ஆத்திரை' — 1:37:238
'தடவ'	...	'கடவ' — 1:37:279
'வாயில ரில்லென'	...	'வாயி லில்லென' — [:37:293
'வெல் லென் பாவை'	...	'மெல் லென் பாவை' — 1:137:334

முதற்பதிப்பில் இடம் பெறாது, இரண்டாம் பதிப்பில் பல புதிய பாடபேதங்கள் குறிக்கப் பெற்றுள்ளன.[2] சில வருமாறு:

---

1. இங்கு மு.ப.வில் இடம்பெறும் மூலபாடம், இ.ப.வில் பிரதி பேதங்களாகக் குறிக்கப் பட்டுள்ளன.

2. இங்கு மு.ப. & இ.ப.வுக்கு இடையில் மூலத்தில் ஏற்பட்ட மாற்றம், புதிய பாடபேதங்கள் பற்றிய செய்திகள் முதல் ஆறு காதைகளில் மட்டுமே நோக்கப் பட்டன. (1:32 |முதல் 37-காதைகள் வரை)

பாடபேதம்		மூலபாடம்
'வெளிறேட்டங்கள்'	...	'வெள்ளோட்டங்கள்' — 1:32:69
'இறங்குசுடர்'	...	'இலங்குசுடர்' — 1:33:98
'விம்மா'	...	'விம்மிப்' — 1:33:197
'கரந்துரை'	...	'கரந்துறை' — 2:34:161,167
'பெண்ணலி'	...	'பெண்ணிலி' — 1:35:162
'மீட்டினித்'	...	'மீட்டின' — 1:35:203
'விழுவனளாகி'	...	'விம்முவனளாகி — 1:37:6
'வான்மை'	...	'வாய்மை' 1:33:59
'நுந்தை வையத்'	...	'நுந்தை அவையத்' — 1:37:161
'காண சமணன்'	...	'கானசமணன்' — 1:37:248
'வேண்டான்'	...	'வேண்டா' — 1:37:334
'மகளிடை'	...	'மகட்கொடை' — 1:37:93

இனி, பெருங்கதையின் ஏட்டுப் பிரதி சிதைந்தே கிடைத்தமையால், பல பகுதிகள் கிடைக்காமலும், சில பாடல்கள் அரை குறையாகக் கிடைத்துள்ளதும் அறிந்ததே. இவற்றில் சில பாடல்கள் இரண்டாம் பதிப்பில் திருத்தம் பெற்றுள்ளன.

மு.ப.	இ.ப.
'பெருமணங் கமழவும்......ய்த' —	'பெருமணங் கமழவும் பிடகைப் பெய்த' - 1:33:74
... ... 'தர'' ... ... —	'உத்தர' - 2:3:121
'ய ... ... டந தெரு' ... ... —	'யடநடுதரு' - 2:11:107
... ... 'க் கிழவன்' ... ... —	'இன்பக் கிழவன்' -4:3:90

முதற்பதிப்பில், மேலே கண்டவை மாதிரி சில சொற்களன்றிச் சில வரிகளே விடப்பட்டுள்ளன வாக '... ... ...' என்ற குறியுடன் சுட்டப்பெற்றுள்ளன.[1] ஆயின் இ.ப.வில் மேற்குறித்த விடுபட்டதற்கான குறியீடுகள் எதுவும் காணப் படவில்லை. அதே போன்று, மு.ப.வில் தொடர்ச்சியாக அமைந்த பாடல் வரிகளுக்கு இடையே சில வரிகள் விட்டுப்போயுள்ளன என இரண்டாம் பதிப்பில் சுட்டப் பெற்றுள்ளன.[2]

1. பெருங்கதை, மு.ப., 3:24:55; 3:25:74' 4:6:14
2. ” இ.ப., 1:34:233, 3:12:6-7; 4:10:98; 5:6:12.

இங்ஙனம் பெருங்கதையின் முதற் பதிப்பிற்கும், இரண்டாம் பதிப்பிற்கும் இடையே பல வேறுபாடுகள் அமைந்துள்ளன. மூலத்தில் அடைந்த பல வேறு பாடுகளுக்கு, பின்னர் செய்து வந்த ஆராய்ச்சியே காரணம் என்பர் டாக்டர் ஐயர். ஆயின் இரண்டாம் பதிப்பிற்கு ஐயரவர்கள் புதிதாக ஏடுபார்த்ததாகத் தெரியவில்லை. ஏனை மூன்று காப்பியங்களின் இரண்டாம் பதிப்புக்களை வெளியிட்ட ஆசிரியர், அப்பதிப்பிற்குப் புதிதாக ஏடுகள் பார்த்ததாகக் குறிப்பிடுவர். ஆயின் பெருங்கதையின் இ.ப. விற்கு அவர் புதிய ஏடுகளை ஆராய்ந்ததாகக் குறிப்பு இன்றேனும், மூலபாடம் அடைந்த திருத்தம் முதலான நோக்கும் போது, அவர் இ.ப. விற்கு மேலும் பல புதிய ஏடுகள் பார்த்திருக்கவேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. பெருங்கதை பதிப்பிற்கு ஐயர் எடுத்துக் கொண்ட முயற்சி ஒன்றும் நமக்குத் தெரியவில்லை; அவரது 'என் சரித்திரத்தில்' பெருங்கதைப்பதிப்புத் தொடர்பான செய்திகள் ஒன்றும் இடம் பெறாமையால், பல செய்திகள் நமக்குக் கிடைக்காமல் போகின்றது.

பதிப்பு வேறுபாடுகளில், மூலத்தில் ஏற்பட்டவற்றை மட்டுமாவது பின் வந்த பதிப்புக்களில் பாடபேதங்களில் குறித்திருந்தால், பதிப்பின் பயன் மேலும் சிறந்திருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது. பல்வேறு செய்திகளையும் மிகச் சிறந்த முறையில் தொகுத்தளித்த டாக்டர் ஐயரவர்கள் இது குறித்த செய்திகளையும் தொகுத்தளித்திருந்தால், எளிதில் பதிப்பு வேறுபாடுகளைக் காண்பதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும் பெருங்கதையில் பெரும்பான்மையும், மூலபாடம் திருத்தப்பட்டபோது, பழைய (மு.ப.) பாடத்தை அடிக்குறிப்பில் தந்துள்ளார். இம்முறை சிந்தாமணி முதலானவற்றில் ஓரளவு பின்பற்றப் பட்டுள்ளது.

இனிச் சீவக சிந்தாமணி 'முகவுரை' போன்று, தனித்தனியாக ஒவ்வொரு பதிப்பின் முகவுரைகளும் அமைக்கப் பட்டிருந்தால் பதிப்பு வரலாற்றை ஒரே பதிப்பில் அறிந்து கொள்ள வாய்ப்பளித்திருக்கும். ஒவ்வொரு காப்பியங்களைப் பதிப்பிக்கின்ற போதும், பல புதிய செய்திகளை ஆராய்ச்சிக் கருத்துக்களை அள்ளி வழங்கிய ஐயரவர்களின் பதிப்புப்பணி தலைசிறந்து நிற்கின்றது. அதோடு ஒரு இலக்கியத்தின் மறு பதிப்பை வெளியிடுகின்ற போதும், அவர் செய்துள்ள மாற்றங்கள்—திருத்தங்கள் முதலான, பதிப்புத்துறையில் அவரடைந்த வளர்ச்சியையும், தமிழ் இலக்கிய, இலக்கணத்தில் அவருக்கிருந்த பரந்து பட்ட அறிவையும் பயிற்சியையும் தெற்றெனப் புலப்படுத்தும்.

3. முகவுரை முதலியன

நூலின் நுழை வாயிலாக அமைவது முகவுரை. நூல் தோன்றிய வரலாறு, நூலினது சிறப்பு, அதன் உள்ளடக்கம், நூலின் பால் வாசகனை ஈர்த்தல் முதலான பெற்று, ஓர் இனிய மங்கலத் தொடக்க மாக அது அமைதல் வேண்டும். டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர வர்கள், தாம் பதிப்பித்த அனைத்து நூல்களுக்கும் தெளிவான, ஆய்வுச் சிந்தனை நிறைந்த முகவுரை முதலான எழுதுவதை மரபாகக் கொண்டுள்ளார். அவர் காலத்துப் பதிப்பாசிரியர் சிலர் முகவுரை எழுதுவதில்லை. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரை இவ்வகையில் குறிப்பிடலாம். அதே கால கட்டத்தில், பதிப்புத் துறையில், முன்னணி யில் நின்ற சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், தமிழ் மொழியின் சிறப்பியல்புகளைத் தெளிவு படுத்தும் முறையில் மிக நீண்ட முகவுரை களை அமைத்தார்.[1] டாக்டர் ஐயரவர்கள், தம் காலப் பதிப்பாசிரியர் களின் நிலையிலிருந்து சற்று மாறுபட்டு, நேரடியாக நூலை அறிமுகம் செய்யும் மரபை 'முகவுரை'யில் பின்பற்றியுள்ளார். அதோடு, நூலைப் பற்றிய ஆய்வுச் சிந்தனைகளைப் பல்வேறு தலைப்புக்களில் வரைந்து, அவற்றை நூன் முகமாக அணி செய்துள்ளார். பதிப்பு தோறும் இம் முகவுரையில் குறிப்பிடத் தக்க சில மாற்றங்களையும் அமைத்துள்ளார். நூல் முகமாக அமையும் முகவுரை முதலியன பின் வரும் தலைப்புக்களில் அமையும் : 1. முகவுரை, 2. நூலாசிரியர் வரலாறு, 3. நூலைப் பற்றிய குறிப்புக்கள், 4. உரையாசிரியர் வரலாறு, 5. கதைச் சுருக்கம், 6. பிற [நூலின் அமைப்பிற்கு ஏற்ப இது அமையும்].

சீவக சிந்தாமணிப் பதிப்பின் நூன் முகம், 'முகவுரை', 'நூலா சிரியர் வரலாறு', 'நூலைப் பற்றிய சில குறிப்புக்கள்' 'இந்நூல் உரை யாசிரியராகிய நச்சினார்க்கினியர் வரலாறு', 'சீவகன் சரித்திரச் சுருக்கம்' 'ஸ்ரீபுராணத்தில் 24-ஆம் தீர்த்தங்கராகிய, ஸ்ரீவர்த்தமானர் புராணத்திலுள்ள சீவக சரித்திரம்' என ஆறு தலைப்புகளில் அமையும்.[2] இவற்றில் பின்னிரண்டும் 'கதைச்சுருக்கம்'. சிலப்பதிகாரப் பதிப்பில், 'நூலைப் பற்றிய சில குறிப்புக்கள்' இடம் பெறவில்லை. நூலுக்கு இருவர் உரை எழுதி யிருத்தலின் அவர் தம் வரலாற்றை, அரும்பத வுரையாசிரியர் வரலாறு, அடியார்க்கு நல்லார் வரலாறு எனத் தனித் தனியே அமைத்துள்ளார். மணிமேகலைக்குப் பழைய உரை கிடைக்

---

1. சொல் விளங்கும் பெருமாள், பூ. - டாக்டர் உ.வே.சா., பக் : 223.
2. சீவ. சிந் : பக் : 5-71.

காமையால், அக்காப்பியப் பதிப்பில், 'உரையாசிரியர் வரலாறு', நூலைப் பற்றிய குறிப்புக்கள் இடம் பெற வில்லை. புதிதாகப் 'புத்த சரித்திரம்', 'பௌத்த தருமம்', 'பௌத்த சங்கம்' ஆகிய மூன்று பகுதி களும் இடம் பெற்றன. இங்குப் பௌத்த சமயச் செய்திகள் விளக்கம் பெற்றுள்ளன ஐயரது கை வண்ணத்தால். பெருங்கதைக்குப் பழைய உரை இன்மையால் 'உரையாசிரியர் வரலாறு' நீங்கலாகப் பிற இடம் பெறும்.

'நூலைப் பற்றிய சில குறிப்புகள்' சீவக சிந்தாமணி, பெருங் கதைக் காப்பியங்களின் பதிப்பில் மட்டும் இடம் பெறுவதன் காரணம் விளங்க வில்லை யாயினும், ஒருவாறு உணர முடிகின்றது. இரு காப்பியங்களும் பிற மொழித் தழுவலாகத் தமிழுக்கு வந்ததால், அவற்றைப் பற்றிய அறிமுகம் தேவை என உணர்ந்த ஐயரவர்கள் இதனை அமைத்திருக்கக் கூடும். அல்லது, சிலப்பதிகாரமும், மணி மேகலையும் ஐயரவர்கள் காலத்தில் மிகுதியான வழக்குப் பெற்றி ருக்கலாம் என்றும் எண்ணலாம், இது ஒருவகை ஊகமே தவிர, முடிந்த முடிவு அல்ல.

ஐயரவர்கள் பதிப்பித்த நான்கு காப்பியங்களும் புறச் சமயத்தைச் சார்ந்தன வாகலின், சீவக சிந்தாமணி, மணிமேலைப் பதிப்பில், அவ்வச் சமய நெறிகளைப் பற்றி அறிந்து கொள்ளத் 'தமிழ்த் தாத்தா' எடுத்துக் கொண்ட முயற்சி பெரிது. இதன் விளைவே, மணிமேகலைப் பதிப்பில் இடம் பெறும், 'புத்த சரித்திரம்', 'பௌத்த தருமம்', 'பௌத்த சங்கம்' ஆகியன. இவை மட்டும் 106-பக்கங்களில் மிக விரிவாகப் பௌத்த சமயக் கொள்கையின் விளக்கமாக அமைந் துள்ளன. இதே போன்று சீவக சிந்தாமணி பதிப்பின் முகப்பில் ஏன் சமண சமயக் கருத்துக்களடங்கிய விளக்கப் பகுதியை ஐயரவர்கள் அமைக்கவில்லை என்ற எண்ணம் எழுவது இயல்பே. குறைந்தது, அச்சமயம் பற்றிச் சிறு அறிமுகமாவது கொடுத்திருக்கலாம் அல்லவா? இதன் அடிப்படை நோக்கம் யாதென அறியவிழையின், ஓர் அடிப் படை உண்மை நமக்குப் புலப்படும். ஏனை மூன்றும் சமண சமயக் காப்பியங்களாக விளங்கினும், கதைக்கு முக்கியத்துவம் தந்து, சமயச் சிந்தனைகளைக் கதை ஓட்டத்தில் தருவனவே; ஆயின் மணிமேகலை அத்தகையதன்று; சமயத் தத்துவங்களுக்கு முதன்மை தருவது; 'சமயக் கணக்கர் தந்திறங் கேட்ட காதை', 'தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை', பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை முதலான சமயத் தத்துவ விளக்கமாக அமைவன. ஆகலின் அச்சமயக் கொள்கையை அறிந்தாலன்றி நூலை உணர முடியாது எனக் கருதிய ஐயரவர்கள், இவற்றை அமைத்திருக்க வேண்டும் எனக் கருதலாம். சமயச் சிந்தனை, தத்துவ விளக்கமாக மலர்ந்து

விரிந்தது மணிமேகலையில் தான் என டாக்டர் ப. அருணாசலம் அவர்கள் கருதுவது,[1] இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

முகவுரை, நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு முதலான 'நூன் முகம்' பகுதியில் ஐயரவர்கள், ஏதோ ஓர் அமைப்பு முறையைப் பின்பற்றியுள்ளார். இம்முறை 'கதைச் சுருக்கம்' தருவதிலே பின்பற்றப்படவில்லை. சீவக சிந்தாமணிக் கதைச்சுருக்கம் 19-பக்கங்களிலும், சிலப்பதிகாரக் கதைச் சுருக்கம் ஒன்பது பக்கங்களிலும், மணிமேகலைக் கதைச் சுருக்கம் 60 பக்கங்களிலும், பெருங்கதைச் சுருக்கம் 160 பக்கங்களிலும் அமைந்துள்ளன. மேகலைக் கதைச் சுருக்கம் காதை வாரியாக அமைந்து, இடையிடைச் சிறப்பான பாடற் பகுதிகளை ஒவ்வொரு காதைச் சுருக்கத்திலும் கொண்டுள்ளது[2]. கதைத் தொடர்பு, காதை அமைப்பு முதலானவற்றில் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஒத்த தன்மையனவாக இருந்தும், மேற்கண்ட முறை, சிலப்பதிகாரக் கதைச் சுருக்கம் தருவதில் அமையவில்லை. இங்குக் காண்ட வாரியாக, மிகச் சுருக்கமாக, இடையிடை சிறப்பான பாடற் பகுதிகள் எதுவும் தராமல் அமைத்துள்ளார்.

இரு தமிழ்க் காப்பியங்களின்றித் தழுவல் காப்பியங்களான, சீவக சிந்தாமணி, பெருங்கதைக் கதைச் சுருக்கத்தும் இவ்வேறுபட்ட முறையைப் பின்பற்றியுள்ளார். பெருங்கதைக் கதைச் சுருக்கம், மிக விரிவாக இடையிடைப் பாடல் வரிகளுடன் அமைய, சிந்தாமணிக் கதைச் சுருக்கம், கலம்பக வாரியாக அமையினும், மிகச் சுருக்கமாகப் பாடல் வரிகள் இன்றி அமைந்துள்ளது. இங்குப் பெருவழக்குப் பெறாத 'பெருங்கதை'யை அறிமுகம் செய்ய மிக விரிவாக எழுதினார் போலும். ஐயர் பதிப்பித்த நான்கு காப்பியங்களில், இன்னும் 'பெருங்கதை' பெருவழக்குப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அன்றியும், இக்காப்பியத் தொடக்கமும் இறுதியும் கிடைக்கவில்லையாகலின், அப்பகுதிகளை மூல நூலிலிருந்தும், பிற வடமொழி நூல்களிலிருந்தும் தமிழில் வந்துள்ள உதயணகுமார காவியத்திலிருந்தும் செய்திகளைத் திரட்டி, கதைக்கு ஒரு முழு வடிவம் தரவேண்டும் என்று வேட்டவிழைவும் ஒரு காரணமாகலாம்.

சீவக சிந்தாமணி கதைச் சுருக்கத்தைத் தொடர்ந்து, ஸ்ரீபுராணத்திலுள்ள சீவகன் சரித்திரச் சுருக்கம் பகுதியை மணிப்பிரவாள நடை

1. அருணாசலம், டாக்டர். ப., பக்தி இலக்கியம் - பக்: 18
2. கதைச்சுருக்கம் பகுதியில் பாடல் வரிகள் தரப்படாத காதைகள் 1, 27, 29, 30.

யில் தந்துள்ளார். இதுபோன்ற ஒரு பகுதி பெருங்கதைப் பதிப்பில் இடம் பெறவில்லை. ஒருவேளை ஐயரவர்களுக்குக் கிடைக்காமல் இருந்திருக்கலாம்; அல்லது விரிவஞ்சி விடுத்திருக்கலாம்.

மூன்று காப்பியக் கதைத் தொடக்கமும், தொடக்க வாழ்த்துப்பா இன்றி அமைய, மணிமேகலை மட்டுமே ''இமையவர்....கண்'' என்ற கலைமடந்தை வாழ்த்து வெண்பாவுடன் தொடங்கியுள்ளது. இங்ஙனம் பொதுநிலையில் ஐயரவர்களின் முகவுரை, நூலாராய்ச்சி முதலான சில குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைப் பெற்றுள்ளன. இதற்கு அடிப் படைக் காரணம், தொடக்க நிலையில் ஐயரவர்கள் பதிப்புப் பணியில் ஈடுபட்டபோது, பதிப்பு தோறும் சில புதிய செய்திகளைச் சேர்க்க வேண்டும் என விழைந்த விழைவின் எதிரொலி எனல் தகும். இருப் பினும், ஒவ்வொரு நூலின் இரண்டாவது, மூன்றாவது பதிப்புக்களை வெளியிட்டபோது, அம்மாறுபாடுகளை நீக்கி, அனைத்திற்கும் ஒரு பொதுமரபைப் பின்பற்றியமையைக் காணலாம். 'நூன்முக' அமைப் பில் இம்முறை பின்பற்றப்பட்டுள்ள தெனினும், அது முழுமை பெறவில்லை.

முகவுரை : சீவக சிந்தாமணிப் பதிப்பில் பதிப்பு தோறும் தனித் தனியே முகவுரை எழுதிய ஐயரவர்கள் ஏனைக் காப்பியப் பதிப்புக் களில் இம்முறையை மாற்றியுள்ளார். இவற்றில் முதற் பதிப்பின் முகவுரைகளையே சில மாற்றங்களுடன் அமைத்துள்ளார். இது ஒரு வகையில், ஒரு பெரிய குறையாகவே, பதிப்பு வரலாற்றை ஆராயும் ஆய்வாளர்களுக்கு அமைந்துவிட்டது. இங்குத் தேவையானவற்றைச் சேர்த்தும், குறிப்பிட்ட அந்த ஒரு பதிப்பிற்குத் தேவை இல்லை எனக் கருதியவற்றை நீக்கியும் மூன்று காப்பிய முகவுரைகளையும் அமைத் துள்ளார். அதே நேரத்தில், செய்திகளைத் தொகுத்துத் தருவதில் நான்கு காப்பிய முகவுரைகளிலும் ஒரு பதிப்பு வரையறை பின்பற்றப் பட்டுள்ளது. அவை வருமாறு: 1. தொடக்கப்பாடல் அமைத்தல், 2. ஆசிரியர்-நூல் பற்றிக் குறிப்பிடல், 3. நூலின் சிறப்புரைத்தல், 4. நூல் செய்தி பிற நூல்களில் இடம் பெறுவது எடுத்துக்காட்டுதல், 5. நூல் உணர்த்தும் செய்திகளைத் தொகுத்துரைத்தல், 6. கதைக்கு மூல நூல் இவையிவை என எடுத்துரைத்தல், 7. நூலின் கட்டமைப்பு கூறல், 8. உரைநூல் பற்றிக் குறிப்பிடல், 9. பதிப்புப் பணி பற் றிய செய்திகளைத் தொகுத்துக் காட்டுதல் முதலான. இச்செய்தி களைத் தரும் முறையில் காப்பியங்கள் தோறும் சிறிது மாறுபடினும், உள்ளடக்கம் மாறவில்லை.

சீவக சிந்தாமணி முதற்பதிப்பு முகவுரையில் தொடக்கப் பாடலை அமைக்காது ஐயர், இரண்டாம் பதிப்பில், ''ஆதியிற்... பொருட்டே''

என்ற பாடலையும், மு. ப. வில் ''ஓங்கலிடை வந்து......தமிழ்'' என்ற பாடலையும் அமைத்துள்ளார். சிலப்பதிகார முகவுரையில், 'சந்தனப் பொதியத்...பொருட்டே'' என்ற பாடலும், மணிமேகலை யில், அகவல், வெண்பா, கட்டுரை, என்ற மூன்று பாடல்களும் பெருங்கதையில், ''நரியைப்...அறியேன்'' என்ற திருவாசகப் பாட லும், 32-வரிகளைக் கொண்ட நிலை மண்டில ஆசிரியப்பா ஒன்றும் இடம்பெற்றுள்ளன. இவை கடவுள் வாழ்த்தாக—மங்கலத் தொடக்க மாக—தமிழ்த்தாய் வணக்கமாக அமைந்துள்ளன. இதே போன்று, சீவக சிந்தாமணி மூன்றாம் பதிப்பு முகவுரை இறுதியில், ''தூங்கும் பனுவல்...வல்லியே'' என்ற பாடலும் முடிப்புரையாக இடம்பெற் றுள்ளது. இம் முடிப்புரைப் பாடல், சிலப்பதிகாரம், பெருங்கதை முகவுரைகளில் இடம்பெறவில்லை.

நூலாசிரியர் பெயர் நான்கு காப்பிய முகவுரையிலும் சுட்டிக் காட்டப்பெற்று, அவரது நூலின் சிறப்பே விதந்து கூறப்படும். 'சைன முனிவர் தேவரால் இயற்றப்பட்ட சிந்தாமணி, பழைய இலக்கண, இலக்கிய உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப் படுவது; வான்மீகம் போன்றது; சீவகன் சரித்திரம் கூறுவது என அறிமுகம் செய்யும் ஐயர், அந்நூல் உணர்த்துவன இன்னின்ன என்று ஒரு நீண்ட பட்டியலைத் தந்துள்ளார். அரசன் அமைச்சனை ஆராய்ந்து தெளிதல்; பெண்வழிச்சேரல் துயரமே தரும்; பகை வெல்லக் காலம் இடம் அறிதல் வேண்டும்; பிறர் உயிர்க்குத் தீமை வரின் உதவுதல் வேண்டும்; ஆசிரியர் சொற்படி ஒழுகல், பெற்றோர் சொற்கோடல் முதலான, அவற்றுட்சில.[1]

சேர முனியாகிய இளங்கோ வடிகள் யாத்த சிலப்பதிகாரம், சொற்சுவை, பொருட்சுவையுடையது; இனிய நன்னடை மிக்கது; கண்ணகி சரித்திரம் கூறுவது; மூவேந்தர் நகர்ப் பெருமையுணர்த்து வது; ஒழுக்கம் இயம்புவது; மூன்று உண்மைகளை உணர்த்துவது; 'இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள்,' 'நாடகக் காப்பியம்,' 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று சிறப் பிக்கப் பெறுவது; இசை நாடக பரத இலக்கணம், அவிநய வகை, நகர-கோயில் அமைப்பு, ஐந்திணை, சாதியாரின் தொழில், நீதி, சமயக் கோட்பாடு, அரச—ஆசிரிய பக்தி முதலான இயம்புவது'[2] என்பர்.

மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனாரின் மணிமேகலைக் காப்பியம், தன்மை நவிற்சி அணி, பாவிக அணி நிறைந்தது;

1. சீவ. சிந்: பக்: 5-6.
2. சிலப்: பக்: 7-8

தொல்காப்பியர் கூறும் வனப்புள் 'இயைபு' வனப்பில் அடங்குவது; மலை, கடல், நாடு, நகர், வனம், ஆறு, தீவு, தோட்டம் முதலான வற்றின் வருணனை நிறைந்தது; ஒருவன் மனமொழி மெய்களில் தூயனாகி, எல்லா உயிர்களிடத்தும் எப்பொழுதும் அருளுடையனா தல் வேண்டும் என்பதே நூலுணர்த்தும் பொருள்; மணிமேகலை என்பவளுடைய சரித்திரம் கூறலின் இஃது இப்பெயர் பெற்றது.[1] என மேகலை அறிமுகம் அமையும்.

பெருங்கதை நூலாசிரியர் கொங்குவேளிர், 'கொங்கவேளிர்; 'கொங்குவேள்' எனப்படுவர்; நூல் மாக்கதை, கதை, உதயணன் கதை, கொங்குவேள் மாக்கதை எனப்படும்; இதன் சமயம் சைனம்; இறைவழிபாடு, கல்வியின் பெருமை, நட்பின் சிறப்பு, குடிகளின் கடமை, முதலான வற்றின் சிறப்புணர்த்துவது இந்நூல் என அறிமுகம் செய்வர்.[2]

நூல் செய்தி பிற நூல்களிலும் உரை நூல்களிலும் எடுத்தாளப் படுவதைச் சிந்தாமணியின் முதற் பதிப்பு முகவுரையில் ஒரே வரியில் சுட்டிச் சென்ற ஐயரவர்கள், மூன்றாம் பதிப்பின் முகவுரையில், அடியார்க்கு நல்லார், பிரயோக விவேக நூலுடையார், கம்பர் முதலியோர் இந்நூலை எடுத்தாண்டுள்ளதைக் குறிப்பர்.[3] சிலப்பதி காரச் செய்தி, தணிகை யுலா, குலோத்துங்க சோழன் உலா, பட்டினத்துப் பிள்ளையார் புராணம், திருவிளையாடற் புராணம் முதலானவற்றில் இடம்பெற்றுள்ளதை'எடுத்துரைப்பர்.[4] மேகலையை, வெங்கைக் கோவை, அம்பிகாபதிக் கோவை, திருத்தணிகையுலா முதலான சிறப்பித்துரைத்தலைக் குறிப்பார்.[5] பெருங்கதைச் செய்தி வடமொழி மேக சந்தேசத்திலும், மேகலையில் சாத்தனா ராலும், திருமங்கையாழ்வாராலும் குறிப்பிடப்படுவதை எடுத்துக் காட்டுவர்.[6]

சிலப்பதிகாரத்தை மேற்கோள் காட்டிய உரையாசிரியர்களாக, நச்சினார்க்கினியர், இளம்பூரணர் ஆகிய இருவரே குறிக்கப் பெறுவர்.[7] மணிமேகலையை மேற்கோள் காட்டிய உரையாசிரியர்

1. மணி: பக்: 10-12.
2. பெருங்: பக்: 25-27.
3. சீவ. சிந்: பக்: 5,14.
4. சிலப்: பக்: 8.
5. மணி: பக்: 10.
6. பெருங்: பக்: 34.
7. சிலப்: பக். 7, 9

களாக, சமய திவாகர வாமன முனிவர், திருவொற்றியூர் ஞானப் பிரகாசர், இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், இலக்கண விளக்க உரையாசிரியர், இலக்கணக் கொத்து உரையாசிரியர், மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர் முதலானோரை ஐயர் குறிப்பிடுவர்.[1] ஆயின் பெருங் கதை, சீவக சிந்தாமணிக் காப்பியங்களை மேற்கோள் காட்டிய உரையாசிரியர் பலரைச் சுட்டுவர். பெருங் கதையை மேற்கோள் காட்டிய மயிலை நாதர், அடியார்க்கு நல்லார், வீர சோழிய உரையா சிரியர், தக்கயாகப் பரணி உரையாசிரியர் பற்றியும், இவர்களால் எடுத்தாளப்பட்ட மேற்கோள் பகுதி 19-ஐயும் தொகுத்துத் தருவர். இவர்களன்றியும், பேராசிரியர், நச்சினார்க்கினியர், நேமிநாத உரையாசிரியர், யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர், இலக்கண விளக்க உரையாசிரியர் ஆகியோர் பெருங் கதையை மேற்கோள் காட்டியதையும் குறிப்பிடுவர்.[2] இச் செய்தி, சீவக சிந்தாமணியில், 'நூலைப் பற்றிய சில குறிப்புக்களில் அமையும். இங்கு மேற்கோளாக எடுத்தாளப்பட்ட சிந்தாமணிச் செய்யுட் பகுதி தொகுத்துத் தரப் பட்டுள்ளதோடு, அடியார்க்கு நல்லார் முதல், யாப்பருங்கல விருத்தி யுரையாசிரியர் ஈறாக 22-உரையாசிரியர்களின் பெயர்களும் குறிக்கப் பட்டுள்ளன.[3]

'மூல நூல்' பற்றிய சிந்தனை சிந்தாமணி, பெருங்கதைப் பதிப்புக்களின் முகவுரையில் இடம் பெறும். வட மொழியில், க்ஷத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, ஜீவந்தர நாடகம், ஜீவந்தர சம்பு, ஸ்ரீ புராணத்தின் ஒரு பாகம், தமிழில் சிந்தாமணி மாலை முதலான சீவகன் சரித்திரம் பற்றிப் பேசுவதை எடுத்துக் காட்டுவர்.[4] பெருங் கதையின் மூல நூல், வட மொழியில் துர்வி நீதன் இயற்றிய 'பிருகத் கதா'வே என முகவுரையில் சுட்டிக் காட்டினும், இதன் விளக்கமும், பெருங்கதை தொடர்பான நூல் பற்றிய விவரமும், 'நூலைப் பற்றிய சில குறிப்புக்கள்' பகுதியில்தான் விரித்துரைக்கப் பெற்றுள்ளன. குணாட்டியர் நூல் சைவ சமயச்சார்புடைய தாகலின் கதைக்கு, அந் நூல் மூலம் அன்று; கி. பி. 5, 6-ஆம் நூற்றாண்டில் துர்விநீதன் செய்த நூலே இதற்கு மூலம் என, இப்பகுதியில் விளக்குவர். அதோடு, பிருகத் கதா சுலோக சங்கிரகம், பிருகத் கதா மஞ்சரி, பிருகத் கதா சரித்திரம், உதிதோதய காவியம், ரத்னாவளி, பிரிய தர்சிகா, சொப்பன வாசவ தத்தம், பிரதிஞ்ஞா யௌகந்தராயணம்,

1. மணி: பக். 12—13
2. பெருங்: பக்: 30, 32—34
3. சீவ. சிந்: பக். 21—24
4. ,, பக். 6

வாசவ தத்தா, மிருச்ச கடிகை, கற்புர மஞ்சரி, காதம்பரி, உதயண கதா, உதயண சரித்திரம் முதலான வடமொழி நூல்கள் பெருங்கதையோடு தொடர்புடையன என்றும், இவற்றில் 'உதிதோதய காவிய'மே மிகுதியும் பெருங் கதையோடு ஒப்புமையுடையது என்றும் குறிப்பிட்டுள்ளார். தமிழில் பெருங் கதையின் சுருக்கமாக வந்துள்ள உதயண குமார காவியத்தையும் சுட்டுவர். சிலப்பதிகாரம், மணிமேகலைக் கதை பற்றிக் குறிக்கும் ஐயரவர்கள், நூல் எழுந்த காலமும், கதை நிகழ்ந்த காலமும் ஒன்றாதலின், இதன் கதை வேறு மொழியிலிருந்து வந்ததில்லை எனத் தெளிவு படுத்தியுள்ளார்.[1]

உரையாசிரியர் பற்றிய அறிமுகமும் முகவுரையில் அமையும். சிந்தாமணி உரையாசிரியர், உச்சிமேற் புலவர் நச்சினார்க்கினியர் என்றும், அவர் உரை மூலம், சிந்தாமணிக்கு, வேறு ஒரு உரை இருந்திருக்க வேண்டும் என்பதையும் ஐயரவர்கள் குறிப்பிடுவார். அதோடு, நச்சினார்க்கினியர் உரைவழித் தேவர் பாடிய சிந்தாமணிப் பாடல்கள் 2700- என்றும், எஞ்சியவை கந்தியாரால் பாடப்பெற்றவை என்றும் கணிப்பர். சிலப்பதிகார உரையாசிரியர் அரும்பதவுரையாசிரியர், அடியார்க்கு நல்லார் பற்றிக் குறித்த ஐயரவர்கள், அரும்பதவுரையாசிரியர், அடியார்க்கு நல்லார்க்கு முற்பட்டவர் என்றும், அவருக்கு முந்திய ஓர் உரையாசிரியர் இருந்திருக்க வேண்டும் என்றும் கருதுவர்.[2] அடியார்க்கு நல்லார் 'நிரம்பையர் காவலர்' என அழைக்கப் பெற்றதையும் சுட்டுவர்.

நூலின் புறநிலைக் கட்டமைப்பு ஒவ்வொரு காப்பியத்தும் எவ்வாறு அமைந்துள்ளது என்பது குறித்தும் டாக்டர் ஐயரவர்கள் விளக்கம் தந்துள்ளார். சீவக சிந்தாமணி கடவுள் வாழ்த்து, பதிகம் முதலான கொண்டு, நாமகள் இலம்பகம் முதல் முத்தி இலம்பகம் ஈறாக, 13-இலம்பகங்களையும், 3145-பாடல்களையும் கொண்டுள்ளதைக் குறிப்பிடுவர்.[3] சிலப்பதிகாரம் பதிகம் முதல் நாடு காண் காதை வரை புகார்க் காண்டம்; காடுகாண் காதை தொடங்கி 13-காதைகள் மதுரைக் காண்டம்; எஞ்சியன வஞ்சிக் காண்டம் என்று, நூலமைப்பு சுட்டிய ஐயரவர்கள், இதில், வெண்பா, அகவல், கலிப்பா, ஆற்றுவரி, ஊசல் வரி, கானல் வரி, உரைப் பாட்டு முதலான இயல், இசை, நாடகப் பாட்டுக்கள் அமைந்துள்ளன என்பர்.[4] மணிமேகலைக் காப்பியம் முப்பது காதைகளுடையது என்றும் குறித்தார். பெருங்கதை,

1. பெருங்: பக். 27—28, 44—46.
2. சிலப்: பக். 8, & மணி பக். 13
3. சீவ. சிந்: பக். 6
4. சிலப்: பக். 10—11

நிலை மண்டில ஆசிரியப் பாவால் அமைந்தது; இயைபு வனப் புடையது; சொல்லும் பொருளும் தொடர்ந்த தொடர்நிலையாக அமைவது; இதன் சிற்றுறுப்பு காதை (முகவெழுத்துக் காதை) என் பதே. காண்டங்கள் ஐந்து. உஞ்சைக் காண்டம் 58-காதைகள்; இலாவண காண்டம் -20 காதைகள்; மகதக் காண்டம்-27 காதைகள்; வத்தவக் காண்டம் 17-காதைகள்; நரவாண காண்டம் 9-காதைகள் இவற்றில் கிடைத்துள்ளவை மொத்தம் 99-காதைகள் என எண்ணிச் சொல்வர். நூல் அமைப்பை நோக்கத் துறவுக் காண்டம் என ஒரு காண்டம் இருந்திருக்க வேண்டும் என்பர்.[1]

பதிப்புக் குறிப்பு: ஒவ்வொரு காப்பியத்தையும் பதிப்பிக்க ஐயரவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி, பட்ட இன்னல்க்ள், பல்வேறு வகையில் உதவி செய்தோர், பதிப்பிற்குக் கிடைத்த ஏட்டுப் பிரதி களின் விவரம், அவையடக்கம் முதலான குறிப்பர். சிந்தாமணி முதற் பதிப்பின் முகவுரையில், பதிப்பிக்கத் தூண்டுகோலாக அமைந்த சேலம் இராமசாமி முதலியார், உற்றதுணையாக இருந்து உதவிய ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர், மற்றும் நூல் படி எடுக்க, ஆராய, அச்சுப் பிரதி திருத்தத் துணை நின்றோர் முதலானோரைக் குறிப்பிட்டு நன்றியும் தெரிவிப்பர். இதன் இரண்டாம் பதிப்பின் முகவுரையில், அப்பதிப்பிற்குதவிய, பா. ஐ.சின்னசாமி பிள்ளை, வெ.ப. சுப்பிரமணிய முதலியார், ம.வி. இராமானுஜாசாரியர், இ. வை. அனந்த ராமையர், அப்பாசாமி நயினார் முதலானோருக்கு நன்றி தெரிவிப்பர். இதே போன்று சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதைக் காப்பியப் பதிப்புக்கள் வெளிவரத் தோன்றாத் துணையாக நின்றுதவிய பெரு மக்களுக்குத் தன் இதய அஞ்சலி செலுத்துவர்.[2]

நூற்பதிப்பில் ஐயர் அடைந்த இன்னல்கள் பல. அவற்றையும் ஒவ்வொரு காப்பியப் பதிப்பின் முகவுரையிலும், ஐயரவர்கள் குறிக்கத் தவறினாரில்லை. 'எழுத்தும் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும், திரிந்தும், கிலமுற்றிருந்த இந்நூலுரைப் பழைய பிரதிகள் பலவற்றையும் பலகால் ஒப்பு நோக்கிச் சுத்த வடிவைக் கண்டு பிடிக்க, பொழிப்புரை எது விசேடவுரை எது என வேறு பிரித்தறிய, மூல பாடத்தைப் பிரித்துக் காண, பிழை நீக்க எடுத்துக் கொண்ட முயற்சி, அடைந்த வருத்தம் பல' எனச் சிந்தாமணிப் பதிப்பு முகவுரையில் சுட்டுவர்.[3] சிலப்பதிகாரப் பதிப்பு முகவுரையில், அடியார்க்கு நல்லார் உரை கிடைக்காத பகுதிகளை எப்படியாவது தேடிக் கண்டுபிடிக்க

1. பெருங், பக்: 32.
2. இந்நூலின் முதலில் இடம்பெறும் 'பதிப்புப்பணி' கட்டுரை பார்க்க
3. சீவ. சிந்: பக்: 7

கிட்டத் தட்ட ஐம்பது ஊர்களுக்குமேல் அலைந்து திரிந்தது பற்றிக் குறித்துத்துள்ளார்.[1] மணி மேகலைக்காகத் தனியாக ஐயரவர்கள் ஏடுதேடும் பயணம் மேற் கொள்ளவில்லையாகினும் சென்னை, தஞ்சை கையெழுத்துப் பிரதி நூலகங்களில் தேடியதையும், யாழ்ப்பாணம் கைலாசப் பிள்ளை 'பாரீஸ் சூலியன் வின்சன் முதலானோருக்கு எழுதியது குறித்தும் முகவுரையில் குறிப்பிட்டார்.[2] பெருங்கதை பற்றித்தான் எழுதி வைத்திருந்த குறிப்புக்களை ம.வி. கனகசபை பிள்ளையவர்களுக்குக் கொடுத்து விட்டுப் பின்பு அதனைப் பெற முடியாது உற்றதுன்பத்தை அந்நூற் பதிப்பு முகவுரையில் குறித்தார்.[3]

ஒவ்வொரு காப்பியத்தின் மறுபதிப்புக்களை வெளியிட்டபோதும், அப்பதிப்பில் செய்துள்ள மாற்றங்கள், கிடைத்துள்ள புதிய பாடல் கள், மூலம் திருத்தம் அடைந்தமை முதலான பற்றியும் முகவுரை யில் சுட்டிக் காட்டினார். இங்கு, 'அபிதான விளக்கம் முதலான' அரும்பதவுரையில் அடக்கப் பட்டது முதலான புறநிலை மாற்றங் களை மட்டும் சுட்டிக் காட்டியுள்ளாரே தவிர, எவ்விடத்து மூலம் மாற்றம் அடைந்துள்ளது, எங்கெங்கே, புதிய செய்திகள் சேர்க்கப் பட்டன என்ற குறிப்புத் தரப்படவில்லை. காரணம் இவை சுட்டிக் காட்டும் அளவை விஞ்சி, மிக அதிகமாக அமைந்ததால் பொதுப் படச் சுட்டி அமைந்தார். அதோடு ஒவ்வொரு நூலும் மறுமுறை வெளியிடப் பட்டபோது, அதன் முற்பதிப்புக்கள் வெளிவந்த ஆண்டு சுட்டப் பெற்றன.

இனி, ஒவ்வொரு காப்பியப் பதிப்பிற்கும் தனக்குக் கிடைத்த ஏட்டுப்பிரதிகளில் விவரத்தைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். சீவக சிந்தாமணி முதற்பதிப்பிற்கு 19 - உரைப் பிரதிகளும், நான்கு மூலப் பிரதிகளும், அதன் இரண்டாம் பதிப்பிற்கு மேலும் 17- பிரதிகளும் கிடைத்தன எனக் குறிப்பிட்டுள்ளார்.[4] சிலப்பதிகார முதற் பதிப்பிற்கு 14 - உரைப் பிரதிகளும், 8 - மூலப் பிரதிகளும் கிடைத்துள்ளன. இவற்றில் அரும்பதவுரை அடங்கிய பிரதி தேரழுந்தூர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் கொடுத்த ஒரே ஒரு பிரதியே என்பர்.[5] மணிமேகலை முதற்பதிப்பிற்குப் பத்து ஏடுகளும், இரண்டாம் பதிப்பிற்கு இரு ஏடுகளும் ஐயரவர்கள்

1. சிலப், பக்: 11
2. மணி: பக்: 14
3. பெருங்: பக்: 40
4. சீவ.சிந்: பக்: 8, 11-12
5. சிலப்: பக்: 13-14

பெற்றுள்ளார்.[1] பெருங்கதைப் பிரதி இரண்டு மட்டுமே தனக்குக் கிடைத்ததாக ஐயரவர்கள் குறிப்பிடுவர்.[2]

இவையன்றி, சீவக சிந்தாமணிப் பதிப்பு முகவுரையில், தான் மேற்கொண்ட பதிப்புக் கொள்கை — பிரதியில் உள்ளவாறு பதிப் பித்த — பற்றிப் பேசுவார்.[3] ஐயரவர்கள் முதன் முதல் குறிப்புரை எழுதிய நூல் மணிமேகலையாகலின் அது குறித்த செய்தியை அந்நூல் முகவுரையில் குறிப்பிடுவர்.[4] இங்ஙனம் டாக்டர் சாமிநாத ஐயரவர்கள், தாம் பதிப்பித்த காப்பியங்களுக்கு எழுதிய முக வுரைகள் அருங்கருத்துக் கருவூலமாகத் திகழ்கின்றன எனலாம்.

நூலாசிரியர் வரலாறு :

நூலாசிரியர் வரலாற்றில், அவர்தம் பெயர், ஊர், குலம், சமயம், காலம் முதலானவற்றை ஆராய முற்பட்டுள்ளார். நச்சி னார்க்கினியர் உரைவழித் திருத்தக்க தேவர், சோழர் குலத்தைச் சார்ந்தவர் எனக் கருதினார். இவருக்கு, திருத்தகு முனிவர், திருத்தகுமாமுனிவர், திருத்தக்க மகாமுனிவர் என்ற பெயர்களும் வழங்கின. நூலாசிரியர் சைனத் துறவி - முனிவர் என்பதற்கு ஏற்ப, அவரது துறவு வாழ்க்கை பற்றியும், அன்னார் சீவக சிந்தாமணிக் காப்பியம் எழுத ஏற்பட்ட சூழ்நிலை பற்றியும் கர்ண பரம்பரைக் கதையொன்று வழங்கலாயிற்று. இக்கதையின் கருத்து இதுவே:

தேவர் சங்கப் புலவர்களைக் காணச் செல்ல, அவருள் ஒருவர், 'சைனருக்கு இன்பத்தைப் பாடவராது' என்றார். கேட்ட தேவர், தன்னால் பாட இயலும் என வஞ்சினம் கூறித்தம் ஆசிரியரிடம் நடந்தது கூறினார். அவ்வமையம் நரியொன்று பாய, அதுபற்றிப் பாட ஆசிரியர் பணிப்பத் தேவர் 'நரிவிருத்தம்' பாடினார். தம் மாணவரின் புலமையை இவ்வழிச் சோதித்துத் தெளிந்த ஆசிரியர் வாழ்த்துப் பா பாடியளித்துக் காப்பியம் புனையச் செய்தார். தேவர் நூலை முழுதும் இன்பியலாக - மண நூலாக அமைத்தார். பின் நூல் அரங்கேற்றத்தின் போது, 'துறவிக்கு எவ்வாறு இன் பத்தைப் பாட வந்தது' எனச் சிலர் தேவரது துறவு வாழ்க்கையை ஐயுறத் தேவர் எரிவளர்த்து அதில் புகுந்து மீண்டும் தன் துற வின் தூய்மையை நிறுவினார்.[5] இக்கதைக்கு மூலகாரணமாக

1. மணி: பக்: 17-18
2. பெருங்: பக்: 37
3. சீவ. சிந்: பக்: 7
4. மணி: பக்: 16
5. சீவ. சிந்: பக்: 17-19.

அமைவது, நூலினது இன்பியற் பொருண்மையே. பொது நிலையில், தமிழகத்தில் சைவ சமயிகள், 'சமணர்கள் இன்பத்தை எதிர்ப்பவர், பெண்ணை வெறுப்பவர்' எனப் பிரச்சார நோக்கில் கட்டிவிட்ட கதையே, தேவர் பற்றிய இக்கதை எழ வழிவகுத்தது.

இது போன்ற ஒரு கதை, சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் வரலாற்றிலும் உண்டு. சேரன் அரண்மனையில், நிமித்திகன் ஒருவன், 'அரசாள் திறம் இளங்கோவிற்கே உண்டு' எனக் கூறச் செங்குட்டுவன் அடைந்த நிலை அறிந்து அடிகள் துறந்தார்; பின் சொற் கோயில் சமைத்து 'அந்தமில் அரசுஆள் வேந்து ஆயினார்' என்ற கதை ஏனோ ஐயரவர்களால் காட்டப் பெறவில்லை. மணிமேகலை ஆசிரியர் வரலாற்றில், திருவள்ளுவ மாலையை ஆதாரமாகக் கொண்டு "சீழ்த்தலைச் சாத்தனார்' என்ற கதையை உருவாக்கியுள்ளார்.[1] என்ன காரணம் பற்றியோ கொங்குவேளிர் பற்றி இது போன்ற கதை உருவாகவில்லை.

இளங்கோ சேரலாதன் மகன்; செங்குட்டுவன் தம்பி; இவர் தம் காப்பியக் கதையை அறிந்தோர் வாய்க் கேட்டும், நேரில் கண்டும் நூல் யாத்தார். பத்தினித் துதித்தலையும், தருமங்களை உலகத்திற்குச் சொல்லவும் அடிகள் நூல் இயற்றினார்; மூவேந்தர் சிறப்பை ஒருங்கு பேசிய மனத் தூய்மையர்; மலைநாட்டினர் ஆகலின் அந்நாட்டு வழக்குச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். செங்குட்டுவன் சைவனாகலின் அவன் இளவல் இளங்கோவும் சைவ சமயத்தினர்; சைனம் என்று ஐயுறுதற்கும் இடம் உண்டு; பதிகத்தில் சாத்தனார் பற்றிய செய்தி வருதலானும், பத்தினி விழாவில், இலங்கை 'மகாவம்சம்' கூறும் கயவாகு மன்னன் கலந்துகொண்ட செய்தியும், இளங்கோ காலம் 1800 ஆண்டுகட்கு முற்பட்டதென்பதை நிலைநாட்டும்'[2]-என இளங்கோவடிகளின் வரலாற்றை டாக்டர் ஐயரவர்கள் தெளிவுபடுத்துவர்.

'மணிமேகலை ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், 'சீத்தலை' என்ற ஊரினர்; வணிக மரபினர்; கூல வியாபாரம்; இவரே குட்டுவனுக்குக் கண்ணகி கதையைக் கூறியவர்; இவர் இயற்றிய வேறு சில பாடல்கள் சங்கத் தொகையுள் இடம் பெற்றுள்ளன; இவருக்குக் கூல வாணிகன் சாத்தனார், மதுரைச் சீத்தலைச் சாத்தனார், சாத்தனார், தண்டமிழ்ச் சாத்தன், நன்னூற் புலவன், தண்டமிழ் ஆசான் சாத்தன் என்ற பெயர்களும் வழக்கில் உள்ளன. இவர் குட்டுவன், இளங்கோ, மருத்துவன் தாமோதரனார் ஆகியோருடன்

1. மணி: பக்: 20-21
2. சிலப்: பக்: 16-18

நட்புப் பூண்டிருந்தார்; குறளில் ஈடுபாடு கொண்டவர். 'வினை விளை காலம் பற்றிச் சிலப்பதிகாரப் பதிகத்தில் கூறியதாலும், மணிமேகலையில் பலவிடங்களில் வினைப் பயன் பற்றிப் பேசுவதாலும், 'வினைப் பயனே அனைத்திற்கும் காரணம்' என்ற கொள்கையுடையவர்; நகர வருணனை, சிறுபொழுது வருணனை, உவவன வருணனை, உருவகம், பின்வரு நிலையணி, சிலேடை, வெளிப்படை நிலையணி ஆகியன அமைத்தல் சாத்தனாரின் தனிச் சிறப்புக்களாகும்; அதோடு சிற்ப ஓவியச் செய்திகளைக் கூறல், கண்ணாடியின் இயல்புரைத்தல், காதைகளின் வரலாற்றைக் கூற்று முறையில் அமைத்தல், சமயச் செய்திகளை நயம்பட எளிய நடையில் வழங்குதல், உலக வழக்குச் சுட்டல், மாதவர்க்குத் தீங்கு செயின் துன்பம் விளையும் என வலியுறுத்தல் முதலானவும் சாத்தனாரின் இலக்கியச் சிறப்பிற்குச் சான்றாகும்''[1] என ஐயரவர்கள் சாத்தனாரின் வரலாற்றைத் தருவர்.

கொங்கு வேளிர், கொங்கு நாட்டு வேளாள மரபில் உதித்த சிற்றரசர்; ஊர் விஜயமங்கலம் (கொங்கு மண்டல சதகம்). இவர் பெருங்கதை பாட மூன்று பிறவிகள் எடுத்தார்; இம்முப் பிறவிகளாவன: இல்லறம், வானப் பிரத்தம், துறவு என்பன. குணாட்டியர், துர்விநீதன், கொங்குவேளிர் மூவரும் ஒருவரே என்ற கருத்தும் நிலவி வருகின்றது. அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டும் நூல்களில் சீவக சிந்தாமணிக்கு முன்னர்ப் பெருங்கதை இடம் பெறுதலின், இவர் தேவருக்கு முற்பட்டவர். இவர் சமண சமயத்தவர் என்பது, காதிகர்மம், அருவினை வீட்டிய அண்ணல் முதலான பல அருக சமயச் செய்திகளை நூலில் ஆங்காங்கே விளக்குவதால் அறியலாம். இவை பெருங்கதை ஆசிரியர் வரலாற்றில் ஐயரவர்கள் தரும் கருத்துத் தெளிவு. இங்ஙனம் நூன் முகத்து, நூலாசிரியர் வரலாற்றை ஓரளவு கணித்துக் கூற ஐயரவர்கள் முயன்றுள்ளார் என்பது போதரும்.

உரையாசிரியர் வரலாறு :

நூலாசிரியர் வரலாறன்றி, நூலுக்கு உரை எழுதிய பழைய உரையாசிரியர்களின் வரலாற்றையும் வாசகருக்கு அறிமுகம் செய்ய ஐயரவர்கள் முயன்றுள்ளார். சிந்தாமணி உரையாசிரியர் நச்சினார்க்கினியர் பற்றியும், சிலப்பதிகார உரையாசிரியர்களான அடியார்க்கு நல்லார் அரும்பதவுரையார் வரலாற்றுச் சுருக்கத்தையும் தனித்தனியே அவ்வப் பதிப்பில் குறித்துள்ளது இங்கு நோக்கத்தக்கது. இங்கு 1. உரையாசிரியர்களின் ஊர், பேர் முதலியன, 2. பெயர்க் காரணம், 3. உரை எழுதிய பிற நூல்கள், 4. உரை அமைப்பு, 5. உரை எழுதிய வரலாறு, 6. உரைச் சிறப்பு, 7. காலம், 8. சமயம், 9. பழைய

1. மணி: பக்: 20-25

செய்யுட்களை அல்லது அதன் கருத்தை உரைநடையில் எழுதிச் செல்லும் திறன், ஆகிய செய்திகளைத் தொகுத்தளித்துள்ளார்.

நச்சினார்க்கினியர் பாண்டி நாட்டில், மதுராபுரியைச் சார்ந்த, பிராமண குலத்தில், பாரத்துவாச கோத்திரத்தில் உதித்தவர். தமிழில் மிகுந்த புலமையுடையவர்; 'நச்சுவார்க்கினியர்', நச்சினார்க்கினியாய்' எனத் தேவாரம் முதலான சைவ இலக்கியங்களில், சிவபிரான் குறிக்கப் பெறுதலின், இப்பெயர் தாங்கிய இவர், சைவரே; இவர் பத்துப் பாட்டு, தொல்காப்பியம், கலித்தொகை, குறுந்தொகை, ஆகிய நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார்; இவரது உரை, 1. இன்றியமையாத இடங்களுக்குப் பதப் பொருளும் இலக்கணக் குறிப்பும் தருதல், 2. தாம் எடுத்தாண்ட மேற்கோள் நூல்களின் பெயரைச் சுட்டாமை, 3. கால உணர்வுடன், இன்ன காலத்து, இன்னது நிகழ்ந்தது எனப் பகுத்துரைத்தல், 4. உரை எழுதும் பகுதியின் தொடக்கம் அல்லது இறுதிச் சொற்களைத் தந்தும், சிலபோது தராமலும் உரை வகுத்தல், 5. நூலாசிரியர் சமயம் கொள்கை முதலானவற்றை அறிந்து எழுதுதல் என்ற அமைப்பைப் பெற்றுள்ளது. உரை எழுதும் திறத்தில் இவர், வடமொழி மல்லிநாத சூரி போன்றவர். இவர் உரை மூல நூலின் பொருளைச் சிறக்கச் செய்யும் இடங்கள் பல எனக் கூறி 140 இடங்களைத் தொகுத்துத் தந்துள்ளார் டாக்டர் ஐயரவர்கள்.

நூலாசிரியரைப் பற்றிய கர்ண பரம்பரைக் கதை பழைய உரையாசிரியர்களையும் விடவில்லை என்பதை, ஐயரவர்கள் தந்துள்ள, 'நச்சினார்க்கினியர் உரை எழுதிய வரலாறு' பற்றிய கதை உணர்த்தும். அக்கதையாவது; நச்சினார்க்கினியர் முதலில் ஓர் உரை எழுத, அது சைன சம்பிரதாயங்களை உணர்ந்து எழுதப் படவில்லை எனச் சைனர்கள் அங்கீகரிக்காது போக, பின் அவர் தன்னை ஒரு சமணனாகக் கூறிக் கொண்டு சமண சமயக் கொள்கைகளைக் கற்றுத் தேர்ந்து, விசேட உரையுடன் கூடிய பிறிதொரு உரை எழுதினார்' என்பது. இவ் வரலாறு சைனர்களிடம் நிலவி வந்ததாக ஐயரவர்கள் குறிப்பிடுவர். இதற்கு அடிப்படை சில ஏட்டுப் பிரதிகளில், இவரின் கருத்துரை மட்டும் இருக்க, வேறு சில பிரதிகளில் கருத்துரையும் விசேட உரையும் இருப்பதே. இதன் உண்மைக் காரணம் என்ன என்று நமக்கு விளங்கவில்லையாகினும், ஒருவாறு ஊகிக்கலாம். அக்காலத்தில் ஏடெழுதியோர் சிலர் சுருக்கம் கருதிக் கருத்துரையை மட்டும் எழுதி வைத்திருக்க, வேறு சிலர் முழுவதையும் எழுதி வைத்திருந்ததே எனலாம். இக் கருத்துரைகள் கூட நூலைப் படித்துப் புரிந்து கொள்வதற்குக் குறித்து வைத்த குறிப்புக்களே எனக்கருதலாம். பின் வந்தோருக்கு இவ்வேறுபாடு ஓர் ஐயத்தை எழுப்பியிருத்தல்

வேண்டும். இவை இரண்டும் இருவர் உரை என முதற்கண் ஐயுற்றுப் பின் ஒருவர் உரையே எனத் தெரிந்ததாக ஐயரவர்களே குறிப்பர். இவ்வைய உணர்வு காரணமாகவும், அதன் உண்மை நிலை அறியாது, விசேட உரையில் சமண சமயக் கருத்துக்கள் விளக்கப் பட்டிருத்தலையும் கண்டு, சில கற்பனைவாதிகள் மேற்குறித்த கதையைக் கட்டியிருக்க வேண்டும். அன்றியும், ஐயரவர்கள் குறிப் பிடுவது போல, நச்சினார்க்கினியர் சைவராக இருந்து, சமண சமய நூலுக்கு உரை எழுதத் தொடங்கியதன் விளைவும் இக் கதைக்குக் காரணமாகலாம். பதிப்புத் துறையில் நுழைந்த ஐயரவர்கள் சீவக சிந்தாமணியைப் பதிப்பித்ததால், அவர் கண்டனத்துக்குள்ளானதன் காரணங்களில் குறிப்பிடத்தக்க ஒன்று சமயமே. சைவ மடத்தின் ஆதரவு பெற்ற ஐயரவர்கள் சமணக் காப்பியத்தைப் பதிப்பித்ததால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. இத்தகைய ஒரு கண்டன அடிப்படையில் நச்சினார்க்கினியர் பற்றிய கதை எழுந்திருக்கவும் வாய்ப்புண்டு. எவ்வாறாயினும், வெறுவாய் மெல்லுபவனுக்கு அவல் கிடைத்தது போல, நமக்கு நச்சினார்க்கினியர் பற்றிக் காலங் காலமாகச் சொல்லி வருவதற்கு ஒரு கதை கிடைத் துள்ளதென ஆறுதல் அடையலாம்; அல்லது அதிருப்தியடையலாம்.

டாக்டர் ஐயரவர்கள் கூட இக் கதையில் உண்மை இருப்பதாக எண்ணி, அவரது தொல்காப்பிய—சீவக சிந்தாமணி உரைக் குறிப்புக் கள் சிலவற்றால், சிந்தாமணிக்கு முதலில் எழுதிய உரை தொல் காப்பியத்துக்கு உரை எழுதுவதற்கு முன் எழுதப்பட்டதென்றும், விசேட உரையுடன் கூடிய உரை, தொல்காப்பிய உரைக்குப் பின் எழுதப் பட்டதென்றும் கருதுவர்.[1] இது எந்த அளவு பொருந்தும் என்று தோன்றவில்லை. தொல்காப்பிய, சிந்தாமணி உரைக் குறிப்புக்கள்,இரு உரையும் ஒரே காலத்து எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணத்தையே தருவன.

நச்சினார்க்கினியர் உரையில், சேனாவரையர், பேராசிரியர், ஆளவந்த பிள்ளையாசிரியர், முதலானோர் உரை காட்டப் படுதலின், இவர்களது காலத்திற்குப் பிந்தியவர் என்பர் டாக்டர் ஐயர். அதோடு, நச்சினார்க்கினியர் பழைய நூல் செய்யுட்களை உரைநடையில் எழுதிய இடங்கள் பதினைந்தினைத் தொகுத்துத் தந்துள்ளார்.[2]

சிலப்பதிகார உரையாசிரியர் வரலாறு, நச்சினார்க்கினியர் வரலாறு போன்று அவ்வளவு விளக்கமாக இல்லை. நச்சினார்க்கினியர்

1. சீவ. சிந்: பக். 29—32.
2. அது, பக். 33

வரலாறு ஏழு பக்கங்களில் அமைய, சிலம்பு உரையாசிரியர் இருவர் தம் வரலாறும் மூன்றே பக்கங்களில் அமையும். நச்சினார்க்கினியர் மறுக்கும் சில கொள்கைகள் [காப்பியம்—பொருள்தொடர் நிலை] அடியார்க்கு நல்லார் கொள்கையாக இருத்தலின், இவர் காலத்தால் முந்தியவராதல் வேண்டும். இவர் உரை, 1. எடுத்துக் கொண்ட மேற்கோள் நூற் பெயர் சுட்டுதல், 2. அலங்காரம், மெய்ப்பாடு கூறல், 3. ஐந்திணை விளக்கத்திற்கு நூலிலிருந்தே சான்று காட்டுதல், 4. கணித, இசை நூற் செய்திகளைத் தொகுத்தளித்தல், 5. எதுகை, மோனை பட அமையும் நடை நயம், 6. திசைச் சொல் வழக்கு, பழமொழி முதலான சுட்டுதல் நிலையில் சிறப்பாக அமைந்துள்ளதை ஐயரவர்கள் எடுத்துரைப்பர். இவரது உரை நூல் முழுமைக்கும் இருந்திருக்க வேண்டும் எனவும் கருதியதோடு, அதற்கு அகச்சான்று கள் சிலவற்றையும் எடுத்துக் காட்டுவர். வருணம், சமயம், காலம் முதலான அறிய முடியவில்லை என்பர்[1].

அரும்பதவுரையாசிரியர், நல்லார் உரைக்கு ஆதாரமாக அமைந் தவர்; காலத்தால் முற்பட்டவர். பெயர் முதலியன அறிய முடிய வில்லை; அடியார்க்கு நல்லார் காட்டாத சில மேற்கோள்களை இவர் காட்டியுள்ளார். சில விடங்களில் இவர் கொண்ட பாடம், அடியார்க்கு நல்லார் கொண்ட பாடத்தினும் வேறுபட்டுள்ளது; நல்லார் உரை கிடைக்காத பகுதிகளை ஆராயத் தனக்கு ஆதார மாக அமைந்தது இவர் உரையே என அரும்பதவுரையின் சிறப்பினை டாக்டர் விளக்கியுள்ளார்.[2]

நூலைப்பற்றிய சில குறிப்புக்கள்:

சீவக சிந்தாமணி, பெருங்கதைக் காப்பியப் பதிப்புக்கு மட்டுமே இப்பகுதியைச் சேர்த்துள்ளார், டாக்டர் ஐயர். இங்கு நூலைப் பற்றிய சில வரலாற்றைச் சுட்டிக் காட்டுவார். 'சிந்தாமணியே கிடத்தியால்'[3] என வருதலின், இப்பெயர் தன்மையால் பெற்றது என்பர். இது 'மணநூல்' என்றும் வழங்கும். சமணர்களின் பாராயண நூலாகவும் இது விளங்கியது. எதுகை, மோனை வேறு பட்டு வந்துள்ள செய்யுட்களும் இந்நூலில் உண்டு.[4] இதற்குச் சிலவிடங்களில் நச்சினார்க்கினியர் எழுதிய உரைக் குறிப்பால்,[5] பிறி

1. சிலப்: பக்: 18-19,
2. அது, பக்: 18
3. சீவ. சிந்: பா 31.
4. அது, பா: 172
5. அது, பா: 260, 366, 1434, 1434, 1753, 1870, 1933, 2705

தொரு உரை உண்டு எனத் தெரிய வந்துள்ளது என்னும் செய்தி களை இப்பகுதியில் தந்துள்ளார் ஐயர்.

பெருங்கதையில், இப்பகுதி சற்று விளக்கமாக அமையும். இங்குக் குணாட்டியர் 'பிருகத்கதா' எழுதிய வரலாற்றையும், பெருங் கதை தொடர்பான வடமொழி நூல் பற்றிய பட்டியலையும், இவற் றில் கதைக்கு மூலமாக அமைந்த நூல் இது என்றும் சுட்டிச்செல்வர். பெருங்கதைக்கு மூலமான 'பிருகத்கதா' எழுதிய குணாட்டியர் வரலாறு வருமாறு :

சுப்பிரதிஷ்டா நகர் அரசன் சாதவாகனன், தன்னை, மனைவி 'அறிவிலி' எனப்பழிக்கச் சிறந்த கல்விமானாக அவாக் கொண் டான்; அதற்கு ஆறு ஆண்டுகள் ஆகும் என அமைச்சர் குணாட் டியர் மொழிய, 'சர்வ வர்மா' என்ற மற்றொரு அமைச்சன், ஆறு மாதத்தில், அனைத்துக் கலைகளிலும் பாண்டித்தியம் பெறச் செய் வேன் என்றான்; இரு அமைச்சர்களுக்கும் போட்டி ஏற்பட, அவ் வாறு ஆறுமாதத்தில் அரசனைப் பாண்டித்தியம் பெறவைத்தால், 'தான் மும்மொழிகளையும் துறந்து விடுவன்' என வஞ்சினம் கூறி னார். சவாலை ஏற்ற 'சர்வ வர்மா' ஆறே மாதத்தில் முருகன் அருளால் அரசனைப் பண்டிதனாக்கினான். குணாட்டியர், சமஸ் கிருதம், பிராகிருதம், தேச பாஷை துறந்து, விந்த மலைக் காடு களில் உறைந்து வருங்கால், அங்குப் பிசாசங்கள் பேசும் மொழியைக் கற்றார். பின் துர்க்காதேவி அருளால், அங்குச் சாபம் பெற்று நின்ற 'காணபூதி' காண, அவன் சாபம் நீங்கப் பெற்றான். அக் காண பூதி, ஏழு வித்தியாதரர் சரிதையைக் குணாட்டியருக்குக் கூற, அதனை அவர் 'பிருகத்கதா' என்ற பெயரில் காவியமாக இயற்றினார். அதனை உலகத்தில் பரப்ப, குணதேவர், நந்தி தேவர் மூலம், சாதவாகனனுக்குக் காட்ட, அவன் அகந்தையால் நிராகரித்தான்; வெறுப்புற்ற குணாட்டியார் அதனைக் கல்லும் புள் ளும் கரையும் வண்ணம் ஓதி ஓதி ஓமம் செய்தனர். துன்புற்ற சீடர் வேண்ட, இறுதியாக எஞ்சிய நரவாணதத்தன் வரலாற்றை மட்டும் கொடுத்தனர். செய்தி அறிந்து, தன் தவறுணர்ந்த சாத வாகனன், குணாட்டியரை வேண்ட, அவர் தம் சீடர் மூலம் அறிந்து, உலகத்தில் பரப்பச் செய்யப் பணித்துத் தவம் மேற்கொண்டு சமா தியானர்.[1]

நூலாசிரியர், உரையாசிரியர் பற்றி எழுந்த கர்ண பரம்பரைக் கதை போன்று குணாட்டியர் 'பிருகத்கதா' இயற்றிய கதையும்

1. பெருங்: பக்: 50-52.

அமைந்துள்ளது. இங்ஙனம் நூல் முகமாக அமையும் முகவுரை முதலானவற்றில் ஐயரவர்கள் தம்மால் இயன்ற அளவு, செய்திகளைத் தேடித் தொகுத்துத் தந்திருப்பது, பிற்கால ஆய்வாளர்களுக்குப் பெரும்பயன் அளித்துள்ளது என்பது மிகையன்று.

4. குறிப்புரை

பதிப்பாசிரியராகத் தமிழ் உலகில் அறிமுகமாகிப் புகழ் பெற்ற டாக்டர் சாமிநாத ஐயர், ஒரு சிறந்த உரையாசிரியராகவும் மலர்ந்துள்ளார். 1898-இல், முதன் முதலாக மணிமேகலைக் காப்பியத்தைக் குறிப்புரையுடன் பதிப்பித்துள்ளார். அதற்கு முன் பதிப்பித்த இரு காப்பியங்களுக்கும் பழைய உரை இருந்தமையால், ஐயரவர்கள் குறிப்புரை எழுதுவது பற்றிச் சிந்திக்க வில்லை. ஆயினும், சீவக சிந்தாமணிக்கு அவர் எழுதிய ‘விசேடக் குறிப்பு’ ஒரு வகையில் சிறந்த குறிப்புரையாக அமைந்து, அதன் பிற் பதிப்புக்களில் விரிவும் விளக்கமும் பெற்றுள்ளது.

நான்கு காப்பியப் பதிப்புக்களில் மூன்று சமண சமயத்தைச் சார்ந்தன; ஒன்று பௌத்த சமயம் சார்ந்தது. முதற்கண் பதிப்பித்த சீவக சிந்தாமணிக்கும், மூன்றாவது பதிப்பித்த மணிமேகலைக்கும், பதிப்பாசிரியர் எழுதிய குறிப்புரை போன்று, ஏனை இரண்டின் குறிப்புரை அவ்வளவு சிறப்பாக அமையவில்லை. ஐயர் பதிப்பித்த கடைசிக் காப்பியம் பெருங்கதையாயினும், அதற்குக் குறிப்புரை எழுத, சீவக சிந்தாமணி, மணிமேகலைக்கு எடுத்துக் கொண்ட முயற்சியை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இக்கால கட்டத்து ஐயரவர்கள் பதிப்புத் துறையில் பேரும் புகழும் அடைந்த நிலையில், அவருக்கிருந்த வேலை மிகுதி காரணமாக, பல ஆண்டுகள் வெளியிடப் படாமல் முடங்கிக் கிடந்த பெருங்கதையை, விரைவில் வெளியிட வேண்டும் என்ற அவசர உணர்வில், குறிப்புரை எழுதுவதில் மிகுந்த கவனம் செலுத்த முடிய வில்லையோ என்ற, எண்ணம் எழுகின்றது. அன்றியும், டாக்டர் ஐயர், தம் பெருங்கதைப் பதிப்பின் முகவுரையில் குறிப்பிடுவது போல—பல குறிப்புக்களுடன் எழுதி வைத்திருந்த பெருங்கதைக் கடிதப்பிரதியை ம.வி. கனக சபை பிள்ளை பெற்றுச் சென்று பின் அப்பிரதி ஐயரவர்களுக்குக் கிடைக்காமலே போய் விட்ட—அவல நிலையும் இதன் காரணமாக அமையலாம். எது எப்படியாகினும், ஐயரவர்களின், பரந்துபட்ட தமிழ் அறிவை, பிற துறை வன்மையைப் பெருங்கதைக் குறிப்புரையில் காணமுடிய வில்லை.

சிலப்பதிகாரக் குறிப்புரை, குறிப்புரையாக அமையாது, மிகுதியும் ஒப்புமை மேற்கோள் விளக்கமாக அமைந்துள்ளது. ஆங்காங்கு ஒரோ விடத்து, அருஞ்சொற் பொருள் விளக்கமும், இசை நூற் செய்திகளும், சமய-புராண-வரலாற்றுக் குறிப்புக்களும் இடம் பெற்றுள்ளன. ஆகலின், இங்குக் 'குறிப்புரை' பற்றிய ஆய்வுக்கு மிகுதியும் ஏனை மூன்று காப்பியங்களின் குறிப்புரைகளே அடிப்படையாக அமைந்துள்ளன. கிடைத்துள்ள சிலப்பதிகாரக் குறிப்புரைப் பகுதிகளும் ஆங்காங்கு இடம் பெறும். இதன் முதற் பதிப்பில், 'கானல் வரி'க்குச் சற்று விரிவாக எழுதிய குறிப்புரையின் பல பகுதிகளை ஏனோ பிற் பதிப்புக்களில் ஐயரவர்கள் நீக்கியுள்ளார். அரும்பதவுரையை மூலத்தின் அடியில் தந்ததால், அதற்கு மேலும் தனது குறிப்புரை மிகை (அரும்பதவுரை-ஐயரவர்கள் குறிப்புரை ஒப்புடைய பகுதிகள்) எனக் கருதி நீக்கியிருக்கலாம்.

குறிப்புரை அமைந்த நான்கு காப்பியங்களில் இரண்டிற்கு மட்டுமே பழைய உரை உண்டென்பது தெரிந்ததே. இவற்றில் சீவக சிந்தாமணிக்கு, நச்சினார்க்கினியர் எழுதிய உரைக்கு ஐயரவர்கள் 'உரை விளக்கம்' தந்துள்ளதுபோல், சிலப்பதிகாரத்திற்குத் தரவில்லை. ஐயரவர்களின் குறிப்புரை பல்வேறு பகுதிகளாக ஆராய இடம் தந்து நிற்கின்றது. அவை வருமாறு: 1. பதவுரை, 2. சொல் அமைப்பு, 3. கருத்துரை, 4. பிறர் உரையைப் பதவுரையாக அமைத்தல், 5. பிறர் உரை நூல் பார்க்க எனச் சுட்டுதல், 6. உரை விளக்கம் தருதல், 7. இலக்கணக் குறிப்புரைத்தல், 8. மேற்கோள் விளக்கம் தரல், 9. பொருள்கோள் முறை குறித்தல், 10. நூற் பகுதியை—பாத்திரக் கூற்றைக் குறிப்பிடல், 11. பின், முன் நோக்கி உரை வகுத்தல், 12. திணை, துறை விளக்கம், 13. மெய்ப்பாடு சுட்டுதல், 14. உவமை முதலான அணிநயம் குறித்தல், 15. சமயச் செய்திகளைத் தொகுத்தல், 16. புராணப் பொழிவுரைத்தல், 17. வரலாற்றுக்குறிப்புரைத்தல், 18. இசை, நாடக, நூல் கருத்துரைத்தல், 19. வடநூலார் வழக்கு தரல், 20. உலக வழக்கு முதலான எடுத்துரைத்தல், 21. பாத்திர உறவு விளக்குதல், 22. நாடு, நகர் முதலான இடவியல் விளக்கம் அமைத்தல், 23. பிற சிறப்புச் செய்திகளைக் குறித்தல், 24. பதிப்புக் குறிப்புக்களைத் தரல், 25. பாடபேதங்களைத் தொகுத்தல் எனப் பல்வேறு நிலைகளில் ஐயரவர்களின் குறிப்புரை அமைந்து ஆய்வாளர்களின் சிந்தனைக்கு விருந்தாகியுள்ளது.

1. பதவுரை :

மூல நூலில் வரும் அருஞ்சொல், தொடர் முதலானவற்றிற்குப் பொருள் தரும் நிலையில் அமைவதே பதவுரை. இதனை ஐயரவர்கள்

தம் மணிமேகலைப் பதிப்பின் முகவுரையில் குறிப்பிடுவர். இந்த எண்ணத்துடன் ஐயரவர்கள் பதவுரையை ஆராயப் புகும் நமக்கு; அரிய சொற்களுக்கு மட்டும்தான் பொருள் தந்துள்ளாரா? என்ற எண்ணம் எழுவது இயல்பே. பல இடங்களில் எளிதாகப் பொருள் விளங்கக் கூடி சொற்களுக்கும் கூடப் பொருள் விளக்கம் தந்துள் ளார். ஐயரவர்களின் பதவுரை அமைப்பை, 1. தமிழ்ச் சொல் அல்லது தமிழ்ப் படுத்தப்பட்ட சொற்களுக்கு வட சொற்பொருள் தரல், 2. வட சொற்களுக்குத் தமிழ்ச் சொல் அமைத்தல், 3. எளிய சொற்களுக்குப்பொருள் தரல், 4. அரிய சொற்களுக்குப் பொருள் கூறுதல், 5. ஒரு சொல்லின் பொருளை அச் சொல் வருமிடமெல்லாம் எழுதிச் செல்லுதல், 6. ஒரு சொல், தொடருக்கு ஒன்றிற்கு மேற்பட்ட பொருள் தரல், 7. பாட பேதங் கூறிப் பொருள் விளக்குதல், 8. பொருள் நயந்தோன்ற நயவுரை தருதல் என்ற வகையில் அடக்கலாம்.

தமிழ்ச் சொற்களுக்கு வட சொற் பொருள்:

பலி—பூசை—சிந்: 119
பிறைவடம்—சந்திரஹாரம்—சிந்: 171
சூழ்ச்சி—தந்திரம்—சிந்: 187
நயம்—நீதி—சிந்: 237.
கலம்—ஆபரணம்—சிந்: 237
ஐம்பதம் சோர்வில் பொருள்—பஞ்ச நமஸ்காரம்—சிந். 951, 933
கண்கூடு—பிரத்தியட்சம்—பெருங். 3:3:90
பொறி—எந்திரம்— ,, 1:36:60
பசுங்கதிர்—பால சூரியன்— ,, 1:35:237
பள்ளி—முனிவாச்சிரமம் ,, 1:36:240
உருவிலாளன்—அநங்கன்—மணி: 5:6
பிச்சைக்கு—பிக்ஷைக்கு—மணி: பதி: 62
முற்றவுணர்ந்த முதல்வன்—சர்வக்ஞர்—மணி: 5:101
ஊழி முதல்வன்—மஹா ப்ரஹ்மா—மணி: 6:172
தலைப்படு தானம்—உத்தம தானம்—சிலப்: 2:3

இங்ஙனம் பல அமையும்; இவற்றில் பலவற்றிற்கு வடமொழிப் பொருள் தேவை தானா? என்றும், இவை வலிந்து ஐயரவர்களால் புகுத்தப் பட்டுள்ளன என்றும் எண்ணத் தோன்றும். ஆயின், இங்கு ஐயரவர்கள் வாழ்ந்த காலச் சூழல், அவர் பழகிய வட்டம் முதலான இவற்றிற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. ஐயரவர்களின் மொழி நடை ஆய்விற்கு இவை போன்ற குறிப்புக்கள் பயன்படும்.

வட சொற்களுக்குத் தமிழில் பொருள்

பவ்ய ஜீவன்—முக்தியில் விருப்பமுள்ள ஆன்மா—சிந்: 374
ஆசாரவாசி—வாயில் காப்போன்—சிந்: 430
அவைப் பரிசாரம்—அவையை வணங்குதல்—சிந்: 647
அருத்தம்—பொருள், பெருங்: 3:17:200
பரிசாரம்—வழிபாடு ,, 3:17:198
நித்திலத்தாமம்—முத்து மாலை—மணி: 19:112

வடசொற்களுக்குத் தமிழில் பொருள் விளக்கம் தரும் நிலை மிகக் குறைவே. காரணம் மூல நூல், உரைநூல்களில் வட சொல் ஆட்சி குறைவு என்பதே எனலாம். சீவக சிந்தாமணியில் வந்துள்ள வட சொற்களை விட அதற்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரையில் மிகுதியான வடசொற்கள் பயின்று வந்துள்ளன. இவ்வடசொற்களுக்கே ஐயரவர்களின் தமிழ் விளக்கம் மிகுதியும் அமைந்துள்ளன.

எளிய சொற்களுக்குப் பொருள்தரல் :

ஆக்கிய—ஆக்கப்பட்ட சிந்: 934
திரை—அலை ,, 1169
வேட்கை—ஆசை ,, 1389
அவலம்—வருத்தம் ,, ,,
கனிந்து—பழுத்து ,, ,,

இங்ஙனம் பல அமையும். இங்கு இலக்கியச் சொற்களுக்கு வழக்குச் சொற்களைத் தந்துள்ளார் என்று ஆறுதல் அடைந்தாலும், இதுபோல உரை அமைத்தலைத் தவிர்த்திருக்கலாம் என்றே எண்ணத் தோன்று கிறது.

சொற்பொருள் விளக்கம் திரும்ப வருதல் :

பருதி—இளஞ்சூரியன்-சிந்: 1178, 1155
பண்ணவன்—அருகன் ,, 454, 820
கோல்—நரம்பு ,, 1696, 1697
மாசை—உழுந்து நிறையுள்ள ஒருவகை நாணயம்—
—பெருங்: 1:39: 11, 1:35:65; 1:38:283
வட்டி—கடகப்பெட்டி ,, 1:38:163; 1:38:285
மறை—இரகசியம் ,, 1:36:280; 1:46:118; 4:3:71
அரக்கி—துடைத்து ,, 1:33:136; 1:36:99
பயம்—பிரயோசனம் மணி: 2:9; 13:90; 28:75
காடமர் செல்வி—துர்க்காதேவி ,, 6:53; 18:115
திட்டிவிடம்—கண்ணில் விடமுடையதொரு பாம்பு—
மணி. 9:46; 20:11

திப்பியம்—இது திவ்யம் என்னும் வடமொழிச் சிதைவு ,, 7:97; 19:10
நெஞ்சுபுகையுயிர்த்து—மனம் கொதித்து ,, 8:58; 18:37
கடிஞை—பிச்சைப் பாத்திரம் ,, 13:109; 18:29

அருஞ்சொற்பொருள் தரல் :

அதகம்=அகதம்—மருந்து சிந் : 403
அதுக்கி — அடித்து ,, 425
சண்டம் — கொடுமை ,, 430
கரடு — யானையின் மதஞ் செருக்கு, பெருங்: 1:32
அதன்மி — குல ஒழுக்கத்திற்கு மாறாக நடப்பவள், பெருங்: 1:35; 69
ஞெமிடி — நெருடி ,, 1:46:301
அரந்தை — துன்பம் மணி: 6:185
சுட்டா முட்டி — ஆள்காட்டி விரல், சிலப்: 3:58 அ.ப.உ.வி.

ஒன்றிற்கு மேற்பட்ட பொருள் தரல் :

நோக்கி — பார்த்து, செய்தென்றுமாம், பெருங்: 1:32:86
வையம் — தேர், வண்டியுமாம் ,, 1:32;91
விளிப்பது — பாடுதலை, அழைத்தலை என்றுமாம் பெருங்: 1: 33: 31
உய்யா நோயின் — உயிரைத் தாங்கியிராமைக்குக் காரணமாகிய நோயினால்; மருந்தால் போக்க ஒண்ணாத நோயினால் அன்றுமாம் — மணி: 23:59

பாடபேதத்திற்கு உரை கூறுதல் :

'கண்டவாங் கதிர்ப்பின'—'கண்டு அவாம் கதிர்ப்பின' எனக் கொண்டு 'அவாம்'—விருப்பம் என எழுதியவர், 'கண் தாவக் கதிர்ப்பின' என்ற பாடத்திற்கு, கண்கள் அவ்விடத்தை விட்டு நீங்கச் செய்யாத ஒளியையுடையன என்றும் பொருள் கொள்க' எனல் —

— பெருங்: 1:38:220.

கள்ளடு மகடூஉ—கள்ளைக் காய்ச்சி விற்பவர்; 'கள்ளிடு மகடூஉ' — கள்ளை விலைக்கு இடுபவள் எனினும் பொருந்தும்.

—பெருங் : 1:40:70

தாரன் மாலையன் — 'தார மாலையன்' எனப் பாடம் ஓதி மந்தார மாலையை உடையவன் எனினும் அமையும்.

மணி : 3 : 36

பொருள் நயந்தோன்றும் நயவுரை :

மாறன்—தர்ம விரோதங்களான இச்சைகளை மனத்தில் உண்டாக்கும் ஒரு தேவன். —மணி : 5:77

காமனும் விழையும்—மன்மதன் பிற மகளிரை விரும்பாத மனத் திண்மையன் ஆதலின் காமனும் என்றார். —பெருங்: 1:40:183

கண்ணின் வெம்பனி - கண்ணிலிருந்து உண்டாகும் வெப்பத்தையுடைய நீர்த்துளி; காமம், பரிவு, துன்பம் முதலியவற்றால் உண்டாகும் துன்பக் கண்ணீர் வெப்பமுடையதாக இருக்கும். —பெருங்: 1:40:191

சுருங்கை — இது புறத்தேயுள்ள அகழியினின்றும் கோயில் அகழிக்கு நீர் வருதற்காகச் செய்யப்பட்டுள்ள கால்வாய்; வீதியில் செல்லும் யானைகள் தன்னுள் விழாதிருத்தற் பொருட்டு, இது மேலே மூடப்பட்டிருக்கும்; இது கரந்துபடை எனவும், கரந்துறை எனவும் வழங்கும். —சிந்: 142

பவணம்—நாகலோகம்; சுவர்க்கத்தினும் நாகலோகம் போகத்திற் சிறந்ததென்பது சைன நூல் துணிபு. சிலப்: 1:21

2. **சொல்லமைப்பு :**

இலக்கண, இலக்கிய உரையாசிரியர்களின் அடிப்படைத் தகுதிகளில் ஒன்று, தாம் உரை எழுதும் நூலிலுள்ள சொற்களையும், அதனோடு தொடர்புடைய பிறமொழிச் சொற்களையும் அறிதல். இச்சொற்களின் மூல வடிவம் பற்றிய சிந்தனை, அது காலங் காலமாகப் பொருள் நிலையில்—சொல் நிலையில் பெற்றுள்ள மாற்றம், அச்சொற்கள் இலக்கிய, இலக்கண நூல்களில் பயின்றுவந்துள்ள திறம் முதலான அறிதல் உரையாசிரியனுடைய பணியாம். இத்திறம் படைத்த டாக்டர் ஐயரவர்கள், மூல நூலில் விகாரப்பட்டு வருஞ் சொற்கள், மரூஉமொழி, பிறமொழிச் சொற்கள் முதலானவற்றை இனங் கண்டு எடுத்தியம்பியுள்ளார். சில வருமாறு :

'சுநந்தை' — 'நந்தை' என்று முதற்குறைந்து வந்தது. சிந்: 365

'கதுவிய' — 'கதிய' என்றாயிற்று. சிந்: 583

உரோணி — உரோகிணி என்பதன் சிதைவு. சிந்: 620

கிரிசை — கிரியை. பெருங்: 2:15:38

வடமொழிச் சொற்கள் தமிழ் வடிவம் பெற்று வருவனவற்றையும் ஐயரவர்கள் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

சாமி	— ஸ்வாமி என்னும் வடசொல் பிராகிருதத்தில் சாமி எனச் சிதைந்து வரும்.	சிந்: 6
சச்சந்தன்	— ஸத்யந்தரன்.	சிந்: 7
கந்துக்கடன்	— கந்தோத்கடசிரேஷ்டி.	சிந்: 10
பதிகம்	— பிரதீகம்	,, 29
ஏமாங்கதம்	— ஹேமாங்கதம்	,, 31
ஓசனை	— யோஜனா	,, 337
சினகரம்	— ஜினக்ருஹம்	,, 1248
நிப்புதி	— நிஸ்ப்ருதி	,, 1450
வச்சிரவண்ணன்	— வைச்ரவணன்	பெருங்: 5:2:47
உவவனம்	— உபவனம்	மணி: பதி: 45
கணக்கர்	— கணகர்	,, 1:14
கந்தம்	— ஸ்கந்தம்	,, 6:60
குடிகை	— குடிகா	,, 6:63
அமுது	— அமிர்து	,, 10:37

இவையன்றிச் சிலவிடங்களில் ஒருபொருட் பன்மொழியாக வரும் சில சொற்களையும் தொகுத்தளித்துள்ளார்.

> ''அருளறம், நல்லறம், காருண்யம், தயாதருமம்
> என்பன ஒரு பொருட் சொற்கள்'' —மணி: 5:75

3. கருத்துரை:

பதவுரை, கருத்துரை, விசேடவுரை எனப் பண்டை உரையாசிரியர்கள் தம் உரையமைப்பை வகுத்துக் கொள்வது மரபு. இவற்றில், பாடல் அல்லது பாடலின் பகுதிகள் ஒருபொருள் முடிவு கொண்டிருப்பின், அவற்றிற்குத் திரண்ட கருத்துரைத்தல் வழக்கம். சிந்தாமணி உரையாசிரியர் நச்சினார்க்கினியர் ஒவ்வொரு பாடலுக்கும் கருத்துரை வழங்குவர். சில விடங்களில் மட்டும், — ஒரே பாடலில் பொருள் முடியாத விடத்து, ஒன்றிற்கு மேற்பட்ட பாடல்களின் கருத்துக்களைத் தொகுத்தளிப்பார். அடியார்க்கு நல்லார், சிலம்பின் ஒவ்வொரு காதையையும் பொருள் முடிபுக்கு ஏற்பப் பலவாகப் பகுத்துக் கொண்டு, அவற்றிற்குக் கருத்துரை வழங்குவர். டாக்டர் சாமிநாத ஐயரவர்கள் குறிப்புரை மட்டுமே எழுதியதால், அவற்றில் கருத்துரை பெரும்பாலும் குறைவு எனலாம். இக் கருத்துரை மிகுதியாக இடம் பெறுவது பெருங்கதையிலேயே. அதன் ஒவ்வொரு காதையின் தொடக்கத்தும், அக்காதையின் கருத்துச் சுருக்கத்தைத் தந்துள்ளார். இவ்வகைக் கருத்துரை அமைப்பு, 'இப்புத்தகத்தில் அடங்கியவை' என நூலின் உள்ளடக்கம் கூறும் பகுதியிலும் இடம் பெற்றுள்ளது.

காதைத் தொடக்க கருத்துரை :

> ''உதயணன் பிரச்சோதனனுடைய விருப்பத்தின்படி, அவனது பட்டத்து யானையின் மதச் செருக்கை அடக்கி ஊர்ந்ததும், அப்பொழுது அவன் அன்பு பாராட்டியதும், உதயணனும் வாசவதத்தையும் ஒருவரை ஒருவர் நோக்கிக் காமுற்றதும், பிறவும் இப்பகுதியில் அறியலாகும்.''
>
> — 1:32, கரடு பெயர்த்தது, பக்: 1.

'இப்புத்தகத்தில் அடங்கியவை' - பகுதியிலுள்ள கதைச் சுருக்கம் :

> ''மாளிகையைக் கண்டு உதயணன் ஐயமுற்றுத் தெளிதல் - உதயணன் காணும் காட்சி — மாலைக் கால வருணனை — பிறைமதியின் தோற்றம் — உதயணன் வருதல் — வாசவ தத்தை வருதல் — நீங்கிய தோழிமார் வாசவதத்தையைக் காண்டல்.'' 1 : 33, 'மாலைப் புலம்பல்'.

இங்ஙனம் எல்லாக் காதைகளுக்கும் மேற்கண்ட அமைப்பில் கருத் துரை அமைத்துள்ளார். பெருங்கதைக்குப் பழைய உரையாசிரியர் தம் உரை இன்மையால், இது போன்ற கருத்துரை, நூலைப் புரிந்து கொள்ளத் தேவை என உணர்ந்த ஐயரவர்கள் இதனைக் கொடுத்திருக்க வேண்டும் எனக் கருதலாம். ஆயின் இவ்வமைப்பு மணிமேகலையில் பின்பற்றப்பட வில்லை. இத் தொடக்கக் கருத் துரை யன்றி, இடையிடையே சில தொடர்களை ஒரு தொகுதி யாக அமைத்துக் கொண்டு அதற்குக் கருத்துரை வழங்கியுள்ளார். இம்முறை பெருங்கதையிலும், மணிமேகலையிலும் இடம் பெற்றுள் ளது. சில சான்று :

> ''உதயணனுக்குச் செய்ய வேண்டுவனவற்றை எல்லாம் எழுதுவித்து, இறுதியில் கையொப்ப மிட்ட பனையோலையில் உள்ளவற்றைக் குறிப்பால் உணர்த்தி, அப் பொருள்களை ஆயத்தம் செய்யும்படிக் கணக்கர் முதலியோர்க்கு அரசன் கட்டளை யிட்டவுடனே'' — ... பெருங்: 1:32:68-71.
>
> ''வீதியில் நல்லார் சிலர் கோவையையும் முச்சியையும் குதலையையும் மதலையையும் பூணையுமுடைய புதல்வரை வேழத்து முக்காழ் தாழச் சின்னீர் நனைப்பத் துகில் துயல்வர ஏற்றிக் காண்மினோ என்று சொல்ல, அதனைக் கண்டு நிற்பவர்களும் என்க.'
>
> — மணி: 3:182-45.

இவை போன்று, இன்னும் பல விடங்களில் இக்கருத்துரைகள் அமைந்துள்ளன.[1] ஆயின் இவை வருமிடங்கள் மிகச் சிலவே; எண்ணிச் சொல்லிவிடலாம். இங்குச் சில பகுதிகளுக்கு மட்டும் கருத்துரை தரக் காரணம் என்ன? இத்தகைய கருத்துரை கூற வேண்டியது தேவை தானா? என்ற வினாக்கள் எழுகின்றன. கருத்துரை நூலை அறியத் தேவையே என்றாலும், அது எங்கெங்கு தேவையோ அவற்றிற்குத் தரலாம். பொருள் முடிவு பெறும் இடங்களை வரையறை செய்து, அப்பகுதியில் அடங்கிய மூலப்பகுதியின் சுருக்கத்தைத் தரலாம் என்றாலும், இம்முறை எல்லாவற்றிற்கும் ஒரு வரன் முறைப்படித் தரப்படுதல் வேண்டும். இங்கு ஐயரவர்கள் அவ்வாறு தந்துள்ளதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு சில இடங்களுக்கு மட்டும் தந்துள்ளார். இம்முறையை நூல் முழுமைக்கும் பின்பற்றியிருக்கலாம். அல்லது முழுவதும் கூறாது விட்டிருக்கலாம். இங்கு ஒரு சில இடங்களுக்கு மட்டும் தந்ததன் காரணம் புலப்படவில்லை.

> ''வேந்தர்தம் நகையாகிய தீமையை இனிக் கொள்ளும்
> உடம்பினாலும் துன்னன்மின் என்பவே போல் சுடுசரம்
> புன்மன வேந்தர் கவசம் கீறி மார்பம் நக்கி
> இன்னுயிர் கவர்ந்து பரந்த என்க.''
>
> —சிந்: 799, டாக்டர் உ.வே.சா.

> ''நன்மன வேந்தர்தம் நகையாகிய பிறர்மனை நயத்தலை
> இனிக் கொள்ளும் உடம்பிலும் துன்னன்மின் என்பன
> போலச் சுடுச்சரங்கள் இப்புன்மன வேந்தருடைய கவசத்தைக்
> கீறி மணி மார்பைத் தீண்டி, இன்னுயிரைக் கவர்ந்து
> பரந்தன என்க.''
>
> —நச்சினார்க்கினியர்

இங்ஙனமே பிற விடங்களில் வரும் கருத்துரையும் அமையும். இத்தகைய கருத்துரைகள் தேவைதானா என்பது சிந்தனைக்குரியது. இவற்றை ஐயர் அமைத்ததன் காரணமும் புலப்படவில்லை.

இதே போன்று சீவக சிந்தாமணிக் குறிப்புரையிலும் சில பாடல்களுக்குக் கருத்துரை அமைத்துள்ளார்.[2] இக்கருத்துரைகளும் நச்சினார்க்கினியரின் உரையமைப்பைப் பிரதி செய்வதாக அமைந்துள்ளன. சான்று விளக்கத்திற்காக ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது:

1. பெருங்: 1:54:76-102; 1:56:150-56; 2:10:94-95 முலான.
   மணி: 1:20-22; 4:19-24; 7:15-40 முதலான.
2. சிந்: 799, 846.

4. பிறர் உரையைப் பதவுரையாக அமைத்தல்:

சொல், தொடர், அடி முதலானவற்றிற்குப் பதவுரை எழுதும் டாக்டர் ஐயரவர்கள், பிற உரையாசிரியர்கள், அச்சொல், தொடர் முதலானவற்றிற்குப் பிற நூல்களில் எழுதிய உரை சிறப் பானவை — பொருத்தமானவை என அறிய நேர்ந்த பொழுது, அவற்றிற்கெனத் தனியாக உரை வகுக்காது, அவ்வுரையை அப் படியே தந்து செல்வது குறிப்பிடத் தக்கது. இது ஐயரவர்களின் பரந்து பட்ட நூலறிவிற்குச் சான்றாக அமையும். இங்ஙனம் ஐயர் தரும் சில பதவுரைகளாவது:

'கொடுஞ்சி' [மணி: 4:48]—தாமரைப்பூ வடிவமாகப் பண்ணித் தேர்த்தட்டின் முன்னே நடுவது' என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்—(மதுரைக்: 752)

'இதா' [சிந்: 1232]—'அறிந்திலேன் ஈதா' (பரி: 8:60) என்பதற்கு, ஈதா என்பது ஒரு மரூஉ முடிபு; அஃது இக்காலத்து இந்தா எனறு வழங்கப்படும். சுட்டு நீண்டது எனப் பரிமேலழகர் உரை எழுதி யுள்ளார்.

'பிறவிக்கடல்' [சிந்: 1242]—'பிறவிப் பெருங்கடல் (குறள்: 10) என்பதற்குப் பரிமேலழகர், 'காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின் பிறவிப் பெருங்கடல் என்றார்' என்று உரை எழுதியுள்ளார்.

5. பிற உரைநூல் பார்க்க எனச் சுட்டுதல்:

சில விடங்களில், பதவுரை எழுதிய ஐயரவர்கள், அதனை மேலும் விளக்காமல், 'பிற உரை நூல்களில் காண்க' எனக் குறித் துள்ளார். இவ்வகை உரையமைப்பு, ஒருவகையில் வாசகரை நூல் கல்விக்குத் தூண்டுவதாக அமையும்.

'மூவா முதலா உலகம்—[சிந்:1]—உலகம் என்னும் மங்கல மொழி அடை கொடுத்து இதில் கூறப்பட்டது. உலகம் உவப்ப' (முருகு:1) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க.

'மது மகிழ்ந்து அனந்தர் கூர' [சிந்: 2083]—மதுவை உண்டலால் மயக்கம் மிகுதலின்; பதிற்: 42: 10-11 உரையைப் பார்க்க.

'பாசண்டியர்கள்' [பெருங்: 1: 32: 3] பாஷண்டியர்கள்; இவர்கள் தொண்ணூற்றாறு சமய சாத்திரத் தருக்கக் கோவையை உடையவராதலின் பலவகை மரபிற் பாசண்டியர் என்றார்.

சிலப்: 9: 14-5 ஆம் அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய விசேட உரையையும் அவற்றின் கீழ்க் குறிப்பையும் பார்க்க.

கழி [பெருங்: 1:32:3.] — முளை, கயிறென்பாரும் உளர்; தக்க: 132 உரையைப் பார்க்க

தலையதனும்பர் [பெருங்:1: 35: 47]—முதலாவதாகிய பதுமாசனத்தின் கண்; ஆசனம் ஒன்பது வகைப்படும். சிலப்: 8: 23—ஆம் அடி முதலியவற்றின் உரை பார்க்க.

'வாகை மன்றம்' [மணி: 6: 63] — பல பேய்கள் கூட்டங்கொண்டிருத்தற்கு இடமானது பற்றி வாகையடி மன்றம் எனப்பட்டது. ஊருக்கு நடுவாய் எல்லோரும் இருக்கும் மரத்தடியை மன்றம் என்பர் நச்சர் (முருகு: 226).

'பழுது' [மணி:11: 145]—குற்றம்: பழுது என்பதற்கு உடம்பு என்று (சிலப்: 19:66) அடியார்க்கு நல்லார் பொருள் செய்திருத்தலால், 'பழுதறு மாதவன்' என்பதற்கு உடற்பற்றொழிந்த அறவண அடிகள் என்று பொருள் கூறினும் பொருந்தும்.

7. உரை விளக்கம் தருதல்:

டாக்டர் சாமிநாத ஐயர் பதிப்பித்த நான்கு காப்பியங்களில் இரண்டிற்கே உரை உண்டு. இவற்றில், சீவக சிந்தாமணிக்கு, நச்சினார்க்கினியர் எழுதிய உரைக்குப்பல விடங்களில் பதிப்பாசிரியர் விளக்கம் தந்துள்ளார். இவ்விளக்கவுரை, 1. உரை விளக்கம், 2. உரை மறுப்பு, 3. உரை விளக்கத்திற்குப் பிற உரை காட்டுதல், 4. உரை விளக்க மேற்கோள், 5. உரைக்கு அடிட்படையான இலக்கணப் பகுதி, 6. உரைக்கு இலக்கணக் குறிப்புத்தருதல், 7. உரை உணர்த்தும் சமயச் செய்தி, 8, உரை நயம், 9. பழைய உரை சுட்டுதல் என்ற வகையில் அமையும்.

உரை விளக்கம்

தேவபாணி—தேவரை வாழ்த்துவது; தேவப் பிரணவம் என்னும் வடமொழியைத் தேவபாணி எனத் திரித்து வழங்கினரே' (பன்: 207)—சிந்: 1.

கழஞ்சு—பன்னிரண்டு பண எடை கொண்ட நிறை—சிந்: 107

அனுலோமர்—உயர் குலத் தந்தைக்கும் இழிகுலத் தாய்க்கும் பிறந்தவர்.

பிரதிலோமர்—இழி குலத் தந்தைக்கும் உயர்குலத் தாய்க்கும் பிறந்தவர்.

சங்கரசாதி—பலவகை வருணக் கலப்பால் பிறந்த சாதி
—சிந்: 116

உறை—இலக்கக் குறிப்புகளுள் ஒன்று; தானியங்களை அளக்குங் கால் ஐந்து கலத் தானியம் அளக்கப் பட்டவுடன் அவற்றை ஒன்றென் றெண்ணி எடுத்து வைக்கும் ஒரு பிடிக்குப் பெயராக வழங்கப் படுகின்றது—சிந்:270.

செண்டுவெளி—யானைச் செண்டு, குதிரைச் செண்டு என்று சில விளையாட்டுக்கள் உண்டு; யானையின் மீதும் குதிரையின் மீதும் ஏறியிருந்து பந்தை ஆடுதற்குரிய இடம் செண்டு வெளி. சிந்: 275.

உரைக்கு மறுப்பு: இங்கு, நச்சினார்க்கினியர் உரை பிற உரையாசிரியர்களால் மறுத்துரைக்கப் படுவனவற்றை, அம் மறுப்புரைகளுடன் எடுத்து மொழிவர். சில சான்றுகள் வருமாறு:

'முந்து நூல்களில் காப்பியம் என்னும் வடமொழியால் தொடர்நிலைச் செய்யுட்குப் பெயரின்மையும், இதற்குப் பின்பு கூறிய நூல்கள் இதற்கு விதியின்மையும் உணர்க—நச்: சிந்: 1. பக்:2.

'முந்து நூல்களில் காப்பியம் என்னும் வடமொழிப் பெயர் இன்றேனும் சொற்றொடர் நிலை, பொருட்டொடர் நிலை என்னும் தொடர்நிலைச் செய்யுட்குக் காப்பியம் என்னும் பெயர் கூறுதல் பொருந்தும்' (சிலப்: உ. பா.) என்பது அடியார்க்கு நல்லார் கொள்கை.

ஆம்பல்—ஆம்பற் பண்ணையுடைய குழல்—நச்:சிந்:1314.
—ஆம்பல் குழல் என்பது கருவியாகும்; பண்ணன்று எனக் காரணம் கூறி மறுப்பர் அடியார்க்கு நல்லார் (சிலப்:17:பா:4).

பிற உரை சுட்டுதல்:

உலகம் என்றது உயிர்க் கிழவனை—நச்: சிந்: 1.
'உயிர்க் கிழவன்—ஆன்மா; மண்ணிடத்து வாழும் சீவான்மாக்களை உணர்த்திற்று (முருகு:1,நச்).

முந்நீர்—நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலும் ஆகிய மூன்று தொழிலும் உடைமையின் முந்நீர்—நச்: சிந்: 5
இங்கே கூறிய படியே நச்சினார்க்கினியர் பிறவிடங்களிலும் எழுதுவர் (பெரும்: 441, மதுரைக்: 75-76). அடியார்க்கு நல்லாரும் இங்ஙனமே எழுதுவர் (சிலப்: 17). ஆற்று நீர், ஊற்று நீர், வேற்று நீர் என்பாரும் உளர் (புறம்: 9).

இங்ஙனம் ஐயரவர்கள் நச்சினார்க்கினியர் உரைக்கு ஆதாரமாகப் பழைய உரையாசிரியர்களின் கருத்தையும் சான்று காட்டுவர்.

உரை ஒப்பு மேற்கோள் :

'சீவகனை முற்கூறினார் கதைக்கு நாயகன் ஆகலின்'—நச்:சிந்:6

'இவளை முற் கூறிற்று கதைக்கு நாயகியாகலின் — அரும்: சிலப்: 1: 29,

'சொல்லுதல் எளிதாய்ச் சொல்லிய வண்ணம் செய்தல் அரிதாய் இருந்ததென்றாள் என்க'—நச்: சிந்:1381.

'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம், சொல்லிய வண்ணம் செயல்'—குறள்: 664.

இலக்கணம்: உரைக்கு அடிப்படையான இலக்கண நூல், அதன் நூற்பா முதலானவற்றைச் சிலவிடங்களில் ஐயரவர்கள் சுட்டிக் காட்டுவர். சான்றாக,

''அவ்விலக்கணத்திற் செய்யுளியலின் கண்ணே ஆசிரியப்பா நான்கென்றும், அவற்றை **அறம் பொருள் இன்பத்தாற்** கூறுக என்றும் கூறிப் பின்பு, **அம்மை** முதலிய எட்டும் தொடர் நிலைச் செய்யுட்கு இலக்கணம்''—சிந்: 1.,

என்ற நச்சினார்க்கினியர் உரைக்கு அடிப்படையான தொல்காப்பிய நூற்பா (தொல். செய்: 106, 236)வைச் சுட்டுவர்.

இலக்கணக் குறிப்பு விளக்கம் : நச்சினார்க்கினியர் விளக்கம் ஏதுமின்றி, இலக்கணக் குறிப்பை மட்டும் தந்து செல்ல, ஐயர் அவ்விலக்கணக் குறிப்பை விளக்கியுள்ளார். சில வருமாறு :

சாயல்—ஆகு பெயர் (நச்: சிந்: 8)—பண்புப் பெயர் பண்பியை உணர்த்திற்று'—உ.வே.சா.

வருக்கை—ஆகு பெயர் (நச்: சிந்: 31)—'பலாப் பழத்திற்கு' ஆனமையின் ஆகுபெயர்.

தெண்டிரை—ஆகு பெயர் (நச்: 32)—அலை நீருக்கு ஆனமையின் ஆகு பெயர்.

சமயச் செய்திகள் : நச்சினார்க்கினியர் சமண சமயக் கொள்கைகளைப் பயின்று பின் விசேடவுரை வகுத்தார் என்ற கதை சீவக சிந்தாமணி உரையில் பல சைன சமயச் செய்திகள் நிறைந்துள்ளன என்பதைத் தெளிவு படுத்தும். இவற்றில் பலவற்றை நச்சினார்க்கினியர் சுட்டிச் செல்ல, ஐயரவர்கள் அவற்றை விளக்கியுள்ளார்.

மூன்றுலகு—(சிந்: 1. நச்.)—மேலுலகம், மத்திமலோகம் பவணலோகம்(நாகலோகம்)

சித்தன் — (சிந்: 1, நச்.)—காதி, அகாதி என்னும் இரு வகைக் கருமங்களையும் வென்று அக்கினி, இந்திரனால் உடம்பைத் துறந்து பரிநிர்வாணம் பெற்று மூவுலகத்து உச்சியில் இருப்பவன்.

'அமிர்து [சிந்: 14-நச்]—பஞ்ச நமஸ்காரம்' — அருகர், சித்தர் ஆசிரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என்னும் பஞ்ச பரமேட்டிகளை வணங்குதற்குரியன வாகிய ஐந்து மந்திரங்கள்; அவை ஓம்ணமோ அரஹந்தானம், ஓம்ணமோ சிந்தாணம், ஓம்ணமோ ஆரியாணம், ஓம்ணமோ உவண்டாயணம், ஓம்ணமோ ளோயே சவ்வசஹூணம் என்பன.

மும்மலம் [சிந்: 96, நச்]—காமம் வெகுளி மயக்கம்; சங்கை முதல் பாஷண்டி மூடம் இறுதியாகிய மலங்கள் இருபத்தைந்து என்று கூறுவது முண்டு.

பழைய உரை சுட்டல்: 'இக்கவியும் இதன் பழைய உரையும் மிக இன்புறற் பாலவை' (சிந்: 1526) என ஓரிடத்தில் குறிப்பிடுவர். இங்கு இப்பாடலுக்குரிய பழைய உரை எது என்று புரியவில்லை.

உரைநயம் சிறப்பித்தலும் ஐயரின் சிந்தாமணிக் குறிப்புரையில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளது.

தோள் இழுக்குற்ற மொய்ம்ப— 'பிறர் தோள் இழுக்குறற்குக் காரணமான மொய்ம்ப' என்றும் 'கட்டியங்காரன் தோள் இழுக்குற்ற' —நச்: சிந்: 1088.

—'இதில் இரண்டாவது பொருளே சிறந்தது' என்பர்.

ஆகம்—நெஞ்சு; இனித் தலைவி முன்னாதலின் பொன்
றுஞ்சாகம் என்று தன்னைப் புகழ்தலுமாம்'—நச்: சிந்: 1332.

—'இதில் இரண்டாவது பொருளே சிறந்தது.'

'ஈண்டுக் காதல் என்றது பல பிறப்பிலும் நமக்கு மனைவியராய் வந்தவர் இப்பிறப்பிற் செய்யுந் தவத்தால் பிறப்பற்று வீடு பெற வேண்டுமென்று காதலித்த காதலை''—நச்: சிந்: 2987.

—'ஈண்டுக் காதல் என்பதற்கு உரையாசிரியர் எழுதும் பொருள் கூர்ந்தறியற் பாலது''—டாக்டர் ஐயர்.

7. இலக்கணக் குறிப்புரைத்தல்:

பழைய உரையாசிரியர் மரபில் நின்று, ஐயரவர்கள் பல விடங்களில் சொற்களுக்கு இலக்கணக் குறிப்புத் தந்துள்ளார். இவை ஏன் தரப்பட்டன என நோக்கின், ஓர் உண்மை புலப்படும். இவை அனைத்தும் பொருள்கோளுக்காகத் தரப்பட்டுள்ளனவே யன்றிச்

சொல்லிலக்கணம் கூறவேண்டும் என்ற நோக்கம் அல்ல. மூல நூலில் உருபு மயக்கம், உருபுகள் பொருளற்ற நிலையில் வருதல், எச்சங்களும் முற்றும் தம்மில் மாறுபட்டு அமைந்துள்ள போது, பொருள் மயக்கம் ஏற்படாமல் இருக்க, தேர்ந்த பொருள் இதுவென உணர்த்த உரையாசிரியர்கள் இலக்கணக் குறிப்பைத் தருவதை மரபாகக் கொண்டுள்ளனர். இவ்வடிப்படையிலேயே ஐயரவர்கள் தரும் இலக்கணக் குறிப்பும் அமைந்துள்ளன.

உருபு மயக்கம்:

இவனை இன்னுயிர் — ஐயுருபை ஆறன் உருபாக மாற்றிக் கொள்க — சிந்: 976

ஒருத்தியை—(ஒருத்திக்கு) உருபு மயக்கம்—பெருங்: 1:34:80
மாதரை —(மாதர்க்கு) ,, ,, 2:16:13
இதனொடு—(இதனிடத்து) ,, மணி: 13:55
செய்தவத் தாட்டியை—[செய்தவத்தாட்டிக்கு] ,, 23:64.

உருபு பொருளற்ற நிலையில் வருவன:

'கோனைப்போர்' — ஐசாரியை —சிந்: 816
'நின்றதை' — ,, ,, 915
பாம்பால் என —[பாம்பு என]—ஆல் அசை'' 924
நோக்கமொடு —[நோக்கம்]—ஒடு ,, பெருங்: 1:34:242
மனத்ததை— ஐ சாரியை ,, 1:35:19
திருவின் செய்யோர் — 'இன்' சாரியை மணி: 5:4
பயனால் — ஆல் அசை .. .. ,, 26:14
அண்டலை— ஐ சாரியை .. .. ,, 27:70

பொருள் மயக்க முற்ற சொற்களுக்கு இலக்கணக் குறிப்புத் தருவதும் சில இடங்களில் அமைந்துள்ளன.

நஞ்சுற்ற — நைந்துற்ற — போலி சிந்: 11
மாது—காதல்; மாதர் என்னும் உரிச் சொல்லின் விகாரம் —சிந்: 1102
மதஒளி — 'மத' மிகுதிப் பொருள்தரும் உரிச்சொல்— ,, 589
ஊடல் — எதிர்மறை முற்று — சிந்: 1624
மாதர் — காதல், உரிச்சொல் — மணி: 3:8
உண்டோ — ஓ—எதிர்மறை, .. ,, 3:24

இலக்கணக் குறிப்பில், ஆகுபெயர் என எடுத்துக் காட்டும் அனைத்துமே பொருள் கோளுக்காக — பொருள் மயக்கத்தை நீக்கவே எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சில சான்று வருமாறு:

விச்சை—வித்தியாதரருக்கு ஆயிற்று; பண்பாகு பெயர்—சிந்: 8
அல்குல் — காந்தருவ தத்தை; ஆகுபெயர். சிந்: 738
வீழ்பு — சுள்ளிகளுக்கு; ஆகுபெயர் .. மணி: 3:107.

பொருளுடை வடிவங்கள் சில, பொருளற்ற நிலையில் அசைநிலையாக இலக்கியத்தில் அமைவனவற்றையும் பொருள்கோள் நிலையில் தந்துள்ளார்.

கிளவி தம்மால் — 'கிளவியால்' — 'தம்' சாரியை —சிந்: 581
'கயந்தலைக் குடைந்தான'— 'தலை' அசைநிலை —சிந்: 67
கையும் கூடும் காலம் — கை கூடும் காலம்; உம்மை இசைநிறை —பெருங்: 1:33:11

இனி, எச்சம், முற்று முதலான தம்முள் மயங்கியும், சொற்கள் விகாரப்பட்டும்வருவன சுட்டுவது, பொருள்கோளுக்கே என்ற உண்மை பின் வரும் சான்றுகளால் தெளிவாகும்.

பிறந்த (எச்சம்) — முற்று, சிந்: 5
சேந்து — சிவந்த என்பதன் மரூஉ - ,, 8
போற்றி — இகர ஈற்று வியங்கோள் ... சிந்: 264
குறுத்தாள் — வலித்தல் விகாரம் - சிந்: 650

இங்ஙனம் டாக்டர் ஐயரவர்கள், உரையாசிரியர் நிலையில் எடுத்துக் காட்டும் அனைத்து இலக்கணக் குறிப்புக்களும் பொருள்கோள் நோக்கியே அமைந்துள்ளன என்பது தெள்ளிதின் விளங்கும்.

8 மேற்கோள் விளக்கம்:

ஐயரவர்களின் தனிச்சிறப்புக்களுள் ஒன்று, அவர் பதிப்பித்த அனைத்து நூல்களிலும், மிகச் சிறந்த முறையில் 'ஒப்புமை மேற்கோள் விளக்கம்' அமைத்துள்ளமையாகும். முதற்கண் சீவக சிந்தாமணிப் பதிப்பில், 'ஒப்புமை மேற்கோள் அகராதி' யாகத் தனித்துத் தந்தவர் பின் அவற்றை, அவ்வப்பகுதியின் அடிக்குறிப்பில் அமைத்துள்ளார். இவ்வொப்புமை மேற்கோள் விளக்கம், நூல் கல்வியில் ஐயரவர்களுக்கிருந்த பரந்துபட்ட அறிவை விளக்கும். மூல நூல், அல்லது மூல நூலுக்கு எழுந்த பழைய உரை நூல்களில் காணப்படும் குறிப்பிடத்தக்க சொல், தொடர், அடி முதலானவற்றிற்கு இணையானவை பிற நூல்களில் வரின், அவற்றைத் தேடித் தொகுத்துள்ளார். அதோடு, மூல, உரைகளில் இடம் பெற்ற உவமை முதலான அணிகள், இலக்கண மரபுகள், புராண — வரலாற்றுக் குறிப்புக்கள், சமயச்சார்பான செய்திகள், இன்னபலவும் பிற நூல்களில் காணப்படுமாயின் அவற்றையும் மேற்கோள்விளக்கமாகஎடுத்துக் காட்டியுள்ளார். பிற நூல்களன்றி, அதே நூலில், ஓரிடத்து இடம்

பெறும் சொல், தொடர் முதலான அந்நூலின் பிறவிடங்களில் எங் கெங்கே வந்துள்ளன என்பதையும் இங்குக் குறித்துள்ளார்.

இனி, குறிப்பிட்ட பதிப்பு நூலில் இடம்பெற்ற சொல், தொடர் முதலானவை யார் யாரால், எந்தெந்த நூல்களில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன என்பதையும் கொடுத்துள்ளார். மொத்தத்தில் இங்கு ஐயரவர்கள் ஓர் ஒப்புமை மேற்கோள் அகராதியாகத் திகழ்ந் துள்ளார் என்பது மிகையன்று.

மூல நூல் சொல், தொடர், அடி முதலான பிறநூல்களில் வருவன

'மகள்' என்ற சொல் மனைவி என்ற பொருளில் — சிந்: 26
— பிற: சிலப்: 16:17; மணி: பதி: 70, 2:30
'என்னிதற் படுத்த' — பெருங்: 1:34:93; பிற: சிந்: 713.
'உரிமை முன் போக்கி யல்லால் ஒளியுடை மன்னர் போகார்'
— சிந்: 272. — பிற: அரிச்: நகர். நீங்: 1.
'ஐம் பெருங் குழுவும் எண்பேராயமும்'-
—சிலப்: 5:157; பெருங்: 2:5:6, மணி: 1:16.

'வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி'
— சிலப்: 5:141-42; மணி: 1:27-28.

'பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி'
— சிலப்: 5:72-73, மணி: 1:70-71.

மூல நூல் சொல், தொடர், அடி முதலான பின்னும் வரல் :

'சீவக சாமி' — சிந்: 6, 1913, 2310 ,2609
'கூன்மகள்' — பெருங்: 3:6:160; 3:5:97; 3:7:1; 3:8:55
'காமவேகம்' — ,, 2:16:89; 2:19:166; 3:7:43; 3:8:3.
'பலர் புகழ் திறத்த பகுவாய் வாயில்' — மணி: 7:92, 17:76.
'நன்மணி இழந்த நாகம் போன்று' — '' 7:131; 25:195.

மூல நூல் பகுதி பிறநூல்களில் பல விடங்களில் எடுத்தாளப்பட் டுள்ளமையை ஐயரவர்கள் பலவிடங்களில் எடுத்துக் காட்டுவார். 'மூவா முதலா' (சிந்: 1) என்ற சிந்தாமணிப் பாடல் மட்டும் 14- ஆசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப்படுவதைச் சுட்டுவர். 'திங்களைப் போற்றுதும்' (சிலப்: 1-3) என்ற சிலப்பதிகாரப் பாடல் வரி, தொல்காப்பியத்தில் குடைமங்கலம் துறை விளக்கமாக இளம் பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய உரையாசிரியர்களால்

மேற்கோளாக ஆளப்பட்டுள்ளது (தொல். புறத்: 30,இளம், 36,நச்). இங்ஙனம் டாக்டர் ஐயரவர்கள் தரும் குறிப்புக்களை நோக்கப் பண்டை உரையாசிரியர்களால், சீவக சிந்தாமணியும், சிலப்பதி காரமுமே மிகுதியும் எடுத்தாளப் பட்டுள்ளமையை அறிய முடிகிறது. சிலப்பதிகாரத்திலும் சிந்தாமணி பற்றிய மேற்கோள் ஆட்சியே மிகுதி.

உவமை முதலான: ஐயரவர்கள் தாம் பதிப்பிக்கும் நூற்பகுதியில் வரும் உவமை முதலானவை, பிற இலக்கியங்களில் வரின் அவற்றையும் தொகுத்தளித்துள்ளார். 'கணை மொய்ப்பக் கதஞ் சிறந்து, குருவி சேர்வரை போன்ற குஞ்சரம்', பற்றிச் சிந்தா மணி ஆசிரியர் கூறும் உவமை, புறநானூறு, களவழிநாற்பது, மேருமந்திரபுராணம், முதலானவற்றில் வருவதை ஐயரவர்கள் சுட்டியுள்ளார்.[1] இது போன்றே, தாமரைப்பூ - பொகுட்டு இதழ் முதலான, நகருக்கு உவமையாகும் செய்தி, ஐயரவர்களின் உரைக் குறிப்பால், சிந்தாமணி, பரிபாடல், பெரும்பாணாற்றுப்படை முதலான இலக்கியங்களில் வருவதை அறியலாம்.[2]

சிந்தாமணில், ஏமாங்காத நாட்டணி கூறும் தேவர், அந் நாட்டார், கருப்பஞ் சாற்றை, வந்தவர்க் கெல்லாம் வழங்கும் விருந்தோம்பல் பண்பைச் சிறப்பிப்பர். இப்பண்பு பெரும்பாணாற்றுப் படையில் சுட்டப் பெறுவதை உரைக்குறிப்பால் உணரலாம்.[1] யாழின் திறம் உணர்ந்து நரம்பு தேரும் சீவகன், அதன் புரி நெகிழ்த்து உரோமம் காட்டி அதன் குற்றம் எடுத்தியம்புவன்; இச் செய்தி பெருங்கதையில் இடம் பெறுவதை ஐயரவர்கள் காட்டுவர்.[3]

சிலப்பதிகாரத்தில், 'புள்ளுறு புன்கண் தீர்த்தோன்', 'கறவை முறை செய்தோன்' ஆகிய சோழ அரசர் தம் திறம் விளக்கும் வரலாற்றுப் பழங்கதைக் குறிப்பு இடம் பெற்றுள்ளது. இக்கதை பற்றிய குறிப்பு, புறநானூறு, கலிங்கத்துப் பரணி, இராஜராஜ சோழன் உலா, கம்பராமாயணம், திருக்குறள் பரிமேலழகர் உரை, பழமொழி, மணிமேகலை, அரிசமய தீபம் முதலான, இலக்கியங்களில் வருவதை

---

1. சிந்: 2237, புறம்: 19:8-9; களவழி: 8, மேரு: 15;
2. பெருங்: 3:3:50-114; சிந்: 2311, பரி: 174, பெரும்பாண்: 402-405
3. சிந் : 60 பெரும்பாண் : 261-62
4. சிந் : 721, பெருங் : 3 : 15 : 44 - 47.

ஐயரவர்களின் குறிப்புரையால் அறியலாம்.[3] இதே போன்று ஏழு பத்தினிப் பெண்டிர் பற்றிச் சிலம்பு தரும் வரலாறு, பட்டினத்துப் பிள்ளையார் புராணத்து இடம் பெறுவதை அறிகிறோம்.[4] இங்ஙனம் ஐயரவர்கள் தரும் ஒப்புமை மேற்கோள், நூல் கல்விக்கு உற்ற துணையாக அமைவதோடு, மேற்கோள் ஆராய்ச்சிக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது.

9. பொருள் கோள் முறை :

மூல நூலின் பொருள் விளக்கத்திற்குச் சொற்களை மாறிக் கூட்டுவதும், கொண்டு கூட்டுவதும், வினை முடிவு காட்டுவதும், சொல் வருவித்துப் பொருள் கோடலும் பண்டை உரையாசிரியர்களின் வழக்கம் இதனை உரை மரபாகப் பலரும் பின்பற்றியுள்ளனர். இம்முறையில் கை தேர்ந்த கலைஞராகக் கருதப்படுபவர் நச்சினார்க்கினியர். அவர் உரையுடன் கூடிய நூல்களைப் பதிப்பித்ததன் விளைவோ என்னவோ, ஐயரவர்கள் பல விடங்களில் இம்முறையைச் சீவக சிந்தாமணியில் அமைத்துள்ளார். சொற்களை மாறிக் கூட்டுதல், ஒரு சொல்லைப் பல பாடல்களுக்கு அப்பால் கொண்டு கூட்டுதல், பிரித்து இயைத்தல், அடியை மாற்றி அமைத்துக் கொளல் முதலான பொருள் கோள் மரபை ஐயரவர்கள் பின்பற்றியுள்ளனர்.

'செம்புருகு வெங்களிகள் உமிழ்வ திரிந்தெங்கும்' (103) என்ற சிந்தாமணிப் பாடல் வரியை, 'எங்கும் திரிந்து செம்புருகு வெங்களிகள் உமிழ்வ' என மாறிக் கூட்டுவர். 'வாழ்தல் அதன் சாதுய ரதனில் இல்லை' (சிந் : 553) என்பதை, வாழ்தல் அதனின் சாதுயர் இல்லை' என மாறி இயைப்பர். இவ்வாறே 'மாறுக', மாறி இயைக்க, மாறி முடிக்க எனச் சிந்தாமணியில் அமைத்துக் கொள்வர்.[3]

''உயங்குநோய் வருத்தத் துரை முன் தோன்றி
மாமலர் நாற்றம் போல் மணிமே கலைக்கு
ஏது நிகழ்ச்சி எதிர்ந்துள தாதலின்'' - [மணி : 3 : 2 - 4]

---

1. சிலப் : 20 : 52 - 54; புறம்: 37, 39, 43, 46; கலிங் : 93; இராச : 3 - 6; குலோத் : 2,17; விக்கிர 3 - 4, 10,11; கம்ப : திருவவ : 65, குலமுறை : 7, கும்ப : 355; குறள் : 72,547; பழ : 3; மணி : 3:22; அரிச :8:1.
2. சிலப் : 21 : 5 - 35;
3. சிந் : 562, 589, 595, 603, 604, 605, 670, 671, 672, 673, 675, 708 - இன்னும் பல.

என்பதை, 'மணிமேகலைக்கு ஏது நிகழ்ச்சி, மலர் நாற்றம் போல் தோன்றி எதிர்ந்துள தாதலின்' என இயைக்க என்பர்.

சொற்களையும் தொடர்களையும் பிரித்து இயைத்துப் பொருள் கொள்ளும் நிலையும் உண்டு. 'மருளின் நோக்கின்' (சிந் : 564) என்பதை, 'மருள் இன் நோக்கு' எனப் பிரிக்க என்றும்; 'மாலைச் சுந்தரச் சுண்ண மேனி மகளிர்' (சிந் : 793) என்பதை, மாலையை யுடைய சுந்தர மேனி மகளிர்' 'சுண்ணம் பூசிய மேனி மகளிர் எனத் தனித்தனி இயைக்க என்றும்; 'ஊன் திகழ் வேலினான் வேள்விக்கு ஊர்மருள்' (சிந் : 823) என்பதை, 'வேலினானுடைய வேள்வி', 'ஊர் மருள் வேள்வி' எனப் பிரிக்க என்றும்; 'வண்டு காண் மகிழ் தேனினங்காண் மது உண்டு தேக்கிடு (சிந் : 892) என்பதை, மது உண்டு மகிழ் வண்டு காள்', மது உண்டு தேக்கிடும் தேனினங்காள்' எனத் தனித்தனிப் பிரித்தியைக்க என்றும், ஐயரவர்கள் குறிப்பிடுவன மேற்கண்ட பொருள்கோள் முறையை விளக்கும். இம்முறை பெருங் கதையிலும் அமையும். 'கற்குங் கேள்விப் 'பொழு தென' (1:36:134) என்பதை, 'கற்கும் பொழுது' எனவும், 'கேள்விப் பொழுது' எனவும் கூட்டுக என்பர்.

பொருள் கோளுக்கு, யாதானும் ஒரு சொல்லை வருவித்துக் கொண்டு பொருள் தரும் முறையையும் ஐயரவர்கள் மேற் கொண் டுள்ளார். சில சான்றுகள் வருமாறு :

'முரிக்காழ் நெற்றி' - காழ் என்பதற்குப் பின் '**காட்டி**' என ஒரு சொல் வருவித்துக் கொள்க. [சிந் : 836].

'பாய' - இதன் பின் '**எய்திய**' என ஒரு சொல் வருவிக்க. சிந் : 1066.

'கடுப்ப' - கடுப்பச் '**சிவந்து**' என ஒரு சொல் வருவிக்க. பெருங் :1 : 34 : 208.

'உரைமோ' - உரைமோ '**என**' ஒரு சொல் வருவிக்க. மணி : 13 : 56.

'மும்முறை வந்தனை செய்து' - 'மும்முறை 'வந்து' வந்தனை செய்து' - '**வந்து**' என்று ஒரு சொல் வருவிக்க. மணி : 17 : 85.

இனி, முடிப்புச் சொல் தந்து, பாடலைப் பொருள் நிலைக்கு ஏற்ப இயைபு படுத்துகின்ற வழக்கத்தினையும் டாக்டர் ஐயரவர் களிடம் காணலாம். இம்முறை பெருங்கதை, மணிமேகலை ஆகிய இரு காப்பியக் குறிப்புரைகளில் மட்டுமே அமைந்துள்ளது. இவ்விரு

காப்பியங்களும் பல அடிகளைக் கொண்ட நீண்ட பாடல்களைக் கொண்டுள்ளமையால், அதன் பொருண்மையைச் சில வரிகளில் தர எண்ணிய ஐயரவர்கள் இத்தகைய 'முடிப்புரை' அமைத்திருக்க வேண்டும் எனலாம். இவ்விரு காப்பியங்கள் போன்றே சிலப்பதி காரமும் மிக நீண்ட பாடல்களைக் கொண்டிருப்பினும், அதன் குறிப்புரை ஏனைய காப்பியக் குறிப்புரை போன்று அமையாததால், இம் முடிப்புரை சிலம்பில் அமையவில்லை. பெருங்கதைக் காப்பியத் தும், இம் முடிப்புரை ஆங்காங்கே சில தொடர்களுக்குத் தரப்பட் டுள்ளனவே யன்றி, மணிமேகலை போன்று காதை முழுமைக்கும் 'வினை முடிவு' தரும் முறை காணப்படவில்லை. மணிமேகலையின் ஒவ்வொரு காதை இறுதியிலும் முடிப்புரையாக இவ் 'வினை முடிவு' இடம் பெற்றுள்ளது. சில சான்றுகள்:

''தக்கோன் தெரிந்து(15)நாடித்(20)தேறி(21)நோக்கியும்(31)
கண்டும்(35) தனித்து உளங் கவல்வோன்(36).

—பெருங்:1:33:36.

''காவலன்(163) எழவும்(165) தேவி(189) எழவும்(190)
உழைக்கல மகளிர்(193) மயங்கவும்(200)நகரமெல்லாம்(201)
எற்றவும்(210) பருகுதும்(212) அருள்(213) என
வருடகாரன் கூற்றை முடிக்க.''

—பெருங்:3:24:213.

''அருந்தவன் உரைப்பச் செம்பியன் விண்ணவர் தலைவனை
நாலேழ் நாளினும் வான்பதி தன்னுள் உறைகென
அவன் நேர்ந்ததைக் கேள்வியோர் கடவாராதலின், சமயக்
கணக்கர் முதலியோர் குழீஇ, 'மறப்பின் இடும்பை செய்திடும்,
பொருந்தாதாயிடும், கால்கொள்க'என முதுகுடிப் பிறந்தோன்
முரசத்தை ஏற்றி இயம்பி ஏத்திச் சுரக்கென வாழ்த்திப்
பொழிக, ஆகுக, நன்கறிந்தீர், துணிபொருளாதலின்
நாலேழ் நாளினும் பரப்புமின், நடுமின், நாற்றுமின்,
மாற்றுமின், பரப்புமின், சேர்த்துமின், செய்யுமின்,
பொருந்துமின், ஏறுமின், அகலுமின் என அக நகர்
மருங்கு விழாவை அறைந்தனன் என்க.''

—மணி: 1:1-72,

இவையன்றிச் சீவக சிந்தாமணியில், ஓரிடத்தில் நின்ற ஒரு பாடலின் தொடர், பல பாடல்களுக்கு அப்பால் கொண்டு கூட்டப் படுகின்ற நிலையைக் காணலாம். இம்முறையை நச்சினார்க்கினியரே பெரிதும் பின்பற்றுவர். இங்கு ஐயரவர்கள், 'ஓலையை' என்பது முதல் 'படுசொல் ஒற்றிவம்மென' (சிந்:671) என்பது வரையில்

உள்ளதை, சீவக: 673-ஆம் பாடலின் பின் இயைத்துக் கொள்க'' என்பது, இங்கு நோக்கத் தக்கது. இங்ஙனம் பண்டை உரையாசிரியர்கள் கொண்ட பொருள்கோள் முறையைப் பின்பற்றியுள்ளார் டாக்டர் சாமிநாத ஐயர்.

10. **கூற்றுமுறை :**

பண்டை உரையாசிரியர்கள், மூலநூல் பாடலின் சில பகுதிகள் ஒருபொருள் தொடர் நிலையாக அமைதலையும், ஒருவரது கூற்றாக அமைதலையும், உரையினூடே சுட்டிச்செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஐயரவர்களும், நூலின் பொருட் பகுதி, கூற்று முறை பற்றிச் சீவக சிந்தாமணி, பெருங்கதை, மணிமேகலை ஆகிய காப்பியங்களில் சுட்டிச் சென்றுள்ளார்.

சீவக சிந்தாமணி குறிப்புரையில், 164-ஆம் பாடல் முதல் 179-ஆம் பாடல் வரை விசையையின் 'கேசாதி பாத வருணனை' என்றும்; 750 ஆம் செய்யுள் முதல் ஐந்து கவிகள் 'பேதோபதேயம்' என்றும்; 1152-53 ஆகிய இருபாடல்கள் சீவகனுடைய உருவ வருணனை என்றும், 1467-ஆம் பாடல் முதல் மூன்று பாடல்கள் 'கேமசரி துதித்தவை' என்றும் குறிப்பிடுவர்.

பெருங்கதைக் குறிப்புரையில், 1:38:291-ஆம் வரி முதல் 'பத்திராவதி' என்னும் பிடியின் இயல்பு கூறப்படுகிறது' என்றும்; 1:40:5-ஆம் அடிமுதல் உள்ளவை விழாக்காணச் சென்றோர், ஆங்காங்கே நிகழும் நிகழ்ச்சிகளைக் கண்டு காட்டுவன' என்றும் பகுத்து உரை வகுத்துள்ளார். அதோடு, சில காதைகளை முழுநிலையில் பல தொடர்களாகப் பகுத்துக் கூறுதலும் உண்டு[1] இவையன்றி 'இதுமுதல் இன்னார் கூற்று' 'இக் கூற்று இன்னாரை நோக்கி இன்னார் கூறியது' என்றிவ்வாறு பல பாத்திரங்களின் கூற்றுக்களை எடுத்துக் காட்டுவதும், கவிக் கூற்றுக்கள் இவையிவை எனச் சுட்டுவதும் மூன்று காப்பியக் குறிப்புரைகளிலும் இடம்பெறும்[2].

---

1. பெருங்: 1:40:24-36, 37-51 ஒரு தொடர் - என்றிவ்வாறு பகுத்துத் தரல்
2. சிந்: 707, 1118-19, 1164, 1503, 1534, 1574, 1586, 1655, 1719, 1770, 1873, 1975, 2949-54 முதலான.
   பெருங்: 1:40:4; 1:47:27; 1:47:157; 2:8:1-5; 2:11:17; 4:8:100-103; 4:13:16-17; முதலான.
   மணி: 1:6, 1:33, 3:42, 4:111, 8:19, 9:9-69, 10:20, 13:62, 14:16- முதலான.

11. பின், முன் நோக்கி உரை வகுத்தல்

பொருள் தொடர்பான சொல், தொடர் முதலான ஒன்றிற்கு மேற்பட்ட இடங்களில் அமையும்போது, ஓரிடத்தில் உரை தந்து, மற்றை இடங்களில், 'அவ்வுரை பார்க்க' எனச் சுட்டிச் செல்வது வழக்கம்; அல்லது பின் உள்ள விளக்கங்களை முன் எழுதுதலும் உண்டு. இவ்வுரையமைப்பும் ஐயரவர்கள் உரையில் அமைந்துள்ளது.

கந்துக்கடன் தன் இறந்த மகவை மயானத்திட்டுச் சீவகனை எடுத்துச் சென்று, மனைவியிடம், 'இன்னுடை அருண் மொழி இனிய செப்பினான்' (சிந்:326) என்பதற்கு நச்சினார்க்கினியர், 'முனிவன் கூறிய இரண்டு மொழியினும் இனிய மொழிகளைக் கூறினான்' என உரை எழுதியுள்ளார். இதனை விளக்கும் ஐயர், 'இதற்கு முன்பு பிள்ளைகள் பல பிறந்து பிறந்து இறந்துபோக, வருந்தியிருந்த கந்துக்கடனுடைய வீட்டிற்கு ஒரு முனிவன் பிச்சைக்கு வர, அவரை வழிபட்டுத் தனது குறையைச் சொல்லியபொழுது, அவர் சில நாளைக் குப் பின்பு உலகத்தை எல்லாம் ஆளுதற்குரிய ஒரு பிள்ளையைப் பெறு வான் என்றும், வளர்ந்து கல்வி கற்று மேன்மையுற்று மணஞ் செய்து கொண்டபின், அவன் நகரத்தரசனால் சிறை கொள்ளப்பட்டு அப்பால் அதனின்றும் நீங்கிச் சுகமுறுவான் என்றும் கந்துக்கடனுக்குச் சொல் லியதாக, சீவக. 1122, 1130-ம் பாடல்கள் தெரிவிக்கும்' எனப் பின் னுள்ள செய்தியை முன் எடுத்து மொழிவர்.

போரில் வென்ற சீவகன் அருகன் உருவைப் பொன்னால் செய்து, கொலைப் பாவம் நீங்க வழிபட்டதாக 820-ஆம் பாடல் கருத்தை விளக்க, 'அரசர், தேற்றவும் தேறாமல் பொருதுபட்டாரேனும், அவர் கட்டியங்காரன்போல் பகையன்மையின் சிறுது பாவம் உளதென்று, அது தீர்தற்குப் பொன்னால் பண்ணவன் உருவம் ஆக்கி விழாச் செய்து களத்துப் பாவம் போக்கினான்' என, சீவக 454-ஆம் பாட லுக்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரையை அப்படியே எடுத்துத் தந்துள்ளார்.

பெருங்கதை 1:34:203-ஆம் அடியில் வரும் 'மும்மணி' பற்றி விளக்கும் ஐயரவர்கள் 121-ஆம் அடியைப் பார்க்க என்றும்; மணி மேகலை 25:39-47 வரிகளில் கூறப்பட்டுள்ள சரித்திரத்தை இந்நூல் 14-ஆம் காதை, 3-ஆம் அடி முதலியவற்றால் உணர்க என்றும் எழுது வர். இங்ஙனம் உரைச் சுருக்கம் கருதியும், கூறியது கூறலைத் தவிர்க்கவும், 'பின், முன் நோக்குக' எனப் பலவிடங்களில் கூறி, உரை யமைத்துள்ளார்.

12. திணை, துறை விளக்கம் :

சங்க இலக்கியம் போன்று, திணை, துறை விளக்கம் காப்பியங்களில் இடம் பெறவில்லை. இருப்பினும் ஆங்காங்கே இவை தொடர்பான செய்திகள் வரின், அவற்றை எடுத்துக் காட்டியுள்ளார் டாக்டர் ஐயர். சங்க இலக்கியத்திலும் இலக்கணத்திலும் அவருக்கிருந்த பயிற்சியும் ஈடுபாடுமே இதற்குக் காரணமாகும். சீவக சிந்தாமணியிலும், பெருங்கதையிலும் இச் செய்திகளைத் தருவர்.

சிந்: 46— ''இச்செய்யுள் திணைமயக்கங் கூறியது; இதனால் மருத நிலமும் குறிஞ்சி நிலமும் கலந்தமை கூறப்பட்டது.

சிந்: 47—இச் செய்யுளால் மருத நிலமும் நெய்தல் நிலமும் கலந்தமை கூறப்பட்டது.

சிந்: 48 —இச்செய்யுளால் முல்லை நிலமும் நெய்தல் நிலமும் மருத நிலமும் கலந்தமை கூறப்பட்டது.

சிந்: 1325-38—இச்செய்யுட்கள் கோவை நூல்களில் காணப்படும் துறைப்பொருள் அமைதி முறையே அமையப் பெற்றன''

என்றிவ்வாறு எடுத்துக் காட்டுவர். இதே போன்று, பெருங்கதை 3:2:15-39-ஆம் வரிகளின் உரையில் 'ஐந்திணையும் இவற்றால் கூறப்பட்டிருத்தல் காண்க' என்பர்.

13. மெய்ப்பாடு சுட்டுதல் :

மெய்ப்பாடும் உவமையும் இலக்கியத்தின் இரு கண்கள். இதனை உணர்ந்தே தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல், உவமையியல் அமைத்துள்ளார். பண்டை உரையாசிரியர்களும் இக் கருத்துடையவராகலின், மூல நூலில் இவை வந்துள்ள இடங்களைச் சுட்டி விளக்கமும் தந்துள்ளனர். இதனைத் தழுவியே டாக்டர் ஐயரவர்களும் தம் குறிப்புரையில், மெய்ப்பாடு, உவமை பற்றிய செய்திகளைத் தொகுத்துத் தந்துள்ளார். சில மெய்ப்பாடுகள் வருமாறு -

'கண்கள் வெம்பனி உகுத்த'—இது பிறன்கட்டோன்றிய இளிவரல் பொருளாக அவலச்சுவை பிறந்தது; இது கருணை எனவும் படும் என்பர் பேராசிரியர்

சிந்: 2058 உ.வி.

'கை விதிர்த்தல்'—ஆச்சரியக் குறிப்பு பெருங்: 1:32:58

'எண் மெய்ப்பாட்டினுள் இரக்கமெய்ந் நிறீஇ'—எண்

மெய்ப்பாடு நகை முதலியன; இரக்கம் — இரக்கத்தை என்றது கருணையை; அஃது அழுகை அல்லது அவலம் எனப்படும்; இங்கே சொன்னது தன்கட்டோன்றிய இழவு பற்றிய அழுகையாம்' பெருங்; 1:35:45

''ஆங்கது கண்ட ஆயிழை அறியாள்
காந்தளஞ் செய்கை தலைமேற்
குவிந்தன'' } இது புதுமை பற்றி வந்த மருட்கை என்னும் மெய்ப் பாடு—மணி: 9: 1-2.

'மெய்ந்நடுக் குற்றனை'—மெய்நடுக் குறுதல் முதலியன இறை பொருளாகப் பிறந்த அச்சம் என்னும் மெய்ப்பாடு'.
—மணி : 10: 29.

'மெல்லியல் இறைஞ்ச...இராகுலன் வெகுளல்'-சாது சக்கரனைத் தன் மனைவி இறைஞ்சக் கண்டு வெகுண்டமை, குடிகோள் பற்றி வந்த வெகுளி என்னும் மெய்ப்பாடு —மணி : 10;31.

14. உவமை முதலான அணிநயம் குறித்தல் :

உவமை, இல் பொருள் உவமை, நிரல்நிறை, உருவகம் முதலான அணி நயங்களை டாக்டர் ஐயரவர்கள் தம் குறிப்புரையில் ஆங்காங்கே எடுத்துக் காட்டியுள்ளார். சில வருமாறு:

இரப்பவரது அகங்கை ஏற்கும் பொழுது அவரது அவாவிற்குத் தக்கபடி பரப்பப் படுவதால் அது பெரிய கண்களுக்கு உவமை யாயிற்று சிந் —: 22.
குலமகளிருடைய அடங்கிய கற்பு வேகம் தணிந்த நீருக்கு உவமை — சிந்: 41
பாம்பின் வாயினின்றும் மீண்டமதி, வேடர் கையினின்றும் மீண்ட நிரைக்கு உவமை—சிந்: 454.
திங்களைச் சிகையில் வைத்தலால் மாடத்திற்குச் சிவ பெருமான் உவமை — சிந்: 598.
உதயணனுக்குக் குழவி ஞாயிறு உவமை; உதயகிரி அவன் ஏறிய யானைக்கு உவமை — பெருங்: 1:33:129.
வீதிகளுக்கு யாறு உவமை— பெருங்: 2:7:7.
சந்திரனுக்கு வெள்ளிக்குடமும் நிலாவிற்குப் பாலும் உவமை
—மணி : 6:7.

இங்ஙனம் உவமை சுட்டிய ஐயரவர்கள், இவ்வுவமைகள் பிற இலக்கியங்களில் வந்துள்ளதை அறிய நேரின் அவற்றை மேற்கோள் விளக்கமாகத் தந்துள்ளார். இங்கு எல்லா உவமைகளுக்கும் தர வில்லை. அதே போன்று, ஓர் உவமை, ஒரே நூலுள் திரும்பத்

திரும்ப எடுத்தாளப்பட்டிருப்பினும், அவற்றையும் தம் குறிப்புரையில் எடுத்துக் காட்டியுள்ளார் டாக்டர் ஐயரவர்கள்.

உவமையின் ஒரு பிரிவான 'இல் பொருள் உவமை' பற்றியும் பதிப்பாசிரியர் தம் உரைக் குறிப்பில் சுட்டுவர். 'நீல மால்வரை நிலனொடு படர்ந் தென' (மணி: 4: 43), 'உருவு கொண்ட மின்னே போல், (மணி: 6:9) என்பன வற்றில் அமையும் உவமை, இல் பொருள் உவமை என்பர்.

......''தவமுது தாயும்
...... யூகியும்
...... தேவியும் இன்றித்
தருமமும் அருத்தமும் காமமும் இழந்தே'' —பெருங்: 3:1:39-48

என்பதிலும்,

''பவளச் செவ்வாய்த் தவள வாள் நகையும் அஞ்சனஞ் சேராச் செங்கயல் நெடுங்கணும் முரிந்து கடை நெரிய வரிந்த சிலைப் புருவமும் குவி முட் கருவியும் கோணமும் கூர் நுனைக் கவை முட் கருவியும்''—மணி: 18: 160—64

என்பதிலும் நிரனிறை அணி அமைந்துள்ளதைத் தம் குறிப்புரையில் விளக்கிக் காட்டுவர் டாக்டர் ஐயரவர்கள். இது போன்று சில உருவகக் காட்சிகளையும் விளக்கியுள்ளார்.[1]

15. சமயச் செய்திகளைத் தொகுத்தல் :

ஐயரவர்கள் பதிப்பித்த நான்கு காப்பியங்களும் புறச் சமயத்தைச் சார்ந்தனவாகலின், சைன, பௌத்த சமயக் கருத்துக்களை அறிந்தோர் வாய்க் கேட்டும், தொடர்புடைய நூல் பல கற்றும், தொகுத்தளித்துள் ளார். இச் சமயச் செய்திகள், சீவக சிந்தாமணி, மணிமேகலைக் காப்பியங்களில் இடம் பெற்றது போல் மற்றை இரு காப்பியங்களிலும் இடம்பெறவில்லை. சைன, பௌத்தர் மரபு, கொள்கை, சம்பிரதாயம், வழக்கு என்றிவ்வாறு பல செய்திகளையும் ஆங்காங்கே தந்துள்ளார். இவையன்றிச் சமயத் தத்துவங்களையும், புராணப் புனைவுரைகளை யும் எடுத்துக் காட்டியுள்ளார். சில வருமாறு :

'துறந்தோரைச் சாதுக்கள் என்பது சைன நூல் மரபு'—சிந்: 1
'உலகம் நித்தியம் என்பது சைனர்களுடைய கொள்கை'—சிந்: 1
'இந்திரன் சைனர்களால் உயர்ந்த தெய்வமாகக் கொண்டாடப் படுவான்—சிந்: 35

'யோசனையின் அளவு பலவகைப்பட வழங்குகின்றது. நாற் காதந்தான் யோசனை என்பது சைனருடைய கொள்கை—சிந்: 99

'பூசையை யாகம் என்பர் சைனர்'—சிந்: 138

'தேவருடம்பைப் பொன்னுடம்பு என்பர் சைனர்'—சிந்: 325

'இராகுவின் வாய்ப்பட்ட சந்திரனைத் திருமால் மீட்டனர் என்பது சைனர்கள் கூறுவதொரு கதை—சிந்: 454

'ஏழு கடல்களுள் பாற்கடலை ஐந்தாவதாகக் கூறுதல் சைன சம்பிரதாயம்' சிந்: 3035

'சுவர்க்கம், நாகருலகம் முறையே புகழினும் போகத்தினும் சிறந்தன என்பது சைன நூல் துணிபு'—பெருங்: 1:47: 206-7

'வினை தீர்த்த உயிர் மேலே சென்று, எல்லா உலகிற்கும் மேலதாகிய சித்த பதத்தை அடையும் என்பது சைன நூல் துணிபு—பெருங்: 1: 40: 186.

'வித்தியாதரர்க்கு இருப்பிடமாக வெள்ளி மலையொன்றுண்டு என்பது சைனர் கொள்கை—பெருங்: 3: 3: 118—19

'புத்தன் பாதத்தை 'மணி பத்மம்' என்றலும் அதனை வழிபடுவோர் அது பற்றி 'ஓம் மணிபத்மேஹூம்' என்ற மந்திரத்தை ஜபித்தலும் பௌத்த சமய மரபு'—மணி: 3: 65: 66

'இல்லறத்தோர் எல்லோரும் உண்ட பின்பு, பௌத்த சந்நியாசிகள் பகலில் உச்சிப் போதில் பிச்சைக்குச் செல்ல வேண்டுவது விதி' மணி: 5: 60.

'மனிதனுடைய பிறப்பு இறப்புக்களுக்கு முறையே சூரியனுடைய தோற்றம், மறைவுகளை உவமை கூறுவது பௌத்த சமய மரபு'—மணி: 9: 45-46; 24: 102

'துறந்தோர்களில் ஆண் பாலரைப் பிக்ஷுக்கள் என்றும் பெண் பாலரைப் பிக்ஷுணிகள் என்றும் கூறுதல் பௌத்த சமய மரபு' —மணி: 15: 58

'பௌத்தரில் இல்லறம் நடத்தும் ஆடவரையும் மகளிரையும் முறையே உபாஸகர் என்றும் உபாஸகைகள் என்றும் கூறுதல் மரபு'—மணி: 28: 12.

இவையன்றிச் சமயக் கொள்கைகள் பலவும் ஆங்காங்கே எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. அருகன் பற்றிய விளக்கம் (சிந்:2), பன்மாண்

1. சிந்: 1446, மணி: 18: 159.

குணங்கள் (சிந்: 3), ஸப்த பயம் ஏழு (சிந்: 179), ஆறு மலைகள்—பொய்கை ஆறு—அதில் உரையும் தெய்வ மங்கையர் அறுவர் பற்றிய விளக்கம் (சிந்: 183) இரத்தினத் திரயம் (நன் ஞானம்—நற் காட்சி—நல்லொழுக்கம்) பற்றிய விரிவு (சிந்: 374), தரிசன மோகனீயப் பிர கிருதிகள் ஏழு (சிந்: 376), உயிர் போகும் பல்வகை வழிகளும் அதற் குரிய சமயமும் (நேரம்—சிந். 948), சோடச பாவனைகள் பதினாறு (சிந்: 3133), எண் வகைச் சாரணர் (சிந்: 2743) பஞ்ச கல்யாணம் (சிந்: 3116), கணதரர் பதினொருவர் (சிந்: 3027) தேவர்கள் அருகனுக்குச் செய்யும் எண் வகைச் சிறப்புக்கள் (சிந்: 3013, 2808) சமவ சரணம் (சிந்: 3003), ஞானம் ஐந்து (சிலப்: 10: 177), விரதம் மூன்று (சிலப்: 10: 81), ஆகமம் மூன்று (10: 189), அங்காகமம் பன்னிரண்டு (சிலப்: 10: 184) குலங்கள் ஆறு (பெருங்: 5: 3: 111) முதலான பற்றி ஐயரவர்கள் எழுதும் விளக்கம், சைன சமயக் கொள்கை விளக்கமாக அமைவதோடு, ஐயரவர்களின் சைன சமய அறிவும் அங்கை நெல்லி எனப் போதரும்.

இதே போன்று மணிமேகலையில் பௌத்த சமயச் செய்திகளைத் திரட்டித் தந்துள்ளார். தெய்வலோகம் ஆறு, பிரமலோகம் இருபது (மணி: பதி: 28-29), உருப-அருபப் பிரமர் (மணி : 6:176-77), எண்வகை நரகர் (மணி : 6:181), சாது சக்கரன் (மணி: 10: 24) பற்றிய விளக்கமும்; துக்கம்—துக்க நிவாரணம்—துக்கோற் பத்தி—துக்க நிவாரண மார்க்கம் (மணி: 2: 64-67) பற்றிய செய்திக் குறிப்பும், அளவை வாதம் முதலான பற்றிய தத்துவ விளக்கமும் (மணி: 27-ஆம் காதை), பஞ்ச சீலம்—பழைய புத்தர் 26-பேர் முதலான பற்றி மணிமேகலை 30-வது காதை தரும் சமய எண்ணங் கள் முதலான ஐயரவர்களின் பௌத்த சமய அறிவிற்குச் சான்று. இவையன்றிப் பல இடங்களில் இச்சமயச் செய்திகளை விளக்கிச் செல்வர்.[1] இங்கு முழுக்க முழுக்கச் சிறந்த சைவராக-சிவ பக்தராக-திருவாவடுதுறை ஆதீனத்தின் வளர்ப்புப் பிள்ளையாக—வாழ்ந்த டாக்டர் ஐயரவர்கள், புறச்சமயமான சைன, பௌத்த மதக் கொள்கை களில் ஈடுபட்டு, அவற்றின் கருத்துக் கோவைகளை அள்ளி வழங்கி யிருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இது ஐயரவர்களின் நேர்மை உணர்வையும், பிற சமயத்தை உரிய முறையில் மதிக்கும் நல் உள்ளத்தையும், ஆராய்ச்சித் திறனையும் காட்டும்.

16. புராணப் பொழிவுரைத்தல்:

பண்டை இதிகாச, புராணக் கதைக் குறிப்புக்களையும், கதை

---

1. மணி: 11:, 66, 70; 12:73; 21:48,57; 24:46-47; 26:45, 66 முதலான:

மாந்தர்களையும் தம் குறிப்புரையில் ஆங்காங்கே சுட்டி விளக்கமும் தந்துள்ளார் டாக்டர் சாமிநாத ஐயர். இவற்றில் இந்து சமயப் புராண, இதிகாசச் செய்திகளே, இங்குக் கொள்ளப் பட்டன. ஆயினும் இச்செய்திகள் பல சைன நூலில் உள்ளதாக ஐயர் குறிப்பிடுவர். ஏனைப் பௌத்த, சமண சமயத்தைச் சார்ந்த புராணக் கூறுகள் மேலே தந்துள்ள சமயச் செய்திகளில் அடங்கியுள்ளன. ஐயரவர்களின் குறிப்புரையில் இடம் பெற்ற சில புராண, இதிகாசச் செய்திகள் சில வருமாறு:

காமன்-சாமன்: காமன்-கண்ண பிரானுக்கு உருக்குமிணிடயிமாகத் தோற்றிய பிரத்தியும்னன்; சாமன்-இவன் கண்ணபிரானுக்கு ஜாம் பவதி இடமாகத் தோற்றிய சாம்பன்; இவர்களுடைய வரலாறு 'பிரத்தியும்ந சரிதம்' என்னும் சைன நூலில் தெரிகிறது[1]

திலோத்தமை-பிரம்மா-இந்திரன்: பிரம்மா, காம மிகுதியால் தேவ கன்னியரை அடைய முயல, அவர்கள் மதியாது போக, இந்திர பதவி அடைய 3½ கோடி வருடம் தவஞ் செய்தார்; தன் பதவிக்கு ஆபத்து வருவதை உணர்ந்த இந்திரன், தேவ குருவை வேண்டி, திலோத்தமையைப் படைத்தான். அவள் பிரம்மா முன் ஆட, அது காணத் தன் தவத்தைச் செலவிட்டு நான்கு முகம் படைத்தார். இங்ஙனம் பிரம்மா தவத்தை திலோத்தமை கெடுக்க, அவர் தேவ கன்னியரைக் காமபரவசத்தால் துன்புறுத்தினர். அறிந்த சதாசிவ மூர்த்தி, இவரது மேல் தலையைக் கிள்ளி எறிந்தார். இக்கதை 'தர்ம பரீக்ஷை' என்னும் சைன நூலில், மூன்றாம் படலத்தில் கூறப் பட்டுள்ளதாக ஐயரவர்கள்குறிப்பிடுவர்.[2] வசிஷ்டரும், அகஸ்தியரும் திலோத்தமை பிள்ளைகள் என்பதை மணிமேகலை உரையில் குறிப் பிடுவர். மேலும், 'இப்பூவுலகில் தானம் சீலம், முதலிய வற்றில் சிறந்த பௌத்தர் உளராயின் அவர்களுக்கு ஏதேனும் துன்பம் உளதாகின் இந்திரன் பாண்டு கம்பளம் நடுங்கும்; அக்குறிப்பால் அவன் அத்தீமை நீக்குவான்' என்ற பௌத்த இந்திரன் பற்றிய கதையையும் ஐயர் குறிப்பிடுவர்.[3]

சிவன் - உவமை: கங்கா தேவியை மணந்தது தெரிந்து ஊடிய உமா தேவியை மகிழ்வித்தற் பொருட்டு, சிவபெருமான் தமது திரு மேனியிற் பாதியைக் கொடுத்தருளினார். இக்கதையும் தர்மபரீக்ஷை

---

1. சிந்: 43.
2. சிந்: 207. கு.உ.
3. மணி: 13:94-97, கு.உ & 14:28-29 கு.உ.

நூலில் உள்ளதாகக் குறித்துள்ளார்.

திருமால்: இரணியனைக் கொன்றமை, அகளங்காஷ்டகம் என்னும் சைன நூலில் கூறப்பட்டுள்ள தென்பர். இங்கு அருகனையே 'மால்' எனக் குறித்தார் என்றும் ஐயரவர்கள் குறிப்பிடுவர்; அதோடு கண்ணன் யமுனையாற்றில் குருந்தொசித்த கதையும் சைனர்களுக் குரியதாகக் கூறப்படுவதைச் சுட்டுவர். சீவகனைக் கொல்ல வந்த அசனிவேகம், கண்ணபிரானைக் கொல்ல வந்த குவலயாபீடம் போன்றிருந்த தெனக் குறிப்பிடும் டாக்டர் ஐயர், அக்கதைக் குறிப்பையும் எடுத்துக் காட்டியுள்ளார். கஞ்சனுக்கு (கம்சன்) நட்புள்ள தெய்வங்களாகிய பூதனை, கழுதை, குதிரை, மருதமரம், பனை, யானை சகடம் என்ற ஏழனுள் யானையாகிய தெய்வமே கண்ணனைக் கொல்ல வந்தது; அதனைக் கொல்லாது விட்டமையின் கண்ணபிரான் 'கரிவரதன்' ஆயினான் என்பர்.[2]

இராமாயண மகாபாரதக் கதைக் கூறுகள் சிலவும் ஐயரவர்களின் குறிப்புரையில் இடம் பெறும். தருமனை அரிதிற் கண்ட தனஞ்சயன் போல' எனும், திருத்தக்கதேவர் எடுத்தாண்ட உவமையை விளக்கும் ஐயர், 'பாண்டவர் துவைத வனத்தில் தங்கியிருந்த பொழுது, இந்திரராசன் என்னும் வித்தியாதரனுடைய பகையைக் கடிதற்குத் தனியே சென்ற அருச்சுனன் மீண்டு வருவதற்கு ஐந்து வருடம் சென்றன' என்ற கதையைக் குறிப்பிடுவர். உதயணன் நடுவு நிலைமையை விளக்கும் போது, தம்மைக் கொல்லப் பிறந்த திட்டத்துய்ம்மன் முதலியவர்கட்கும் துரோணர் படைக்கலப் பயிற்சி அளித்த செய்தியை ஒப்பிட்டுக் காட்டுவர்.[3] விந்தியமலையில் செல்வோரை 'விந்தாகடிகை' தன் சாயலால் இழுத்துத் தன் வயிற்றில் அடக்கும் மணிமேகலைச் செய்தியை விளக்கும் டாக்டர் ஐயர், 'பிரமதேவரிடம் வரம் பெற்ற சிவஹ்மிகை என்னும் அரக்கி, இலங்கை சென்ற அனுமனை நிழலால் இழுத்துத் தடைப்படுத்திய வன்மீக இராமாயணச் செய்தியைச் சான்று காட்டுவர்.[4]

'முன்னொரு காலத்தில் அக்கினி தேவன் சப்தரிஷிகளுடைய மனைவிகளை விரும்பி, அந்தச் சந்தாபம் பொறுக்க மாட்டாமல், காட்டுக்குப் போன பொழுது, அவன் எண்ணத்தை அறிந்த ஸ்வாகா தேவி, அம்முனிவர் எழுவர் மனைவிகளுள் அருந்ததி ஒழிந்தொரு

1. சிந்: 208
2. சிந்: 209, 961, 984 உ·கு
3. சிந்: 1724, பெருங்: 1:37:57-62.
4. மணி: 20:118-20.

டைய வடிவத்தை முறையே எடுத்து, வேறுவேறு காலங்களில் சேர்ந்து அவன் வேட்கையைத் தணித்தாள் என்ற வியாசபாரதச் செய்தியை மணிமேகலைக் காப்பியத்தில் எடுத்துக் காட்டுவார். அதோடு விசுவாமித்திரன் நாயூன் தின்ன முயன்ற புராணச் செய்தியையும் இங்குக் குறிப்பிடுவர்.[1]

காவிரி நதி பற்றிய புராணக்கதை ஒன்றையும் மணிமேகலைக் குறிப்புரையில் எடுத்துரைப்பர். அக்கதை வருமாறு: இராஜ ரிஷியும் யோகிகளிற் சிறந்தவருமாகிய கவேரன் என்பவர், முத்தி பெறுதலை விரும்பி; பிரமதேவரைக் குறித்து அரிய தவம் செய்து, அவரருளால் விஷ்ணு மாயையைத் தன் புத்திரியாக அடைந்து முத்தி பெற்றனர் என்றும்; பின்பு அக்கன்னி பிரமதேவர் கட்டளையின் படி நதி வடிவு கொண்டு சென்றமையால் அந்நதி கவேர கன்னி என்றும் காவேரி என்றும் பெயர் பெற்றதென்றும் ஆக்நேய புராணத்தின் காவேரி மகாத்மியம் 23-ஆம் அத்தியாயம் கூறும்.''[2]

'வெள்ளிமலை' பற்றிய ஒருபுராணச் செய்தியும் ஐயரவர்களால் சீவகசிந்தாமணி குறிப்புரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இம் மலையில் தக்ஷிண சிரேணி, உத்தர சிரேணி என இரண்டு பகுதிகள் உள்ளன என்றும், முதலாவதில் 50 - பட்டணங்களும், இரண்டாவதில் 60-பட்டணங்களும் உள்ளன என்றும் மேருமந்திர புராணம் கூறும் செய்தியை இங்குத் தந்துள்ளார்.[3] இங்ஙனம் மூலநூல் கருத்து விளக்கத்திற்குப் பல புராண, இதிகாசத்தின் கதைக் கூறுகளைத் துணைக்கொண்டுள்ளார் டாக்டர் சாமிநாத ஐயர்.

17 வரலாற்றுக் குறிப்புரைத்தல் :

வரலாற்றுச் சிறப்பு மிக்க பழந்தமிழ் மன்னர்கள் பற்றிய ஒரு சில குறிப்புக்களை ஐயரவர்கள் தம் உரையில் சுட்டியுள்ளார். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாக, பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழு குட்டுவன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் கரிகாற்பெருவளத்தான், மாவலி மரபில் வந்த பாணர்குல அரசர்கள் ஆகியோர் அமைவர். இங்கு இளமையில் ஆட்சி பெற்ற கரிகாலன், முதுமைக் கோலம் பூண்டு முறை வழங்கிய செய்தியும், உதியஞ்சேரன், பாரதப் போரில் பெருஞ்சோறு வழங்கியதும், பல் யானைச் செல்கெழு குட்டுவன் பாலைக் கௌத

1. மணி: 18:92-6; 11:87.
2. மணி: 9:52.
3. சிந்: 395.

மனாருக்கு அருளியதும் ஆகிய செய்திகள் குறிப்பிடத்தக்கன. இச் செய்திகள் சங்க இலக்கியச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு இங்கு ஐயரவர்களால் தரப்பட்டுள்ளன.[1]

18. இசை, நாடக நூல் கருத்துரைத்தல் :

இசை, நாடக நூல் கருத்துக்கள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், பெருங்கதைக் காப்பியங்களில் இடம் பெற்றுள்ளமையால், அவை பற்றிய விளக்கங்களை ஐயரவர்கள் குறிப்புரையில் ஆங்காங்கே காணலாம். அடியார்க்கு நல்லார், அரும்பதவுரையார், இக்கருத்துக் களை மிகுதியாகத் தந்திருப்பினும், மேலும் சில விளக்கங்களைக் குறிக்கத் தவறவில்லை.

சீவக சிந்தாமணியில், பண் பற்றி ஐயரவர்கள் தரும் விளக்கம் இங்கு நோக்கத் தக்கது.

> ''பண்—நிறைந்த நரம்புகளையுடைய இராகம்; நிறை நரம்பிற்றே பண்ணெனலாகும்' (திவாகரம்). ஏழு சுரங்களையும் உடைய இராகம் என்றபடி; அது வடமொழியில் ஸம்பூர்ண ராகம் என்றும், ஜனக ராகம் என்றும் கூறப்படும்; எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களில் உள்ளவை எல்லாம் ஸம்பூர்ண ராகங்களே; குறைந்த நரம்புகளையுடைய இராகம் திறம் எனப்படும்; குறை நரம்பிற்றே திறம் எனப்படுமே (திவாகரம்). இவற்றின் விகற்பமெல்லாம் இசை நூல் வல்லார் வாய்க் கேட்டுணர்க......
> *சிந்*: 51:

இப்பண்ணின் வகை நான்கென்றும், அவற்றில் பாலைப் பண்ணின் வகை ஏழு எனவும் எடுத்துக் காட்டுவர்.[2]

சிலப்பதிகார, அரங்கேற்று காதை உரையில், விநோதக் கூத்தைப் பற்றி அடியார்க்கு நல்லார்.

> ''அறுவகை நிலையும் ஐவகைப் பாதமும்
> ஈரெண் வகைய வங்கக் கிரியையும்
> வருத்தனை நான்கு நிருத்தக்கை முப்பதும்
> அத்தகு தொழில வாகு மென்ப''

என விளக்கி, 'இவை விரிப்பின் பெருகும்' எனச் சுட்டுவர். இதற்கு ஐயரவர்கள் சுத்தானந்தப் பிரகாச நூலிலிருந்து விளக்கம் தந்துள்ளார்.

---

1. பெருங்: 33:53; மணி: 4:107-8; 19:54;. 28:104
   சிலப்: 23:55,63-உரை பார்க்க.
2. பெருங்: 1: 37: 115.

அன்றியும், சுவையின் பின்னர்க் காட்டுதற்குரிய பத்துவகை சாதி, தேசிக்குரிய கால்கள், வடுகிற்குரிய கால்கள், உடலவர்த்தனை, ஆண் கை, பெண்கை, அலிக்கை, பொதுக்கை, அரங்க அமைப்பு, மூவகைக் கீத வடிவு பற்றிய விளக்கங்களைச் சுத்தானந்தப் பிரகாச நூலிலிருந்தே எடுத்துக் காட்டுவர்.[1]

அறுவகை நிலையாவன: வைணவம், சமநிலை, வைசாகம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம் என்பன.

ஐவகைப் பாதமாவன: சமநிலை, உற்கடிதம், சஞ்சாரம், காஞ்சிதம், குஞ்சிதம் என்பன.

அங்கக்கிரியை பதினாறாவன: சரிகை, புரிகை, சமகலி, திரிகை, ஊர்த்துவ கலிகை, பிருட்டகம், அர்த்த பிருட்டகம், சுவாத்திகம், உல்லோலம், குர்த்தனம், வேட்டனம், உப வேட்டனம், தானபதப் பிராய விருத்தம், உக்ஷேபணம், அவக்ஷே பணம், நிகுஞ்சனம் என்பன.

வருத்தனை நான்காவன: அபவேட்டுதம், உபவேட்டிதம், வியாவர்த்திகம், பரா வர்த்திதம் என்பன.

நிறுத்தக்கை முப்பதாவன: சதுரச்சியம், உத்துவீதம், தல முகம், சுவத்திகம், விப்பிர கீர்ணம், அருத்தரேசிதம், அராள கடகா முகம், ஆவித்த வத்திரம், சூசீமுகம், இரேசிதம், உத்தான வஞ்சிதம், பல்லவம், நிதம்பம், கசதநிதம், இலதை, கரிக்கை, பக்க வஞ்சிதம், பக்கப் பிரத்தியேகம், கருட பக்கம், தண்ட பக்கம் ஊர்த்துவ மண்டலி, பக்க மண்டலி, உரோ மண்டலி, உரப்பார் சுவார்த்த மண்டலி, முட்டிகச் சுவத்திகம், நளினீ பதுமகோசம், அலபதுமம், உற்பணம், இலளிதை, வலிதை என்பன.

சாதி பத்து வகை: நாடகம், பிரகரணம், பாணம், பிரகசனம், டிமம், வியாயோகம், சமவாகரம், வீதி, அங்கம், ஈகா மிருகம் என்பன.

தேசிக்குரிய கால்கள்—*24*: கீற்று, கடிசரி, மண்டலம், வர்த் தனை, கரணம், ஆலீடம், குஞ்சிப்பு, கட்டுப் புரியம், களியம், வள்ளாளம், கட்டுதல், கம்பித்தல், ஊர்தல், நடுக்கல், வாங்குதல், அப்புதல், அனுக்குதல், வாசிப்பு, குத்துதல், நெளிதல், மாறுகால், இட்டுப் புகுதல், சுற்றி வாங்குதல், உடற்பிரிவு.

---

1. *சிலப்*: 3: 12, 13, 16, 18, 150-வரிகளின் உரை, பக். 81, 85, 90, 92, 113—15, 119

வடுகிற்குரியகால்கள்—*14*: சுற்றுதல், எறிதல், உடைத்தல், ஒட்டுதல், கட்டுதல், வெட்டுதல், போக்கல், நீக்கல், முறுக்கல், அணுக்கல், வீசல், குடுப்புக் கால், கத்திரிகைக் கால், கூட்டுதல்.

உடல் அவர்த்தனை-*9* : மெய் சாய்த்தல், இடை நெரித்தல், சுழித்தல், அணைத்தல், நூக்குதல், அசைத்தல், பற்றல், விரித்தல்' குவித்தல்.

கீத வடிவு—3 : உக்கிரம், துருவை (துருமை), ஆபோகம் (ஆயோகம்) என்பன.

மேலும், 'கதி—லயகதி ; சச்சபுடம் முதலிய ஐவகைத் தாளம்'[1] என்றிவ்வாறு பதவுரை தருவதும், ஐயரவர்களின் இசையறிவிற்குச் சான்றாக நிற்கும். சரீரத்தை வீணையாகக் கூறும் இசை நூலார் மரபினையும்[2] டாக்டர் ஐயரவர்கள் எடுத்துக் காட்டுவர்.

19. **வடநூலார் வழக்கு தரல்** :

மூல நூல், அல்லது உரை நூல்களில் வரும் பெயர், சொல், தொடர், கருத்து முதலான வட நூலாரின் கருத்துக்களோடு தொடர்புடையதாக இருப்பின், அல்லது, வடநூல் கருத்தையே தமிழ்ப் படுத்தி மூல, உரை நூலார் தந்திருப்பின், அவற்றின் மூல வடிவையும் எடுத்துக் கூறுதலை ஐயரவர்கள் மரபாகக் கொண்டுள்ளார். சில இடங்களில் 'வடநூலார் வழக்கு' என்று சுட்டி, அவை இன்ன நூலில் உள்ளன எனக் குறிப்பதில்லை. இவை பொதுவான வடமொழி மரபாக இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. சில வருமாறு :

'மருவாயிரத்தெட்டு'—பத்மம், சங்கம், மத்ஸ்யம், ஸ்ரீவத்ஸம், முதலிய இரேகைகள் நூற்றெட்டும், மஸூரிகை முதலிய அடையாளங்கள் தொள்ளாயிரமும் ஆக மறுக்கள் ஆயிரத்தெட்டென்று 'முநிஸுவ்ரத காவ்யம் என்னும் வடமொழி நூலும்; ஸ்வஸ்திகம், நந்தியாவர்த்தம் முதலிய இரேகைகள் நூற்றெட்டும், மஸூரிகை முதலிய அடையாளங்கள் தொள்ளாயிரமும் ஆக மறுக்கள் ஆயிரத்தெட்டென்று' புருதேவசம்பு' என்னும் வட நூலிலும் சொல்லப்பட்டுள்ளன என்பர்'.—சிந்:2.

'சரை'—சரையு; க்ஷத்திர சூளாமணி முதலிய வட நூல்களில், 'சரை' என்ற பெயருடைய நதியொன்று ஏமாங்கதத்தில்

1. பெருங் : 1: 37: 112
2. சிந்: 658, உ.வி.

உண்டென்று கூறப் படவில்லை. சிந்: 39.

'இராசமாபுரத்துள்ள சினாலயம் ஒன்றில் 'யமதரர்' என்று பெயர் பெற்ற பெரிய சைன முனிவர் ஒருவர் இருந்ததாகக் கத்திய சிந்தாமணி முதலியவற்றால் தெரிகிறது. சிந்: 139.

'சச்சந்தனுக்குத் தேவியர் பலர் உண்டு என்பதும், போக மங்கையர் ஐந்நூற்றுவர் என்பதும், க்ஷத்திர சூளாமணி முதலிய வட நூல்களால் அறியப்படும்'—சிந்: 283. உ.வி.

தெளியும் பொருள் ஐந்து, ஆறு, ஒன்பது }—ஐந்தினைப் பஞ்சாஸ்தி காயம் என்றும், ஆறினை ஷட் திரவியம் என்றும், ஒன்பதினை நவபதார்த்தம் என்றும் கூறுவர் வடநூலார். சிந்: 2814

வண்ண மகடூஉ—மகளிர்களை அலங்கரிப்பவள்; சிற்பகாரி என்பர் வடநூலார். பெருங்: 1:41:62

யாறு—க்ஷிப்பிரா நதி என்று வட நூல்களால் தெரிகிறது. பெருங்: 1: 41: 124

தவத்தினரைச் சாப சரபர் என்பர் வடநூலார்—மணி: 5:16

உலக அறவி—ஊரம்பலம்; எல்லாச் சாதியாரும் வந்து தங்குதற் குரிய தரும சாலை; இதனை லோகோபகாரிகா' என்பர் வடநூலார் மணி: 7:92—93.

உவாத்தி — உபாத்தியாயன் என்னும் வடமொழிச் சிதைவு; வேதத்தின் சில பாகத்தையேனும் வேதங்களையேனும் சீவனத்தின் பொருட்டு ஓதுவிப்பவன் உபாத்தியாயன்; இதனை மனுஸ்மிருதி - 2 - ஆம் அத்தியாயம் 141- ஆம் சுலோகத்தில் காண்க. — மணி: 13:4.

காம நூல் — பூவிசேடம்; இதனை மன்மத தந்திரம் என்பர் வடநூலார் ... சிலப்: 2:42-45

களவு நூல் 'ஸ்தேய சாஸ்திரம்' என்று வழங்கப்படுகின்ற தென்றும், அந்நூலைச் செய்தவர் கசர் என்பவரின் ஆசிரியராகிய கர்ணீஸுதர் என்பவர் என்றும் வடமொழியாளர் கூறுவர் — சிலப்: 16:162-65 உரை.

இங்ஙனம் பல வடநூலார் கருத்துக்களைத் தொகுத்தளித்துள்ளார். இவற்றில் பல; தமிழ்ச் சொல் அல்லது தமிழ்ப் படுத்தப்பட்ட சொற்களுக்கு இணையான வட சொற்களாக அமைந்துள்ளன. இவ்வகையான குறிப்புக்கள் ஒப்பியல் இலக்கிய ஆய்வுக்கு ஓரளவு துணை செய்யும்.

20. உலக வழக்கு முதலான எடுத்துரைத்தல்:

உரையாசிரியர்கள் நூற்கண் அமையும் வழக்குச் சொற்களையும் செய்திகளையும் சுட்டிச் செல்வதோடு, ஆங்காங்கே தொடர்புடைய பழமொழிகளையும் குறித்துச் செல்வதைக் காணலாம். டாக்டர் ஐயரவர்களும், இவ்வகையில் உலக வழக்கு, நாடக வழக்கு, அரசியல் — சமய மரபுகள், பழமொழிகள் முதலானவற்றை ஆங்காங்கே சுட்டிக் காட்டியுள்ளார். இவற்றை 'வழக்கு', 'மரபு', 'இயல்பு' என்ற சொற்களால் குறித்துள்ளார், இவை அவரின் உலகியல் அறிவிற்குச் சான்றாக அமைவன.

பழமொழி

1. 'எள் போட்டால் விழாது' என்பது நெருக்கத்தைக் குறிப்பதற்கு வழங்கும் பழமொழி — சிந்: 93.
2. 'மறக்குடி அறஞ் செய்யக் கெடும்' என்பது ஒரு பழமொழி — சிந்: 449
3. 'கள்ளா வா, புலியைக் குத்து' — சிந்: 741
4. 'வெறுவாய்க் கிலை கெட்டவன்' ,, 1230
5, 'பரணி பிறந்தான் தரணி ஆள்வான் ,, 1812
6. 'விற்றால் பையிலே வில்லாக்கால் கையிலே' —பெருங்: 3:3:76.
7. பிறந்த நாளும் செவ்வாய்க் கிழமையும்' எனத் தீய காலத்தைக் குறித்து வழங்கும் பழமொழி ஈண்டு அறியத் தக்கது — பெருங்: 3:27:133-34
8. 'பாம்பறியும் பாம்பின் கால்' — பெருங்: 4:13:149.
9. 'கடிஞையிற் கல்லிடுவார் இல், — மணி: 13:103,

இப்பழமொழிகள் சிலவற்றை மட்டுமே ஆசிரியர் விளக்கிச் சென்றுள்ளர் (1,7), இங்குக் குறிக்கப் பெறும் பழமொழிகள் சில மூல நூலில் எடுத்தாளப் பட்டுள்ளன. வேறு சில விளக்கத்திற்காக உரையாசிரியரால் தரப்பட்டவை (2,5).

உலகவழக்கு: உலக வழக்குச் செய்திகளை இக்கால வழக்கு, வட்டார வழக்கு என்று சுட்டுவதோடு 'மரபு' என்ற நிலையிலும் பல செய்திகளைத் தொகுத்தளித்துள்ளார். இங்குப் பொதுநிலையில் 'வழக்கு' என்றும் 'மரபு' என்றும் சுட்டுவதன் வேறுபாடு என்ன என்பது விளங்க வில்லை. இவை இரண்டும் ஒன்றே என எண்ணத் தோன்றுகிறது.

'சிக்க' என்பது **குடநாட்டில்** வழங்குகின்றது. சிந்: 16.

'பாய் கட்டின கட்டை வண்டியை **மலைநாட்டார்** 'கொல்லா பண்டி' என்று வழங்குவர்' ... சிந்: 859

'இன்ன நாளில் பிறந்த இன்னான் என்றல் **மலைநாட்டில்** இக்காலத்தும் வழங்குகின்றது — சிந்: 1682.

'கொட்டம் — ஒருவகைப் பெட்டி; குங்குமம், மஞ்சள் முதலிய பொருள்கள் வைத்தற்குரியது. பனங் குருத்தாற் செய்யப் படும் சிறிய பெட்டி இக்காலத்தில் இப்பெயருடன் **பாண்டி நாட்டில்** வழங்குகிறது — பெருங்: 1:46:217

கையுயர்த்திப் போய்விடுக என்று குறிப்பித்தல் — இவ்வழக்கம் **மலைநாட்டில்** மிகுதியாக உள்ளது, மணி: 5:55

— இவை வட்டார வழக்காக ஐயரவர்கள் காட்டுவன.

'சௌளம்' — இருது சங்க மனம் முதலிய பதினாறு கருமங்க ளுள் என்று; அது குடுமி வைத்தல் என்று இக்காலத்து வழங் கும் சிந்: 365

'புலி முகப்பு' — இப்பெயர் இக்காலத்துச் சிலவிடங்களில் ஒலி முகம் என்று வழங்குகின்றது — சிந்: 1836

'காப்' பென்பது மஞ்சட் காப்பு, மாக்காப்பு, எண்ணெய்க் காப்பு, மிளகுக் காப்பு என்று இக்காலத்தும் இருவகை வழக்கிலும் வழங்கும்- சிந்: 1873

மன்னவன் ஆடிய பொன் ஆதுரர் முதலியோர்க்குக் கொடுக் கப்படும். திருவனந்தபுரத்து அரச பரம்பரை முதலியவற் றில், இக்காலத்தும் இது நடைபெறுகின்றது.
— பெருங்: 1:39:15-16.

— இவை இக்கால வழக்காக ஆசிரியர் தருவன.

அரசனுக்குப் பிழை செய்தோர் தம்முடைய அளவுள்ள பொற் பாவை ஒன்றைச் செய்வித்துத் தண்டமாக இறுத்து அவன் சினத்தைப் போக்கிக் கொள்வது பண்டைக் காலத்தில் ஒரு சாரார் வழக்கம்... பெருங். 1:40; 371-74

இது **பண்டை** வழக்காகச் சுட்டப்பெறும்.

இரண்டடி உயரமுள்ளவனைக் குறளன் என்றும், மூன்றடி உயர முள்ளவனைச் சிந்தன் என்றும் கூறுவது மரபு. சிந். 631

உத்தம இலக்கணம் அமைந்த குதிரையைக் 'குதிரை நம்பிகான்' என்று கூறுதல் மரபு; இது வைணவ சம்பிரதாயத்திலும் வழங்கு கின்றது. சிந். 2157

மலர்களையும் மாலைகளையும் செப்பில் வைத்தல் மரபு.
பெருங். 1:33:76

தந்தை மகளிரை வலத்துடையின் மீதே வைத்தல் மரபு.
பெருங். 1:34:157

நல்ல காரியத்திற்கு நால்வரை விடுதல் ஒருமரபு.
பெருங். 1:37:277

மாலையை நூலால் கட்டுதலும் மரபு; பெருங்.. 1,42:70-71

மங்கையருடைய கூந்தலில் சௌபாக்கியவதி என்ற பெயருள்ள ஒரு தெய்வம் உண்டென்றும், அதனால் அவர் எப்பொழுதும் நீராடுதல் மரபன்று என்றும் கூறுவர். பெருங். 1:42:128-29

சபதம் செய்வோர் அதற்கு அறிகுறியாகக் கல்லாடையை உடுத்திக் கொள்ளுதல் மரபு. பெருங். 1:46:97

பறவையின் ஒலியை வீச்சென்றல் மரபு. பெருங். 1:55:89

கணவனைப் பிரிந்த மகளிர் கூந்தல் புனையாமை மரபு.
பெருங். 4:7:103

அன்புமிக்க கிழத்தி கிழவர் தம்முள் ஒருவர் மனத்தே ஒருவர் உறைவதாகக் கூறல் மரபு பெருங். 4:13:205

பேய் தீண்டி வருத்தாவண்ணம் குழந்தைகளின் மயிர் முடியில் நெய்யணிந்து வெண்சிறுகடுகை அப்புதல் மரபு. மணி. 3:134

ஐம்படைத் தாலியைக் குழந்தை பிறந்த 5-வது நாளில் அதற்குத் தாரணஞ் செய்தல் மரபு. மணி. 3:135

யானைக்கு முன்பு பறை அடிக்கப்படுதல் மரபு. மணி. 4:41

ஐந்து விற்கிடை நீளத்தே நிற்றல் மரபு. மணி. 4:89

குற்றமுள்ள குலமகளிர் அக்குற்றத்தைப் போக்குதற் பொருட்டுக் குமரியாடச் செல்லுதல் மரபு. மணி. 5:37-38

குமரி ஆடப் போந்தோர் அங்குள்ள குமரித் தெய்வப் படிமத்தை வணங்குதல் மரபு. மணி. 13:74

அந்தணர்களில் கணவனைப் 'பார்ப்பான்' என்றும், மனைவியைப் 'பார்ப்பனி' என்றும் கூறுதல் மரபு. மணி. 13:5

பதியிலாரிற் குடிக்குற்றம் பட்டாரை ஏழு செங்கல் சுமத்தி அரங்கு சூழ்வித்துப் புறத்துவிடுதல் மரபு. மணி. 18:33-35

இங்ஙனம் 'மரபு' நிலையில் சுட்டப்பெறும் வழக்கம் பல.

'அத்தகிரியை அத்தம் என்றல் வழக்கு' சிந்:18

'திருமணத்தைக் காற்கட்டென்பது உலக வழக்கு' சிந்: 1682

'விட்டேறு கூறித் திரிவோர் பெயர் விட்டேற்றிகள் என வழக்கில் உள்ளது. பெருங். 1:35:226

எனப் பொதுநிலையில் உலக வழக்கு கூறப்படும்.

கட்டிலினுடைய மேற்கால்களில் உட்டுளை அமைத்து அவற்றில் கத்தியைச் செருகி வைத்திருத்தல் அரசர்க்கு மரபு. சிந். 558

துகில் முதலியவற்றைக் கொடுக்கும் தொழிலை மிக்க உண்மை யுள்ளவர்களிடம் ஒப்புவித்தல் அரசர்க்கு இயல்பு. சிந்: 1896

அரசர் முடிசூடும் காலத்தும் மகப்பெற்ற காலத்தும் சிறைவிடுத லும் நீக்குதலும் ஆகியவற்றைச் செய்தல் மரபு. சிந். 1372

அரசனுடைய கணியைப் பெருங்கணி என்றல் மரபு. சிந். 2411

அரசருடைய சரித்திரத்தை நாடகமாக நடித்தல் மரபு. சிந். 2704

உலகத்தைக் காக்கும் அரசனைக் காவல் தொழிற்குரிய திருமா லாகக் கூறுதல் மரபு. சிந், 2981

அரசர்கள் காலையில் அஞ்சனம் அணிந்துகொள்ளுதல் மரபு. பெருங். 1:34:15

அரசன் சிங்காதனத்தில் வீற்றிருந்து முடிபுனையுமிடத்துப் பட்டத்துத் தேவியும் உடனிருத்தல் மரபு. பெருங். 2:4:23-24

அரசனை வாழ்த்தும்போது நின்கண்ணி வாழ்க என்றல் மரபு. மணி. 18:63

—இவை அரசர்களுக்குரிய மரபுகளாகச் சுட்டப் பெறுகின்றன. இவை யன்றி, சமயம் சார்ந்த வழக்கு, போர் மரபு, நாடக வழக்கு முதலான பற்றியும் ஐயரவர்கள் குறிப்பிடுவர்.

வலக்கை சேர்த்தியது மங்கலக் குறிப்பு. சிந். 55 (நாடக மரபு)

பகைவர் மனையோராய்ப் பிடித்து வரப்பட்ட மகளிர், கொல்லப் படார். ஆதலின் இவர்களைக் கொண்டு கோயிற்காரியங் களைச் செய்வித்தல் மரபு. சிந். 154

தும்மியவுடன் 'ஜீவ நூறும் புகுக' என்றல் மரபு; ஜீவ, நந்த, வர்த்தஸ்வ என்று ஆசி கூறுதல் சைன முனிவர்களுடைய வழக் கம் என்பர்; 'சிவாய' என்றல் சைவருடைய வழக்கம். சிந். 323

போரினாலுண்டாய புண் ஆறுவதற்கு நெய்க்கிழியில் வைக்கப் படுதலும், நெய்ப்பந்தலில் கிடத்தப்படுதலும் இயல்பு -சிந்:818

மங்கலத்தின் பொருட்டு யானைக்கு வெள்ளணி அணிதல் இயல்பு —சிந்: 2431.

சதுர்த்தியிருந்து நாலாநாட் பகல் முடிய விரதம் இருத்தல் மரபு .. பெருங்: 2: 3: 131

வீரர் போர்த் தொடக்கத்தில் தம் தலைவரை வாழ்த்துதலும் வணங்குதலும் இயல்பு —பெருங்: 4: 12: 39

தெய்வ மகளிர்க்கு மாலை வாடாமையும் நெற்றியில் வேர்வு அரும்பாமையும் இயல்பு — பெருங்: 4: 17: 31-33

பலி கொடுப்போர் சிகையை மரத்தில் முடிந்து விட்டுத் தலையை அரிந்து துர்க்கைக்குப் பலி கொடுத்தல் மரபு — மணி: 6:51

புதல்வரைப் பெற்ற மகளிர் எழுந்து சென்று பத்தாவது நாளில் இரவில் நீராட வேண்டும் — மணி: 7: 75-76

போரில் இறவாமல் முதுமையுற்று நோயால் இறந்த அரசருடைம்பை அந்தணர் தருப்பைப் புல்லில் கிடத்தி, தமது ஆண்மையே பற்றுக் கோடாக யுந்தத்திலே இறந்த அரசர் செல்லும் உலகத்திலே இவர் செல்க என்று அவ்வுடம்பை வாளால் பிளந்து அடக்குதல் மரபு — மணி: 23:13-16

ஒருவன் சீவித்திருக்கும் காறும் அவன் பிறந்த நட்சத்திரத்திலும், இறந்த பின்பு அவன் இறந்த திதியிலும் சிறப்புச் செய்ய வேண்டும் என்பது தருமநூல் துணிபு — மணி: 28:9-10

இவ்வாறு 'இயல்பு' என்றும், 'தருமநூல் துணிபு' என்றும் சில வழக்குகள் இடம்பெறுகின்றன. இப்பல்வேறு வழக்குகள் பற்றிய ஆசிரியரின் சிந்தனை, அவரது உலகியலறிவு, சமய — நூல் அறிவு முதலானவற்றைத் தெற்றெனக் காட்டும்.

21. பாத்திர உறவு விளக்குதல்:

காப்பியங்கள் 'கதை' இலக்கியமாகலின், அவற்றில் பல்வேறு பாத்திரங்கள் இடம் பெறுவது இயல்பே. இப்பாத்திரங்களுக் கிடையே அமைந்துள்ள உறவு முறைகளைச் சுட்டிக் கதைப்போக்கை - காப்பியக் கட்டமைப்பை வாசகர் உணர உரையாசிரியர்கள் வழிவகை செய்துள்ளனர். டாக்டர் ஐயரவர்கள் தாம்பதிப்பித்த, நான்கு காப்பியங்களில், சீவக சிந்தாமணி, மணிமேகலை ஆகிய இரு காப்பியங்களில் மட்டுமே இத்தகைய பாத்திர உறவை எடுத்துக் காட்டியுள்ளார். பெருங்கதையில் ஏன் இம்முறையைப் பின்பற்றவில்லை எனத் தெரியவில்லை. சிலப்பதிகாரம் ஓரளவு மக்கள் மத்தியில் அறிமுகமான காப்பியமாதலின், இங்கும் பாத்திர உறவு கூறுதல் தேவையில்லை என விட்டிருக்கலாம், ஐயர் கொடுத்துள்ள சில பாத்திர அறிமுகம், உறவு முறை வருமாறு:

உலோக பாலன்—பதுமையின் சகோதரன் —சிந்: 18, 8 2253

'வணிகன்'—சுபத்திரன், அவன் மகள் கேமசரி; க்ஷேம சுந்தரி என்பதன் சிதைவு,—சிந்: 20.

மாமன் — வேவிந்தன்; அவன் மனைவி புதவி; அவர் மகள் இலக்கணை .... —சிந்: 26

விசயன், கதம்பன், கனகன், அசல கீர்த்தி, சேனன் என்ற ஐவரும் கனகமாலையின் சகோதரர்—சிந்; 1681

தேவதத்தன் — இவன் விசயதத்தன் என்பவனுடைய மகன்; சீவகன் தோழருள் ஒருவன்—சிந்: 1735

கமலை—சாகர தத்தனுடைய மனைவி; விமலையின் தாய் —சிந்: 2245

தாரை தவ்வை--தாரையாகிய தவ்வை; தாரை என்பது மாதவி என்பவளுடைய முற் பிறப்புப் பெயர் —மணி: 7: 104

வீரை—என்பது சுதமதி என்பவளுடைய முற் பிறவி—மணி:7:105

இரவிவர்மன்—அசோதர நகரத்தரசன்; சுதமதி என்பவளுடைய முற்பிறப்பில் தந்தை —மணி: 7:98

துச்சயன்—துர்ஜயன்; இவன் அங்க நாட்டிலுள்ள கச்சயம் என்னும் நகரத்தரசன்; சுதமதி என்பவளுடைய முற்பிறப்புக் கணவனாக இருந்தவன்—மணி: 7:99

22. நாடு, நகர் முதலான இடவியல் விளக்கம்

இலக்கியத்தில் இடம்பெறும் நாடு, நகர், ஆறு, மலை முதலான இருக்கும் இடம் பற்றி விளக்கும் இடவியல் பற்றிய சிந்தனையும் ஐயரவர்களின் குறிப்புரையில் காணப்படும் சிறப்புக் கூறுகளில் ஒன்றாகும். பண்டை இலக்கியங்களில் இடம்பெற்ற இவ்விடப் பெயர்கள், தற்போது என்ன பெயரில் வழங்கி வருகின்றன, அவை எங்கே, எந்த இடத்தில் இருக்கின்றன என்ற விவரத்தையும் டாக்டர் ஐயரவர்கள் குறிக்கத் தவறவில்லை.

தரணீதிலகம்: இராசமா புரத்திற்கும் தண்டகாரணியத்திற்கும் இடையே உள்ளதோர் ஊர்—சிந்: 336

இடவயம்—அத்திபதியின் நகரம்—மணி: 9:27

கோசம்பீ—கௌசாம்பி நகரம்; இது முதலில் குசாம்பன் என்பவனால் நிறுவப்பட்டதாதலின் இப்பெயர் பெற்றது-மணி: 15:61

கபிலையம்பதி - கபிலநகர் - இது கபிலர் என்று பெயருள்ள ஒரு முனிவர் தவஞ் செய்தற்கு முன்னம் இடமாயிருந்தது பற்றி இப் பெயர் பெற்றது — மணி: 26:44

தொண்டியோர் - இதனால் கீழ்க்கடற்கரைக் கண்ணுள்ள தொண்டி என்னும் பட்டினம் பண்டைக் காலத்தில் சோழருடைய ஆட்சிக் குட்பட்டிருந்த தென்று தெரிகிறது; சேரர்க்கு உரித்தாய் மேல் கடற்கரைக் கண்ணுள்ள தொண்டி என்பது வேறு —சிலப்: 14:107

தலைச்செங்காடு என்பது காவிரிப் பூம்பட்டினத்திற்குத் தென் மேற்கிலே நான்கு நாழிகை வழித் தூரத்திலுள்ள தேவாரம் பெற்ற சிவஸ்தலம்—சிலப்: 15:11

அமரிகையாறு : ஏமாங்கத நாட்டிற்கும் தண்டகாரணியத் திற்கும் இடையே உள்ளதோர் நதி என்பர் —சிந்: 335

காயங்கரை:- என்பது ஒரு நதியின் பெயர்—மணி:9:10

சோம குண்டம், சூரிய குண்டம்: முறையே திருவெண் காட்டுள்ள சோம தீர்த்தமும் சூரிய தீர்த்தமும் என்று சில பெரியோர்கள் கூறுகின்றனர்—சிலப்:9:59.

கங்காகூடம்: கங்கைக்குத் தலைப்பிலுள்ள சிறுமலை—சிந்:2105

இரத்தினத்வம்: இதில் புத்தனுடைய பாதக் குறிகள் பொருந்திய உச்சியையுடைய மலை உண்டு. இதன் பெயர் **சமந்தம்;** இதுவே இன்று **'ஆடம்ஸ் பீக்'** என வழங்கப்படுகிறது. —மணி: 9:25; 11:22

கிருத்திர கூடம்: அது மகத தேசத்தின் இராசதானியாகிய 'இராசக்ருக' நகரத்தின் அருகே உள்ளது—மணி:10:66

சம்பாதிவனம்: காவிரிபூம் பட்டினத்திற்கு அருகில் உள்ளதும் 'சம்பாதிபுரம்' என்று அழைக்கப்படுவதுமாகிய 'புள்ளிருக்கு வேளூர்' இறைவனை ஒரு யோசனை தூரத்தில் இருந்து பூக்கொணர்ந்து, சம்பாதி பூசித்தான் என்றும் தெரிதலின், அவன் பூக் கொய்த வனம் இச்சம்பாதி வனமாக இருத்தல் கூடும் என்று ஊகிக்கப்படுகின்றது—மணி:1:54

போதிமூலம்: இக்காலத்துப் 'புத்த கயை' என்று வழங்கப்படுவ தும், **நைரஞ்சரா** அல்லது **பல்குனி** என்று கூறப்படும் நதிக் கரையில் உள்ளதுமாகிய இடத்தில் ஐந்து கிளையையுடைத் தாய், விளங்கிய அரசமரம்—மணி:30:10

23. பிற சிறப்புச் செய்திகள்

டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்களின் குறிப்புரையில் மேற் கண்ட பல்வேறு சிறப்புக்களோடு, சோதிடக் குறிப்பு, கனவுநூல் கொள்கை, உடம்புவகை, வித்தை வகை, தியான வகை, கூல வகை, நோன்பு, மூவகைப் பாவம், நால்வகை அமுதம், நயம் நால்வகை, ஐவகைக் குலம் - பூ - உணவு, பஞ்சவாசம், அறுவகைச்சுவை - வழக்கு, எழு பிறப்பு, எண்வகைப்படை, பத்து வகைக் கற்பகம், 16-வகை உலகம், 32-வகைப் புருடர் இலக்கணம், 96-வகைத் தீவுகள் பற்றிய பல்வேறு விளக்கங்கள் நம் சிந்தனைக்கு விருந்தாக அமைந்துள்ளன.

சோதிடம் கோள்களைக் கொண்டு கணிக்கப்படுவதை நாம் அறிவோம். 'சோதிடர்' என்ற சொல்லே இதன் அடிப்படையில் தோன்றிய தென்பதை, 'பஞ்சவர்-சந்திரன், சூரியன், மற்றைக் கோள்கள், 27-நட்சத்திரங்கள், தாரகைகள் என ஐந்துவகையினர்; இவர்கள் சோதிடர், சோதிட்கர் என்று கூறப்படுவர்[1] என்ற ஐயரவர்களின் குறிப்புரையால் உணரலாம். சுக்கிரன் (வெள்ளி) களத்திர காரன் ஆதலின் சுக்கிராஸ்தமனத்தில் விவாகம் செய்யலாகா தென்பதும்[2]; ஊர்நை என்னும் சுழியும் இதர ரேகை, துவச ரேகை, கலச ரேகை, முதலியன உலகை ஆளுதற்குரிய இராச சின்னங்களென்பதும்[3]; சந்திர மண்டலம் சூரிய மண்டலத்திற்குக் கீழே உள்ளதென்ற சோதிட நூலார் கொள்கையும்[4], டாக்டர் ஐயர் காட்டும் சோதிடக் குறிப்புக்களுள் சில.

அன்றியும், 27-நட்சத்திரங்களில், 14-வதாகிய சித்திரையை நடுவில் வைத்து எண்ணாமல், விசாகத்தை நடுவில் வைத்து எண்ணுவதற்கு அமைதி கூறும் ஐயரவர்கள், 'அசுவினி முதலிய இருபத்தேழனுள், பதினான்காவதும், நடுவிலுள்ளதுமாகிய நட்சத்திரம் சித்திரையாக இருக்க, அதனை நடுவிலுள்ளதாகக் கூறாமல், இவ்விடத்தில் விசாகத்தைக் கூறியது என்னையோ வெனின், ஒவ்வொரு வருடத்தும் பகலையும் இரவையும் சமனாக முப்பது முப்பது நாழிகையாகவே பெற்ற இரண்டு விஷுவத்தினங்களுள் ஒன்றாகிய மேஷாயனத்தில் சூரியனுக்கு எந்த நட்சத்திரத்தில் பிரவேசமுண்டாகின்றதோ அதை நட்சத்திரங்களில் முதலாவதாகக் கூறுவ்து சோதிட நூல் துணிபு ஆதலாலும், முன்னொரு காலத்தில் சூரியனுக்குக் கிருத்திகாப் பிரவேசம் இருந்த பொழுது மேஷாயனம் நேரிட்டிருந்த தென்றும், அதுபற்றிக் கார்த்திகையை முதலாகக் கொண்டு, நட்சத்திரங்களை

1. சிந்: 600; பெருங்: 2:18:50; 5:1:189.
2. ,, 834
3. ,, 304
4. ,, 532

எண்ணி வந்தார்க ளென்றும், பழைய சோதிட நூல்களால் தெரிகின்ற மையாலும், நட்சத்திரங்களின் நடுவிலுள்ளதை விசாகம் என்று கூறியது குற்ற மன்றென்க. இப்படியே முன்னொரு காலத்தில் நட்சத்திரங்களைக் கார்த்திகை முதலாக எண்ணி வந்தார்கள் என்பது கிருஷ்ண யஜூர்வேத ஸம்ஹிதை யாலும், கிருஷ்ண யஜூர்வேத பிராஹ்மணத்தாலும் தெரிகின்றதென்பர். உச்சயினி நகரத்தில், சுக்கிர மார்க்கனுடைய அவைக் களத்திலிருந்த நவரத்தினங்களுள் ஒருவர், என்று சொல்லப்படுகிற வராக மிகிரர் என்ற பிரசித்தி பெற்ற ஜ்யௌதிஷிகர் தமது காலத்தில் மேஷாயனத்தில், சூரியனுக்கு அச்வினி நட்சத்திரப் பிரவேசம் உண்டாயிருத்தலை அறிந்து, பழைய வழக்கத்திற்கு மாறாக, நட்சத்திரங்களை அச்வினி முதலாக எண்ணும் வழக்கத்தை வற்புறுத்தினமையின், இக்காலத்தில், நட்சத்திரங்கள் இங்ஙனம் எண்ணப்பட்டு வருகின்றன என்பர்''[1] என விரிவான விளக்கம் தருவதும் இங்கு நோக்கத் தக்கது.

விசையை கண்ட கனவு உடன் பலித்தலின், அது கடையாமத்தில் கண்டது எனக் கூறிச் சான்று விளக்கத்திற்குச் சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் காட்டிய கனா நூல் மேற்கோளை எடுத்துக் காட்டுவர்.[2] இவையன்றி ஐயரவர்கள் தரும் பிற குறிப்புக்கள் வருமாறு :

உடம்புவகை : தேவர்க்கும் நாகர்க்கும் உள்ள சரீரம் '**வைக்ரிக சரீரம்**' என்றும், அதற்குத் தடையும் ஆய்தச் சேதமும் இல்லை என்றும், இமையாமை, நிழலின்மை, மாலை வாடாமை, கால் நிலந் தோயாமை, அதற்கு உண்டென்றும், மனிதர்க்கும் விலங்குகளுக்கும் உள்ள சரீரம் **ஔதாரிக சரீரம்** என்றும், அவற்றிற்கு ஆய்தச் சேதம் முதலியன உண்டென்றும் கூறுவர். சிந் : 954.

வித்தைவகை : வித்தைகளுள் **மகர வித்தை**-500; **ஷுல்லக** வித்தை-700; ஆக வித்தை 1200 உம் விஞ்சையர்க் குரியன என்றும், **மதிமுகம்** என்பது அவற்றுள் ஷுல்லக வித்தையைச் சார்ந்த தென்றும் சொல்லுவர்; இந்த வித்தை **ஆபோகினி** என்று ஸ்ரீபுராணத்தில் கூறப்படுகின்றது — சிந் :1708.

தியான வகை : சுக்கிலத் தியானம்-பரிசுத்தமான தியானம். அது பிரத்வ விதர்க்க விசாரம், ஏகத்வ விதர்க்க விசாரம்,

1. மணி : 11 : 42.
2. சிந் : 219; சிலப் : 15 : 95 : 106. உரை.

சூக்ஷ்மக் கிரியாப் பிரதிபாதி, வ்யு பரதக் கிரியா நிவர்த்தி என நால்வகைப் படும் என்பர் — சிந் : 291.

கூலவகை : எண் வகை, பதினெண் வகை — மணி : 28:48-49.

நோன்பு : உவவு என்பதற்குச் சதுர்த்தசி என்று பொருள் கூறிச் சதுர்த்தசியிலும், அட்டமியிலும் பட்டினி இருத்தலின் பயன்கள் முறையே 14-வதாகிய அயோகி குணஸ் தானத்தை அடைதலும், எண் வினைகளைக் கெடுத்தலும் என்று சொல்லுவர்— சிந் : 1547.

மூவகைப் பாவம் ; செய்தல், செய்வித்தல், உடன்பாடு என்பன. இவற்றை முறையே, கிருதம், காரிதம் அனுமோதம் என்பர் வடநூலார் சிந் : 1753.

நால்வகை அமுதம் : பஷ்ய, போஜ்ய, லேஹ்ய, சோஷ்யங்கள் சிந் : 1937. (அமிழ்தம்) உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன — மணி : 28 : 116.

நால்வகை நயம் : ஒற்றுமை, வேற்றுமை, பிரிவின்மை, இயல்பு - மணி : 30 : 35,

ஐவகைக் குலம் : இக்ஷ்வாகு குலம், ஹரிகுலம், குருகுலம், நாதகுலம் உக்கிர குலம் — சிந் : 290.

ஐவகைப் பூ : கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ, புதற்பூ பெருங் : 5 : 6 : 28.

ஐவகைஉணவு : 'கடித்துப் பருகி விழுங்கி நக்கி எடுத்துச் சுவைத்தல் இவை ஐந்துண்டி (திவா) — பெருங் : 2 : 3 : 23

பஞ்ச வாசம் : ''தக்கோலம் ஏலம் இலவங்கஞ் சாதிக்காய் கற்பூரம் என்றிவை கமழ் பஞ்ச வாசம் — பெருங் : 2: 3 : 46.

அறுவகைச் சுவை : கைப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு — மணி : 28 : 116.

அறுவழக்கு : உண்மை வழக்கு, இன்மை வழக்கு, உள்ளது சார்ந்த உண்மை வழக்கு, இல்லது சார்ந்த இன்மை வழக்கு, உள்ளது சார்ந்த இன்மை வழக்கு, இல்லது சார்ந்த உண்மை வழக்கு — மணி : 30 : 34.

எழுபிறப்பு : தேவர், மனிதர், விலங்கு, நீர்வாழ்வன, பறவை. தாவரம், ஊர்வன — சிந் : 309.

எண் வகைப் படை : பட்டயம், பத்திரம், பற்று, மழு, சொட்டை, சக்கரம், வட்டம், வச்சிரம் (அரிச் : விவா 117) — பெருங் : 1 : 52 : 19.

பத்துவகைக் கற்பகம் : மத்தியாங்கம், தூரியாங்கம், பூஷனாங்கம்; மாலியாங்கம், தீபாங்கம், கிருகாங்கம், சோதிராங்கம், போசனாங்கம், பாசனாங்கம், வஸ்திராங்கம்; இவை முறையே, திவ்ய சாரமாகிய நானாவித பானங்களையும், நானாவித வாத்தியங்களையும், அநேக வித ஆபரணங்களையும், அநேக வித மாலைகளையும், அநேக வித ரத்தின தீபங்களையும், பிராசாத மண்டபாதிகளையும், சந்திராதித்தர் ஒளியினை அடக்கும் ஒளியினையும், நானாவித ரசத்தனவாகிய நான்கு வகை உணவினையும், வேண்டிய கலங்களையும், விசித்திர வஸ்திரங்களையும் கொடுக்கும் — சிந் : 2997.

16-வகை உலகம்: சௌதர்மம், ஈசானம், சனற்குமாரம், மாகேந்திரம், பிரமம், பிரமோத்தரம், இலாந்தவம், காமிஷ்டம், சுக்கிரம், மகாசுக்கிரம், சதாரம், ஆஹஸ் ராரம், ஆநதம், பிராணதம், ஆரணம், அச்சுதம் என்பனவாம்—சிந்: 2134.

32-வகைப் புருடர் இலக்கணம்: 'வீடு புருட வடிவமாகக் கூறப்படும் ஆதலின் ஒரு புருடனுக்குரிய முட்பத்திரண்டு இலக்கணமும் அதில் அமைந்திருக்க வேண்டும் என்பர்'—பெருங்: 1:33:100 —இங்குப் புருடர் இலக்கணம் இவை என எடுத்துக் காட்டப் பெறவில்லை.

96-வகைத் தீவுகள்: இத்தீவுகளை அந்தரத்து வீபம் எனவும், குமானுஷ்யத்து வீபம் எனவும் கூறுவர்; அவைகள் தொன்னூற்றாறு—சிந்: 2842:

இவையன்றி நூல் நயம் சுட்டுவதும், அரிய செய்திகளை எடுத்துத் தருவதும் இங்குக் குறிப்பிடத் தக்கது. சீவக சிந்தாமணி 2442-ஆம் பாடற் குறிப்பில்,' இதிற் கூறப்பட்ட சிற்ப விசேடம் மிகப் பாராட்டற்பால' என்றும் 2450-ஆம் பாடற் குறிப்புரையில்,' எழுத்து வடிவுபட மல்லிகைமாலை கட்டப் பட்டதென்று இங்கே கூறியிருத்தல், பண்டைக் காலத்தில், சிற்ப வேலையின் நுட்பம் நன்கமைந்திருந்த தென்பதைப் புலப்படுத்துகிறது' என்றும், பெருங் கதை, 1:41-ஆம் காதைத் தொடக்கத்தில்,' பேதையர் முதலிய எழுபருவ மகளிர் நீராடியதை அவரவர்க்கு ஏற்ப இந்தப் பகுதியின் 52-ஆம் அடி முதலியவற்றில் வருணித்திருக்கும் அழகு நுனித்தறிந்து இன்புறற் பாலது' என்றும் மூல நூலின் நயம் பாராட்டுவர்.

'சித்தராரூடச் சிந்து' என்ற விஷ வைத்திய நூல் ஒன்று தமிழகத்தில் அருகி வழங்குகின்றது'[1] என்றும், 'ஓர் அரசனுக்குப் பின்னே

1. சிந்: 1287

அரச உரிமை பெற உரியோர்க்குக் கொடுக்கப் படும் பட்டப்பெயர் 'பெருநம்பி' என்று தெரிகிறது[1] என்றும், 'ஆயிரம் இதழ்களையுடைய தாமரை 'கமலம்' என்று கூறப்படும்'[2] என்றும் சில அரிய செய்திகளைச் சுட்டிச் செல்வர். பதிப்புக் குறிப்பு, பாடவேறு பாடுகளையும் ஐயரவர்கள் குறிப்புரையில் தருவர்.[3] இங்ஙனம் சாமிநாத ஐயர், குறிப்புரையே எழுதினாலும், அது குறிப்புரை என்ற நிலையைக் கடந்து, விசேடவுரைக்குரிய பல்வேறு சிறப்புக்களைக் கொண்டு சிறக்கின்றது என்பது தெளிவு. இக்குறிப்புரை, ஆசிரியரின் இலக்கிய, இலக்கண, பிறதுறை அறிவை நன்கு புலப்படுத்தும். பதிப்பாசிரியரே ஓர் உரையாசிரியராகச் சிறப்புற்று விளங்குவதையும்—இக்குறிப் புரையில் அவர் தரும் பல்வேறு கருத்துக் கோவைகள்—நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

1. ,, 2913
2. பெருங்: 5: 2:31.
3. பதிப்புக் குறிப்பு பற்றி—பதிப்புப்பணி கட்டுரையில் காண்க. 'பாடவேறுபாடு'—தனிக் கட்டுரையாக அமையும்.

5 அரும்பத முதலியவற்றின் அகராதி

அரும்பத முதலிய வற்றின் அகராதியே டாக்டர் ஐயரவர்கள் பதிப்பின் தனிச் சிறப்பாகும். ஏனைப் பதிப்பாசிரியர்களிலிருந்து, ஐயரவர்களைத் தனிப்படுத்தி உச்ச நிலைக்குக் கொண்டு செல்வதும் இதுவே. தாம் பதிப்பித்த அனைத்து இலக்கியங்களுக்கும் விரிவான முறையில் இப்பகுதியை அமைத்துள்ளார். இவ்வகராதி, சீவக சிந்தாமணிக்கு 128-பக்க அளவிலும், சிலப்பதிகாரத்திற்கு 142-பக்கங்களிலும், மணிமேகலைக்கு 116-பக்கங்களிலும், பெருங்கதைக்கு 218-பக்கங்களிலும் அமையும். இதனை வெறுமனே 'சொல்' அகராதியாக அமைக்காமல், பல்வேறு கருத்துக்களின் தொகுப்பாக அமைத்துள்ளார். மூல நூல், உரை நூல், தாம் எழுதிய குறிப்புரை, மேற்கோள் பாடல்கள் முதலானவற்றில் வரும் அருஞ்சொற்கள், கருத்துக்கள் முதலானவற்றின தொகுதியாக இதனைத் திரட்டித் தந்துள்ளார். இங்கு, சொற்பொருள் விளக்கம், 2. இலக்கணக் குறிப்பு, 3. பாத்திர அறிமுகம், 4. உவமை முதலான வருணனைத்திறம், 5. மெய்ப்பாட்டுக் குறிப்பு, 6. சமயக்கலைச்சொல் விளக்கம், 7. வழக்கம்-இயல்பு-மரபு முதலானவற்றின் விளக்கம், 8. புராணக் கதைக் கூறுகள் 9. எடுத்தாளப் பட்ட மேற்கோள் நூல் பற்றிய விவரம், 10. இடவியல் விளக்கம், 11. சிறப்புச் செய்திகள், முதலான இடம்பெறும். இவை, நூலின் பொருண்மைக்கு ஏற்பச் சில மாறு பாடுகளைப் பெற்றுள்ளன.

1: சொற் பொருள் விளக்கம்:

டாக்டர் சாமிநாத ஐயர், குறிப்புரையில் 'பதவுரை தருவது போன்றே, 'அரும்பத அகராதி'யிலும் ஒருசில இடங்களில் சொற்பொருள் விளக்கம் தந்துள்ளார். இவ்விளக்கம், அருஞ் சொற்களுக்கு மட்டும் தான் அமைந்துள்ளன என்று சொல்ல முடியாது. சில போது, எளிதில் பொருள் விளங்காத அருஞ் சொற்களுக்குப் பொருள் தராமலும், எளிய சொற்களுக்குப் பொருள் தருதலும் உண்டு. சொற்பொருள் விளக்கம் தந்து, அவை வருகின்ற இடங்களையும் சுட்டுவர். இவற்றில் சீவக சிந்தாமணிக்குப் பாடல் எண்ணும், மற்றவற்றிற்குப் பக்க எண்ணும் குறிப்பர். அரும்பத அகராதியில் தரும் சொற்பொருள் விளக்கம் சில இங்குக் குறிப்பிடத் தக்கன.

அங்குரார்ப்பணம்—தானியே முளைகளைப் பாலிகைகளில் இடுவதொரு சடங்கு—சிந்: பக்: 1548.

அச்சுறு கொழுந்தொடர் — யானையை அடக்குவதொரு கருவி —சிந்: பக்: 1548.

அச்மாரோபணம் — விவாகச் சடங்கினுள் ஒன்று; மணப் பெண்ணின் காலைக் கல்லில் ஏற்றுதல்—சிந்: பக்: 1548.

ஆளத்தி (ஆலப்தி)—ஆலாபனம் .... சிந்: பக்: 1560

அக்க பாதன்—நையாயிக மதாசாரியன்—மணி: பக்: 401

அரிஷட்வர்க்கம் — ஆறுபகையின் கூட்டம், என்றது காமம் முதலிய ஆறனையும்—மணி: பக்: 405

அந்தக் கேணி — உள்ளே மறைந்த நீரையுடைய கிணறு; கரப்பு நீர்க் கேணி என்றும் கூறப்படும்; இதனை, 'பிரசன்ன கூபம்' என்பர் வடநூலார்—மணி: 403.

ஆப்தன்—உண்மையே பேசுபவன்—மணி: பக்: 410

பிரமரி—புறக்கூத்துக்குரிய ஆடலுள் ஒன்று, —சிலப்: பக்: 697

பொங்கழி—தூற்றாப்பொலி—சிலப்: 705

அந்தரி—ஒருவகை தோற் கருவி—சிலப்: பக்: 598.

கோண வட்டம்—ஒருவகை விருது—பெருங்: பக்: 958.

அலபதுமம்—நிருத்தக்கை 30-இல் ஒன்று—சிலப்: பக்: 603

இவை போலப் பல அருஞ்சொற் பொருளும், எளிய சொற்களுக்குப் பொருளும் தருதல் உண்டு. ஒரு சொல் பல பொருள் தருகின்ற நிலையில், நூலில் பலவிடங்களில் வந்திருப்பின் அவற்றையும் ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அளகு—காட்டுக் கோழி, கூகைப்பெடை, சிந்: பக்: 1555.

ஆசாரம்—அருவி பெருகும் மலைப்பக்கம், ஒழுக்கம் —சிந்: பக்: 1557.

மாலை—இயல்பு, ஒழுங்கு, மணிமாலை, மரகதத்தின் குற்றம், மாலைக் காலம்—சிலப்: பக்: 717

தோடு—இதழ், சங்கினாற் செய்த காதாபரணம், தொகுதி, பனையோலை—சிலப்: பக்: 677

இறை—அரசன், கப்பம், கையின் சந்து, சிறிது, சிறை, தங்குதல், மூலை, தலைமை—பெருங்: 904.

கண்—அறிவு, இடம், கண்ணோட்டம், கண், வாத்தியத்தின் அடிக்கும் பக்கம்—பெருங்: 930,

கால் — அடிப்பாகம், காம்பு, காற்று, சக்கரம், மழைக்கால், முளைக்கால், வண்டி—பெருங்: 944.

காழ்—ஆரம். காம்பு, குத்துக்கோல், கைமரம், கொட்டை, தூண், முத்துவடம், வயிரம், வடம், விதை,—பெருங்: 945

கானம்—இசை, காடு, சோலை—பெருங்: 945.

மா—குதிரை, மாமரம், மான், வண்டு—பெருங்: 1057.

பயம்—நீர், பயன், பால், பிரயோசனம்—பெருங்: 1018

வையம்—தேர், பூமி, வண்டி, வாகனம், விமானம்—பெருங்: 1092

ஒரு சொல் பல பொருளாக அமையும் பகுதி மூலம், சில செய்திகளையும் தெரிந்து கொள்ள முடிகிறது. 'கானம்' என்ற சொல் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களில் 'பாட்டு' (இசை) என்ற பொருளில் வரவில்லை; முதன் முதல் பெருங்கதையில் தான் அமைந்துள்ளது. இச்செய்தி, ஒருவகையில் வரலாற்று மொழி யியல் (Historical Linguistics) ஆய்விற்குத் துணை செய்யும். அதோடு நூலின் கால ஆய்விற்கும் இது துணை நிற்கிறது. 'கானம்' (ghanam) என்ற வடசொல் தமிழில் பெருங்கதையின் காலத்தே புகுந்துள்ள தெனலாம். அன்றியும், இங்கு ஐயரவர்கள் தரும் சொற் பொருள், 'விளக்க இயல் மொழி' ஆய்விற்கும் (Descriptive Linguistics) வழி காட்டியாக அமைந்துள்ளதை அறியலாம். இங்ஙனம் 'ஒருசொல் பலபொருள்' தரும் நிலை பெருங்கதையிலும் சிலப்பதிகாரத்திலுமே மிகுதி. சீவக சிந்தாமணியில் மிகச் சில இடங் களில் காண முடிகிறது. மணிமேகலையில் இல்லை என்றே சொல்ல லாம். இதனால் மணிமேகலை, சிந்தாமணியில் ஒரு சொல் பல பொருளில் ஆளபடப்வில்லை என்ற முடிவுக்கு வரமுடியாது. இவற்றில், ஒரு சொல் பல பொருள் தரும் பகுதிகளைத் தொகுத்துத் தருவதில் ஐயரவர்கள் அவ்வளவு கவனம் செலுத்தவில்லை என்றே தோன்று கிறது.

2. இலக்கணக் குறிப்பு:

இலக்கணக் குறிப்பும், குறிப்புரையில் சுட்டப்படுவதே. அதே அமைப்பில், பொருள்கோள் நிலையில் அமையும் இக்குறிப்புக் களையே இங்குத் தொகுத்துள்ளார். இதன் மூலம் நூலில் எங் கெங்கே ஆகுபெயர், உருபு மயக்கம், சாரியை, அசைநிலை முத லான வந்துள்ளன எனச் சுட்டுவர். ஆகுபெயர் மட்டும் சீவக சிந் தாமணியில் 40-இடங்களிலும், சிலப்பதிகாரத்தில் 25-இடங்களிலும், மணிமேகலையில் 5-இடங்களிலும் வருவதை எடுத்துக் காட்டுவர்.[1] பெருங்கதையில் ஆகுபெயர் இடம் பெறுவது குறிக்கப் பெறவில்லை. இதே போன்று உருபு மயக்கம் சிந்தாமணியில் ஆறு இடங்களிலும்,

1. சிந்: பக்: 1557; சிலப்: 606, மணி: 409.

சிலம்பில் நான்கு இடங்களிலும், மணிமேகலையில் இரு இடங்களி லும் வருவது குறிக்கக் கதையில் சுட்டப்பெறவில்லை.[1]

வேற்றுமை உருபுகளில் ஐ, ஒடு — இரண்டும் அசை நிலையாக வருவதைப் பெருங்கதையிலும், சிலப்பதிகாரத்திலும் குறிப்பிடுவர்.[2] சிந்தாமணியிலும், மணிமேகலையிலும் 'ஐ' உருபு அசை நிலையாக அமைவதை எடுத்துக் காட்டுவர்.[3] இவ்வேற்றுமை உருபுகள் இன் னின்ன பொருளில் வந்துள்ளன என்பதையும் ஐயரவர்கள் காட்டத் தவறவில்லை. சில வருமாறு:

'கு' — உருபு: அதற்குடம் படுதல் அதற்குப் படுபொருள், கொடைப் பொருள், பகைப்பொருள் — சிந்: 1589

'இன்' — உருபு: உவமப் பொருளில், உறழ்பொருளில், ஏது வில், ஏழன் உருபாதல், காரண ஏதுப்பொருட்கண், நீக்கல் விகாரத்தில் வருதல் சிந்: 1565

'ஐ' — சிலேட்டுமம், பகுதிப் பொருள் விகுதி, வியப்பு, உரிச் சொல் — சிந்: 1574.

ஒடு — அசை, இன், உடனிகழ்ச்சி, எண், ஒருவினை — சிலப்: 625.

இடைச் சொற்கள் சில, பல பொருளில் வருவதும் இவ்வகரா தியில் குறிக்கப்படும்.

'ஏகாரம் — இசைநிறை, ஈற்றசை, எண், வினா — சிலப்: 623.
ஐ — இடைச்சொல், வியப்பு — சிலப்: 624
ஓ — இரக்கக் குறிப்பு, எதிர்மறை — சிலப்: 626,
மா — அசைநிலை, இசைநிறை — சிந்: 1950.

அசைநிலையாக என்னென்ன சொற்கள் வருகின்றன என்றும் குறிப்பது, இலக்கிய, மொழி ஆய்விற்குத் துணை செய்கிறது. சிந் தாமணியில், அ, அம், இ, இன், உம், என்ப, ஐ, ஒரும், கள், குறைய, மற்று, மா, வழி, அரோ, ஏ, மோ — முதலான 16- இடைச்சொற்களைக் குறிப்பிடுவர்.[4] இவை 100-க்கும் மேற்பட்ட பாடல்களில் இடம்பெறுவதும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. சிலப் பதிகாரத்தில் ஐயரவர்கள் தொகுத்துத் தரும், அங்கு, அந்தில்,

1. சிந்: பக்: 1568, சிலப்: 619, ,, 419
2. பெருங்: பக்: 922, 923, சிலப்: 625.
3. சிந்: ,, 1549, மணி: பக்; 409.
4. சிந்: ,, 1549, 1554, 1573, 1732.

அன்றே, ஆ, ஆங்கு, ஆய், ஆல், தன், தான்[1]— என்னும் அசை நிலைகளில் ஒன்றுகூடச் சீவக சிந்தாமணியில் குறிக்கப் பெறாதது இங்கு நோக்கத்தக்கது. இவ்வசை நிலைகள் கூட மூல நூலின் கால ஆராய்ச்சிக்குப் பயன்படலாம் என்று தோன்றுகிறது,

இவையன்றி ஒருமைப் பன்மை மயக்கம் 34-இடங்களிலும், விகாரப்பட்டுவருவன 96-இடங்களிலும் சீவக சிந்தாமணியில் அமைவது ஐயரவர்களால் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன.[2] இவைபோன்ற இலக்கணக் குறிப்புக்கள் மேலும் பல அமைந்துள்ளன. இவ்விலக்கணக் குறிப்புக்கள் வருகின்ற இடங்களைத் தொகுக்க ஐயரவர்கள் எவ்வளவு முயற்சிகளை எடுத்திருக்க வேண்டும் என்று எண்ணுகிற போது அவரை, எந்தத் தமிழ் நெஞ்சமும் பாராட்டாமல் இருக்க முடியாது. இங்கு இலக்கணக் குறிப்புக்கள் சிந்தாமணி போன்று, அவ்வளவு விரிவாகப் பிற காப்பியங்களில் தொகுக்கப் பெறவில்லை. பெருங்கதையிலும், மணிமேகலையும் இலக்கணக் குறிப்புத் தருவது மிகக் குறைவு.

3. பாத்திர அறிமுகம்:

நான்கு காப்பியப் பதிப்புக்களிலும், வரும் மாந்தர் பெயர்களைச் சுட்டுவதோடு, அவர் நூலின் இடம்பெறும் நிலை குறித்துச் சிறு குறிப்புத் தருவதை மரபாகக் கொண்டுள்ளார் டாக்டர் ஐயர். ஏறத்தாழ எல்லாக் காப்பிய மாந்தர் தம் பெயர்களும் 'அகராதியில், இடம் பெற்றுள்ளன. காப்பிய மாந்தர்தம் முற்பிறப்புப் பெயர்கள் இருப்பின் அதனையும் எடுத்துக்காட்டுவர். காப்பியத் தலைவன், தலைவி, முக்கிய மாந்தர்தம் வருணனைக் கூறுகள் இப்பகுதியில் விரிவாகத் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன. பெருங்கதையில் வரும் பாத்திரங்கள் பற்றிய பட்டியல் வறுமாறு:

அச்சுவப் பெருமகன், அடவிராசன், அத்தினாபுரத்தரசன், அயோத்தியரசன், ஆப்பியாயினி, ஆரியை, ஆருணியரசன், இசைச்சன், இடபகன், இராசனை, இலாமயன், உதயணன், உருமண்ணுவா, ஐராபதி, கலிங்கத்தரசன், காக துண்டகன், காசியரசன், காஞ்சனமாலை, கும்பன், கோசலத்தரசன், கோசிகன், கோபாலகன், சங்கரவரசன், சத்தியகாயன், சத்தியூதி, சாங்கியத்தாய், சாண்டியன், சாதகன், சாலங்காயன், சித்திராங்கதன், சிவமதி, சிவேதன், சோதமன், சோதவன், தருசகன், தருமதத்தன், தாரகாரி, திலகமா

1. சிலப்: பக்: 596, 606
2. சிந்: பக்: 1576, 1661

சேனை, நரவாணதத்தன், நருமதை, பத்திராபதி (யானை), பத்திரை, பதுமகாரிகை, பதுமாபதி, பதுமை, பரதகன், பரமசுந்தரி, பவணத்தரசன், பாகீரதி, பாஞ்சாலராயன், பாலகன், பாலகுமரன், பிங்கலகடகர், பிங்கலசாரமாணி, பிரச்சோதனன், பிரமசுந்தர முனிவன், பிரமசேனன், மதன மஞ்சிகை, மந்தரவரசன், மாணகன், மானசவேகன், மானனீகை, மித்திரகாமன், மிலைச்சன், யூகி, வசுந்தரி, வயந்தகன், வராகன், வருடகன், வருத்தமானன், வாசவதத்தை, விக்கிரன், விச்சுவலேகை, விசயவரசன், விண்ணுத்தராயன், விரிசிகை, வேசாலி, — முதலான பாத்திரங்களை, ஐயரவர்கள் அகராதியில் காணுகிற போது, 'இவ்வளவு பாத்திரங்களா' என்று வியப்படைகிறோம்.

இங்ஙனம் ஒவ்வொரு காப்பியப் பாத்திரமும் முறையாகத் தொகுக்கப்பட்டு, அவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. ஐயரவர்கள் பாத்திரங்களை அறிமுகம் செய்யும் முறையே தனி.

> ''**சீதத்தன்**—இராசமாபுரத்துள்ள ஒரு வணிகன்; வெள்ளி மலையிலிருந்து காந்தருவ தத்தையை அழைத்து வந்தவன்; சீவகன் தோழருள் ஒருவன்; கோவிந்தராசன் பிதா; கோவிந்தராசன் புத்திரன்''.—சிந்: பக்: 1602.

> ''**அத்திபதி**—கங்காதர நாட்டுள்ள பூருவதேசத்தரசன்; நீலபதி கணவன்; இராகுலனுடைய தந்தை; இவனது இராசதானி இடவயம் என்பது; தன் மைத்துனனும் துறவு புண்டோனுமான பிரமதருமன் என்பவனது கட்டளையால் அந்நகரை நீங்கிப் பின் அதன் வடக்கேயுள்ள அவந்தி நகரை இராசதானியாகக் கொண்டவன்''—மணி: 404.

இங்ஙனம் பாத்திரங்களை அறிமுகம் செய்யும் நயம் இலக்கியச் சுவை மிக்கது. இவையன்றிச் சீவக சிந்தாமணியில் சீவகன் பற்றியும் பொருங் கதையில் உதயணன் பற்றியும் அமையும் வருணனைக் கூறுகள், பாத்திரப் படைப்பு பற்றிய ஆய்வியல் சிந்தனையாக முகிழ்த்துள்ளன.

'சீவகன் அரசாட்சிக்கு அஞ்சினமை, அன்னப் பார்ப்பைப் பிரித்தமை, தாயைக் காண்டல், குண விசேடங்கள், சுதஞ்சனன் சரிதத்தை நாடகமாக நடித்தல், வஞ்சினம், கேசத்தின் இயற்கை மணம், வாயின் இயற்கை மணம், சந்திரன், சூரியன் மன்மதன் உவமையாதல், வீணையில் பயிற்சி, கேசாதிபாத வருணனை' முதலான வரும் இடங்களைப் பாடல் எண்ணுடன் இவ்வகராதியில் தொகுத்தளித்துள்ளார்.[1] சீவகன் பற்றித்தரும் இவ் வருணனைக்

1. சிந்: பக்: 1603.

கூறுகளை விட 'உதயணன்' பற்றிக் கூறுவது, இன்னும் விரிவாக, சிறப்பாக அமைந்துள்ளது.

உதயணன் பாத்திர அறிமுகத்தை விரிவாகத் தந்தவர், பின்னும். அவன் நள கிரியை அடக்கியது; உலாப் போன போது பொது மகளிர் கண்டு மகிழ்ந்தது; அவன் கோயில்; அவன் தந்தையும் தருசகன் தந்தையும் நண்புடையவராய் இருந்தமை; தோழர் நால்வர்; உதயணன் வரலாறு; அவன் பொய் கூறியது; அவன் மந்திரி இடபகன்; மலர்ப் பந்து புனைதலில் அவன் வல்லமை; மாயமானைப் பிடித்த பொழுது வயவன் கீழ்த் திசையில் ஒலித்தது; மான் முதலியவற்றை நோக்கி அவன் புலம்பியது; அவன் யாழ் பெற்ற வரலாறு; யானையை அடக்கியது; விச்சை முதலியன அமைத்தது; அவன் வனப்பு; தருசகனால் அவனுக்கு உதவியாக அனுப்பப்பட்ட மந்திரி நால்வர்''—என உதயணன்பத்திரப்படைப்புக் குறிப்புக்களையும்தந்துள்ளார். அதோடு உதயணனுக்கு இந்திரன், காமன், காலன், கூற்றம், சிங்கம், சிவன், சூரியன், திங்கள், திருமால், தெய்வம், தேவகுமரன், புலி, முருக வேள், யானை, வருணன் முதலான உவமையாவதும், அவன் முகத்திற்கு இளஞ் சூரியன் உவமையாதலும் சுட்டுவர். இவை உதயணன் பாத்திரப் படைப்பை ஆய்வோருக்கு தோன்றாத் துணையாக நின்றுதவும் என்பதில் ஐயமில்லை.

இங்ஙனம் நான்கு காப்பியங்களிலும் பாத்திர அறிமுகம் அமைந்தாலும், பெருங்கதை அறிமுகமே ஏனையவற்றிலும் சிறப்பாகவும் விரிவாகவும் அமைந்துள்ளது. இதற்கு அடிப்படையான காரணம், காப்பியங்களை விடக் காலத்தால் பிந்திப் பதிப்பிக்கப்பட்டதாகலாம். அன்றியும், தமிழ் உலகில் மிகுதியும் அறிமுகமாகாத நூல் பெருங்கதையாகலின், அந்நூல் கதையை அறிந்து கொள்ள, இப்பாத்திர அறிமுகம் விரிவாகத் தேவை எனக் கருதி ஐயரவர்கள் அமைத்திருக்கலாம்.

4. உவமை முதலான வருணனைத்திறம் :

காப்பியங்களில் 'மலை கடல் நாடு வள நகர் வருணனை' முதலான இடம் பெறுதல் வேண்டும் என்பது தண்டி கூறும் இலக்கணம். இங்ஙனம் அமையும் சில வருணனை மரபுகளை டாக்டர் ஐயரவர்கள் அரும்பத அகராதியில் தொகுத்தளித்துள்ளார். இங்கு 'மகளிர் பற்றிய வருணனை', 'யானை பற்றிய வருணனை' குறிப்பிடத்தக்கன. காப்பியங்களில் இவ்விரு வருணனை பற்றித் தனி ஆய்வுக் கட்டுரை எழுதும் அளவிற்கு இங்கே குறிப்புக்களைத் தொகுத்துத் தந்துள்ளார். இக் குறிப்புக்கள் பெருங்கதையிலேதான் மிக விரிவாக அமைந்துள்ளன ; அடுத்த இடம் பெறுவது சீவக

சிந்தாமணி. சிலப்பதிகாரத்தில் மகளிர் வருணனைக் கூறுகள் ஓரளவு தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

மகளிர் பற்றி வரும் பெருங்கதைக் குறிப்புக்கள் வருமாறு :

'மகளிர் என்ற சொல் ஒருமை குறித்து வரல்; அச்சத்தால் கண்ணைப் புதைத்தல்; ஊடற்கண் கணவரை உதைத்தல்; எட்டி காவிதிப் பட்டம் பெறல்; ஏந்திய தேறல்; கண் புலவியால் சிவத்தல்; கலன் ஒலிப்ப வருதல்; கழுநீர்ப் பூவை ஏந்தி வருதல்; காமத்தால் அரற்றுதல்; குரவை ஆடுதல்; குவளைப் போதைப் பிடித்தல்; கூந்தலுக்கு ஆனைந்து (பஞ்ச கௌவியம்) தெளித்தல்; கூந்தலில் தெய்வம் இருத்தல்; கூந்தலைக் கையில் ஏந்தல்; கொண்டோனுக்குப் பயன் அளித்தல்; சுனை குடைதல்; தம் மார்பைப் புடைத்தல்; திரியை நெருடல்; தேருக்குக் கோல் கொள்ளல்; தேறலில் உள்ள வண்டை ஓப்பிப் பருகுதல்; தோளில் சந்தனத்தால் கொடி எழுதுதல்; நாணத்தால் நிலத்தைக் கிளைத்தல்; மறுகில் நிரம்புதல்; நிலவுக்கு இரங்கல்; நுரையை அரித்தல்; தெருவில் நெரிதல்; நெற்கதிரைச் சூடுதல்; பட்டம் உடையவராதல்; பிறை தொழுதல்; புதல்வரை மருட்டும் நொடிப் பேச்சுப் பேசுதல்; பெயர் கூவி விளையாடுதல்; மகளிர் பொருட்டுக் கன்றுகளைச் சேணில் நிறுத்தல்; மங்கலப் பொருட்களை முடிமிசை ஏந்தல்; மலரும் சுண்ணமும் தூவல்; மனம் பட்டுழிப்படுதல், மார்பில் கொடி எழுதுதல்; மாலையில் பிறையைத் தொழுதல்; மாலையில் விளக்கேற்றுதல்; முகத்தில் கஞ்சிகை (உருவு திரை) அணிதல்; முல்லைக் கோதையை அணிதல்! (விளையாடும்) வண்டல்; வருத்தத்தால் வயிறு அதுக்கல்; விளையாட்டுக்குரிய பொருள்கள்; வேங்கை கொய்தல்; உரிய கலைகள்—பொருட்கள்; மைந்தருடன் மயங்கல்; உள்ளம் நிலையின்றிச் சுழலல்; வீணையால் வணக்கப் பெறல்'...

இவை மகளிர் பற்றிய வருணனைக் கூறுகள்; இதோடு மகளிர் பற்றி மூல நூலார் என்னென்ன உவமை தந்துள்ளார் என்பதையும் ஐயரவர்கள் இங்குத் தொகுத்தளித்துள்ளார். பொது நிலையில் மகளிர்க்கு உவமையாகும் பொருட்களையும், சிறப்பு நிலையில் பாதாதி கேச வருணனையாகப் பொருந்தும் உவமைகளையும் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

பொது நிலையில், மகளிருக்குச் சங்கு உயிர்த்த நித்திலம் (சங்கு ஈன்ற முத்தை ஒத்தல்), பூங்கொடி, பூங்கொம்பு, மயில், மயிற்பெடை, மான்பிணை, மின், மெழுகுப் பாவை, வெள்ளிக்கொடி உவமையாவது சுட்டப்பெறும்; சிறப்பு நிலையில், **அடிக்குத்** தாமரை, நாயின் நா; **இடைக்குக்** கொடி, துடி, பூங்கொம்பு, வஞ்சி; **கண்ணுக்கு** அம்பு,

கயல், காமன் கணை, செந்தாமரை இதழ், தாமரை, நீல மலர், மலர், மாவடுவின் பிளப்பு; மான்கண்; வாள்; வேல்; **கழுத்துக்குக்** கமுகு; **காதுக்கு** வாடிய வள்ளைத் தண்டு; **கூந்தலுக்கு** மணி, பிடிக்கை, மயிற்கழுத்து, மயில் தோகை; **கைக்குக்** காந்தள்; **சாயலுக்குக்** கொடி, மயில், மின்னல்; **சொல்லுக்கு** அமிழ்து, கரும்பு; **துடைக்குக்** கண்பின்காய் (ஒருவகைக் கோரை), பிடிக்கை; **தோளுக்கு** அணை, பிடிக்கை, மூங்கில்; **நகிலுக்குக்** கோங்கரும்பு, செப்பு, யானை; **நடைக்கு** அன்னம், மயில்; **நிறத்திற்கு** மணி நிறம்; **நுதலுக்குப்** பிறை, மதி, வளர்பிறை; **நோக்குக்கு** மானோக்கு; **பல்லுக்கு** முருந்து; **முகத்திற்குக்** கோடுகூடு மதியம், தாமரை, மதி; **முறுவலுக்கு** முல்லை; **மேனிக்கு** மாந்தளிர், வள்ளி; **வாய்க்குப்** பவழம், முருக்கிதழ்; **விரலுக்குக்** காந்தள் முகை: தாமரை இதழ்—உவமையாதலை, இவ்வகராதி மூலம் அறிகிறோம்.[1] இவையன்றி மகளிர் இலக்கணம் கூறும் 'நூல்' ஒன்று இருந்தமையும் இதனால் அறியலாம்.

சிலம்பில் மகளிர் செயல்களாக, அரசன் கொடியைப் பாடுதல், அரசனை வாழ்த்திப் பந்தடித்தல், அரசன் முன் செல்லாமை, இன்பத்திற்கு முதல்வராதல், கணவன் இருக்கும்பொழுது துறத்தல், கணவனைப் பெறச் சாத்தன் கோயில் முதலானவற்றில் வழிபடல் கூந்தலை அகிற்புகையால் புலர்த்தல், கூந்தலை ஐந்து வகையாக முடித்தல், கொழுநர் அகலத்து ஒடுங்கித் துயிலல், சந்தன உரலில் யானைத் தந்தங் கொண்டு முத்தங் குற்றுதல், தழீஇய துணங்கை, தெருட்டத் தெருண்டு குறையுறப் பெறுதல், தோள் முதலியவற்றில் வண்ணம் எழுதுதல், தோளில் கரும்பின் வடிவம் எழுதுதல், பல்லாண்டு ததும்ப வாழ்த்துதல், பிறர் நெஞ்சு புகுதல், விளக்கு ஏந்துதல், மைந்தருடன் நிலா முன்றிலில் இளவெயிலில் நுகர்தல், காமன் சேனையாதல், கண) வரொடு) நீள் நெறிச் செல்லாமை' முதலான அமையும். மகளிர் **முகத்திற்குச்** சந்திரனும், **கூந்தலுக்கு** கொன்றைப் பழமும் மேகமும் **இடைக்கு** வச்சிராய்தமும் உவமையாவதும் இங்கு ஐயரவர்களால் தரப்பட்டுள்ளன.[2]

சீவக சிந்தாமணியில், மகளிர் உற்றவர்க்குரியராதல், மது சமைத்தல், கடன், கண் இடன் ஆடல் (நன்னிமித்தம்), கற்பின் மிகுதியால் வஞ்சினங் கூறல், கொப்புளித்தலால் மலரும் மரங்கள், தீண்டவும் நோகவும் மலரும் மரங்கள், சாந்தரைத்தல், சித்திரம் எழுதுதல், தாம் வளர்த்த முல்லைக்கொடி முதலில் அரும்பியபோது அதற்கு விழாச் செய்தல், பந்தாடல், புலம்பல், பொழில் விளையாடல், முத்துக் கோத்

1. பெருங்: பக்: 1045-47
2. சிலப்: பக்: 708-709

தல், வலக்கண் துடித்தல் (தீமை), விளையாடல்—ஊசல், கழற்காய்; மந்திரத்தால் வசீகரிக்கப்படுதல்—முதலான செய்திக் குறிப்புக்கள் அமையும்; உவமை நிலையில் மகளிர், முடிக்குக் குயிலும், தக்க நாட்டின் இனிமைக்கு மகளிர் மாமைக் கவினும் அமைதலை இங்குக் குறித்துள்ளார் டாக்டர் ஐயர்.[1]

இதே போன்று, யானை தொடர்பான செய்திகளை மிக விரிவாகப் பெருங் கதையிலும் சீவக சிந்தாமணியிலும் தொகுத்தளித்துள்ளார். பெருங் கதையில், யானை ஆயிரத்தெட்டு; கண் மறைத்த படாம்; கண் அயலில் கடாம் பிறத்தல்; எழுந்த வெஞ்சினம்; கடல் என அதிர்தல்; வண்டை ஒட்டுதல்; செண்டு வெளி; தந்தத்தால் செய்த கட்டில், கால், சீப்பு, செப்பு, தூண், வாகனம்; கொம்பை உலக்கையாகக் கொளல்; தந்தத்தில் முத்துப் பிறத்தல்; யானைத் தானம்; யானை தாங்கித் தழும்பிய கை; யானை நீருக்காகத் துதிக்கையை மேலே எடுத்தல்; யானைப் படை; யானைப் பாகர்; யானைப் பிணர் எருத்து; யானைப் புறத்து இருத்தல்; பேய்த்தேரை நீர் என்று மயங்கல்; மத்தகத்துக் கையை ஊன்றல்; மதத்தில் வண்டு படிதல்; மதத்தைப் (பிறர்) பூசிக் கொள்ளல்; மருப்பு; யானை மாயம்; யானை மிசைக் குடை கவித்தல்; மூத்தோர் முதலியோரைத் துன்புறுத்தாமை; யானை மேல் முரசேற்றி வெற்றியைத் தெரிவித்தல்; யானையது அச்சம்—அணி நிழல்; யானை இளையர்; யானையிற் சிறைப் படுதல் (உதயணன்); யானையின் அருஞ் சிறை; யானையின் கதி வகைகள்; கவுளில் மதம் பிறத்தல்; கழுத்தில் ஆயுதம் வைக்கப் படுதல்; யானையின் சீலம்—மணி; மதம் மண நாறுதல்; முகத்திற் கொடி முதலியன எழுதல்; யானையும் பிடியும் புரவியும் சேனையும்; யானை எழுதிய புணை; யானை எருத்திற் தந்த நீரால் மணமக்களை நீராட்டல்; யானை ஏற்றம் முதலிய விச்சை; யானையை இசையில் (யாழ், வீணை) வணக்குதல்—அடக்குதல்; யானையை அடக்கும் கருவிகள் (காழ் முதலான); யானையை வடிக்கும் வட்டம்; யானை வண்டை ஒப்புதல்; யானைவாரி—வித்தகர்—வேட்கை—முதலான யானை தொடர்பான பல்வேறு செய்திகள் அகர வரிசைப் படுத்தப் பட்டுள்ளன. இவையன்றி, யானைக் கைக்குப் பனந்துண்டமும், கை சொரி உதிரத்திற்குப் பை சொரி பவளமும், கொம்புக்குப் பிறையும், முகத்திற்கு அருவியும், முழக்கிற்கு இடி—கார் முழக்கமும், கடாத்திற்கு அருவியும், அற்றுப் போன வாலிற்கு வில்லின் துண்டமும், செலவிற்குக் கணையும் காற்றும், துதிக்கைக்குப் பாம்பும், வேகத்திற்கு மனோ வேகமும் உவமையாவதும் இவ்வகராதியில் இடம் பெறும். பொது நிலையில் யானைக்குக் குன்று, கூற்று, மலை, மேகம்,

1. சிந்: பக்: 1644.

முதலான உவமையாதலையும் இங்கு ஐயரவர்கள் எடுத்துக் காட்டுவர்.[1]

சீவக சிந்தாமணியிலும், யானை ஆயிரத்தெட்டு; யானை—ஆவித் தன்ன புண்; இசைக்கு வணங்கல்; ஐந்து அங்கங்களால் பகைவரைக் கொல்லல்; யானைக் கண்—கவளம்—கூடம்—சேடன்—மருப்பு—செவிப் புடை; யானைக்கு அஞ்சனம் எழுதுதல்—வெள்ளணி அணிதல்—மத்தகத்தில் சங்கம் அணிதல்—பருமத்தில் பொன்னாலாய கண்ணாடி வைத்தல்; யானைக் கொம்பால் செய்த தோடு—உலக்கை—தந்தச் செப்பு—சீப்பு—குரம்பை; யானையின் மத மணம்—மத வெம்மை—மதத்தை வண்டுண்ணல்—மதத்தால் வீதிகள் சேறாதல்—மத நாற்றத் தால் மற்ற யானைகளை அஞ்சுவித்தல்; யானை வகை, யானை நாதத்தில் தோன்றியமை, யானைக் கொம்பால் உழுவித்தல், செண்டு வெளி; தொழு; யானைத்தீ நோய்: தோலின் இயல்பு; தோலின் நூற்றுரை; துதிக்கையை வைக்கும் இடம்; நெற்றிக் கச்சு; யானைப் போர்—தனித்து யானையுடன் போர் செய்தல்; யானையின் உச்சியில் தீர்த்த நீரை எடுப்பித்தல்; உறுப்புக்களில் நிலம் தோய்வன ஏழு; யானை ஏற்றம்—ஏறுவோர் அதனைத் தொழுதல்—அடக்கல்; யானையைக் கொல்லும் புலி; யானை வீரர்; யானை வேட்டை—முதலான வருணனை மரபுகள் தொகுக்கப்பட்டுள்ளன. உவமை நிலையில், பிற பொருளை விளக்க இங்கு யானை உவமனமாக வரும் நிலையே மிகுதி; கொம்பிழந்த யானை உதயணனைப் பிரிந்த தோழர்க்கும், யானையின் பழு (விலா எலும்பு) பொங்கு காய் குலை அவரைக்கும் உவமையாயின; யானை மேல் எடுத்த கொடிக்குக் கதலிகைக்காடு உவமையாகும்.[2]

இங்ஙனம், ஐயரவர்கள் தம் அரும்பதவகராதியில், வருணனைக் கூறுகளையும், உவமைகளையும் தொகுத்தளித்துள்ளார். இவை, காப்பிய வருணனைக் கூறுகள் பற்றிச் சிந்திக்கும் ஆய்வாளனுக்குப் பெருந்துணை செய்யும் என்பதில் ஐயமில்லை. இங்குப் பெருங்கதை, சீவக சிந்தாமணிக் காப்பியங்களில் இவ்வருணனை மரபுகள் மிகுதியும் அமைவதன் காரணம், மூலநூல் அமைப்பே எனலாம்.

5. மெய்ப் பாட்டுக் குறிப்பு:

'மெய்ப்பாடாவது பொருள் புலப்பாடே' என்பர் தொல்காப்பியர். இப்பொருள் புலப்பாட்டு நெறியைப் பண்டை உரை நூல்களில் பரக்கக் காணலாம். ஐயரவர்கள் தம் குறிப்புரையில் இம்மெய்ப்

1. பெருங்: பக்: 1070—71
2. சிந்: பக்: 1657

பாட்டுக் குறிப்புக்களைத் தந்ததோடு மட்டுமல்லாமல், அரும்பத முதலியவற்றின் அகராதியிலும், கோடிட்டுக் காட்டிள்ளார். சில மெய்ப்பாடுகள் இன்ன காரணம் பற்றி வந்தன என்று விளக்கியும் சென்றுள்ளார். சில மெய்ப்பாடுகள் வருமாறு:

அழுகை,[1] ஆக்கம் பற்றி வந்த மருட்கை,[2] ஆராய்ச்சி,[3] இகழ்ச்சி—இகழ்ச்சிக் குறிப்பு,[4] இடுக்கண்,[5] இழவு,[6] இளிவரல்,[7] இன்பத்தை வெறுத்தல்,[8] தூது முனிவினமை,[9] பிறர் இளமையால் பிறக்கும் நகை,[10] வெகுளி[11] என்னும் மெய்ப்பாடுகள் சீவக சிந்தா மணியில் எங்கெங்கே அமைந்துள்ளன என்பதை எடுத்துக்காட்டுக் காட்டுவர். மணிமேகலையில் புதுமை பற்றி வந்த மருட்கை என்னும் மெய்ப்பாடும்.[12] சிலப்பதிகாரத்தில் அழுகையில் தோன்றிய மருட்கை என்னும் மெய்ப்படுாம், அழுகையைச் சார்ந்த வெகுளி மெய்ப்பாடும்,[13] இடம் பெற்றுள்ளன. பெருங்கதை அகராதியில், கோபக் குறிப்பு, கோபத்தால் வியர்த்தல், கோபத்தால் சிவந்த கண்ணுக்குத் தீ, கோபத்தால் புருவம் துடித்தல் — தூணைப் புடைத்தல், கோபத்திற்குக் கனல், நாகம் ஆகியன உவமையாகல்[14] முதலான வெகுளி மெய்ப்பாட்டுக் கூறுகள் விரிவும் விளக்கமும் பெற்றுள்ளன. இங்குச் சீவக சிந்தாமணியில் இடம்பெறும் மெய்ப்பாடு களே மிகுதியும் தொகுக்கப்பட்டுள்ளமை நோக்கத் தக்கது.

6. சமயக் கலைச் சொல் விளக்கம் :

காப்பியங்கள் சமயம் சார்ந்தனவே. எந்த ஒரு பழந்தமிழ்க் காப் பியமும் சமயத்திற்குப் புறம்பாக எழுந்துள்ளதாகத் தெரியவில்லை. ஐயரவர்கள் பதிப்பித்த நான்கு காப்பியங்களுமே புறச் சமயம் சார்ந் தன என்பதை நாமறிவோம். ஆகலின் இச்சமய உண்மைகளைத் தேடித்தொகுத்து உரை எழுதிய டாக்டர் ஐயரவர்கள், அவற்றை அரும்பத அகராதியிலும் தந்துள்ளார். இவற்றை எல்லாம் ஒருங்கு தொகுப்பின், ஒரு 'சமயச் சொற்களஞ்சியமே' உருவாகிவிடும் என்ப தில் ஐயமில்லை. இக்கலைச் சொல் அகராதிக்குச் சில போது நீண்ட விளக்கமும் தந்துள்ளார். இவ்வகராதியைத் தொகுப்பதில், சீவக சிந்தாமணி, மணிமேகலைக் காப்பியங்களுக்கு எடுத்துக் கொண்ட முயற்சி ஏனை இரண்டு காப்பியங்களிலும் பின்பற்றப்பட வில்லை; இந்நிலை குறிப்புரை எழுதுவதிலும் அமையும். பெருங்கதை யின் பிற்குதி-குறிப்பாகத் 'துறவுக்காண்டம்' கிடைக்காமையும் சமயச் செய்திகள் மிகுதியாக இடம் பெருமைக்குக் காரணமாகலாம்.

1—11; சிந்: பக்; 1555. 1557, 1559, 1560, 1561, 1564, 1565, 1615, 1636, 1655,

12. மணி: பக்: 488
13. சிலப்: பக்: 604
14. பெருங்: பக்: 959

அதோடு நான்கு காப்பியங்களும் சமயத் தொடர்புடையனவாயினும், மணிமேகலையிலும் சீவக சிந்தாமணியிலும் உள்ள சமய ஈடுபாடு, பிற இரண்டு காப்பியங்களில் இல்லை என்றே சொல்லலாம். சீவக சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையும் இதற்குப் பிறி தொரு காரணமாகும்.

சீவக சிந்தாமணியில் தரப்பட்டுள்ள சில சமண சமயக் கலைச் சொற்கள் — தொடர்கள் வருமாறு:

அசுப பரிணாமம், அத்திகாயம் ஐந்து, அதிசயங்கள் மூன்று (ஸஹஜாதிசய முதலியன), அதீதமான பரிஞானம், அதீதாவத்தை (அருகந்தாவத்தை), அநந்த சதுட்டயம் (அனந்த ஞனம் முதலியன), அநந்த சுகம் (எண்குணங்களுள் ஒன்று), அநந்தானு பந்திமாயை, அநந்தானுபந்தி லோபம், அருக சரணம், அவதி ஞானம் (முற் பிறப்பை அறியும் அறிவு), அவதி ஞானாவரணீயம், அவதி தர்சனா வரணீயம், ஆகமங்கள்-42, ஆகமப் பிரமாணம், ஆகார சமிதை இரண்டு, அனுபூர்வி இரண்டு, இரத்தினத் திரயம், இயக்கி, இத்தினப் பிரவை என்னும் சாரணர், இரதி கன்மம், உத்யோத நாம கர்மம், உபபோகந்தராயம், ஏகேந்திரிய ஜாதி நாம கர்மம், கணதரர் பதினொருவர், கர்மக்ஷயாதிசயம் பத்து வகை, கஷாயம் பதினாறு, காதிகர்மம், கேவல ஞானம், கேவல ஞானாவரணீயம், கேவல மடந்தை, சஞ்சுவலனக் குரோதம்-மாயை-மானம்-லோபம், சதுரிந்திரிய சாதி நாமகர்மம், சமவ சரணத்துள்ள பதினொரு பூமி, சமவ சரணம் (ஜினாலயம்), சமாவர்த்தனம் (பிரமசரிய விரதத்தை ஒழித்தற்குச் செய்யும் கிரியை), சரியை கோடல், சாது சரணம், சித்த சரணம், கித்தன், சுக்கிலத் தியானம், சுதம் (சுருதஜ் ஞானம்: நூலுணர்ச்சி; அது அக்ஷராத்மகம், அநக்ஷராத்மகம் என இருவகை), திவ்யத் தொனி, நமோ அரஹந்தாணம், நற்காட்சி, நன்ஞானம், நிகோதம், பிரசலாப் பிரசலை, பிரத்தியாக்கியானக் குரோதம்-மாயை-லோபம், முதலான இங்குக் கருதத் தக்கன.

'சித்தன்-சித்தபரமேஷ்டிகள்; காதி அகாதி என்னும் இருவகைக் கருமங்களையும் வென்று அக்கினி இந்திரனால் உடம்பைத் துறந்து, பரி நிர்வாணம் பெற்று, மூவுலகத்துச்சியில் இருப்ப வன்; சித்தம் பெற்றவன்; அசரீரி என்றும், அநங்கன் என்றும் கூறப்படுபவன்; முக்தி பெற்றவர்கள் பலராக இருந்தும் ஒருமை யாற் கூறல் சாதி ஒருமை என்பர் —சிந்:1600.

சுக்கிலத் தியானம்- எல்லாக் கருமங்களும் நீங்கிய பரமான்மா வாகத் தன்னைப் பாவித்தல்; பரமான்ம பாவனை எனப்படும். சிந்-1603

திவ்யத் தொனி— தேவர்கள் அருகனுக்குச் செய்யும் எண்வகைச் சிறப்பினுள் ஒன்று —சிந்: 1620.

நமோஅரஹந்தானம்— பஞ்ச நமஸ்கார மந்திரங்களில் ஒன்று; இதனை மந்திரத் தியானம் என்பர்—சிந்:1620.

நற்காட்சி— ஸம்மியத் தரிசனம், ஐயமின்மை, அவாவின்மை, உவர்ப்பின்மை, மயக்கமின்மை, அறப்பழி நீங்கல், அழிந்தா ரைத் தாங்கல், அறத்துக்கு அளவளவு, அறத்தை விளக்கல் என்னும் எட்டு உறுப்பினை உடையது. —சிந்:1621

நன்ஞானம்— ஸம்யக்ஞானம்; பொருள்களின் தன்மைகளை உள்ளவாறே உணர்தல் —சிந்:1621

நிகோதம்— ஏழு நரகத்திற்கும் கீழுள்ள ஒரு நரகம்—சிந்:1623

மந்திரம் ஐந்து— பஞ்ச நமஸ்காரம்; அருகர், சித்தர், ஆசிரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என்னும் பஞ்ச பரமேஷ்டிகளை வணங்குதற்குரியன —சிந்: 1647

மணிமேகலையிலும், இவை போன்று பௌத்த சமயக் கலைச் சொற்கள் பல அரும்பத முதலியவற்றின் அகராதியில் அமைந்துள் ளன. இவற்றில் பிற சமயக் கலைச் சொற்களும் உண்டு; அசகுல வேதனை, அருபப் பிரமர், அருகத்துக்கள், அனுமேயம், அனுவாதம், அஷ்டாங்க சீலம், அஷ்டாங்க மார்க்கம், உருபப் பிரமர், உலகம்-31 வகை, சத்தியம் நான்கு, தருமாத்திகாயம், தியான பாரமிதை, தியானம் ஐந்து, தீபங்கரர் முதலான பழைய புத்தர், துக்க நிவாரணம், துக்கோற்பத்தி, துடித லோகம், நிருவாணம், நிஷ்டை பத்து முதலான கலைச்சொற்களை—தொடர்களை இங்குக் குறிப்பிட லாம். இவை இவ்வகராதியில்விளக்கமும் பெற்றுள்ளன.

அசகுலவேதனை—துக்கவறிவு: இது பஞ்சஸ் கந்தங்களுள் ஒன் றாகிய வேதனையின் பகுதி மூன்றனுள் ஒன்று; -மணி: பக்: 401

அங்காகமம்—சைனாகமம் மூன்றனுள் ஒன்று; இது பன்னிரண்டு வகைப்படும் என்பர். —மணி: பக். 401

அருபப் பிரமர்—உலகம் முப்பத் தொன்றனுள், 28-ஆவதான ஆகாசா நந்தியாயதன லோகம் முதலிய நான்கு உலகங்களிலும் முறையே தங்கும் நான்கு வகைப் பிரமகணங்கள். இவர்களைத் தியானம் ஐந்தனுள் ஐந்தாவதில் தேறியவர்கள் என்பர் மணி: பக்: 405

அருகத்துக்கள்—தியானங்கள் ஐந்தனுள் நான்காவதில் தேறியவர்—மணி: பக்: 405

இங்கு, மணிமேகலையில் சமணம், சாங்கியம் முதலான பிறசமயக் கலைச் சொற்கள் பலவும் இடம் பெறக் காரணம் நூலின் உள்ளடக்கமே எனலாம். மணிமேகலையில் 'சமயக் கணக்கர் தந்திறங்கேட்ட காதை' முதலானவற்றில் பிறசமய மறுப்புக்கள் இடம் பெற்றுள்ளதால், ஐயரவர்களின் அகராதியிலும் பிறசமயக் கலைச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. சிந்தாமணியில் அருகியே பிறசமயச் செய்திகள் இடம் பெறும்.

7. வழக்கம்-மரபு-இயல்பு முதலான

குறிப்புரையில் இடம் பெற்ற உலக வழக்கு, இலக்கிய வழக்கு, நாடக வழக்கு, மரபுச் செய்தி, பழமொழி முதலானவற்றுள் சில இங்கு அகரவரிசைப் படுத்தப் பட்டுள்ளன. இவையன்றி, மூலத்தில் இடம் பெற்றுக்—குறிப்புரையில் எடுத்துக் காட்டப் பெறாதனவும், பழைய உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டியனவும் இவ்வகராதியில் சேர்ந்துள்ளன. இவை முழு நிலையில் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன எனக் கூறவியலாது.

பொது நிலையில் எடுத்துக் காட்டப் பெறும் சில இயல்புகள் வருமாறு:

குதிரையின் துடைகளில் அவை பிறந்த இடப் பெயரை எழுதுதல் —சிந்: 1590

அருகம் புல்லால் தோய்த்து நெய்யை அணிதல்—சிந்: 1556
,, வாகைத்தளிரால் ,, —பெருங்: 890

இல்லுறை தெய்வத்திற்கு மலரும் நெல்லும் தூவி வணங்கல் —சிலப்: 614

ஆற்றில் நீராடுவோர் அதில் வண்ணம், சுண்ணம், மலர் முதலியன இடுதல்—சிலப்: 609

இழிகுலத்தோர் உயர் குலத்தோர் வரும் பொழுது விலகி நடத்தல் —சிலப்: 615

இறந்தாரை உத்தேசித்துத் தானம் செய்தல்- -சிலப்: 625

கணவனைப் பிழைத்தோர் மீது செங்கற் பொடி தூவி நீராட்டுதல் —பெருங்: 932

கள்ளுண்ட மகளிர் தம் நிழலை வேறு மகளிராக நினைதல் —பெருங்: 939

நீர் விழாவில் தானம் செய்தல்— பெருங்: 1007

நீர் விழாவில் குற்றவாளிகளைச் சேர்த்துக் கொளல்,
— பெருங்: 1007.

புதுமண மகளிர் நாணத்தால் கண்ணைப் புதைத்தல்
— பெருங்: 1030

புலி முதலியவற்றிற்கு அஞ்சியமான், விளக்கொளியுள்ள இடத்தில் தூங்குதல் — பெருங்: 1031.

பெரியோர் முன் கையுறையோடு செல்லுதல்	—	பெருங்:	1035
பேய் பிடித்தோரின் பின் பறையடித்துச் செல்லுதல்	—	,,	1038
போரில் தோற்றோர் நீரில் பாய்தல்	—	,,	1044
மணமகள் மணமகனுக்கு இடப்பக்கத்தில் இருத்தல்	—	,,	1049
மணையின் கீழ் நெல்லையும் உழுந்தையும் பரப்பல்	—	,,	1050
மார்பைத் தழுவல் மரியாதை	—	,,	1059
முதுமகளிர் கன்னியரை நீராட்டுவித்தல்	—	,,	1064
முற்றத்தில் முக்கனி மரங்கள் இருத்தல்	—	,,	1066
முனிவர் இழிவுக்கு அஞ்சுதல்	—	,,	1066
மூங்கிற் குழாயில் தேனைப் பெய்து வைத்தல்	—	,,	1067
யாம் மகள் தருதும் கொள் எனக் கேட்டல் மரபன்று	—	,,	1070
வாயிலிடத்தே எதிர்கொளல், தோரணம் நாட்டல் கொடி உயர்த்தல்	—	,,	1081
விருப்பமில்லாத வற்றைக் கேட்கையில் செவிபுதைத்தல்	—	,,	1085
வீட்டுத் தோட்டத்தில் முல்லைக் கொடிவளர்த்தல்	—	,,	1087
வேகத்தில் வழியில் உள்ளன சுழலல்போலத் தோன்றல்	—	,,	1090
வேம்பின் சினையில் கண்ணைப் பெயர்த்து வைத்து வழிபடல்	—	,,	1091

இவையன்றி, அரசியல் தொடர்பான சில வழக்காறுகளும் பெருங்கதை அகராதியில் தொகுத்துரைக்கப் பட்டுள்ளன. அரசன் கழுநீர், குவளை, தாமரைப் பூவைக் கையில் பிடித்தல், காலையில் அஞ்சனம் அணிந்து கொள்ளுதல், தீய செய்திகளைக் கூறுவோர்க்கு அபயம் கொடுத்தல், வேறிருந்து கருமம் ஆராய்தல், பிடிமீது செல்லுதல், அரசர்க்கு முன் காலையில் ஊழியர் பெயர் வரிசை வாசிக்கப் பெறுதல், அரசனைக் காணிக்கையுடன் சென்று பார்த்தல், பிழை செய்தோர் (அரசனுக்கு) தம் நிறையுள்ள பொற்பாவையைத் தண்டமாக அளித்தல் முதலான இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. (பக்: 882-83).

சில பழமொழிகள் வருமாறு:

உதிரம் உறவறியும் — சிந்: 1567

கொடைக்கு ஒருவன் படைக்கு ஒருவன் — சிந்: 1595

நஞ்சினை அமுதம் என்று நக்கினும் அமுதமாகாது — சிந்: 1619

புலிக்குத் தன்காடும் பிறகாடும் ஒக்கும் — சிந்: 1638

முள்ளைக் கொண்டு முள்ளைக் களைதல் — ,, 1654

வெளிறுமுன் வித்திப் பின்னை வச்சிரம் விளைத்தலாமோ — ,, 1666

வெற்றிலை விடினும் வேலாம் — ,, 1666

மன்னவன் எப்படி மன்னுயிர் அப்படி மணி; 502

வேந்தரை வெஞ்சொல் உரைத்தோரை அஞ்சுக பெருங்: 1091

இவையன்றிச் சில உலக வழக்குகளும் மரபுகளும் கூட அரும்பத அகராதியில் இடம்பெற்றுள்ளன.

உப்பும் உலகும் உள்ள அளவு வாழ்வீர் என்னும் உலக வழக்கு — சிந்: 1597

இயக்கி — இசக்கி, பாண்டி நாட்டு வழக்கு — சிலப்: 612

பனி — (நோய்) — குடகு நாட்டு வழக்கு — சிலப்: 693

துறந்தோரைத் தேவர் என்றல் சைன சமய மரபு — சிந்: 1616

8. புராணக் கதைக் கூறுகள் :

காப்பியம் சமயச் சார்புடையது என எண்ணும் போதே, அவற்றில் புராண மரபு தவிர்க்க முடியாத ஒன்றாக அமைந்து விடுகின்றது. எந்தச் சமயமும் புராண வரலாற்றிற்கு அப்பாற்பட்டு நிற்பதில்லை. இந்தியத் துணைக் கண்டத்தைப் பொருத்தவரை, இப்புராணக் கதைகள் பல இன்ன சமயத்திற்கே உரிமை உடையன என வேறு பிரித்து அறிய முடியாத அளவு ஒன்றுடன் ஒன்று இணைந்து கலந்து ஒன்றாகியுள்ளன. வைதீக சமயப் புராணக் கதைகள் என்று நாம் கொள்வன, பௌத்த, சமணச் சார்புக் கதைகளாக மாறியுள்ள நிலையை அச் சமய இலக்கியங்களால் அறிகிறோம். 'இந்திரன்' பற்றிய புராணக் கதை எந்த சமயத்தைச் சார்ந்தது என்று வேறு பிரித்து அறிய முடியவில்லை. இந்த நிலையில்தான் ஐயரவர்கள் பதிப்பித்த சமண, பௌத்தக் காப்பியங்களிலும் இ ப் பு ரா ண வரலாறுகள் அமைந்துள்ளன. திருமால், இந்திரன் முதலான புராண நாயகர்களின் கதைகள், மேருமந்திரபுராணம், ஸ்ரீ புராணம் முதலான சமண நூல்களில் இடம் பெற்றுள்ளமையை ஐயரவர்கள் தம் குறிப்புரையில் பல இடங்களில் எடுத்துக் காட்டுவர். அதே போன்று, அரும்பத முதலியவற்றின் அகராதியிலும், இப்புராண மாந்தர்தம் பெயர்கள் வருகின்றபோது, அவர் தொடர்பான புராணச் செய்திகளையும் தருவார்.

சிலப்பதிகாரத்தில், இந்திரன், இறைவன், உருப்பசி, திலோத் தமை, துர்க்கை, தேவாசுரப் போர், முசுகுந்தன், முருகன், விக்கிரமா சுரன் முதலான பெயர்களும் தொடர்களும்[1] அகராதியில் இடம் பெறும் போது, அவை தொடர்பான புராணக் கதைக் குறிப்புக்களும் அங்கங்கே இடம் பெற்றுள்ளன. மலைச் சிறகு அரிந்தது, 140—யோசனை விரிந்த யானையின் மேல், 'கா' முதலியவற்றைப் பரப்பிச் சென்றது, 1000—கண் உடைமை—ஆகியன இந்திரன் தொடர்பான புராணச் செய்திகள். மகிடாசுரனைக் கொன்றதும் மரக்காலாடியதும் மருதின் மீது நடந்ததும் துர்க்கையோடு தொடர்புடையன. முசுகுந்தன் சொர்க்கத்தைக் காத்ததும், அதன் பொருட்டு அவனுடன் வந்த பூதம் பற்றிய புனைவும் வரலாற்று பழங்கதையே. முருகன் கடல் வயிறு கிழித்ததும், திரை அரங்கமாகக் கடலில் துடிக் கூத்து ஆடியதும், மலை நெஞ்சு பிளந்ததும் புராணப் புனைவே. தேவாசுரப் போர் 18—ஆண்டுகளும் இராமாயணப் போர் 18—மாதங்களும், பாரதப் போர் 18—நாட்களும் நடந்த இதிகாச வரலாறும், விக்கிர மாசுரன் எருமைத் தலையுடையவன் என்பதும், இப்புராண மாந்தர் தம் அகராதியில் ஐயரவர்கள் தந்த புராணச் செய்திகளாகும்.

பெருங் கதை அகாரதியில், அருச்சுனன் காண்டவ தகனம் செய்ததும், முருகன் சூரனைத் தடிந்ததும், திலோத்தமை பற்றிய குறிப்பும் இடம் பெறும்.[2] மணிமேகலையில், அகத்தியர், காகந்தன், காய சண்டிகை, கீரிப்பிள்ளை—பார்ப்பினி, சக்கர வாளக் கோட்டம், சம்பாதிவனம், சம்பாபதி, புத்தன், புள்ளிருக்கு வேளூர்—முதலான பெயர் அகராதியில், பல புராணக் கதைக் குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.[3]

புத்தர் இருபத்து மூவர் என்றும், இருபத்து எழுவர் என்றும், புத்தர் பலர் முன்பு அவதரித்தார் என்றும், அவர் கருணையால் பல பிறப்பு எடுத்தார் என்றும்—மான் உரு எடுத்தது, மீன் உரு எடுத்தது, முயலாகித் தசை ஈந்தது, யானையாய் மருப்பு ஈந்தது முதலான—, இந்திரனுக்குக் கண் கொடுத்தார் என்றும், புலியின் பசியைத் தீர்த்தார் என்றும் பல செய்திகளைப் 'புத்தர்' பற்றிய புராணக்கதை யாகக் குறிப்பர்.

'அகத்தியர் ஒரு முனிவர். காகந்தன் என்னும் அரசனால், தமது கமண்டலத்திலிருந்து, காவிரியைப் பூமியில் பெருகச் செய்தவர்.

1. சிலப் : பக்: 611, 616, 619, 671, 672—73, 676, 719, 721, 730.
2. பெருங்: பக்: 884, 989, 1064.
3. மணி, பக்: 401, 425, 435, 438, 445, 446, 488, 489.

அவ்வரசன் பரசுராமருக்கு அஞ்சித் தம்பால் அடைக்கலம் புகுந்த போது அவனைக் காத்தவர்; தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் மூலம் புகாரில் இந்திர விழா எடுத்தவர்' என்பது அகத்தியர் பற்றியமையும் புராணக் கதை. இங்ஙனம், அரும்பத அகராதியில் பல புராணக் கதைகளும், கதைக் கூறுகளும், கதை மாந்தர்களும் கதை நிகழ்ச்சிகளும் சிறப்பிடம் பெற்றுள்ளன.

9. **மேற்கோள் நூல்கள் :**

நூலிலும், உரையிலும் மேற்கோளாக அமைந்த இலக்கண, இலக்கிய, சமய, இசை, நாடக நூல் பற்றிய விளக்கமும், இவற்றின் ஆசிரியர் பற்றிய வரலாறும் 'அரும்பத அகராதியில் தொகுத்தளிக்கப் பெற்றுள்ளன. இவ்வகையில் தொல் காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம் முதலான காப்பியங்கள்,—ஆகியன பற்றிய குறிப்புக்களையும் அவற்றின் ஆசிரியர் வரலாற்றையும் பெரும்பாலும் எல்லாப் பதிப்புக்களின் அகராதியிலும் சேர்த்துள்ளார். இவையன்றி, அரிய பல நூல், நூலாசிரியர் பற்றிய செய்திகளும், இலக்கிய—உரை நூலுக்கு அடிப்படையாக அமைந்த வடமொழி மூல நூல், நூலாசிரியர் பற்றிய செய்திகளும் இவ்வகராதியில் சிறப்பிடம் பெற்றுள்ளன. நூல்களன்றி, நூல் உறுப்புக்கள் சில பற்றிய விளக்கமும் இங்கு அமைந்துள்ளன. இவ்வகராதி மூலம் மிகுதியான இசை நூல்கள் பற்றிய செய்திகள்—சிலப்பதிகாரத்திலும், சமய நூல் பற்றிய செய்திகள் மணிமேகலையிலும் இடம் பெற்றுள்ளமையை அறியலாம். இங்கு ஐயரவர்கள் குறிப்பிடும் நூல்களைத் தொகுத்துக் காண்பது, தமிழ் இலக்கிய ஆய்விற்குப் பெரும் பயன் நல்கும் என்பது வெள்ளிடை மலை.

சீவக சிந்தாமணி அகராதிமூலம், சயந்தம், சித்தாரூடம், தசகுமார சரிதம், இரத்தின கரண்டம் (வடநூல்) என்னும் நூல்களையும், சந்திரா பரணம் என்னும் சோதிடநூல் பற்றிய செய்தியையும் அறிந்து கொள் கிறோம்.[1] சிலப்பதிகார அகராதி, களரியாவிரை, கனா நூல், சினேந்திர மாலை என்னும் சோதிட நூல், நவகதிர் என்னும் ஆசீவக மதநூல், பிரயோக விவேகம், பெருங்கலித் தொகை, வெண்டாளி முதலான நூல்களையும்; செவ்வைச் சூடுவார், படியங் கொற்றனார், முரஞ்சியூர் முடிநாகராயர் முதலான கவிஞர் பெருமக்களையும் நமக்கு அறிமுகம் செய்கிறது. அதோடு அகத்தியம், இந்திர காளியம், சயந்தம் செயிற்றியம், பரதசேனாபதீயம், பெருநாரை, மதிவாணர் நாடகத் தமிழ்நூல் முதலான இசைநாடக நூல் பற்றிய செய்திகளையும், ஆதிவாயிலார், யாமளேந்திரர் முதலான இசைநூலார் பற்றிய குறிப்புக் களையும் அறிகிறோம்.[2]

1. சிந்: பக்: 1598, 1599, 1600, 1607-முதலான.
2. சிலப்: பக்: 594, 607, 611, 635, 636, 653, 657, 661, 679, 688, 690, 697, 703, 704, 711, 720, 734, முதலான-

மணிமேகலை அகராதி, அபிதர்மார்த்த சங்கிரகம் என்னும் பௌத்தநூல்; சித்தாந்தத்தொகை, தருக்க சங்கிரகம் என்னும் பௌத்த சமயம் சார்ந்த தமிழ்நூல்; பாக சாத்ரம் என்னும் மடைநூல்-கிருஹ்ய ரத்நம், சப்த கௌஸ்துபம், ஜயதேவரின் கீத கோவிந்தம்,—முதலான வடமொழிநூல்—ஆகியவற்றை அறிமுகப் படுத்துவதோடு, வைசேடிக மதாசிரியரான கணாசனர், புத்த சரித்திரத்தை வடமொழியில் காப்பிய மாகச் செய்த அசுவ கோஷ போதி சத்துவர், ஸ்ரீ வைஷ்ணவரான தோளப்பர் முதலான ஆசிரியர்களையும், நம் நினைவில் நிறுத்துகிறது.[1] இவற்றில் பல, சிறப்பாக விளக்கவும் பெற்றுள்ளன.

10. இடவியல் விளக்கம்

அரும்பத வகராதியில், மூலநூல், உரைநூல்களில் இடம்பெற்ற நாடு, நகர், யாறு, மலை, வனம் பற்றிய பெயர் அகராதியை அமைப்ப தோடு, அவை பற்றிய சிறு விளக்கங்களையும் அமைத்துள்ளார். அன்றியும், இவ்விடப் பெயர்கள், தற்காலத்தில் எந்த வடிவில் வழங்கி யுள்ளன என்றும், அவை எங்கெங்கே அமைந்துள்ளன என்றும் குறிப்பிடுவர். ‘இலக்கியங்களில் இடப்பெயர்’ ஆய்விற்கு, இவ்வகராதி துணை செய்யும். இவ்விடவியல் விளக்கம் காப்பியக் கதை நிகழ்ச்சி களைத் தெரிந்து கொள்ளவும் உதவுகிறது.

அஞ்சனமாநதி—சித்திரகூட மலையிலிருந்து பெருகுவதோர் ஆறு
— சிந்: 1549

அமரிகை யாறு — ஏமாங்கத நாட்டிற்கும் தண்டகாரணியத்திற்கும் இடையிலுள்ள நதி— சிந் 1552

அரண பாதம் — ஜினாலய முள்ள ஒருமலை ,, 1553

இராசமாகிருதம்— மகத நாட்டிலுள்ள தொரு நகரம்—சிந்: 1562.

இராசமாபுரம்—சீவகன் நகர், ஏமாங்கத நாட்டில் நாற்காத அகல முடைய தாயிருந்தது— சிந்: 1562.

சந்திராப நகர் — தனபதியின் நகர் — ,, 1598

சந்திரோதயம்— ஒரு நகர், ஒருமலை, சுதஞ்சனன் தங்கும் இடம்
— சிந்: 1598

1. மணி: 401, 402, 403, 428, 438, 446, 449, 457, 458, 469, 482.

தரணி திலக நகர்— இராசமாபுரத்திற்கும் தண்டகாரணியத்திற்கும் இடையே யுள்ளதோர் ஊர் — சிந்: 1608.

அங்க நாடு — துச்சயன் என்னும் அரசனுடையது; இதன் இராச தானி கச்சய நகரம் — மணி: 401

அயிராபதம்— சிங்கச் சுவணம் என்னும் பொன் பிறத்தற்கு இட மான ஒருமலை—ஐராபதம் எனவும் வழங்கும், — பெருங்: 882.

இங்ஙனம் நூலில் வருகின்ற அனைத்து இடப் பெயர்களையும் ஐயர வர்கள் தம் அரும்பத அகராதியில் தந்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

சிலம்பில், அழும்பில் (சேரநாட்டு ஊர்), இமயம், இலஞ்சிமன்றம், இலங்கை, உறந்தை, குணவாயில், குயிலாலுவம், குமரி (ஆறு), கொடுங் கோளூர், கொடும்பாளூர் (கொடும்பை), கொற்கை, கோழியூர் (உறையூர்), சிறுமலை, சிலம்பாறு, செங்கோடு (திரு), தெங்க நாடு ஏழு, நேரிவாயில் (ஊர்), பஃறுளியாறு, மாங்காடு (ஊர்), முன் பாலை நாடு (குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்கும் இடையிலுள்ள நாடு), வச்சிரக் கோட்டம் (கோயில்), வச்சிர நாடு, வஞ்சி, வியலூர்-முதலான அகரவரிசைப் படுத்தப் பட்டுள்ளன.

மணிமேகலையில், இடவேயம் (அத்திபதி அரசன் நகர்), உச்சயினி, உலக அறவி, கச்சயம், கபில வஸ்து, கலைநியமம் (தென் மதுரையி லுள்ள சிந்தா தேவியின் கோயில்), காஞ்சன புரம், காகந்தி, காயல் கரை (நதி), கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டு, கோசஞ்சார பூமி, சக்கர வாளக் கோட்டம், சம்பாதிவனம், நாகபுரம், நாக நாடு, பாத பங்கய மலை—முதலான முறைப்படுத்தப் பட்டுள்ளன.

பெருங்கதையில், இரத்தினபுரம், இராசகிரியம், இலாவணகம், உஞ்சேனை, காந்தார நாடு காம்போசம், சிந்து (இருநதி-இமயத்திலும் மேருவிலும் ஓடுவது), சின்னச் சோலை (மலை), சேதி நாடு, நருமதை யாறு, புன்னாளகம், மகத நாடு, போதனபுரம், மதுகாம்பீரவனம், மாகளவனம், யமுனை, யவனம், வத்தவ நாடு, விஞ்சையம் பெரு மலை, விபுலம் (மலை), விதையம் (நாடு), விந்தம் (மலை) முதலான அமையும்.

இவற்றில் சில வற்றிற்கு மட்டுமே இன்று அவை எங்கிருக்கின்றன என்பது பற்றி விளக்கம் தந்துள்ளார். இவற்றில் 'புத்த கயை' பற்றியம், 'சமந்தம்' மலை பற்றியும் குறிப்பது இங்கு நோக்கத்தக்கது; 'சமந்தம்' மலை இன்று இலங்கையில் உள்ள 'ஆடம்ஸ் பீக்' என்று குறிப்பிடுவர்.

'புத்தகயை — இக் காலத்தில் கயை என்று வழங்குமிடத்தின் தெற்கே, ஐந்து நாழிகை வழித் தூரத்திலுள்ள ஓரிடம்; இதில் கௌதம புத்தர் ஞானம் பெற்ற அரசமரம் இன்றும் இருக்கின்றதென்பர்' — என ஐயரவர்கள் குறிப்பிடுவர்.

11. பிற சிறப்புச் செய்திகள் :

அரும்பத அகராதியில், ஒழுக்க - பண்பாட்டுக் கூறுகள் சிலவற்றையும், இசை நாடகத் தொடர்பான செய்திகளையும், வரலாறு, சோதிடம் பற்றிய குறிப்புக்களையும், இன்னபல செய்திகளையும் விளக்கிச் செல்வதைக் காணலாம். இக்கருத்துக்கள் பேரிடம் பெறவில்லை யாகினும், ஆங்காங்கே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

'ஒருத்தி தன் வேட்கை உரைத்தலால் அவளது குலனும் நலனும் கீழ்ப்படும்' — சிந் : 1575.

'பத்தினி இல்லாதவர் பல தருமங்களைச் செய்தாலும் தேவ லோகம் அடையார்' — மணி : 479

பத்தினிப் பெண்டிர் இடும் பிச்சை ஏற்றல் பெருந் தகவுடைத்து — மணி : 479

பிணங்களைச் சும்மா போடுவர் பாரசீகர்; இவர்களுக்கு அக்கினி தெய்வமாதலின் பிணங்களைச் சுடுவதில்லை — மணி : 484.

பிணங்களைத் தாழியாற் கவித்தல் - முதுமக்கள் தாழி — மணி : 484, 505

எனப் பண்பாட்டுச் சின்னங்களாக அமையும் சில செய்திகளை இவ்வகராதியில் ஐயரவர்கள் சேர்த்திருப்பது, நம் சிந்தனைக்கு 'விருந்தாகிறது. அன்றியும்' இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா', 'கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று', 'கள்ளும் களவும் காமமும் பொய்யும் வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்'[1] என்றும் நூல் உணர்த்தும். சில அறங்களையும் இவ்வகராதியில் தொகுத்தளித்துள்ளார்.

சோதிடம், நிமித்தம் தொடர்பான சில செய்திகளைச் சொல்லகராதியாகவும், பொருளகராதியாகவும் அமைத்து விளக்கியுள்ளார் டாக்டர் சாமிநாத ஐயர்.

---

1. சிலப் : பக், 634,635,615.

உத்திரட்டாதி யான் - சீவகன் - சிந் : 1567.
சயை - திருதியை, அஷ்டமி, திரயோதசி என்னும் திதிகள் — சிந் : 1599.

அட்டமி திதி - பட்டினி இருத்தற்குரிய தினங்களுள் ஒன்றென்பர் சைனர்; அட்டமியில் பகலில் உண்ணலாகா தென்பர் தரும நூலுடையார் — மணி : 402.

நாராயணீயம் - வேதங்கள் ஆறனுள் ஒன்றாகிய சோதிட நூல் — மணி : 473.

ஜ்யௌதிஷம் - கணித ஸ்கந்தம், ஜாதக ஸ்கந்தம் ஹோரா ஸ்கந்தம் என மூன்று வகைப்படும் — மணி : பக் : 514.

எனச் சொற் பொருள் விளக்க நிலையில் சோதிடக் கருத்துக்களை உணர்த்துவதோடு, 'சோதிட நூலோர்', 'சோதிட வார்த்தை', 'சோதிடாங்கம்' [1] எனச் சொல்லகராதி மூலமும் இக் கருத்துக்களை விளக்கிச் செல்வர். இவையன்றிப் பொருளகராதி நிலையில், 'சுக்கிராஸ்த மனம் (அஸ்தமனம் சூரியனோடு சேர்தல்) விவாகத் திற்குக் கூடாது[2], 'பிறந்த நாளில் செவ்வாய்க் கோள் விருச்சிகத்தில் சேர்தல் தீது',[3] என இச் செய்திகளை ஆய்வாளர்களுக்கு வழங்கி யுள்ளார்.

சோதிடத்தோடு தொடர்புடைய நிமித்தம் (சகுனம்) பற்றிய குறிப்புக்களையும் சுட்டிச் சென்றுள்ளார்.

வலக்கண் ஆடல் ஆடவர்க்கு நன்னிமித்தம்; மகளிர்க்குத் தீ நிமித்தம்; மகளிர்க்கு இடக்கண் ஆடல் நன்னிமித்தம்
— சிந் : 1659.

ஆனேற்றின் கண்ணீர் சோர்தல் சகுணக்கேடு, ஆனேறு எதிர்ப்படுதல் அபசகுனம் } — சிலப் : 609

ஆட்டு மறி துள்ளி விளையாடாமை உற்பாதம் — சிலப் : 606.

இரவு வில்லிடல் உற்பாதம் — சிலப் : 613.

பகைவர் நாட்டில் பகலில் கூகை நகுதல் உற்பாதம் — சிலப் - 687.

மரங் கொத்திப் பறவை சொல்லால் சகுனம் அறிதல் — பெருங் : 1053.

1. சிலப் : பக் ; 663.
2. சிந் : பக் : 1603.
3. பெருங்: பக் : 1027.

சோதிடர்களுக்கு இறையிலி நிலம் வழங்கப்பட்ட வரலாற்று உண்மையினையும் இவ்வகராதி நமக்கு அறிவிக்கிறது.[1]

இசை, நாடகம் தொடர்பான கருத்துக்கள் சில, சிலப்பதிகார அரும்பதவுரையில் விளக்கப் பெற்றுள்ளன. ஆடல் வகை இரண்டு; ஐந்து, ஆறு, பத்து, பதினொன்று; கூத்து வகை இரண்டு (தேசிகம்—மார்க்கம்), ஏழு, பதினொன்று; தாளவகை, மூன்று, நான்கு, நாற்பத்தி ஒன்று; நாடக வகை நான்கு; இசைப்பா வகை ஒன்பது, பத்து; இசை நெறி மூன்று; இசைப்பாவின் சாதி ஓசை மூன்று; இசையின் பாகுபாடு பதினொன்று; இசை எழுப்பும் முறை எண் வகை; இணைக்கை வகை பதினைந்து; இணையா வினைக்கை வகை முப்பது; ஆதி இசை வகை 11, 991;[2] என்பன போன்ற இசை நூற் கருத்துக்களின் தொகையகராதி யாகவும் 'அரும்பத அகராதி' அமைந்துள்ளதைக் காணுகிறோம். அன்றியும், நாடக அரங்கு, நாடகக் கணிகை, நாடகக் கவி, நாடகக் காப்பியம், நாடக சாலை, நாடகத் தமிழ், நாடக நூல், நாடக ஆசிரியர் பற்றிய குறிப்புக்களையும், நாடக(நாட்டிய) அரங்கு அளக்கும் கோல், அரங்கில் நிற்றற்குரியார் நிற்கும் முறை, அரங்கில் வலக்கால் இட்டு ஏறும் முறைமை, அரங்கில் அமைக்கப்படும் விளக்கு, அரங்கில் ஆடும் இயல்பு, அரங்கு அமையும் நில இலக்கணம், பலகை—வாயில் முதலானவற்றின் நீளம்-உயரம் பற்றிய விவரங்களையும் நூலுள் காண வழிவகை செய்கிறது.

சிலப்பதிகார அரும்பத அகராதியின் மற்றொரு சிறப்பு வரலாற்றுக் குறிப்புக்களை—வரலாற்று மாந்தர்களை உள்ளடக்குவது[3]. சேர அரசர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவன், பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன், பல்யானைச் செல் கெழு குட்டுவன் பற்றியும்; பாண்டிய அரசர் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், பொற்கைப் பாண்டியன் பற்றியும்; சோழ அரசர் கரிகாற் பெருவளத்தான், பெருநற்கிள்ளி பற்றியும் இவ்வகராதி குறிப்பிடும். சேரன் சிறப்புக்களாக, ஆசியரைத் தாக்கியது, இமயத்தில் வில் பொறித்தது, கடல் பிறக் கோட்டியது, கடற்கடம்பு எறிந்தது, கொங்கர் செங்களம் வேட்டது, பாரதப்போரில் பெருஞ்சோறு அளித்தது, பாலைக்கௌதமனாரைச் சுவர்க்கம் அடைவித்தது, வேம்பு தடிந்தது, வடதிசை வணக்கியது முதலான அமையும். பாண்டிய மன்னர்தம் சிறப்புக்களாக, இந்திரன் ஆரம் பூண்டது, அவன் முடிமேல் வளை எறிந்தது, கடல் வடிம்பலம்ப நின்றது, கை குறைத்தது, கவியரங்கு ஏறியது முதலான குறுப்பிடப்பட்டுள்ளன.

1. சிந்:1607
2. சிலப்: பக்: 594, 607, 610, 611, 628, 646, 668, 680-81
3. சிலப்: பக்: 631, 662, 692, 694-95, 703.

இவ் வரலாற்றுச் செய்திகளன்றி, வெள்ளி உயிர் - செம்பு உயிர் என்னும் ஐவகை உயிர் பற்றிய விளக்கமும்; வேதத்தின் அவயவங்களான வியாகரணம், சோதிடம், நிருத்தம், சந்தஸ், சிக்ஷை, கல்பம் பற்றிய செய்திகளும்; மக்கட்கரு, தெய்வக்கரு பிரமக்கரு, நாகக்கரு, விலங்கின் கரு, பேய்க்கரு எனும் அறுவகைக் கரு பற்றிய குறிப்பும்[1]; கண்ணில் விடமுடைய திட்டிவிடம் எனும் பாம்பு, இராசநாகம், ஐந்தலை நாகம் எனப் பாம்பின் வகையும்[2]; 'இம்மி எட்டுக் கொண்டது எள்ளு' என்ற பண்டை அளவை முறையும்[3]; ஐம்பெருங்குலம், குழு, சமயம் பற்றிய எண்ணமும்[4], மணமகன் இலக்கணம் எட்டு என்பதும்[5], வித்தியாஸ்தானம் பதினெட்டு என்ற சிந்தனையும்[6] இவ்வரும்பத அகராதியில் குறிப்பிடத்தக்கன. மேலும், ஓவியம் முதலான நுண் கலைகளையும்,[7] கருடன் ஒலிக்கு நாகம் அஞ்சுவதையும்[8], மன்மதன் பிற மகளிரை விரும்பான் என்பதையும்[9] இவ்வகராதியால் நாம் அறிகிறோம்.

இங்ஙனம், டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்களின் 'அரும்பத முதலியவற்றின் அகராதி' ஒரு 'கலைக் களஞ்சியமாக' அமைகிறது; இலக்கண, இலக்கிய, ஆய்வு நூல் முதலானவற்றில் 'அகராதி' (Index) எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதற்கு, இலக்கணமாக நின்று நிலவுகின்றது. மூல நூல், உரைநூல் முதலானவற்றின் சொல், தொடர், பொருள் (Content) முதலான அனைத்துச்செய்திகளையும் அகராதியில் தரும் முயற்சியில் ஐயரவர்கள் ஈடுபட்டு அதில் சிறந்த வெற்றியும் பெற்றுள்ளார். மூல, உரை நூலின் 'ஆய்வடங்கலாக' ஐயரவர்கள் இதனை அமைத்துள்ளார் என்பது மிகையன்று.

1. மணி: பக்: 401, 455, 513, 497
2. மணி: ,, க 461, சிந்: 1562, பெருங்: 922
3. சிலப்: பக்: 612
4—9; பெருங்: 922 926-27, 935, 1049, 1056, 1084.

6. பாட வேறுபாடு

டாக்டர் சாமிநாத ஐயர், தமது காப்பியப் பதிப்பில், பாட வேறு பாடுகளைப் 'பிரதிபேதம்' என்ற நிலையில் தந்துள்ளார். ஒவ்வொரு காப்பிய இரண்டாம், மூன்றாம் பதிப்புக்களின் மூலமும் சில மாற்றங் களைப் பெற்றுள்ளன. முதற் பதிப்பின் மூலம், அடுத்த பதிப்பின் பிரதிபேதமாகவும், மூன்றாம் பதிப்பில் திரும்பவும் அதுவே மூலபாட மாகவும் அமைந்துள்ளமையைக் காணலாம். திருத்தம் பெற்ற முதற் பதிப்பின் பாடம் பல, இரண்டாம் - மூன்றாம் பதிப்புக்களில் இடம் பெறாமல் போனதும் உண்டு.[1] இவற்றை ஏன் பிரதிபேதமாக டாக்டர் ஐயரவர்கள் தரவில்லை என்பது விளங்கவில்லை. இவை ஏடுகளைப் படித்துப் பிரதி செய்யுங்கால், தன்னால் பிழைபட உணரப் பட்டவை என்ற எண்ணத்தில் நீக்கப்பட்டிருக்கலாம்.

பல ஏடுகளை ஆராய்ந்து, பிழையின்றிப் படித்து, மூலபாடம் காண்பதென்பது எளிய பணியன்று. தொடக்க நிலையில், ஐயர வர்கள் பதிப்பில் பிழை சுட்டிக் கண்டனம் செய்தோர் பலர். அவை பிற் பதிப்புக்களில் திருத்தப்பட்டன. இருப்பினும், அவர் பதிப்பு முற்றிலும் பிழையற்ற, தேர்ந்த மூல பாடத்தையே கொண்டுள்ளது எனக் கொள்ள முடியாது எனப் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் குறிப்பிடுவர். சீவக சிந்தாமணியில், நான்கு பதிப் புக்கள் வெளிவந்த பின்னும், பல திருத்தங்களை அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.[2] இருப்பினும், இன்று கிடைத்துள்ள அனைத்துத் தமிழ் நூல் பதிப்புக்களிலும், ஐயரவர்கள் பதிப்பே சிறப்புடையதென்பதை யாரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

ஐயரவர்களின் பதிப்பின் சிறப்பிற்கு அடித்தளமாக அமைந்த பல கூறுகளில் ஒன்று, அவர் தரும் பாட வேறுபாடுகள். எத்தனையோ ஏடுகளைத் தொகுத்து, அவை அனைத்தையும் ஆராய்ந்து, மூல பாடத்தைத் தேர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு பதிப் பிற்கும், ஓரளவு பிழையற்ற—திருந்திய பிரதி ஒன்றை ஆதாரப் பிரதி யாகக் கொண்டு, ஆராய்ச்சியைத் தொடர்ந்துள்ளார். இதனால் ஆதாரப் பிரதியில் திருத்தம் செய்யவில்லை என்பது பொருளன்று; அதனையே பிழை நீக்கிப் பதிப்பித்தார் என்றும், பிற பிரதிகளிலுள்ள வேறுபாடுகளைப் பிரதிபேதமாகத் தந்துள்ளார் என்றும் கொள்வதற் கில்லை. ஆதாரப் பிரதி பல இடங்களில் திருத்தம் பெற்றதையும் ஐயரவர்கள் குறிப்பிடுவர். ஆயின் எந்தெந்த இடங்களில் ஆதாரப்

1. இந்நூலின் 'பதிப்பு வேறுபாடு'—கட்டுரை பார்க்க,
2. எஸ். வையாபுரிப்பிள்ளை, 'தமிழ்ச்சுடர் மணிகள்',-பக்: 284-85.

பிரதியின் பாடம் மாற்றம் பெற்றன எனக் குறித்தாரில்லை.

அதே போன்று, பாட வேறுபாடுகளைத் தருகின்றபோதும், அவை எவ்வெப் பிரதிகளில் காணப்பட்டன என்றும் சுட்டவில்லை. அவ்வாறு குறிப்பிட்டுக் காட்டுவதென்பதும் இயலாத ஒன்றே. அவரது கையெழுத்துப் பிரதிகளில் இவற்றைக் குறித்துள்ளாதாகக் கருதுவர்.

நான்கு காப்பியப் பதிப்புக்களிலும், ஏறத் தாழ நாலாயிரம் பாடவேறுபாடுகளைக் குறித்துள்ளார். சீவகசிந்தாமணியில், 274-பாட வேறுபாடுகளும், சிலப்பதிகாரத்தில், 1276-பாட வேறுபாடு களும், மணிமேகலையில் 1360-பாடவேறுபாடுகளும், பெருங்கதை யில், 1155-பாட வேறுபாடுகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வெண் ணிக்கை, ஆங்காங்கே கூடுதலாகச் சிலவரிகள் - பாடல்கள் 'சிலபிர திகளில் காணப்பட்டன' என ஐயரவர்கள் குறிப்பிடுவது நீங்கலாக அமைவன. உரை நூல்களில் சுட்டப்பெறும் ஒரு சில பாட வேறு பாடுகளையும் உள்ளடக்கியதே இவ்எண்ணிக்கை. இப்பாடவேறு பாடு எண்ணிக்கை சீவக சிந்தாமணியில் மிகக் குறைவாக இருப் பது, நம் சிந்தனையைத் தூண்டுகிறது. நான்கு காப்பியங்களில் மூலத்தை மட்டும் நோக்கின், பெருங்கதைக்கு அடுத்த நிலையில் அளவில் பெரியது சிந்தாமணியே. மூலமும் உரையும் நோக்க, நான்கினும் பெரியது சீவக சிந்தாமணிக் காப்பியமே. இருப்பினும், ஏனைய காப்பியங்களை விடச் சிந்தாமணிக்குப் பாடவேறுபாடுகள் மிகக் குறைவாகவே அமைந்துள்ளன. இதற்குக் காரணம் என்ன? என எண்ணும் போது, டாக்டர் சொல்விளங்கும் பெருமாள், பத்துப் பாட்டில், 'திருமுருகாற்றுப் படை'யில் ஒரே ஒரு பாடவேறுபாடு மட்டும் அமைவதன் காரணம் கூறுவது, இங்கு ஒப்பு நோக்கத் தக் கது. அஃதாவது, திருமுருகாற்றுப் படை மக்கள் மத்தியில் பரவ லாக வழங்கப்பட்டு வந்தமையே - அதில் பாட வேறுபாடு குறையக் காரணம் என்பர்.[1] இதனைக் காப்பியப் பதிப்புக்களுக்குப் பொருத் திப் பார்க்கலாமா? என்பது சிந்தனைக்குரியது. பிற காப்பியங் களைவிடச் சீவக சிந்தாமணிக்குப் பல ஏட்டுப் பிரதிகள் கிடைத் துள்ளமை இங்குக் கருதத்தக்கது. இதனால் இந்நூல், பிற காப் பியங்களை விடப் பலபட வழங்கியிருக்க வேண்டும் என்ற உண் மையை ஓரளவு உணரலாம். சோழர்காலத்தில், இந்நூல் பெற்ற செல்வாக்கைச் 'சேக்கிழார் புராணம்' தெரிவிக்கும்; ஆயினும் இதனை முடிந்த முடிவாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

1. டாக்டர் சொல்விளங்கும் பெருமாள், டாக்டர் உ.வே.சா. பதிப்புப்பணி, பக்: 153.

மிகக் குறைவான வழக்குப்பெற்றது 'பெருங்கதை' என்பது, அந்நூற்பதிப்பிற்கு இருபிரதிகள் மட்டுமே கிடைத்தமை புலப்படுத்தும். இன்றும் கூடப் பெருங்கதை பயின்று வழங்கவில்லை என்பது அனைவரும் அறிந்ததே. எனவே, பெருங்கதையை விடக் கூடுதலாக வழக்கில் உள்ள, சிலப்பதிகாரம், மணிமேகலைக் காப்பியப் பாட வேறுபாடு மிகுந்திருப்பது, மேற்கருத்திற்கு ஒரு தடையாக அமைந்துள்ளது. என்றாலும், பெருங்கதைப் பாடவேறுபாடு, ஏனை இரண்டினும் குறையப் பிரதிகள், 'மிகுதியும் கிடைக்காமை' என்ற பிறிதொரு காரணமும் காட்டலாம். இவை எல்லாம், சிந்தாமணியில் பாடவேறுபாடுகள் குறைந்துள்ளதன் காரணத்தைத் தெளிவு படுத்துவன வல்ல.

ஐயரவர்கள் தம் சிந்தாமணிப் பதிப்பு முகவுரையில், பிரதிகளிலுள்ள பாட வேறுபாடு முதலியன கண்டு தாம் அடைந்த இன்னல்களைக் குறிப்பிடுவர். அன்றியும், பிரதிகளிலுள்ள 'பிரதிபேதம்' முதலியன, இரண்டாம் பதிப்பிலும் வெளியிடப்படவில்லை எனச் சுட்டிச் சென்றுள்ளார்.[1] இவை மூன்றாம் பதிப்பில் வெளியிடப் பட்டதாகவும் தெரியவில்லை. எனவே சிந்தாமணிப் பாட வேறுபாடுகள்குறைவாக அமைந்துள்ளன என்பதைவிடக் குறைவாக ஐயரவர்களால் தரப்பட்டுள்ளன என்று கொள்ளவேண்டியுள்ளது. வையாபுரிப் பிள்ளையவர்களும் இதனைச் சுட்டுவதோடு, ஐயர் காட்டாத, ஆனால் காட்டப்படவேண்டிய ஒருசில பாட வேறுபாடு களையும் எடுத்துக் காட்டியுள்ளார்.[2]

இங்ஙனம் காப்பியப் பாட வேறுபாடு பற்றிய சிந்தனை 'மூல பாட ஆய்வியலுக்கு (Texual Criticism) வழிசெய்யும். மூல பாட ஆய்வு நோக்கோடு, டாக்டர் ஐயரவர்கள், பண்டை இலக்கண, இலக்கிய உரை நூல் வழியும்; வடமொழி வழக்கு, உலக வழக்கு, சமயமரபு முதலான பல்துறைப் பயிற்சி கொண்டும் தம் பதிப்புப் பணியை மேற்கொண்டுள்ளார் என்பது தெளிவு. இருப்பினும் சில இடங்களில் ஐயரவர்கள் கொண்ட மூல பாடத்தைவிடப் பிரதி பேதமாகத் தந்தவை, வரலாற்று மொழியியல் அடிப்படையில், பொருள் நோக்கில், சிறப்புடையனவாகத் தோன்றுகின்றன. சில வருமாறு:

1. 'அங்கண் **உலகின்** அருந்ததி அன்னாளை' — சிலப்: 1:63, என்பதற்கு, 'அங்கண் **'விசும்பின்'** எனத்தரப்படும் பாடம் பொருள்

1. டாக்டர். உ.வே.சா.—'சீவக சிந்தாமணி' -முகவுரை, பக் :7,11,
2. எஸ். வையாபுரிப்பிள்ளை, 'தமிழ்ச்சுடர் மணிகள்' - பக்: 258

நோக்கில், சிறப்படைகிறது. 'அருந்ததி' நட்சத்திரம் விசும்பில் உள்ள தாகலின்.

2. 'வேனில் **வீற்றிருக்கும்** நிறை நிலை மாடம்' (சிலப்: 2:26) என்பதில் 'வீற்றிருக்கும்' என்பதற்குப் பதில் 'வீற்றிருந்த' என்ற இறந்தகால எச்சம் பாடவேறுபாடாக அமையும். இங்கு முன்பின் 'பார்த்து, நுழைந்து, சிறந்து' எனப்பல இறந்த கால எச்சம் அமைதலின் 'சிறந்து ... வீற்றிருந்த நிறை நிலை மாடம்' என்பது சிறப்பு என்ற எண்ணம் எழுகிறது.

3. 'உடனுறைவு மரீஇ' (சிலப்: 2:61) என்பதன் பாட வேறுபாடாக அமையும், 'உடனுறைபு மரீஇ' என்பது பழமைச் சிறப்புடைய தாகத் தோன்றுகிறது.

4. 'கூடிய **நெறியின** கொளுத்துங் காலை' (சிலப்: 3:17) என்பதன் மாற்று வடிவான '**நெறியிற்**' என்பது பொருள் பொருத்த முடைய தாகிறது. ஆயின் உரையாசிரியர் 'கூடிய நெறியின' என்றே கொண்டு உரை எழுதியுள்ளனர்.

5. 'ஐது மண்டிலம்' (சிலப்: 3:152) என்பதற்கமையும் 'ஐந்து மண்டிலம்' என்ற பாடம், வரும் சூழ்நிலையால் பொருத்தம் உடையது போலத் தோன்றுகிறது. 'நான்கின் ஒரீஇ (3:150) ....மூன்றளந்து ஒன்று கொட்டி (3:151)... 'ஐதுமண்டிலம்'.... என அமைதலாலும், இதற்கு அடிமோனையாக 'வந்த' என்ற சொல் வருதலாலும், இக்கருத்து சிந்தனைக்குரியதாகிறது. 'ஐது மண்டிலம்' — அழகிய மண்டிலம் என உரை எழுதியுள் ளார் அடியார்க்கு நல்லார்.

6. 'காண் வரு குவளை' (சிலப்: 4: 76) என்ற பாடத்தினும், 'காமரு குவளை' என்பது பொருட் சிறப்படைகிறது.

7. 'மிடைமரச் **சோலைக்** கொடுப்போர் ஓதையும்' (சிலப்: 5: 61) என்பதில் '**சோலையுள்**' என்ற பாடம் பொருள் தெளிவுடைய தாக அமைகிறது.

8. 'தாழிக் குவளை **சூழ் செங் கழுநீர்**' (சிலப்: 5: 152) என்பதன் பிரதிபேதமான '**தண் செங் கழுநீர்**' பொருந்துகிறது. பெருங் கதையிலும் 'தண் செங் கழுநீர்' என்ற அடையே அமையும் (1:40:302)

9. 'வயிரங் **கட்டிய**' (சிலப்: 6: 91) என்பதினும், 'வயிரங் **குயிற்றிய**' என்பது இலக்கிய நயமும் பழமைச் சிறப்பும் உடையதாகிறது.

10. 'காட்சிய தாகிய' (சிலப்: 6: 147) என்பதினும், 'காட்சியதாகி' என்ற பாடம், நயந்தோன்ற அமைகிறது. அரும்பதவுரை இதனைக் கொள்வதாக உணரலாம்.

11. 'மாதரி தன்னுடன்' (சிலப்: 14: 123) என்பதற்குத் தரும் 'மாதரி தன்னொடு' என்ற பாடம் கால உணர்வு அடிப்படையில் பொருந்தும். ஒடு உருபை விட 'உடன்' உருபு காலத்தால் பிற்பட்டது என்பது இங்கு நோக்கத்தக்கது; மிகுந்த வழக்குப் பெற்றதும் கூட. இதனை வரலாற்று மொழியியல் நோக்குடன் ஆராய்தல் வேண்டும். முன்னரும் '**முத்தமொடு** உற்றதை எவன் கொல்' (சிலப் : 2 : 70) என்பதை மூலபாடமாகக் கொண்டு, 'முத்துடன்' என்பதை பிரதிபேதமாக ஐயரவர்கள் கொண்டுள்ளது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது; அதோடு இப்பகுதியில் 'காதலி 'தன்னொடு' 'கருந்தடங் கண்ணியொடு' (சிலப்: 14: 111, 128) என 'ஒடு' உருபே வருதலும், மேற்கருத்தை அரண் செய்யும்.

12. 'அணிதிகழ் போதி அறவோன் தன்முன் மணிமேகலையை மாதவி அளிப்பவும்'—(சிலப்: 15: 103—104)—என்பதில், ''மணிமேகலையொடு மாதவி துறப்பவும்'' என அமையும் பாடம் பொருட் சிறப்படைகின்றது.

13. '**பொற்கொடி** (மணிமேகலை) வஞ்சியிற் பொருந்திய வண்ணமும் (மணி. பதி: 86) என்பதில் '**பொற்றொடி**' என்ற பாடம் பொருள் நயம் மிக்கதாக அமையும்.

14. '**ஒங்குயர்** மலையத் தருந்தவன்' (மணி: 1: 3) என்பதினும்' '**ஆங்குயர்**' என்ற பாடம் தொடை நயம் தோன்ற நிற்கிறது. அதோடு முதல்வரி, ஓங்குயர் விழுச்சீர்' என அமைவதால் மூன்றாம் வரி, 'ஆங்குயர்' என இருப்பது சிறப்பு போலத் தோன்றுகிறது.

15. '**உன்னோ** டிவ்வூர்' (மணி: 2: 17) என்பதினும், '**நின்னோ** டிவ்வூர்' என்ற பாடம் கலை உணர்வோடு பொருந்துகிறது.

16. 'தக்க நன்னாடு'— என்ற பாடத்தை விடத் 'தக்கண நாடு' என்பது பொருள் தெளிவுடைத்து (சிந்: 20)

17. 'மன்னவர்' என்ற பாடத்தினும் 'மன்னர் தம்' என்ற பாடமே பொருந்தும் என்பது, 'துறந்த அரசர் தம்முடன்' என்ற நச்சி னார்க்கினியர் உரையால் பெறப் படுகிறது.

இங்ஙனம்—பல, மூல பாடம் எது என்பது பற்றிய சிந்தனை எழுகிறது. மூலபாட ஆய்வியல் நோக்கில், பாட வேறுபாடுகள் ஆராயப் பட்டு, மாற்றங்களை மீட்டுருவாக்கம் செயின், தமிழ் இலக்கிய வரலாற்றில் சில தெளிவுகள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

இனி, இப்பாட வேறுபாடுகளை, ஒலி மாறுபடுவன, சொல்லும் அதன் பகுதியும் மாறுபடுவன, தொடர் அல்லது வரி மாறுபடுவன— என்ற மூன்று வகையில் அடக்கி ஆய்வு செய்வர் மு. இராம கிருஷ்ணன். இதனை அடியொற்றி டாக்டர் சொல் விளங்கும் பெருமாள், சாமிநாத ஐயரவர்களின் 'பத்துப் பாட்டுப் பாட வேறுபாடு' ஆய்வை மேற் கொண்டுள்ளார். காப்பியப் பதிப்பில் அமைந்துள்ள அனைத்துப் பாட வேறுபாடுகளையும் இவ்வகையில் அடக்கி விடலாம் என்று தோன்றுகிறது.

ஒலி மாறுபாடு: ஒலி வேறுபாடு அடிப்படையில் அமையும் பாட பேதங்கள், உயிர் ஒலி வேறுபாட்டால் அமைவன, மெய்யொலி வேறு பாட்டால் அமைவன என இருவகையில் அமையும். உயிர் ஒலி வேறுபாடு, உயிர் ஒலி நீட்சி, வரி வடிவில் உயிர் மெய் எழுதப் படும் ஒற்றுமைக் குறி (ே, ெ) அடிப்படையில் அமைவனவும் உண்டு.

மூ.ப. பா.வே.

நீட்சி அங்கைப் பாத்திரம்—ஆங்கப் பாத்திரம்—அ > ஆ— மணி: பதி: 39

உயிர் மாறுபாடு: வெண்ணஞ்சு—வெண்ணெஞ்சு—அ > எ —சிந்: 1584

புருவமு மரவஞ் செய்ய—புருவமு முருவஞ் செய்ய—அ > உ சிந்: 2806

யானறிகுவனது—யானறிகுவனிது—அ > இ— சிலப்: பதி: 11

அருந்ததி—அருந்துதி—அ > உ —சிலப்: 1: 63

ஈட்ட—ஈட்டி—அ > இ —சிலப்: 2: 7

ஏத்த—ஏத்தி—அ > இ —சிலப்: 3: 106

வடற் பெருங்—விடர்ப் பெருங் அ > இ —பெருங்:1:32:28

கஞ்ச—கஞ்சை—அ > ஐ —மணி: பதி: 10

வகையால்—வகையில்—ஆ > இ —சிலப்: 3: 133

அங்கைப்—ஆங்கப்—ஐ>அ —மணி: பதி: 59
தலைக்கூட்—தலைக்கட்—ஊ>அ — பெருங்: 1: 33; 15

உயிர் மெய் வரிவடிவ மயக்கத்தால் ஏற்படும் பாடவேறுபாடாவன:
கேற்றிய—கெற்றிய—ஏ>எ—சிலப் : 3:59
கோலுதல்—கொல்லுதல்— ஓ>ஒ—சிந் : 2890.

மெய் கெடுதல்-தோன்றல்-மாறி அமைதல்

தோன்றல் :
கதி திரிந்து— கதிர் திரிந்து—பெருங்:1:32:22.
நிணந்து — நிணர்ந்து—சிந் : 1311.
முனிவன் — முனிவரன்—மணி : பதி : 11

ஈகை — ஈய்கை —சிலப் : 1:24.
வாக்கியம் — வாய்க்கியம்—பெருங் : 1:34:27.
சாகை — சாய்கை —மணி : பதி :5
ஐது — ஐந்து சிலப் : 3:152.

ஒற்று கெடுதல்

உருவமோதினான்— — உருவோதினான்—சிந் :1601
வம்பு பூத்து — அம்பு பூத்து — சிந் : 1664.
கொங்கலர் தார்ச் — கொங்கல ரார்ச்—சிலப் : 1:2.
இயல்பினி னன்றே — இயல்பி னன்றே—சிலப் : 2:50.
பரதவர் — பரதர் —சிலப் : 5:25
பொறாஅள் — பொறாஅ —சிலப் : 6:58.
பரப்பில் — பரப்பி —சில: 6:168.
மருங்கின் — மருகின் --பெருங் : 1:34:68
பயிற்றி — பற்றி —பெருங் : 1:35:205

அளபெடை மிகுதல்-குறைதல்

மகிழ்ந்துழி — மகிழ்ந்துழீஇ—சிலப் 1:42.
மறைந்தாங்கு — மறைஇ —சிலப் : 6 : 102
வினாய — வினாஅய் —பெருங் : 1:32:29
தலைஇட் — தலையும் —பெருங் : 1;33:37
படீஇ — படுதல், படியர் —மணி : 1:2.
ஆனு — ஆனூஉ

புணர்ச்சியில் ஒற்றுமிகல்- மிகாமை-திரிதல்

சந்திரன் — சாந்திற்—சிந் : 1673.
அரங்கேற்று காதை — அரங்கேற்றுக் காதை—சிலப் : பதி:65
கடலாடு காதை — கடலாட்டுக் காதை — ,, : ,, :68

புகார்க் காண்டம் — புகார் காண்டம் ,, 1.
இசைத்த தாமந்திரிகை — இசைத்த தியாமந்திரிகை ,, 3:142.
படா அ பறை — படா அப் பறை—பெருங் : 1:32:35.
மலர்கண் — மலர்க்கண் —பெருங் : 1:34:19.
தென்றிசைப் பெயர்ந்த — தென்றிசை பெயர்ந்த—மணி : பதி : 4.
நோற்ற — நோற்றச் —மணி : பதி : 7.

ஒற்று மாறி வரல் : பிழையான முறையில் ஏடுபடித்தலால்,-இன ஒலி வேறுபாட்டை உணர முடியாததால், சில பாடவேறுபாடுகள் அமைந்துள்ளன; விகாரப் பட்டு-இனஒலி அமைதலும் உண்டு; ரகர றகர வேறுபாடு அறியாத நிலையில் எழுந்த பாட வேறுபாடு களும், வட்டார வழக்காகச் சேர்ந்தனவும், உண்டு. புள்ளி பெறாது எழுதப்பட்ட ஏடுகளைப் படித்த பொழுது ஏற்பட்ட பிழையாலும் இப் பாட வேறுபாடுகள்-ஏற்பட்டதைக் காணலாம். இவ்வகையில் அமை வன சில வருமாறு :

ர-ற

காய் பரீஇ — காய் பறீஇ—சிந் : 1021.
நீரெழுத்து — நீறெழுத்து—சிந் : 2774.
காதலற்களித்தாங்கு — காதலர்க்களித்தாங்கு; சிலப் : 4:32
பயிற்சி — பயிர்ச்சி —பெருங் : 1:34:82
கரந்துறை — கரந்துரை —பெருங்1:34:16;
மணி : 2:26.

ப,ம,ண,ன,ந,

அகநகர் — அகனகர் —மணி 1:72
கோநகர் — கோனகர் —சிலப் : 6:8.
மைந்நிண — பன்னிண —சிலப் : 5:26.
நண்பகல் — நன்பகல் —சிலப் : பதி : 78.
உதயணன் — உதயனன் பெருங் : 1:32:8
மணை — மனை —பெருங் : 1:34:26.
கோணிலை — கோனிலை —மணி : பதி : 24.
பொறைபடு — முறைபடு —பெருங் : 1:32:20.

விகாரமாக அமைவன-க-ங; த-ந;

கொளுத்துங் காலை — கொளுத்துக் காலை—சிலப் : 3:34.
விலக்கியதிப் — விலங்கிய திப் —சிலப் : 5:96.
புணர்த்த — புணர்ந்த —பெருங் : 1:32:79
அழுத்திய — அழுந்திய — ,, : 1:34:137
கழிந்த — கழித்த — ,, : 1:35:44.

அமைந்த	— அமைத்த	— ,, : 1:35:60.
கவிழ்த்த	— கவிழ்ந்த	— மணி ; பதி : 12.

பேச்சு வழக்காக ஒலி மாறியன :

வயந்த	— வசந்த	—மணி : 2:8.
வயந்து	— வசத்து	—பெருங் :1:32:43.

பிழையான ஏடு வாசிப்பால் ஏற்பட்டன :

தோழியர் சுவாகதம்	— தோழியா சுவாதம்	—சிந் : 1021
வியன்கரக் கலவறை	— வியனகர்க் கல்லறை	—பெருங்:1:32:61
கரணமும்	— கானமும்	—மணி : 2:20.
வண்டமிழ்த்திற	— வண்டமிழத்தின்	—மணி : பதி : 97.

பிற எழுத்து மாற்றங்கள் :

பசந்து	— பயந்து	—சிலப் : 4:5
கெழீஇய	— தழீஇ	—சிலப் : 1:15.
உருட்டுவோன்	— உருட்டுகோன்	—சிலப் : 1:68.
தந்தவந்	— தந்தவர்	—சிந் : 3138.
மாதவி வாரா	— மாதவி பாரா	—மணி : 2:4.
அறவண வடிகள்	— அறவண ரடிகள்	—மணி : பதி : 57.
முனியாப்	— முனிவாய்	மணி : பதி : 19,

எழுத்து முன்பின் மாறி அமைவன:

அலவற் பெண்டிர் - அவலற் பெண்டிர் - சிலப்: 5: 129

அகவற் - அ(வ்)வகற் - பெருங்: 1: 34: 186.

இங்ஙனம் பாட வேறுபாடுகளில் உயிர், மெய் ஒலிகள், மாறியும், பிழைபட்டும் வந்து — சொல்லின் அமைப்பை மாற்றுவதோடு, பொருளமைப்பிலும் பல மாறுபாடுகளை ஏற்படுத்தியுள்ளன.

சொல் அமைப்பில் வேறுபாடு:

பாட வேறுபாடுகளில் சொல்லே மாறுபட அமைவதோடு, சொல் உறுப்புக்களான பகுதி, விகுதி, கால இடைநிலை, சாரியை, எச்சம்—முற்று, வேற்றுமை உருபு, இடைச் சொல், சுட்டு முதலான மாறி அமைந்து, பொருள் வேறுபட்டும்—படாமலும் அமைவன உண்டு. சிலபோது மூல பாடத்தில் அமைந்த சொல் பிரதிபேதத்தில் நீக்கப் பட்டும், மூல பாடத்தில் வராத புதிய சொல், சொல்லின் பகுதி பிரதி பேதத்தில் சேர்க்கப்பட்டும் அமைந்துள்ளதையும் காணலாம்.

சொற்கள் மாறி அமைவன: [பெயர், வினை, சுட்டு, எதிர்ப்பதம், முதலான]

வளையை - மேகலையை—சிந்: 1600

என விடுத்தாய் - என உரைத்தாய்—சிந்: 1589

முழுதும் மெழுகினான் - முலைமேல் எழுதினான்—சிந்: 1673

திகழ்ந்த தென்றார் - நின்ற தென்றார்—சிந்:1330

மருப்பிடைக் குளிக்குமாறும் - மருப்பிடை ஒளிக்குமாறும் —சிந்: 1677

தமரல்லாதார் - சமய மல்லாதார் —சிந்: 2787
தெரிய - தெளிய —சிலப்: உ.சி.பா.
செய்த - சொன்ன — ,, அரும்: காப்பு.
கோதையர் - மேனியர் — ,, 1:56
புகல் ஏக்கற்று - பூவில் ஏக்கற்று — ,, 2:20
சேர்த்தி - செலுத்தி — ,, 3:52
அரங்கின் பலகை - ஓங்கின பலகை — ,, 3:103
யாண்டுளன் - யாங்குளன் — ,, 4:4
துறந்தோர் - இழந்தோர் — ,, 4:13.
தொழில் பல - கழி பல — ,, 5:13.
செரித்து - அமைத்து — ,, 6:86.
விரைந்தென - ஈங்கென —பெருங்: 1: 33: 14.
அசைப்ப - கவிப்ப — ,, 1:34: 219.
போயபின் - பெயர்ந்த பின் —மணி: பதி: 42.
துயில் உணர்ந்து -துயில் எழுந்து- ,, ,, 48.
மணற் பந்தர் - மணப் பந்தர் — ,, 1: 58.
வலிய - மெலிய .. —சிலப்: 3:92.
யானறிகுவனது-யானறிகுவனிது— ,, பதி: 11
போதிலார் - போதில் வாழ் — ,, 1: 26.

சொல் நீக்கம்-சேர்க்கை:

பாவாய் கொடியே பாங்கின்—பாவாய் பாங்கின்—சிந்: 1587
ஈர்ந்தாரினான் —ஈர்மலர்த்தாரினான் — ,, 1667
அஃதறிந்தருள் —அறிந்தருள் —சிலப்: பதி: 9
எட்டுவனப்பும் —எட்டும் —,, உ.பா. பக்.6.
மஞ்ஞைநின் —மஞ்ஞை ,, 2:53.
வாழையும் வஞ்சியும்—வாழைக்கதலியும் வஞ்சியும்-மணி: 1: 46.

சொல் அடை மாறிவரல், சேர்க்கை:

மீன் ஒத்த—மீன் போன்ற—சிந்: 1645
வெண்டுகில்—பூந்துகில்— ,. 1649

சினவேல்—நெடுவேல் — சிலப்: 1: 67
நிறை நிலை — நெடுநிலை—,, 2: 26
மாமுது முதல்வன்—மாமறைமுதல்வன் சிலப்: 5: 174
மதக்களிறு—வயக்களிறு பெருங்: 1:32: 38
கமழ் கொள்பூமி—கடல்கொள்பூமி பெருங்: 1:34:16
மகட் கொடை—மகளிடை ,, 1:36:93
சிலம்பு =பொற்சிலம்பு சிலப்: பதி: 18.

எச்சம்-முற்று மாறி அமைதல்; கால மயக்கம்:

ஈட்ட —ஈட்டி, —சிலப்: 2: 7.
ஏத்த —ஏத்தி — ,, 3: 106
உகுத்து —உகுப்ப ,, பதி: 32
வீற்றிருக்கும்—வீற்றிருந்த—சிலப்: 2: 25
உரையா (செய்யா) — உறைப்ப — பெருங்: 1: 32: 14.
நின்ற — நிற்ப ,, 1:33:161
விளக்குறுக்க—விளக்குறுத்த ,, 1:33:118
விம்மி —விம்மா ,, 1;33:197
அறிவீர் —அறிந்தீர் மணி: 1: 59
புகுந்தேன் —புகுந்து ,, 2: 59
பொய்யாது —பொய்யாக் பெருங்: 1:34:155
இயம்பி இயம்ப —மணி: 1:69

திணை, பால் விகுதிகள் சேர்தல்-மாறுதல்:

வடிவின் —வடிவினன் —சிலப்: பதி: 52.
ஈக்க —ஈய்த்தனன் — ,, 2: 45
ஈத்தது —ஈத்தனன் — ,, 2: 52
மகளிரும் —மகளும் — ,, 3: 134
ஆங்கவள் —ஆங்கவர் மணி: 2:7
மற்றவர் —மற்றவன் ,, பதி: 92

உருபு, சாரியை, இடைச்சொல் முதலான நீக்கம்-சேர்க்கை:

பிறனுமாய் —பிறனாய் —சிந்: உரை: 1418
மாழ்குபு —மாழ்கியும் —சிந்: 2765
அன்றியும் —அன்றி —சிலப்: 6: 71
வானமு மாரி — வானமு மாரியும் — மணி: 1:33
கோவையின் கோப்பும் — கோவையும் கோப்பும் — மணி: 2:28
உரிது னின்னோடு — உரிதினி னின்னோடு — சிலப்: 2:40
மலர்க்கையின் — மலர்க்கை — ,, 2:60

பெற்றியி னீங்காது — பெற்றி னீங்காது — ,, 3:83
இயற்கைத் தோரிய — இயற்கையிற் றோரிய — ,, 3:134
குறங்கினிற் செறிந்து — குறங்கினுக் கமைந்து — ,, 6:86
மன்னவன் உரையா — மன்னவற் குரைப்ப — பெருங்: 1:32:14
நறுமலர்க் கோதைக்கு — நறுமலர்க் கோதை — மணி: பதி: 81
கரும்பு நடுமின் — கரும்பொடு நடுமின் — ,, 1:47
உயிரொடு நின்றே — உயிரோ நன்றே — மணி: 2:39
சதுக்கத்துத் தெய்வம் — சதுக்கத் தெய்வம் — மணி: 1:55
பேரவே — பேர்த்தென — சிந்: 1618
வகுத்தென — வகுத்து சிலப்: 3:157
மிகுத்தாங்கு — மிகுத்து சிலப்: 3:48
புணையாயிற்றே—புணையாயிற் றன்றே சிந்: 1674
முதியோள் — முதியோளினி மணி: பதி: 20
அமிர்தே என் இன்னுயிரே — ஆரமிர்தே யின்னுயிரே — சிந்: 1587

தொடர், அடி முதலான மாறிவருதல்:

1. ... ... மனைவியரு நால்வர் மக்கள் — மூ. பா.
ஒவ்வாதார் தாமில்லை ஒப்பான் ஒருவன்என உரைத்தான்
சான்றோன்'' -
... ... ''மனைவியுமற் றொருத்தி மக்கள் — பி. பா.
ஒவ்வாதார் தாமில்லை ஒப்பாரே நால்வர்என உரைத்தான்
சான்றோன்'' —சிந்: 1543.

2. ''வாங்கி யகைத்தகைத் திடுவர்'' — மூ.பா.
வாங்கி வகைத்தரிந் திடுவர் — சிந்: 2766. —பி.பா.

3. ''மின்கனக மாலை விமலைசுர மஞ்சரியோடு
அன்பின் இலக்கணை பத்தாம்' — மூ.பா.
மாகனக மாலை விமலை சுரமை கணையோடு —பி.பா
ஆகு திருமணங் களாம்'' — சிந்: சில பிரதிகளில் காணப்பட்ட
பாடல்.

4. 'நச்சினார்க்கினிய னாவினல்லுரை கொள்வர் நல்லோர்' -மூ.பா.
'நச்சினார்க் கினிய னெச்சின் நறுந்தமிழ் நுகர்வர்' — பி.பா.
— சிந்: உ. சி. பா.

5. ''வண்ணமும் சாந்தும் மலரும் சுண்ணமும்'' — மூ.பா.
''வண்ணமும் சுண்ணமும் தண்ணருந் சாந்தமும்'' — பி.பா.
— சிலப்: 6:134

6. ''நுண்வினைக் கம்மியர் செய்வினை விளக்கமும்''
''கலந்திருந் துறையும் விலங்கு நீர் வைப்பின்''

— என்ற இருவரிகள், சிலப்பதிகாரம் 6:130, 6:144-ஆம் வரிகளை அடுத்து, சில பிரதிகளில் மட்டும் காணப்பட்டதாகப் 'பிரதிபேதம்' பகுதியில் தரப்பட்டுள்ளன.

7. ''ஒட்டிய சமயத் துறுபொருள் ''— மூ.ப.
''ஒட்டிய துறுபொருள் உணர்ந்த'' — பி.பா. } -மணி:1:60

இங்ஙனம் பல்வேறு நிலையில் பாடவேறுபாடுகள் மலிந்துள்ளன. இப்பாடவேறுபாடுகள் மட்டுமே தனித்து ஆராயப்பட வேண்டிய ஒன்று. ஐயரவர்கள் தந்துள்ள பாடவேறுபாடுகளன்றியும் வேறுபல புதிய பாடவேறுபாடுகளைத் தொகுத்துப் புதிய மூல பாடங்களைக் காணுதல் வேண்டும். இத்தகைய ஒரு மூலபாட ஆய்வியல் துறை இன்னும் தமிழில் வளரவில்லை. அது வளர்ந்தால், பல தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களின் காலத்தை வரையறுக்க முடியும். ஐயரவர்கள் தந்துள்ள பாடவேறுபாடுகள், மேலும் பல ஆய்வு முடிவுகளைத் தர வழிவகை செய்யும் என்பது திண்ணம்,

துணை நூல்கள் :

பதிப்புகள் :

சாமிநாதையர், உ. வே. டாக்டர் (பதி)
'சிலப்பதிகாரம் மூலமும் அரும் பதவுரையும்
அடியார்க்கு நல்லார் உரையும்'
மு. ப. 1892, இ. ப. 1920, மூ. ப. 1927 &
எட்டாம் பதிப்பு: 1968, சென்னை

சாமிநாதையர், உ. வே. டாக்டர் (பதி)
'சீவக சிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்'
மு. ப. 1887, இ. ப. 1907, மூ. ப. 1922 &
ஏழாம் பதிப்பு: 1969, சென்னை.

சாமிநாதையர், உ. வே. டாக்டர் (பதி)
'பெருங்கதை மூலமும், குறிப்புரையும்'
மு. ப: 1924, இ. ப. 1935 &
நான்காம் பதிப்பு: 1968, சென்னை

சாமிநாதைய்யர், உ. வே. டாக்டர் (பதி)
'மணிமேகலை மூலமும் குறிப்புரையும்'
மு. ப. 1898, இ. ப. 1921
மூ. ப. 1931 & ஆறும் பதிப்பு: 1965

பிறநூல்கள் :

குளோறியா சுந்தரமதி, டாக்டர்
'டாக்டர் உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள்'
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி. டி. டி. ஐ.
தரமணி, சென்னை-600 113—1984

சாமிநாதையர், உ. வே. டாக்டர்
'என் சரித்திரம்' டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம், சென்னை-41, இ. ப. 1982

சொல் விளங்கும் பெருமாள், டாக்டர்
'டாக்டர் உ. வே. சா. பதிப்புப் பணி—'ஓராய்வு'
வஞ்சிக்கோ பதிப்பகம்,
9, அண்ணா நகர், மதுரை-625 018—1981

ஞானப் பிரகாசம், வி. மி. & அறவாணன், க. ப. (பதி)
'தற்காலத் தமிழ் முன்னோடிகள்'
தமிழ்ப் பண்பாட்டு மன்றம், சென்னை—1975

விநாயக மூர்த்தி, அ.
'மூல பாட ஆய்வியல்', பாலமுருகன் பதிப்பகம்
மதுரை-625 011 = 1978

வையாபுரிப் பிள்ளை, எஸ்.
'தமிழ்ச் சுடர் மணிகள்'
பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1—1952

பொன்னம்பல தேசிகர், யாழ்ப்பாணம்
ஸ்ரீமத் வே. சாமிநாதையரவர்கள் பதிப்பித்த
சீவக சிந்தாமணி உரைப் பிழைகள்'

கட்டுரைகள் :

ராமன், மு. கோ., ''தமிழ்த் தாத்தாவின் தமிழ்ப்பணி'
தமிழரசு இதழிலிருந்து, மறுபதிப்பு—16-2-80

Dennis Hudson, "Renaissance in the life of Saminata Aiyar
A Tamil Scholor
—Comparative Civilizations Review,
Vol. IX, No. 7, 1981

சொல்லகராதி

அகத்தியம் 145
அகத்தியர் 144, 145
அகளங்காஷ்டகம் 109
அசுவகோஷ போதி சத்துவர் 146
அப்பன் செட்டியார், சூளை 4
அப்பாசாமி நயினார் 3, 71
அப்பா பிள்ளை 14
அபிதர்மார்த்த சங்கிரகம் 146
அபிதான விளக்கம் 42
அம்பிகாபதிக் கோவை 68
அம்பிகை பாக உபாத்தியாயர் 7, 8
அரங்கநாத முதலியார், பூண்டி 10
அரிசமய தீபம் 97
அருணாசலம், ப. 65
அருணாசலம் ஐயர், கே. 56
அழகிய சிற்றம்பலக்கவிராயர், 21
அறநெறிச்சாரம் 28
அனந்த ராமையர் 56, 71
ஆக்நேய புராணம் 110
ஆதியுலா 33
ஆதிவாயிலார் 145
ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் 150
ஆறுமுக நாவலர், 8, 63
இடவியல் விளக்கம் 146—148
இந்திரகாளியம் 145
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 110, 150
இரத்தின கரண்டம் 145
இராகவையங்கார், மு. 27
இராசகோபாலாச்சாரியார், தேரழுந்தூர் 12, 14, 17, 72
இராமகிருஷ்ணன், மு. 157
இராமசாமி முதலியார், சேலம் 1-3, 8, 11-14, 71
இராமானுஜா சாரியார் 41, 71
இராஜகோபாலாச்சாரியார் உ. வே. கே. 41
இராஜராஜ சோழன் உலா 97
இராஜராஜேசுவர சேதுபதி 39, 56
இலக்கணக் கொத்து உரையாசிரியர் 69
இளம்பூரணர் 69
இறையனார் அகம்பொருள் உரை 59
உதயணகதா 70
உதயண குமார காவியம் 65
உதயண சரித்திரம் 70
உதிதோதய காவியம் 69
உதியஞ்சேரலாதன் 110, 150
உமாபதி சிவாச்சாரியார் 11
உரையாசிரியர்கள் 20, 47, 55, 97, 103
ஏக்கழுத்தம் 6
ஏலாதி 33
ஐயாசாமி சாஸ்திரி 16
கசர் 114
கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் 150
கணாசனர் 146
கத்திய சிந்தாமணி 69, 114
கம்பராமாயணம் 97
கர்ணீஸுதர் 114
கரிகாற் பெருவளத்தான் 48, 110, 150
கலிங்கத்துப்பரணி 97
கலித்தொகை 7, 76
கவிராசபண்டாரம், கோட்டையூர் 4
களரியா விரை 145
களவழி நாற்பது 33, 97
கற்புரமஞ்சரி 70

கனகசபை, ம.வி. 19, 53 72, 86
கனாநூல் 123, 145
காதம்பரி 70
காளிதாச மகாகவி 55
கிருஷ்ணசாமி ஐயர், எஸ். 41
கிருஷ்ணயஜுர் வேத பிராஹ்மணம் 123
கிருஷ்ணயஜுர் வேத ஸம்ஹிதை 123
கிருஷ்ணையர், அ. 12, 17, 41
கிருஹ்யரத்நம் 146
கீத கோவிந்தம் 146
குணபால செட்டியார் 3
குணாட்டியார் 57, 69, 75, 79
குமாரசாமி பிள்ளை 4, 14
குமாரசாமி முதலியார், பொ. 13, 14, 17, 18, 44
குருசாமி ஐயர், சென்னை 15
குலோத்துங்க சோழன் உலா 68
குறுந்தொகை 76
கைலாசப் பிள்ளை 72
கொங்கு மண்டலச் சதகம் 57
கோதண்டராம ஐயர் 56
கோபாலசாமி ஐயர் 41
கோபிநாத ராவ் 57
கோவிந்தாச்சாரியார் 9, 25
சங்க இலக்கியம் 74, 103, 111, 120, 129
சங்கர நமச்சிவாயர் 69
சச்சப்புட வெண்பா 16
சடகோப ராமானுஜா சாரியார் வை. மு. 17, 41
சண்முகம் செட்டியார் 11
சண்முகம் பிள்ளை 17,38
சந்தானம் ஐயங்கார் 41
சந்திரநாத செட்டியார் 2
சந்திரா பரணம் 145
சப்த கௌஸ்துபம் 146
சபாபதி முதலியார், காஞ்சி, 8
சபாபதி முதலியார், புரசை, 8
சமயக்கலைச் சொல் விளக்கம் 138-141
சமய திவாகர வாமன முனிவர் 69
சயந்தம் 145
சவலை ராமசாமி முதலியார் 11
சாமிநாத தேசிகர் 53
சாலிவாடீசுவர ஓதுவார் 14
சிங்கார முதலியார், சூளை 11
சித்தராரூடச் சிந்து 125
சித்தராரூடம் 145
சித்தாந்தத் தொகை 146
சிந்தாமணி மாலை 69
சிரவண பெள்குளம் 57
சிற்றம்பலக் கவிராயர், 22
சிற்றாம்பூர் சைனமடம் 2
சிறுபஞ்ச மூலம் 6
சின்னசாமி பிள்ளை பா.ஐ. 4, 13, 56, 71
சின்னத்தம்பி சாஸ்திரி 19
சின்னப்பண்டாரம் 9
சினேந்திர மாலை 145
சீவக சிந்தாமணிப் பிரகடன வழுப்பிர கரணம் 11
சீவக சிந்தாமணியுரைப் பிழைகள் 36
சுத்தாந்தப் பிரகாசம் 16, 112
சுதேசமித்திரன் 9
சுந்தரேச பாரதி 12
சுப்பராயச்செட்டியார் 9, 10, 12, 13
சுப்பராயலு நாயக்கர் 12, 17
சுப்பிரமணிய ஐயர், வி. 41
சுப்பிரமணிய ஐயர், வி.மு. 41,56
சுப்பிரமணிய கவிராயர் 4
சுப்பிரமணியதேசிகர் 2,3,9,11,25
சுப்பிரமணிய முதலியார், வெ.ப. 41, 71
சுப்பையா பிள்ளை 14
சுமங்களர் 18, 44
சூலியன் வின்சன் 14

சூளாமணி 28, 72
செயிற்றியம் 145
செவ்வைச் சூடுவார் 145
சேக்கிழார் புராணம் 153
சேரமான் பெருமான் நாயனார், 13
சேனாவரையர் 77
சேஷையர், சாது 11,17
சைனசங்கம் 22
சொப்பன வாசவத்தம் 69
சொல் விளங்கும் பெருமாள் 153, 157
சோதிடாங்கம் 149
சோமசுந்தர ஐயர், கே.பி. 41
ஞானப்பிரகாசர் 69
ட்ரு பாதிரியார் 8
தக்கயாகப் பரணி 69
தசகுமார சரிதம் 145
தர்ம பரீக்ஷை 107
தருக்க சங்கிரகம் 146
தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் 110
தாமோதரம் பிள்ளை, சி. வை. 7—9,11,13,23,63
தாமோதரனார், மருத்துவன் 74
தாள சமுத்திரம் 16
தியாகராச செட்டியார் 6,13
தியாகராச பண்டாரம் 41
திரிகூடராசப்ப கவிராயர் 4
திருக்குடந்தைப் புராணம் 1
திருக்குறள் 28,40,75,97
திருக்கோவையார் 6,53
திருச்சதகம் 40,
திருச்சிற்றம் பலக்கோவை 59
திருத்தணிகையுலா 42,68
திருப்பாற்கடனாதன் கவிராயர் 19
திருமங்கையாழ்வார் 55,68
திருமுருகாற்றுப் படை 153
திருவாசகம் 67
திருவிடைமருதூர் யானைப்பாகன் 20
திருவிளையாடற் புராணம் 68
துக்காராம் ஹோல்கார் 4
துர்விநீதன் 57, 69, 75
துரைசாமி ஐயர், ம.வே. 56
தெய்வச் சிலையார் 69
தேவாரம் 53
தொல்காப்பியம் 28, 68, 77, 96, 103, 137
தோளப்பர் 146
நடேச ஐயர், எம். எஸ். 41
நடேச தீட்சிதர் 16
நரிவிருத்தம் 73
நல்ல குற்றாலம் பிள்ளை 12
நவகதிர் 145
நன்னூல் 57
நாராயணசாமி ஐயர் 41,
நீதி நெறி விளக்கம் 6
நெல்லையப்ப பிள்ளை 19, 56
நேமிநாதம் 57
பஞ்சசீலம் 45, 107
பட்டினத்துப் பிள்ளையார் புராணம் 68, 98
படியங் கொற்றனார் 145
பத்தரபாகு 57
பத்துப்பாட்டு 153
பரதனோபதீயம் 145
பரிமேலழகர் 69
பல்யானைச் செல் கெழு குட்டுவன் 110, 150
பழமொழி 97
பாகசாத்ரம் (மடைநூல்) 146
பாண்டித்துரைத் தேவர் 38, 41
பாலைக் கௌதமனார் 111, 150
பாஸ்கர சேதுபதி 10
பிரத்தியும்நசரிதம் 108

பிரதிஞ்ஞாயௌகந்தராயணம் 69
பிரயோக விவேகம் 145
பிரியதர்சிகா 69
பிருகத் கதா 69, 79
புத்த தேவனுடைய பெயர்கள் 48
புறநானூறு 55, 97
பெரியசாமி முத்தைய உடையார், எம். எம். 56
பெருங்கலித்தொகை 145
பெருநம்பி 126
பெருநற்கிள்ளி 150
பெருநாரை 145
பெரும் பாணாற்றுப் படை 97
பேராசிரியர் 69
பொற்கைப் பாண்டியன் 150
பொன்னம்பல தேசிகர் 36
பொன்னம்பலம் பிள்ளை 9
பொன்னுசாமி பிள்ளை 41
போப் துரை 8
மகளிர் இலக்கணம் கூறும் நூல் 135
மகாவம்சம் 74
மத்தியார்ச்சுன மான்மியம் 1
மதிவாணர் நாடகத் தமிழ்நூல் 145
மயிலை நாதர் 69
மல்லிநாத சூரி 76
மனுஸ்மிருதி 144
மனோன்மணீயம் 13
மாக்ஸ் முல்லர் 18
மானியர் வில்லியம்ஸ் 18
மிருச்சகடிகை 70
மீட்டுருவாக்கம் 157
மீனாட்சி சுந்தரம் பிள்ளை 2, 8, 13, 25
முத்துராமலிங்கத் தேவர் 41
முரஞ்சியூர் முடிநாகராயர் 145
மேக சந்தேசம் 68
மேருமந்திர புராணம் 97,143
யமதரர் 144
யாப்பருங்கல விருத்தி 37,69
யாமளேந்திரர் 145
ரங்காச்சாரி, 18,44
ரங்காச்சாரியார், குறிச்சி 18
ரத்னாவளி 69
ராமச்சந்திர சாஸ்திரி 19
வச்சத் தொள்ளாயிரம் 54
வராகமிகிரர் 123
வாசவதத்தா 70
வான்மீகம் 67
விருஷபதாசர் 4
விளக்க இயல் மொழி ஆய்வு 129
விஸ்வநாத சாஸ்திரி 11
வீரசோழிய உரையாசிரியர் 69
வீரபாண்டிய கவிராயர் 5
வெங்கைக் கோவை 68
வெண்டாளி 145
வேணுவனலிங்க விலாசச் சிறப்பு 1
வேலுச்சாமி பிள்ளை 17
வைத்தியநாத ஐயர் 16
வைத்தியலிங்க தேசிகர் 56
வையாபுரிப் பிள்ளை 21, 152
வையை இராமசாமி ஐயர் 16
ஸ்ரீகாந்த முதலியார், கு, 56
ஸ்ரீநிவாச ஐயங்கார், கே.ஆர். 12
ஸ்ரீநிவாசச்சாரி 18
ஸ்ரீநிவாசப் பிள்ளை, கே.எஸ். 9
ஸ்ரீநிவாச ராகவாச்சாரியார் 13
ஸ்ரீ புராணம் 29,65,69,143
ஸ்ரீவைகுண்டம் 2
ஸ்தேய சாஸ்திரம் 144
ஜகந்நாத ஐயர், கி.வா. 41, 56
ஜயதேவர் 146
ஜீவந்தர சம்பு 69
ஜீவந்தர நாடகம் 69
க்ஷத்திர சூளாமணி 69,113,114
ஹிருதயாலயமருதப்ப தேவர் 11

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

1.	தமிழர் தோற்கருவிகள்	... ரூ. 10-00
2.	தமிழும் தமிழரும்	... ரூ. 5-00
3.	உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?	... ரூ. 6-00
4.	தமிழ் இலக்கியக் கொள்கை-8	... ரூ. 20-00
5.	ம. பொ. சி. யின் இலக்கிய நூல்கள் ஓர் மதிப்பீடு	... ரூ. 20-00
6.	தொல்காப்பியம் புணரியல்	... ரூ. 10-00
7.	தொல்காப்பியம் வேற்றுமை மயங்கியல்	... ரூ. 12-00
8.	தொல்காப்பியம் - விளிமரபு	... ரூ. 6-00
9.	தொல்காப்பியம் - பெயரியல்	... ரூ. 12-00
10.	தொல்காப்பியம் - வினையியல்	... ரூ. 20-00
11.	திருமயிலை உலா	... ரூ. 7-00
12.	வெள்ளைக்காரன் கதை	... ரூ. 7-00
13.	சிந்து இலக்கியம்	... ரூ. 8-00
14.	மெய்க்கீர்த்திகள்	... ரூ. 20-00
15.	பிரபந்த தீபிகை	... ரூ. 12-00
16.	திராவிடமொழி இலக்கியங்கள்	... ரூ. 35-00
17.	தமிழில் விடுகதைகள்	... ரூ. 12-00
18.	இஸ்லாம் வளர்த்த தமிழ்	... ரூ. 15-00
19.	தஞ்சைமாவட்ட ஊர்ப்பெயர்கள்	... ரூ. 12-00
20.	தமிழ்ச் சுவடிகள் அட்டவணை	... ரூ. 6-00
21	கண் மருத்துவம்	... ரூ. 50-00
22	தமிழரின் தாயகம்	... ரூ. 10-00
23	தமிழ் இலக்கியக் கொள்கை - 9	... ரூ. 20-00
24.	தன்வந்திரி குழந்தை வாகடம்	... ரூ. 14-00
25.	உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள்	... ரூ. 10-00
26.	இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - தொகுதி-1	... ரூ. 12-00
27.	இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - தொகுதி-2	... ரூ. 22-00
28.	வர்மசூத்திரம்	... ரூ. 10-00
29.	இளங்கோவின் இலக்கிய உத்திகள்	... ரூ. 12-00
30.	இனிக்கும் இராஜநாயகம்	... ரூ. 50-00
31.	பாவாணரும் தனித்தமிழும்	... ரூ. 12-00
32.	Language and Grammar-Heritage of the Tamils	... Rs. 22-00
33.	Cultural Heritage of the Tamils	... Rs. 20-00
34.	Literary Heritage of the Tamils	... Rs. 50-00
35.	Papers on Tamil Studies	... Rs. 15-00
36.	Tamil Drama	... Rs. 20-00
37.	A Study of the Perunkatal	... Rs. 12-00
38.	Thiru Murugan	... Rs. 5-00
39.	Dr. Mu. Va.	... Rs. 20-00
40.	Dissertations on Tamilology	... Rs. 10-00
41.	Tamil writers Directory	... Rs. 10-00
42.	Tamil-Text (An-Auto Instructional Course)	... Rs. 25-00
43	Heritage of the Tamils-Siddha Medicine	... Rs. 45-00
44.	Siddha Medical Manuscripts in Tamil	... Rs. 8-00
45.	Karaikkal Ammaiyar	... Rs. 6-00

Japonica - Dial 441913